# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்


### எம்.ஏ [தமிழ்]
### முதற் பருவம்
### 319 12

# அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

**Author: Srinivasan Banumathi,** Freelance Author

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

Work Order No. AU/DDE/DE1-238/Preparation and Printing of Course Materials/2018 Dated 30.08.2018 Copies - 500

**எம்.ஏ [தமிழ்]**
**முதற் பருவம்**

**தாள் 31912 அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்**

# பாடத்திட்டம்

கூறு 1 திருக்குறள் : அறத்துப்பால் - முதல் மூன்று அதிகாரங்கள்

கூறு 2 திருக்குறள் : பொருட்பால் - முதல் மூன்று அதிகாரங்கள்

கூறு 3 திருக்குறள் : காமத்துப்பால் - முதல் மூன்று அதிகாரங்கள்

கூறு 4 நாலடியார் : நட்பாராய்தல் கூடா நட்பு

கூறு 5 பழமொழி : கல்வி, கல்லாதார், அறிவுடைமை

கூறு 6 ஔவையார் : நல்வழி (முதல் 20 பாடல்கள்)

கூறு 7 இன்னா நாற்பது : முதல் பத்து பாடல்கள்

கூறு 8 இனியவை நாற்பது : முதல் பத்து பாடல்கள்

கூறு 9 காரைக்கால் அம்மையார் : திரு. இரட்டை மணிமாலை –
அப்பர்: போற்றித் திருத்தாண்டகம் - சம்பந்தர் : திருநீற்றுப் பதிகம் கோளாறு பதிகம் -
மணிவாசகர் : சிவபுராணம்

கூறு 10 நம்மாழ்வார் : முதல் பத்து – உயர்வு அற என்னும் முதல் திருவாய் மொழியும் வீடுமின் என்னும் இரண்டாம் திருமொழியும்

ஆண்டாள் : திருமணக் கனவை உரைத்தல் வலம்புரிக்குக் கிடைத்த பேறு – குலசேகராழ்வார் : ஊனேறு – திருவேங்கடமுடையான் விஷயம்.

கூறு 11 பட்டினத்தார் : திருவிடை மருதூர் மும்மணிக்கோவை – திருமூலர் : அறஞ்செய்வான் திறம், அறம் செய்யான் திறம்.

கூறு 12 தாயுமானவர் : பரிபூரானானந்தம் பாடல்கள் - வள்ளலார் : தெய்வமணி மாலை

கூறு 13 குணங்குடி மஸ்தான் சாகிபு : பராபரக்கண்ணி

கூறு 14 தேசிய விநாயகம் பிள்ளை : ஆசிய ஜோதி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கூறு 1 | திருக்குறள் : அறத்துப்பால் - முதல் மூன்று அதிகாரங்கள் | 1 |
| கூறு 2 | திருக்குறள் : பொருட்பால் - முதல் மூன்று அதிகாரங்கள் | 9 |
| கூறு 3 | திருக்குறள் : காமத்துப்பால் - முதல் மூன்று அதிகாரங்கள் | 15 |
| கூறு 4 | நாலடியார் : நட்பாராய்தல் கூடா நட்பு | 21 |
| கூறு 5 | பழமொழி : கல்வி, கல்லாதார், அறிவுடைமை | 33 |
| கூறு 6 | ஔவையார் : நல்வழி (முதல் 20 பாடல்கள்) | 48 |
| கூறு 7 | இன்னா நாற்பது : முதல் பத்து பாடல்கள் | 56 |
| கூறு 8 | இனியவை நாற்பது : முதல் பத்து பாடல்கள் | 67 |
| கூறு 9 | காரைக்கால் அம்மையார் : திரு. இரட்டை மணிமாலை – அப்பர்: போற்றித் திருத்தாண்டகம் - சம்பந்தர் : திருநீற்றுப் பதிகம் கோளாறு பதிகம் - மணிவாசகர் : சிவபுராணம் | 82 |
| கூறு 10 | நம்மாழ்வார் : முதல் பத்து – உயர்வு அற என்னும் முதல் திருவாய் மொழியும் வீடுமின் என்னும் இரண்டாம் திருமொழியும் ஆண்டாள் : திருமணக் கனவை உரைத்தல் வலம்புரிக்குக் கிடைத்த பேறு – குலசேகராழ்வார் : ஊனேறு – திருவேங்கடமுடையான் விஷயம் | 132 |
| கூறு 11 | பட்டினத்தார் : திருவிடை மருதூர் மும்மணிக்கோவை – திருமூலர் : அறஞ்செய்வான் திறம், அறம் செய்யான் திறம் | 149 |
| கூறு 12 | தாயுமானவர் : பரிபூரானானந்தம் பாடல்கள் - வள்ளலார் : தெய்வமணி மாலை | 164 |
| கூறு 13 | குணங்குடி மஸ்தான் சாகிபு : பராபரக்கண்ணி | 198 |
| கூறு 14 | தேசிய விநாயகம் பிள்ளை : ஆசிய ஜோதி | 214 |
| | மாதிரி வினாத்தாள்-1 | 231 |
| | மாதிரி வினாத்தாள்-2 | 233 |
| | மாதிரி வினாத்தாள்-3 | 235 |

# கூறு 1

# திருக்குறள்

குறிப்பு

தமிழின் தலையார்ந்த நூல் திருக்குறள் அதை உலகப் பொதுமறை என்று அழைப்பதில் நாம் உவகை கொள்கிறோம். குறள் காலத்தால் அழியாதது என்றும் வியந்து பாராட்டுகிறோம். அதை வாழ்க்கை நெறி என்றும் கூறி மகிழ்கின்றோம்.

தமிழினத்தின் பழம் பெரும் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பற்றி உலகம் வியக்கிறது என்றால் அதற்கு தமிழிலக்கியம் முக்கிய காரணங்களில் ஒன்றாகும் தமிழகத்தின் மைலாப்பூர் வாழ் நெசவாளர் குலத்தோன்றலான திருவள்ளுவர் மானுடத்தின் தலைசிறந்த புலமைப் பெரியோர்களில் ஒருவராக கணிப்பிடப்படுகிறார். ஒட்டு மொத்த மனித சிந்தனையின் சிறந்த பிரிவு என்று திருக்குறள் போற்றப்படுகிறது. இருப்பினும் திருக்குறளின் அழியாப்புகழ் தமிழினத்திற்கும் தமிழ்மொழிக்கும் மாத்திரம் சொந்தம் என்றால் மிகையல்ல. இன்றைக்கு பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பாக ஆக்கம் பெற்ற திருக்குறள் தமிழினம் அப்போது அடைந்திருந்த அதியுச்ச நாகரீக வளர்ச்சிக்கு உதாரணமாகத் திகழ்கிறது. அப்படியானதொரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவரால்தான் திருக்குறள் போன்ற இலக்கியத்தை படைக்க முடியும் பொது மானுடத்திற்கும் பொருத்தமான முறையில் தமிழர் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விதத்தில் குறட்பாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தனது காலத்திற்குறிய இலக்கிய மரபுகளை திருவள்ளுவர் மீறியுள்ளதை எம்மால் வியப்புடன் பார்க்க முடிகிறது. எந்தவொரு இடத்திலாவது ஒரு இனத்தையோ சாதியையோ, மதத்தையோ மதப்பிரிவையோ அரசையோ ஆளும் வர்க்கத்தையோ அவர் குறிப்பிடாமல் அல்லது உயர்த்தியோ தாழ்த்தியோ பேசாமல் விட்டுள்ளதை குறளின் மிகப்பெரிய சிறப்பம்சமாக கருதமுடியும். தமிழ் என்ற சொல்லைக்கூட குறள் நூலில் எங்காயினும் காணமுடியவில்லை தலைமகன் இல்லாதா நீதி நூல் என்றும் குறளை வகைப்படுத்தமுடியும்.

தமிழ்ப் பாரம்பரியத்தின் படி ஒரு வாழ்க்கைத் தத்துவ நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பிரிவுகளை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். வள்ளுவர் வீடு பற்றிக்கூறாமல் விடுத்துள்ளார். அறம், பொருள், இன்பம் என்பன பற்றி கூறியவர் இந்த மூன்று கட்டங்களையும் தாண்டிச் செல்பவன் தானாகவே வீடு பேறு அடைவான் என்று அவர் கூறாமல் விளங்கவைத்துள்ளார்.

குறிப்பு

தர்மத்தின் படி இல்லறம் நடத்தி நீதி தவறாமல் பொருள் திரட்டி மனையாளோடு இன்பம் கண்டவன் முக்தி அடைவான் என்ற அர்த்தம் திருக்குறளில் தொற்கி நிற்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. திருக்குறளைத் துருவி ஆராயும் போது அதன் ஆசிரியர் மறுபிறப்பில் நம்பிக்கையுள்ளவர் என்ற உண்மை, வாழ்வின் நான்கு படிநிலைகளான திருமணமாகாத காளைப்பருவம் ஒடுப்பும் துறவறம் என்பனவற்றில் திருவள்ளுவருக்கு ஏற்புடமை உண்டு என்பதை 41வது குறளில் இருந்து அறியலாம் கீதையின் அடிப்படைத்தத்துவமான கர்மயோகத்திற்கு நிகரான கருத்தை 371ஆம் குறளில் காணலாம். வெற்றி தோல்வி பாராமல் எடுத்த கருமத்தில் முழு ஈடுபாடும் முயற்சியும்காட்டும் பணிச் சிறப்பை இந்தக் குறள் வலியுறுத்துகிறது 618ஆம் இலக்கக் குறளிலும் இதே கருத்து வலியுறுத்தப்படுகிறது. இல்லறம் நடத்துபவன் உலக விவகாரங்களில் முழு ஈடுபாடு காட்டவேண்டும் ஒதுக்கக் கூடாது என்று வள்ளுவர் கூறுகிறார்.

அதே சமயத்தில் ஒரு இல்லறத்தான் வீண் விரயம் செய்யாமல் டாம்பீக-மற்று வாழ வேண்டும் என்றும் அவர் எடுத்துரைக்கிறார். இல்வாழ்வு நல்லறமாக அமைய வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தக் கருத்துக்களை 48, 225ஆம் குறள்களில் காணலாம். பொருள் மனிதனுக்கு அடிமையாவதில்லை மனிதன் தான் பொருளுக்கு அடிமையாகிறான் என்ற கருத்தையும் திருக்குறளில் இருந்து திரட்டிக்கொள்ளலாம்.

ஓவ்வொரு அத்தியாயத்திலும் பத்துக்குறள் பாக்களைக் கொண்ட 133 அத்தியாயங்கள் குறள் நூலில் காணப்படுகின்றன மொத்தம் 2,660 வரிகளைக்கொண்ட 1330 குறள் பாக்கள் இருப்பது கண்கூடு பெரும்பாலான குறள் பாக்களின் முதல் வரிகளில் ஏழு சொற்கள் இருப்பதால் அணுவைத் துளைத்து ஏழு கடலைப்புகுத்திய குறள் என்று அவ்வையார் அதைப் புகழ்ந்துள்ளார்.

திருக்குறளின் முதலாம் பாகம் இல்லறம் தொட்டு துறவறம் பற்றிய சிறப்பைக் கூறுகிறது. முதலாம் பாகத்தில் 38 அத்தியாயங்கள் இருக்கின்றன. அரச நெறி இராசதந்திரம் போர்த்தந்திரம் உள்ளடங்கலான உலக விவகாரங்கள் பற்றிக் குறளின் இரண்டாம் பாகம் கூறுகிறது. இதில் 70 அத்தியாயங்கள் உள்ளன குறளின் மூன்றாம் பாகத்தில் ஆண் பெண் இல்லற உறவுகள் பற்றிக் கூறும் 25 அத்தியாயங்கள் காணப்படுகின்றன, மேற்கூறிய இராண்டாம் பாகக் குறள் பாக்கள் அரசர்களுக்கும் படைத்துறையினருக்கும் மாத்திரம் உரியதன்று உலகியல் வாழ்வில் ஈடுபடும் பொதுமக்கள் உள்ளடங்கலான அனைவருக்கும் பொருத்தமான கருத்துக்கள் அவற்றில் செறிந்துள்ளன ஆட்சி

குறிப்பு

பீடத்தில் அமர்ந்திருப்போரும் வரலாற்று ஆசிரியர்களும் இரண்டாம் பாகக் குறள்பாக்களை இன்றும் துரவி ஆய்ந்து வருகின்றனர்.

இத்தனை சிறப்புக்கள் வாய்ந்த குறள் நூலின் உண்மையான பெயரும் அதன் ஆசிரியர் திருவள்ளுவரின் உண்மையான பெயரும் இன்று வரை தெரியவரவில்லை. குறள் என்பது காரணப்பெயர், சிறியது சுருக்கமானது குறுகலானது என்பது குறள் என்ற சொல்லின் பொருள் அதேபோல் வள்ளுவர் என்பதும் குலப்பெயர் என்று ஆய்வாளர்கள் கூறுவர். வள்ளுவரின் இயற்பெயர் என்னவென்பது அறியப்படாததாக இருக்கிறது, குறளைவிட வேறு நூல் அல்லது நூல்களை வள்ளுவர் படைக்கவில்லை என்பது ஆய்வாளர் முடிவு.

தமிழிலக்கியப் பரப்பில் மிகக் கூடுதலான பிறமொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்ட ஒரே ஒரு நூல் என்ற சிறப்பு திருக்குறளுக்கு உண்டு. அதை ஆங்கில மொழிக்கு மாற்றிய ஜீ. யூ. போப் என்ற தமிழில் பாண்டித்தியம் பெற்ற ஆங்கிலேயர் தனது குறள் மொழிபெயர்ப்பு நூலுக்குச் செய்த முகவுரையில் பின்வருமாறு கூறுகிறார். குறள் ஒரு தனித்துவமான நூல். அதை வடமொழியில் இருந்து மாற்றப்பட்ட நூல் என்று கூறுவது மிகப் பெருந்தவறு குறள் தூயதமிழில் ஆக்கப்பட்டுள்ளது அதில் வடமொழிக் கலப்பு சிறிதளவும் இல்லை தமிழறிஞர் தனது மொழிப் பெயர்ப்பை ஆங்கில கவிதை நடையில் பாய்த்துள்ளார் பின்பு வந்த பல அறிஞர்கள் ஆங்கில மொழிக்குத் திருக்குறளை மாற்றியுள்ளனர்.

## அறத்துப்பால்

திருக்குறளின் அறத்துப்பாலில் “பாயிரவியல்” 4 அதிகாரங்களும் பாயிரவியலைத் தொடர்ந்து முதலாவதாக 20 அதிகாரங்களுடன் “இல்லறவியல்” அடுத்து 13 அதிகாரங்கள் கொண்ட துறவறவியல் இறுதியில் “ஊழ்” என்னும் ஒரே அதிகாரம் கொண்ட “ஊழியல்” என வகைப்படுத்தப்பட்டுள்ளது. திருக்குறளில் ஒரே ஒரு அதிகாரம் உடைய இயல் “ஊழியல்” மட்டுமே. முதற்பாலாகிய அறத்துப்பாலில் மொத்தம் 38 அதிகாரங்கள்.

### கடவுள்வாழ்த்து

**1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (1)**

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

குறிப்பு

**2. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** (2)

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன என்ன?

**3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்** (3)

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

**4. வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல** (4)

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

**5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு** (5)

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

**6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்** (6)

ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர் நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.

**7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது** (7)

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

**8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**பிறவாழி நீந்தல் அரிது** (8)

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல் மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது.

**9. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை** (9)

கேட்காதசெவி பார்க்காத கண் போன்ற எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

**10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்** (10)

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.

குறிப்பு

## வான்சிறப்பு

11. **வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று** (11)

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்.

12. **துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை** (12)

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

13. **விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின் றுடற்றும் பசி** (13)

மழை பெய்யாமல் பொய்படுமானால் கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.

14. **ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்** (14)

மழை என்னும் வருவாய் வளம் குன்றி விட்டால் உணவுப் பொருள்களை உண்டாக்கும் உழவரும் ஏர் கொண்டு உழமாட்டார்.

15. **கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை** (15)

பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்கும் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்.

16. **விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண் பரிது** (16)

வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல் உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது.

17. **நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்** (17)

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலேயே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

18. **சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு** (18)

மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகத்தில் வானோர்க்காக நடைபெறும் திருவிழாவும் நடைபெறாது நாள் வழிபாடும் நடைபெறாது.

குறிப்பு

**19. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின் (19)**

மழை பெய்யவில்லையானால் இந்த பெரிய உலகத்தில் பிறர் பொருட்டு செய்யும் தானமும்இ தம் பொருட்டு செய்யும் தவமும் இல்லையாகும்.

**20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு (20)**

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால் மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

## நீத்தார் பெருமை

**21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு (21)**

ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

**22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று (22)**

பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல் உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை கணக்கிடுவதைப்போன்றது.

**23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு (23)**

பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

**24. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து (24)**

அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன் மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.

**25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி (25)**

ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்குஇ வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

**26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் (26)**

செய்வதற்கு அருமையான செயல்களை செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.

**27. சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு** (27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

**28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்** (28)

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டி விடும்.

**29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.** (29)

நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறி நின்ற பெரியோர் ஒரு கணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

**30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்** (30)

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

## வினா – விடைகள்

### கடவுள்வாழ்த்து

1. யாருக்கு எப்போதும் துன்பம் இல்லை?

   விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

2. யாருடைய மனக்கவலையை மாற்ற முடியாது?

   தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவரை அல்லாமல் மற்றவருடைய மனக்கவலையை மாற்ற முடியாது.

3. யாருக்கு அவருடைய கல்வியினால் பயன் இல்லை?

   தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பவர்க்கு, அவர் கற்ற கல்வியினால் பயன் இல்லை.

4. உலகம் எதை அடிப்படையாக கொண்டிருக்கிறது?

   எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

குறிப்பு

குறிப்பு

## வான்சிறப்பு

1. உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் எது?

   மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்.

2. எப்பொழுது உழவர் ஏர் கொண்டு உழமாட்டார்?

   மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால் உணவு பொருள்களை உண்டாக்கும் உழவரும் ஏர் கொண்டு உழமாட்டார்.

3. பசும்புல்லை எப்பொழுது காண முடியாது?

   வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல் உலகத்தில் ஓரறிவு உயிராகிய பசும்புல்லின் தலையையும் காண முடியாது.

4. தானமும் தனமும் எப்பொழுது இல்லாமற் போகும்?

   மழை பெய்யவில்லையெனில் இந்த பெரிய உலகத்தில் தானமும் தவமும் இல்லாமற் போகும்.

## நீத்தார் பெருமை

1. நூல்களின் துணிவு எது?

   ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

2. யார் மேலான விட்டிற்க்கு விதை போன்றவன்?

   அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவன் மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.

3. யாருடைய அறிவில் உள்ளது உலகம்?

   சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.

4. அந்தணர் எனப்படுவோர் யார்?

   எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறிவோரே அந்தணர் எனபடுவோர் ஆவர்.

குறிப்பு

# கூறு 2

# பொருட்பால்

பொருட்பாலில் அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபு இயல் ஆகிய இயல்கள் இருக்கின்றன, அரசு இயலில் 25 அதிகாரங்கள் உள்ளன. அமைச்சு இயலில் 32 அதிகாரங்களும், ஒழிபு இயலில் 13 அதிகாரங்களுமாக மொத்தம் 70 அதிகாரங்கள் உள்ளன.

## இறைமாட்சி

**1. படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு** (381)

படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவன்.

**2. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு** (382)

அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை இந்த நான்கு பண்புகளும் குறைவு படாமல் இருத்தலே அரசனுக்கு இயல்பாகும்.

**3. தூங்காமை கல்வி துணிவுடைமை அம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு** (383)

காலம் தாழ்த்தாத தன்மை, கல்வியுடைமை, துணிவுடைமை இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.

**4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு** (384)

ஆட்சி முறைக்கு உரிய அறத்தில் தவறாமல் அறமல்லாதவற்றை நீக்கி வீரத்தில் குறைபடாத மானத்தை உடையவனே சிறந்த அரசன் ஆவான்.

**5. இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு** (385)

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.

**6. காட்சி கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்** (386)

காண்பதற்கு எளியவனாய்க் கடுஞ்சொல் கூறாதவாய் இருந்தால் அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும்.

குறிப்பு

7. **இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்திவ் வுலகு** (387)

இனியச் சொற்களுடன் தக்கவர்க்குப் பொருளை உதவிக் காக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தன் புகழோடு தான் கருதியபடி அமைவதாகும்.

8. **முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்**
**கிறையென்று வைக்கப் படும்** (388)

நீதி முறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு தலைவன் என்றுக் கருதித் தனியே மதிக்கப்படுவான்.

9. **செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கு முலக** (389)

குறைகூறுவோறின் சொற்களைக் செவிகைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்பும் உடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

10. **கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி** (390)

கொடை அருள் செங்கோல்முறை தளர்ந்த குடிமக்களைக்காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.

## கல்வி

11. **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** (391)

கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

12. **எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு** (392)

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

13. **கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்** (393)

கண்ணுடையவர் என்றுக் கூறப்படுபவர் கற்றவரே கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவார்.

14. **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்** (394)

மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காணபோம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

குறிப்பு

15. **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்** (395)

செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர் கல்லாதவர் இழிந்தவர்.

16. **தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு** (396)

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும் அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

17. **யாதானும் டாடாமால் ஊராமால் என்னொருவன
சாந்துணையுங் கல்லாத வாறு** (397)

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும் ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும்வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.

18. **ஒருமைக்கண் தான்ணற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து** (398)

ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

19. **தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்** (399)

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

20. **கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை** (400)

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்ற பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## கல்லாமை

21. **அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்** (401)

அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல் சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

22. **கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று** (402)

(கற்றவரின் அவையில்) கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல் முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

குறிப்பு

23. **கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்** (403)

கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்.

24. **கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளார் அறிவுடை யார்** (404)

கல்லாதவனுடைய அறிவுடைய ஒருக்கால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

25. **கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்** (405)

கல்லாதவன் ஒருவன் தன்னைத்தான் மகிழ்ந்து பேசும் மதிப்பு (கற்றவரிடம்) கூடிபேசும் போது அப்பேச்சினால் கெடும்.

26. **உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்** (406)

கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

27. **நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்
மண்மாண் புனைபாவை யற்று** (407)

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்லவான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

28. **நல்லார்கண் பட்ட வறுமையின் ,ன்னாதே
கல்லார்கண் பட்ட திரு** (408)

கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது கற்றறிந்த நல்லவரிடம உள்ள வறுமையைவிட மிகத்துன்பம் செய்வதாகும்.

29. **மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு** (409)

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

30. **விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்** (410)

அறிவு விளங்குதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடு கல்லாதவர் மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

# வினா – விடைகள்

## இறைமாட்சி

1. அரசனுக்கு எது இயல்பு?

அஞ்சாமை,ஈகை, அறிவுடமை, ஊக்கமுடைமை இந்த நான்கு பண்புகளும் குறைவு படாமல் இருத்தல் அரசனுக்கு இயல்பாகும்.

2. எத்தகைய அரசன் வல்லவன்?

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் ஆவான்.

3. எத்தகைய மன்னவன் தனியே மதிக்கப்படுவான்?

நீதி முறை செய்து குடிமக்களை காப்பாற்றும் மன்னவன் மக்களுக்கு தலைவன் என்று கருதி தனியே மதிக்கப்படுவான்.

4. எத்தகைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்?

கொடை, அருள், செங்கோல் முறை தளர்ந்த குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.

குறிப்பு

## கல்வி

1. கல்வி கற்க எவையெல்லாம் செய்ய வேண்டும்?

கல்வி கற்க நல்ல நூல்களை குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

2. புலவரின் தொழில் யாது?

மகிழும் படியாகக் கூடிப் பழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

3. மக்களுக்கு எந்த அளவிற்கு அறிவு ஊறும்?

மணலில் உள்ள கேணியில் தோண்டும் அளவிற்கு நீர் ஊறும். அதுபோல மக்களின் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

4. அழிவு இல்லாத சிறந்த செல்வம் எது?

ஒருவனுக்கு அறிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வி. ஆகும் கல்வியைத் தவிர மற்ற பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## கல்லாமை

1. கல்லாதவர்களும் எப்போது நல்லவர் ஆவார்?

   கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்க பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவர் ஆவார்.

2. கல்லாதவர் எதற்கு ஒப்பாவர்?

   கல்லாதவர் உயிரோடிருக்கின்றார் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

3. கல்லாதவனிடம் உள்ள செல்வம் எத்தகையது?

   கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையை விட மிகத்துன்பம் செய்வதாகும்.

4. கல்லாதவர் யாரைப் போல பெருமை இல்லாதவர்?

   கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும், தாழ்ந்த குடியில் பிறந்திருந்தாலும் கல்வி கற்றவரைப் போல் பெருமை இல்லாதவர்.

# கூறு 3

## காமத்துப்பால்

குறிப்பு

கடைசிப்பாலாகிய “இன்பத்துப்பால்” அல்லது “காமத்துப்பாலில்” களவியல் மற்றும் கற்பியல் என இரண்டு இயல்கள்.களவியலில் 7 அதிகாரங்களும், கற்பியலில் 18 அதிகாரங்களுமாக மொத்தம் 25 அதிகாரங்கள் உள்ளன.

### தகை அணங்குறுத்தல்

1. **அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு** (1081)

தெய்வப் பெண்ணோ! மயிலோ, கனமான குழை அணிந்த மனிதப் பெண்ணோ, என் நெஞ்சம் மயங்குகின்றதே.

2. **நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து** (1082)

நோக்கிய அவள் பார்வைக்கு எதிரே நோக்குதல் தானே தாக்கி வருத்தும் அணங்கு, ஒரு சேனையையும் கொண்டு வந்து தாக்கினாற் போன்றது.

3. **பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு** (1083)

எமன் என்று சொல்லப்படுவதை முன்பு அறியேன், இப்பொழுது கண்டறிந்தேன், அது பெண் தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களை உடையது

4. **கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்** (1084)

பெண்தன்மை உடைய இந்தப் பேதைக்குக் கண்கள் கண்டவரின் உயிரை உண்ணும் தோற்றத்தோடு கூடி ஒன்றோடொன்று மாறுபட்டிருந்தன.

5. **கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து** (1085)

எமனோ.கண்ணோ ,பெண்மானோ, இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்றின் தன்மையும் உடையதாக இருக்கிறது,

6. **கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்** (1086)

வளைந்த புருவங்கள் கோணாமல் நேராக இருந்து மறைக்குமானால்,இவளுடைய கண்கள் யான் நடுங்கும் படியான துன்பத்தைச் செய்யமாட்டா.

7. **கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்** (1087)

குறிப்பு

மாதருடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்த ஆடை, மதம் பிடித்த யானையின் மேல் இட்ட முகப்படாம் போன்றது.

**8. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு (1088)**

போர்க்களத்தில் பகைவரும் அஞ்சுதற்க்கு காரணமான என் வலிமை, இவளுடைய ஒளி பொருந்திய நெற்றிக்குத் தோற்று அழிந்ததே.

**9. பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்
கணியெவனோ ஏதில தந்து (1089)**

பெண்மானைப் போன்ற இளமைப் பார்வையும் நாணமும் உடைய இவளுக்கு ஒரு தொடர்பும் இல்லாத அணிகளைச் செய்து அணிவது ஏனோ.

**10. உண்டார்க ணல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று (1090)**

கள், தன்னை உண்டவரிடத்தில் அல்லாமல் காமத்தைப் போல் தன்னைக் கண்டவரிடத்தில் மயக்கத்தை உண்டாக்குவதில்லையே.

## குறிப்பறிதல்

**11. இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து (1091)**

இவளுடைய மை தீட்டிய கண்களில் உள்ளது இருவகைப்பட்ட நோக்கமாகும், அவற்றுள் ஒரு நோக்கம் நோய் செய்யும் நோக்கம், மற்றொன்று அந் நோய்க்கு மருந்தாகும்.

**12. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது (1092)**

கண்ணால் என்னை நோக்கிக் களவு கொள்கின்ற சுருங்கிய பார்வை காமத்தில் நேர்பாதி அன்று, அதைவிடப் பெரிய பகுதியாகும்.

**13. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர் (1093)**

என்னை நோக்கினாள், யான் கண்டதும் நோக்கித் தலைகுனிந்தால், அது அவள் வளர்க்கும் அன்பினுள் வார்க்கின்ற நீராகும்.

**14. யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும் (1094)**

யான் நோக்கும் போது அவள் நிலத்தை நோக்குவாள், யான் நோக்காத போது அவள் என்னை நோக்கி மெல்லத் தனக்குள் மகிழ்வாள்.

**15. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (1095)**

என்னை நேராகக் குறித்துப் பார்க்காத அத் தன்மையே அல்லாமல், ஒரு கண்ணைச் சுருக்கினவள் போல் என்னைப் பார்த்து தனக்குள் மகிழ்வாள்.

**16. உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர்சொல்**
**ஒல்லை உணரப் படும்** (1096)

புறத்தே அயலார் போல் அன்பில்லாத சொற்களைச் சொன்னாலும், அகத்தே பகையில்லாதவரின் சொல் என்பது விரைவில் அறியப்படும்.

**17. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்**
**உறாஅர்போன் றுற்றார் குறிப்பு** (1097)

பகை கொள்ளாத கடுஞ்சொல்லும், பகைவர் போல் பார்க்கும் பார்வையும் புறத்தே அயலார் போல் இருந்து அகத்தே அன்பு கொண்டவரின் குறிப்பாகும்.

**18. அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்**
**பசையினள் பைய நகும்** (1098)

யான் நோக்கும் போது அதற்காக அன்பு கொண்டவனாய் மெல்லச்சிரிப்பாள், அசையும் மெல்லிய இயல்பை உடைய அவளுக்கு அப்போது ஓர் அழகு உள்ளது.

**19. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்**
**காதலார் கண்ணே உள** (1099)

புறத்தே அயலார்போல் அன்பில்லாத பொது நோக்கம் கொண்டு பார்த்தல், அகத்தே காதல் கொண்டவரிடம் உள்ள இயல்பாகும்.

**20. கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
**என்ன பயனும் இல** (1100)

கண்களோடு கண்கள் நோக்காமல் ஒத்திருந்து அன்பு செய்யுமானால் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல்லாமற் போகின்றன.

## புணர்ச்சி மகிழ்தல்

**21. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள** (1101)

கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், உற்றும், அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன.

**22. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்னோய்க்குத் தானே மருந்து** (1102)

நோய்களுக்கு மருந்து வேறு பொருள்களாக இருக்கின்றன, ஆனால் அணிகலன் அணிந்த இவளால் வளர்ந்த நோய்க்கு இவளே மருந்தாக இருக்கின்றாள்.

குறிப்பு

குறிப்பு

**23. தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு** (1103)

தாமரைக் கண்ணனுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில் போல் இனிமை உடையதோ.

**24. நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்** (1104)

நீங்கினால் சுடுகின்றது, அணுகினால் குளிர்ச்சியாக இருக்கின்றது, இத்தகைய புதுமையானத் தீயை இவள் எவ்விடத்திலிருந்து பெற்றாள்.

**25. வேட்ட பொழுதின் அவையவை போலுமே**
**தோட்டார் கதுப்பினாள் தோள்** (1105)

மலரணிந்த கூந்தலை உடைய இவளுடைய தோள்கள் விருப்பமான பொருள்களை நினைத்து விரும்பிய பொழுது அவ்வப் பொருள்களைப் போலவே இன்பம் செய்கின்றன.

**26. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்**
**கமிழ்தின் இயன்றன தோள்** (1106)

பொருந்து போதெல்லாம் உயிர் தளிர்க்கும் படியாகத் தீண்டுதலால் இவளுக்கு தோள்கள் அமிழ்தத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**27. தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு** (1107)

அழகிய மா நிறம் உடைய இவளுடைய தழுவுதல், தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுந்து கொடுத்து உண்டார் போன்றது.

**28. வீழும் இருவர்க் கினிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு** (1108)

காற்று இடையறுத்துச் செல்லாதபடி தழுவும் தழுவுதல், ஒருவரை ஒருவர் விரும்பிய காதலர் இருவருக்கும் இனிமை உடையதாகும்.

**29. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**கூடியார் பெற்ற பயன்** (1109)

ஊடுதல், ஊடலை உணர்ந்து விடுதல், அதன்பின் கூடுதல் ஆகிய இவை காதல் வாழ்வு நிறைவேறப் பெற்றவர் பெற்ற பயன்களாகும்.

**30. அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு** (1110)

செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடம் பொருந்துந்தோறும் காதல் உணர்தல்,நூற் பொருள்களை அறிய அறிய அறியாதமைக் கண்டாற் போன்றது.

# வினா–விடைகள்

குறிப்பு

## தகை அணங்குதல்

1. காதலியின் பார்வை எதைப் போன்றது?

   நோக்கிய அவள் பார்வைக்கு எதிரே நோக்குதல் தானே தாக்கி வருந்தும் அணங்கு ஒரு சேனையையும் கொண்டு வந்து தாக்கினார் போன்றது.

2. இளம் பெண்ணின் பார்வை எத்தகையது?

   எமேனா, கண்ணோ, பெண்மானோ இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்றின் தன்மையும் உடையதாக இருக்கிறது.

3. மாதர் அணியும் ஆடை எதைப் போன்றது?

   மாதருடைய சாயாத கொங்கைகளின் மேல் அணிந்த ஆடை மதம் பிடித்த யானையின் மேல் இட்ட முகப்படாம் போன்றது.

4. பெண்ணிற்கு அணிகள் ஏன் தேவையில்லை?

   பெண் மானைப் போன்ற இளமைப் பார்வையும் நாணமும் உடைய பெண்ணிற்கு ஒரு தொடர்பும் இல்லாத அணிகள் தேவையில்லை.

## குறிப்பறிதல்

1. பெண்களின் கண்களில் உள்ள இருவகைப்பட்ட நோக்கம் யாது?

   பெண்ணுடைய மை தீட்டிய கண்களில் உள்ளது இரு வகைப்பட்ட நோக்கமாகும். அவற்றுள் ஒரு நோக்கம் நோய் செய்யும் நோக்கம். மற்றொன்று அந் நோய்க்கு மருந்தாகும்.

2. பெண் எப்பொழுது தனக்குள் மகிழ்வாள்?

   காதலன் அவளை நோக்கும் போது அவள் நிலத்தை நோக்குவாள். காதலன் நோக்காத அவள் அவனை நோக்கி மெல்லத் தனக்குள் மகிழ்வாள்.

3. அகத்தே காதல் கொண்டவரிடம் உள்ள இயல்பு யாது?

   புறத்தே அயலார்போல் அன்பில்லாத பொது நோக்கம் கொண்டு பார்த்தல், அகத்தே காதல் கொண்டவரிடம் உள்ள இயல்பு ஆகும்.

4. எப்பொழுது வாய்ச் சொற்கள் பயனில்லாமல் போகின்றன?

   கண்களோடு கண்கள் நோக்காமல் ஒத்திருந்து அன்பு செல்லுமானால் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல்லாமற் போகின்றன.

குறிப்பு

## புணர்ச்சி மகிழ்தல்

1. பெண்ணிடம் உள்ள இன்பங்கள் யாவை?

   கண்டும், கேட்டும், உண்டும், முகர்ந்தும், உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த பெண்களிடம் உள்ளன.

2. தாமரைக் கண்ணுடைய உலகம் எதைப் போன்றது?

   தாமரைக் கண்ணனுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில் போல் இனிமை உடையது.

3. பெண்ணுடைய தழுவுதல் எதைப் போன்றது?

   அழகிய மாநிறம் உடைய பெண்ணுடைய தழுவுதல், தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுந்து கொடுத்து உண்பதைப் போன்றது.

4. காதல் வாழ்வு நிறைவேற்றப் பெற்றவர் பெற்ற பலன்கள் யாவை?

   ஊடுதல், ஊடலை உணர்ந்து விடுதல், அதன்பின் கூடுதல் ஆகிய இவை காதல் வாழ்வு நிறைவேறப் பெற்றவர் பெற்ற பயன்களாகும்.

# கூறு 4

# நாலடியார்

குறிப்பு

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாகக் குறிப்பிடப்படும் சிறப்புடையது நாலடியார்.

*ஆலும் வேலும் பல்லுக்குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி*

என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இதில் வரும்நாலும் என்ற சொல் நாலடியாரையும் இரண்டும் என்ற சொல் திருக்குறளையும் குறிக்கிறது. ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி அளிக்கிறது. அதுபோல் நாலடியாரையும், திருக்குறளையும் கற்றவர்கள் சொல்வன்மையும் உறுதியும் பெற்றவர்கள் ஆகிறார்கள். பொதுமறை என்று புகழ்பெற்ற திருக்குறளோடு ஒப்ப வைத்து எண்ணும் சிறப்புடையது நாலடியார் என்ற கருத்தையும் இப்பழமொழி விளக்குகிறதல்லவா?

## அமைப்பும் உள்ளடக்கமும்

நாலடியார், கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு வெண்பாக்களைக் கொண்ட நூல். நாலடி நானூறு என்றும் வழங்கப் பெறும் நூல். இந்நூல் சமண முனிவர்களால் இயற்றப்பட்டது. திருக்குறளைப் போல் மூன்று பால் பகுப்புகளை உடையது. பதினொரு இயல்களும், நாற்பது அதிகாரங்களும் கொண்டது. அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்கள் வீதம் நானூறு பாக்களைக் கொண்டது.

### துறவுக்குச் சிறப்பிடம்

அறத்துப்பாலில் துறவு நெறி அறங்களும், இல்லறநெறி அறங்களும் கூறப்படுகின்றன. சமண முனிவர்கள் இயற்றிய நூல் ஆதலின் துறவுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதலில் கூறப்படுகிறது. நிலையாமை பற்றிய கருத்துகளும் அழுத்தமாகக் கூறப்படுகின்றன.

### இல்லறமும் பிறவும்

இனிய இல்லறத்தைப் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. இல்லறத்திற்குப் பொருந்தாதவை எவை என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. மக்கள் வாழ வேண்டிய பாங்கினைச் சொல்கிறது. கல்விச் சிறப்பையும், கற்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது. சான்றோர் இயல்பையும் பெருமையையும்

குறிப்பு

எடுத்துரைக்கிறது. பண்பிலார் இயல்பையும் பட்டியலிடுகிறது. குறளின் அதிகாரப் பொருளோடு தொடர்புடைய கருத்தை ஒவ்வொரு குறளும் கூறுகிறது. ஆனால் நாலடியாரில் ஒரே கருத்தைப் பல அதிகாரங்களுள் வெவ்வேறு உவமைகளோடு கூறும் பாடல்கள் உள்ளன.

## நூல் சிறப்பு

சிறந்த உவமைகளை நாம் நாலடியாரில் காணலாம். பழமொழிகளாலும், பழைய கதைகளாலும், உறுதிப் பொருள்களை வலியுறுத்துதலில் இந்நூல் ஈடிணையற்றது. அறத்தை உரைக்கும் போதும் அழகும் சுவையும் தோன்றக் கூறுகிறது. இயற்றியவர் முனிவராயினும் இலக்கியத்திற்குச் சுவையூட்டும் கற்பனை உணர்வையும் இவர்கள் கைவிடவில்லை.

## கற்பனை

அறிவொளியால் உலகத்தை அறநெறிப்படுத்தும் பெரியோர் விரைவில் இறந்துபடுகின்றனர். அறிவிலிகளோ நெடுங்காலம் வாழ்கின்றனர். இம்முரண்பாட்டின் காரணம் யாதென எண்ணிய புலவர் கூறுவதைப் பாருங்கள். சாற்றை விரைவில் இழுத்துக் கொண்டு, சக்கையை விட்டு விடுதல் எவர்க்கும் இயல்பு. கூற்றுவனும் சான்றோரை இளமையிலேயே எடுத்துக் கொண்டு மற்றோரை விட்டு விடுகிறான். இங்குப் புலவர் கூறிய காரணம் எதுவாக இருப்பினும் சரியோ! தவறோ அதை நம்மால் ரசிக்காமல் இருக்க முடியாது. இது போன்ற உலகியலை ஒட்டிய கற்பனைகளை நாலடியாரில் காணலாம்.

## பழமொழி

பொருள் விளக்கத்துக்காகப் பல பழமொழிகளும் ஆங்காங்கு எடுத்தாளப்பட்டுள்ளன. மேன்மக்கள் என்றும் மேன்மக்களே, கயவர் எக்காலத்தும் கயவரே என்பதனைப் புலப்படுத்த,

*கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு*

(நாலடி – 112)

(கைக்குமாம் = கசக்குமாம்)

என்ற பழமொழி வந்துள்ளது.

ஒருவர் பொறை இருவர் நட்பு – 223
கற்கிள்ளிக் கையிழந்தற்று – 336
மகனறிவு தந்தையறிவு – 367

என்பன போன்ற பழமொழிகள் பலவற்றைக் காணலாம்.

குறிப்பு

## சுவைகள்

இதுவரை உவமைகளாலும், உலக நடைமுறைகளைக் கூறுதலாலும் பழமொழிகளாலும், உறுதிப்பொருள்களை உணர்த்துதலிலும் நாலடியார் தனிச் சிறப்புப் பெற்றுள்ளதைப் பார்த்தோம். அறப்பொருள் உரைக்கும் நிலையிலும் நகைச்சுவை தோன்றப்படுவதையும் நாலடியாரில் காணலாம்.

கொடுத்தாலன்றி விடாத இரவலர் பற்றி வழங்கப்படும் பாடல்களும் கதைகளும் தமிழில் மிக உண்டு. கொடாக்கண்டன் விடாக்கண்டன் கதையைப் போன்றது. இரவலர் ஒருவர் புகை நுழைய முடியாத இடத்திலும் நுழைந்து யாசித்தலைக் கண்டு வியந்து பாடிய பாடல் இது.

பொருள்கள் பலவற்றுள்ளும் நீரே நுட்பமானது. அதனை விட நுட்பமானது நெய். நெய்யை விட நுணுக்கம் உடையது புகை. நீர் நுழைய முடியாத இடத்திலும் நெய் நுழையும். நெய் நுழைய முடியாத இடத்திலும் புகை நுழையும். ஆனால் யாசிப்பவன் புகைய நுழைய முடியாத இடத்திலும் புகுந்து செல்வான் என்கிறார் புலவர் (நாலடி: 282).

இங்கே புலவர் அனுபவிக்கும் வியப்புச் சுவை நம்மையும் மகிழ்விக்கிறது.

*கல்லாத பேர்களிலும் கல்லே மிக நல்லது*

(நாலடி–334)

என்ற பேதைமை பற்றிய பாடல்களில் இகழ்ச்சிச் சுவை மிளிர்கிறது. உயிரற்ற கற்கள் கூட மனிதர்கள் அமரவும் படுக்கவும் உதவுகின்றன. அறிவிலார் எதற்கும் பயனில்லாதவர்கள் என்பதைத்தான் அவ்வாறு வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

நிலையாமை பற்றிய பாடலில் எள்ளற் சுவையைக் காணலாம். .இறந்தவனின் பிணத்தைச் சுமந்து கொண்டு செல்பவர்கள் தாங்களும் ஒருநாள் இறப்பவர்களே என நினைக்காரர்களா? இல்லையே என்ற கருத்தில் இகழ்ச்சிக் குறிப்புடன் பிணத்தை இனிச் சாம்பிணங்கள் சுமந்து செல்கின்றன என்கிறார்.

*செத்தாரைச் சாவார் சுமந்து*

(நாலடி–24)

என்ற வரி கற்போர் நினைவை விட்டு நீங்காது.

எதுகை மோனை அழகுபட வரும் பல பாடல்களை நாலடியாரில் காணலாம். சான்றுக்கு ஒரு பாடலைப் பாருங்கள்.

*வைகலும் வைகல் வாக்கண்டும் அஃதுணரார்*
*வைகலும் வைகலை வைகுமென்று இன்புறுவர்*

*வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைத்தல்*
*வைகலை வைத்துணர தார்*

(நாலடி –39)

**குறிப்பு**

இப்பாடலில் ஒவ்வொரு சொல்லிலும் முதல் எழுத்து ஒன்றாக வரும் மோனை என்னும் தொடை அழகினைக் காணலாம் .அவ்வாறே 'வைகல்' எனும் சொல் அடுத்தடுத்து வருவதைக் கண்டு மகிழலாம்.

இனி நாலடியார் நூலிலிருந்து நாம் அறியலாகும் பிற செய்திகளைப் பார்ப்போம்.

இடைக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், தொழில், உணவு, மக்கள் பயன்படுத்திய நாழி, தூணி, பதக்கு முதலிய அளவு கருவிகள், காணி, முந்திரி முதலிய நில அளவைகள், காதம், யோசனை முதலிய தொலைவு அளவைகள் பிறன் மனை விழைந்தார்க்குக் கொலைத் தண்டனை அளிக்கப்பட்டமை, இம்மை மறுமை உண்டு, வினைப்பயன் உண்டு, கூற்றுவன் பாசக்கயிற்றால் உயிர்களைப் பிணித்துக் கொண்டு செல்வான் என்ற நம்பிக்கைகள் இருந்தன என்பவை பற்றியும் அறிந்து கொள்கிறோம். இலக்கிய உலகில் நாலடியார் சிறந்ததோர் அற இலக்கியமாக விளங்குகிறது.

## நட்பு

நட்பின் பல நிலைகளை நட்பியலில் நாலடியார் விளக்குகிறது. திருக்குறளை அடியொற்றி, நட்பாராய்தல், கூடாநட்பு போன்ற அதிகாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நட்பாராய்தல்

நம் வாழ்க்கையின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாக அமையக் கூடியவர்கள் நண்பர்கள். எத்தகைய நட்பைப் போற்ற வேண்டும். யாருடைய நட்பை நிக்க வேண்டும் என்று வாழ்வு சிறக்க வழி கூறுகிறது,நாலடியார். யானையை ஒத்தவர் நட்பினை நீக்குக. நாயைப் போன்றவர் நட்பினைப் போற்றுக என்றும் போற்றுக என்றும் நண்பரைத் தேர்ந்தெடுக்கவழி கூறுகிறது.

யானை தினம் தனக்கு உணவு கொடுக்கும் பாகன் ஏதேனும் ஒரு நாள் தவறு செய்யின் அவனையே அழித்து விடும். எவ்வளவு உயர்ந்த மனிதனும் ஏதேனும் தவறுக் கூடும். ஆதலால் ஒருவன் தான் செய்த உதவியினை உள்ளத்தில் கொண்டு தீங்கு செய்தாலும் பொருட்படுத்தாத ஒருவனையே தன் நண்பனாகக் கொள்ளுதல் வேண்டும். உதவிகள் பல செய்தாலும் ஒரு போது செய்த தீங்கினையே கருத்திற் கொண்டு, காலம் பார்த்து அழிப்பவன் யானை போன்றவன். எனவே யானை போன்றவர் நட்பினை நீக்க வேண்டும்.

குறிப்பு

ஒரு வேளை உணவிட்டாலும் அதையே நினைத்திருக்கும் நாய் அந்த நன்றியை மறவாது. அந்த நாயை வேல் கொண்டு எறிந்தாலும் வாலைக் குழைத்துக் கொண்டு நிற்கும். அப்படிப்பட்டவரின் நட்பினையே போற்ற வேண்டும் என்று நட்பாராய்தலில் விளக்குகிறது நாலடியார் (நாலடி–213).

பக்கத்தில் இருப்பதால் அன்பு பெருகாது. தூரத்தில் இருப்பதால் நட்பு விலகாது என்றும் நட்பின் திறத்தினை வரையறை செய்கிறது.

மூவகை மரங்களை உவமையாக்கி மூவகை மக்களின் பண்புகளை வெளிப்படுத்தும் நாலடிப் பாடல் நயமுடையது. பண்பிலா மக்கள் நாள்தோறும் நீர் பாய்ச்சப் பயன்தரும் கமுக மரத்தை ஒப்பர். இடைப்பட்டவர் விட்டு விட்டு நீர் பாய்ச்சப் பயன் தரும் தென்னை மரத்தை ஒப்பர். விதையிட்ட நாளில் நீர் இடப்பட்டதன்றி, தானே வளர்ந்து பயன்தரும் பனைமரம் ஒப்பர் மேன்மக்கள் என்று, அன்றாடம் மக்கள் பார்த்துப்பழகிய பொருள்களையே உவமையாகக் கூறுவது சிறப்பு (நாலடி– 216).

## கூடாதநட்பு

யாரை நட்பாகக் கொள்ள வேண்டும் என்று கூறியபின் யாருடைய நட்பை விலக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

தம்முடைய காரியம் ஆகும் வரை ஒத்திருந்து காரியம் முடிந்ததும் விலகிச் செல்பவர் நட்புக் கூடாத ஒன்று. அன்புப் பிணிப்பு இல்லாதவர் நட்பு வைக்கோலில் பற்றிய தீ போல் நீடித்து நிற்றலின்றி அழியும் (நாலடி – 234). மன ஒற்றுமை இல்லாதவர் நட்பு துன்பம் தரும் என்ற எச்சரிக்கையும் செய்யப்படுகிறது (நாலடி–237).

*கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ்ஞான்றும்*
*குருத்திற் கரும்புதின் றற்றே – குருத்திற்கு*
*எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்*
*மதுரம் இலாளர்தொடர்பு.* 211

நூல்களின் உட்பொருளை உணர்ந்து கற்று அறிந்தவருடன் கொண்ட நட்பு எப்போதும் குருத்திலிருந்து கரும்பைத் தின்பது போலாம். எக்காலத்தும் நன்மையில்லாதாரிடம் கொண்ட நட்பு, கரும்பை அடியிலிருந்து நுனியை நோக்கித்தின்பது போலும் தன்மையுடையதாகும். (கரும்பை நுனியிலிருந்து தின்றால் வரவர இனிமை அதிகமாவது போல், கற்றோர் நட்பு நாளுக்கு நாள் இனிமை மிகும் அதற்கு எதிர் செலத் தின்றால் வரவர இனிமை குறைவதுபோல் கல்லாதார நட்புச் சுவை குறைந்து வெறுக்கப்படும் என்பதாம்).

குறிப்பு

*இற்பிறப்பு எண்ணி இடைதிரியார் என்பதோர்*
*நற்புடை கொண்டமை யல்லது – பொற்கேழ்*
*புனலொழுகப் புள்ளரியும் பூங்குன்ற நாட!*
*மனமறியப் பட்டதொன் றன்று.* 212

பொன்னைக் கொழித்து விழும் அருவியின் ஓசையால் பறவைகள் அஞ்சி ஓடுதற்கு இடமான அழகிய மலைகள் உள்ள நாட்டையுடைய மன்னனே! ஒருவான் உயர் குடிப்பிறப்பை நோக்கி, 'இவர் இடையில் மாறமாட்டார்' என்னும் நம்பிக்கையால் நட்புக் கொள்வதேயல்லாமல், பிறருடைய மனநிலையை அறிந்து நட்புக் கொள்வது என்பதில்லை. (எனினும் நட்புக்கு மனக்கருத்தும் அறிதல் வேண்டும் என்பது உட்பொருள்).

*யானை யானையவர் நண்பொரிஇ நாயனையார்*
*கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் – யானை*
*அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்*
*மெய்யதா வால்குழைக்கும் நாய்.* 213

யானை போன்ற பெருமையுடையார் நட்பை விலக்கி, நாய் போன்ற இழிவுத் தன்மை உடையராயினும் அவரது நட்பை விரும்பிக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் யானை பலநாள் பழகியிருந்தும் சமயம் வாய்க்கும்போது பாகனையே கொல்லும்! ஆனால் நாயோ, தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு எறிந்த வேலானது தனது உடலில் அழுந்திக் கிடக்க, அவனைக் கண்டதும் வாலை ஆட்டி அவன் அருகே செல்லும். (கல்வி நலம், குல நலம் ஆகியவற்றை மட்டுமே கருதாமல், மனநலத்தையும் அறிந்து ஒருவரிடம் நட்புக்கொள்ள வேண்டும். அகன்ற கல்வியும், சிறந்த குடியும் இல்லையெனினும் மனம் தூ யராயின் அவருடன் நட்புக் கொள்ளலாம் என்பது கருத்து.

*பலநாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சில்*
*சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார் – பலநாளும்*
*நீத்தார் எனக்கை விடலுண்டோ , தம்நெஞ்சத்து*
*யாத்தாரோடு யாத்த தொடர்பு.* 214

பலநாட்களாகப் பக்கத்தில் இருந்து பழகுவராயினும் சில பொழுதேனும் தன் மனத்துடன் பொருத்தமில்லாதரோடு அறிவுடையோர் சேரமாட்டார்கள். அங்ஙனமின்றித் தம் நெஞ்சம் பிணித்தாரோடு கொண்ட நட்பினை, தம்மை விட்டுப் பல நாட்கள் விலகியிருந்தார்கள் என்பதற்காக அவர்களைக் கைவிடுவார்களோ? (மனப்பொருத்தம் உடையாரை நண்பராகக் கொள்ள

வேண்டும் என்பது கருத்து. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான் நட்பாங்கிழமை தரும்' என்பது குறள்).

*கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது*
*வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி – தோட்ட*
*கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை*
*நயப்பாகும் நட்பாரும் இல்.* 215

கொம்பிலே பூக்கும் பூக்கள் முதலில் மலர்ந்து பின் உதிரும் வரை குவியாதிருத்தல் போல, முதல் நாள் உள்ளம் மகிழ்ந்து விரும்பியது போலவே முடிவு வரையில் மகிழ்ந்து விரும்பியிருப்பது நட்புடைமையாகும். அப்படியின்றி, தோண்டப்பட்ட குளத்திலே இருக்கும் பூவைப் போல முதலில் மலர்ச்சியைக் காட்டிப் பின்பு முகம் சுருங்கும் தன்மையுடையவரை விரும்புவாரும் இல்லை நட்புச் செய்வாரும் இல்லை. (என்றும் முகமலர்ச்சியுடன் பழகுவரே நட்புக்கு அழகாம்).

*கடையாயார் நட்பிற் கமுகனையார் ஏனை*
*இடையாயார் தெங்கின் அனையர் – தலையாயார்*
*எண்ணரும் பெண்ணைபோன்று இட்டஞான்று இட்டதே,*
*தொன்மை யுடையார் தொடர்பு.* 216

நட்புத் தன்மையில் கடையாயவர், நாள்தோறும் தண்ணீர் பாய்ச்சிப் பராமரிக்க உதவும் பாக்கு மரம் போல, நாள்தோறும் உதவி செய்தால்தான் பயன்படுவர் இடையாயவர், விட்டு விட்டு நீர் பாய்ச்சிக் கவனித்து வந்தால் உதவும் தென்னை மரம்போல அவ்வப்போது உதவி செய்தால் பயன்படுவர் தொன்மைத் தொடர்பு பாராட்டும் (ஒரு முறை செய்த நட்பினைப் போற்றும்) தன்மையுடைய தலையாயவர். விதையிட்ட நாளில் வார்த்த தண்ணீரன்றிப் பிறகு ஒரு பராமரிப்பும் செய்யாமலே உதவும் மதிப்பு மிக்க பனைமரம் போல் பயன்படுவர்.

*கழுநீருள் காரட கேனும் ஒருவன்*
*விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம் – விழுமிய*
*குய்த்துவையார் வெண்சோறே யாயினும் மேவாதார்*
*கைத்துண்டல் காஞ்சிரங் காய்.* 217

அரிசி கழுவிய நீரிலே உப்பின்றி வெந்த, கறுத்த கீரைக் கறியானாலும் ஒருவன் (நண்பனிடமிருந்து) அன்புடன் பெற்றால் அது அமிழ்தமாகும். (ஆனால்) சீரிய தாளிப்பினையுடைய துவையலுடன் கூடிய வெள்ளிய சோறேயாயினும்,

குறிப்பு

**குறிப்பு**

அன்பிலாதார் கையிலிருந்து வாங்கி உண்பதாயின், அது எட்டிக் காயைத் தின்பது போலாம். (உணவின் சுவையும் நட்பினர் பண்புக்கு ஏற்ப அமையும்).

*நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணியா ராயினும்*
*ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?*
*சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும், செய்விளைக்கும்*
*வாய்க்கால் அனையார் தொடர்பு.* 218

நாயின் காலில் இருக்கும் சிறிய விரல்களைப் போல மிகவும் நெருக்கம் உள்ளவராக இருந்தாலும்,ஈயின் காலளவாயினும் உதவி செய்யாதவர் நட்பினால் என்ன பயன் உண்டாகும்? ஒரு பயனும் உண்டாகாது. ஆதலால், வயலை விளையும்படி செய்கின்ற வாய்க்காலைப் போன்றவரின் நட்பினை, தூரத்தில் இருப்பதாயினும் போய்க் கொள்ளல் வேண்டும். (வயலால் தனக்கு ஒரு பயனும் இல்லையாயினும் தூரத்து நீரைக் கொணர்ந்து வயலை விளைவிக்கும் வாய்க்கால் போலும் பண்புடையாரது நட்பினை நாடிப் பெற வேண்டும் என்பது கருத்து).

*தெளிவிலார் நட்பின் பகைநன்று சாதல்*
*விளியா அருநோயின் நன்றால் – அளிய*
*இகழ்தலின் கோறல் இனிதேமற் றில்லா*
*புகழ்தலின் வைதலே நன்று.* 219

அறிவுத் தெளிவில்லாதவர் நட்பைவிட அவர் பகை நல்லது மருந்தினால் தீராத கொடிய நோயை விடச் சாதல் நல்லது ஒருவரது மனம் மிகவும் வருந்தும்படி இகழ்தலைவிட அவரைக் கொல்வது நல்லது ஒருவரிடம் இல்லாத சிறப்புக்களைக் கூறிப் புகழ்தலைவிட அவரைப் பழித்தல் நல்லது. (நோயினும் சாதல் நன்றாதல் போல, புகழ்தலை விடப் பழித்தல் நன்றாதல் போல, அறிவிலார் நட்பைவிடப் பகை நல்லது என்பது கருத்து).

*மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்*
*பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்*
*பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா*
*மரீஇப் பின்னைப் பிரிவு.* 220

பலருடன் சேர்ந்து பலநாள் கலந்து பழகிப் பலருடைய குணங்களையும் ஒப்பிட்டு அறிந்து தகுதியுடைய மேலோரை நண்பராகக்கொள்ள வேண்டும். ஏனெனில் பல்லினால் கடித்து உயிரைக் கொல்லும் பாம்போடாயினும், பழகிவிட்டுப் பின் பிரிதல் துன்பம் தருவதாகும். (கூடிப் பழகியபின் பிரிதல்

துன்பம் ஆதலின், முன்பே ஒருவரது குணங்களை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்பது கருத்து).

## நாலடியார்

குறிப்பு

### கூடா நட்பு

*செறிப்பில் பழங்கூரை சேறணை யாக*
*இறைத்துநீர் ஏற்றும் கிடப்பர், – கறைக்குன்றம்*
*பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!*
*தங்கருமம் முற்றும் துணை.* 231

மேகம் சூழப்பட்ட காய நிறத்தையும், பொங்கி விழும் அருவிப் புனலையும் உடைய மலை நாட்டு மன்னனே! சுயநலவாதிகள், கட்டுக்கோப்பற்ற பழைய வீட்டின் உள்ளே தண்ணீர் புகாதவாறு அணைகோலியும், முன்னரே புகுந்த நீரை வெளியே இறைத்தும், மேல் விழும் நீரைப் பாத்திரத்தில் ஏற்றும் தம் காரியம் ஆகும் வரை நம்மிடம் இருப்பர் பின் பிரிவர். (சிலர் ஒருவரால் ஒரு காரியம் ஆக வேண்டியிருந்தால், அக்காரியம் முடியும்வரை, அவர் துன்புறுங் காலத்தில் அதனைத் தாங்களும் தாங்கிக் கொண்டிருந்து அக்காரியம் முடிந்தபின் அவரை விட்டு நீங்கிவிடுவர். ஆதலின், இப்படிப்பட்டவருடன் நட்புக் கொள்ளக்கூடாது என்பது கருத்து).

*சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்*
*மாரிபோல் மாண்ட பயத்ததாம் – மாரி*
*வறத்தக்கால் போலுமே வாலருவி நாட!*
*சிறந்தக்கால் சீரிலார் நட்பு.* 232

மிகவும் வெண்மையான அருவிகளைக் கொண்ட மலை நாட்டு வேந்தனே! உயர்ந்தோர் நட்பு மேலான சிறப்புடையதாய் மழைபோலும் சிறந்த பயனுள்ளதாகும். நற்குணமில்லாதார் நட்பு மிகுந்தால், மழை பெய்யாமல் வறண்ட காலத்தை ஒக்கும். (மழை இல்லாததால் வளம் குறைதலோடு வெயிலும் சுட்போல, கூடா நட்பால் நன்மையின்றித் தீமை நேரும் என்பது கருத்து).

*நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை*
*விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் – நுண்ணூல்*
*உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்*
*புணர்தல் நிரயத்துள் ஒன்று.* 233

நுட்பமான அறிவினை உடையவர்களுடன் நட்புச் செய்து அதன் பயனை அனுபவித்தல், விண்ணுலக இன்பத்தினைப் போல மேன்மையுடையதாகும்.

நுட்பமான நூலறிவு அற்ற பயனில்லாதவருடன் நட்புக் கொள்ளுதல் நரகங்கள் ஒன்றினுள் சேர்ந்திருத்தல் போல் துன்பம் தருவதாகும்.

**குறிப்பு**

*பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்*
*ஒருபொழுதும் சொல்லாதே நந்தும் – அருகெல்லாம்*
*சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட!*
*பந்தமி லாளர் தொடர்பு.* 234

பக்கங்களில் எல்லாம் சந்தன மரத்தோப்புக்களைக் கொண்ட மலை நாட்டு அரசனே! அன்பு இல்லாதவருடன் கொண்ட நட்பு வளர்வது போலத் தோன்றி (வைக்கோலில் பற்றிய தீயைப் போல) ஒரு கணப்பொழுதும் நில்லாது கெடும்.

*செய்யாத செய்தும்நாம் என்றலும் செய்தவனைச்*
*செய்யாது தாழ்த்துக் கொண்டு ஓட்டலும் – மெய்யாக*
*இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கும் அந்நிலையே*
*துன்புறூஉம் பெற்றி தரும்.* 235

செய்ய முடியாத காரியங்களையெல்லாம் நாம் செய்வோம் என்று உரைத்தலும், செய்ய முடிந்த காரியத்தை முடிக்காமல் காலம் கடத்தலும் ஆகிய இவை, உண்மையாகவே, இன்புறத்தக்க பொருள்களையெல்லாம் வெறுத்துத் துறந்தவர்க்கும் அப்பொழுதே துன்பத்தைத் தரும். (செய்ய முடியாததைச் செய்வோம் என்பது வெற்று ஆரவார மொழியாகும் செய்ய முடிந்ததைச் செய்யாது காலத்தை ஓட்டுதல் நம்பிக்கை மோசடியாகும். எனவே, இத்தகையோருடன் நட்புக் கொள்ளக்கூடாது என்பது பொருள்).

*ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்*
*விரிநீர்க் குவளையை ஆம்பல்ஒக் கல்லா*
*பெருநீரார் கேண்மை கொளினும்நீர் அல்லார்*
*கருமங்கள் வேறு படும்.* 236

ஒரே குளத்தில் தோன்றி, ஒன்றாகவே நீண்டு வளர்ந்த போதிலும், விரிந்து மணம் வீசும் தன்மையுள்ள குவளை மலர்களுக்கு அல்லி மலர்கள் இணையாக மாட்டா. அது போலச் சிறந்த குணங்கள் பொருந்தியவருடைய நட்பைப் பெற்றாலும் நற்குணங்கள் இல்லாதார் செயல்கள் வேறுபட்டிருக்கும். (நல்லோருடன் பழகினாலும் தமது கெட்ட குணத்தை விடாதவருடன் நட்பு கொள்ளக்கூடாது என்பது கருத்து).

*முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை*
*நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்*

*குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே*
*ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.* 237

இளைய சிறிய பெண் குரங்கு, தன் எதிரே வந்த தந்தையாகிய பெரிய ஆண் குரங்கினை, பயற்றம் நெற்றைக் கண்டாற் போன்ற தன் கைவிரல்களால் முறுக்கிக் குத்தி (அதன் கையில் உள்ள கனியை) பறித்துக்கொள்வதற்கு இடமான மலைகள் உள்ள நாட்டையுடைய மன்னனே! மனம் பொருந்தாதவரிடம் கொள்ளும் நட்பு துன்பம் தருவதாகும்.

**குறிப்பு**

*முட்டுற்ற போழ்தின் முடுகியென் ஆருயிரை*
*நட்டான் ஒருவன்கை நீட்டேனேல் – நட்டான்*
*கடிமனை கட்டழித்தான் செல்வழிச் செல்க*
*நெடுமொழி வையம் நக.* 238

என் நண்பன் துன்புற்றபோது விரைந்து சென்று எனது அருமையான உயிரை அவன் கையில் கொடுத்து அவனது துன்பத்தைப் போக்காவிடின், மிக்க புகழுடைய இந்த உலகம் சிரிக்குமாறு, நண்பனின் சிறந்த மனைவியைக் கற்பழித்த பாவி செல்லும் நரகத்திற்கு நான் செல்வேனாக!

*ஆன்படு நெய்பெய் கலனுள் அது களைந்து*
*வேம்படு நெய்பெய் தனைத்தரோ – தேம்படு*
*நல்வரை நாட! நயமுணர்வார் நண்பொரீஇப்*
*புல்லறிவி னாரொடு நட்பு.* 239

தேன் கூடுகள் பொருந்திய மலைநாட்டு மன்னனே! நன்மையை அறிவாரோடு கொண்ட நட்பை நீக்கிப் புல்லறிவினையுடையாரோடு கொண்ட நட்பு, பசுவின் நெய் ஊற்றி வைக்கும் பாத்திரத்தில் அந்த நெய்யை நீக்கி, வேப்பெண்ணெயை ஊற்றி வைத்தது போலாகும்.

*உருவிற்கு அமைந்தான்கண் ஊராண்மை யின்மை*
*பருகற்கு அமைந்தபால் நீரளாய் அற்றே*
*தெரிவுடையார் தீயினத்தார் ஆகுதல் நாகம்*
*விரிபெடையோடு ஆடிவிட் டற்று.* 240

அழகுடையவனாக அமைந்த ஒருவனிடம் ஒப்புரவு (உபகாரம்) இல்லாமை, பருகுதற்கு அமைந்த பாலில் நீரைக் கலந்தது போலாகும். அறிவுடையோர் தீயோரைச் சார்ந்து கெடுதல், நாகப்பாம்பு விரியன் பெடையுடன் புணர்ந்து உயிரை விட்டது போலாகும். (உருவ அழகு இருந்து பயனில்¨ல் உதவும் பண்பும் வேண்டும் என்பதும் சேரத்தகாதவருடன் சோ¢ன் கெடுவர் என்பதும் இப்பாடற் கருத்துக்களாம்).

குறிப்பு

# வினா–விடைகள்

1. கல்விச் செல்வத்தின் சிறப்பு யாது?

கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. பிறரால் திருடப்படாதது. புகழைக் கொடுக்கும். அரசரே சினந்தாலும் பறிக்க இயலாது.

2. யானை போன்றவரின் நட்பை நீக்க வேண்டும். ஏன்?

தினம் உணவளிக்கும் பாகனையே கொல்லும் இயல்புடையது யானை, அது போன்ற இயல்புடையவர் நட்பை நீக்க வேண்டும்.

3. மூவகை மரங்களில் எவ்வகை மரங்களை மேன் மக்களுக்கு உவமை கூறுகிறது நாலடியார்? ஏன்?

பனைமரங்களை மேன்மக்களுக்கு உவமையாகக் கூறுகிறது. ஒருமுறை நீர் விட்டாலும் பயன்தரும் இயல்புடைய பனை மரங்களைப் போல் மற்றவர்க்கு உதவும் தன்மையினால் அவ்வாறு கூறுகிறது.

4. சான்றோர் இயல்புகளாக நாலடியார் குறிப்பிடுவன எவை?

அறிவுடையவர், மானம்உடையவர், இரத்தலை விரும்பாதவர் என்று குறிப்பிடுகிறது.

5. நாலடியார் – குறிப்புவரைக.

நாலடியார் நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும்.இது திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது.

வாழ்க்கையின் எளிமையான கருத்துகளை உவமானங்களாக கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் போக விளங்குகிறது.

நாலடியார் சமண முனிவர் நானூறு பேர் பாடிய வெண்பாக்களின் தொகுப்பாகும். நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார். இயற்றப்பட்டக் காலம் சங்கம் மருவிய காலம்.

நாலடியார் பாடல்களின் எண்ணிக்கை கடவுள் வாழ்த்து 1 அறத்துப்பால்: 130 பாடல்கள் (13 அதிகாரங்கள்) பொருட்பால் பாடல்கள் (26 அதிகாரங்ள்) காமத்துப்பால்: 10 பாடல்கள் (1 அதிகாரத்தில் மொத்தம்: 400 பாடல்கள் (40 அதிகாரங்கள்)

# கூறு 5

# பழமொழிநானூறு

குறிப்பு

இந்நூலிலுள்ள பாடல்களுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பழமொழியை அமைத்து, அதற்கு விளக்கம் கூறும் வகையில் ஆசிரியர் பாடியிருத்தலின், பழமொழி என்னும் சிறப்புப் பெயர் பெற்றது. மேலும் இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இதனால் பழமொழி நானூறு" என்றும் இது குறிக்கப் பெறும். இதன் ஆசிரியர் மூன்றுறை அரையனார்.

## இலக்கியங்களில் பழமொழிகள்

சங்க இலக்கியம் முதலாக அனைத்துஇலக்கியங்களிலும் பழமொழிகள் பயின்று வருகின்றன.

*அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு*
*பழகப் பழகப் பாலும் புளிக்கும்*

என்ற இரண்டு பழமொழிகளும் மக்களிடையே மிகவும் அறிமுகமானவை. குறுந்தொகையில் இப்பழமொழி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்று பார்ப்போமா?

தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையிடம் (பொதுமகளிர்) சென்று விட்டான் தலைவன். தலைவி வருந்தியிருக்கிறாள். அவள் மீது அன்புடைய தோழி தலைவன்

வந்தவுடன் அவனை வீட்டின் உள்ளே விடாமல் வாயிலில் நிறுத்திக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பேசுகிறாள்.

குளிர்ச்சியான நீரில் அளவிற்கு மேல் நீராடினால் உடம்பிற்குத் துன்பம் உண்டாகும். தேன் இனிப்புடையதுதான். அதையே இடைவிடாது பலமுறை உண்டால் உண்டவர்க்கு அது வெறுப்பைக் கொடுக்கும். சுவை உடைய தேன் இப்போது புளிப்பாய் இருக்கும். அதுபோல நாங்களும் உனக்கு இதுநாள் வரை இனிய இன்பப் பொருளாய்த் தோன்றினோம். பழக்க மிகுதியால் இப்போது வெறுப்புடைப் பொருளாக மாறினோம் என்று கூறுகிறாள். இந்தக் கருத்தை உட்படுத்தி,

*நீர் நீடாடிற் கண்ணும் சிவக்கும்*
*ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்*

(குறுந்தொகை:354)

(நீடு ஆடில் = நீண்ட நேரம் நீராடினால்,
ஆர்ந்தோர் = அதிகமாக உண்டோர்)

என்ற பாடலைப் பாடுகிறார் புலவர் கயத்தூர் கிழார்.

குறிப்பு

காப்பியங்களிலும், புராணங்களிலும் பழமொழிகள் எடுத்தாளப்படுகின்றன. கம்பராமாயணம், வில்லிபாரதம், திருமுறைகள், திருவருட்பா ஆகிய நூ ல்களிலும் பலமொழிகளைக் காண முடிகிறது.

## நாடகங்களில் பழமொழி

நாடக இலக்கியங்களிலும் பழமொழிகள் பல இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 'பெண் என்றால் பேயும் இரங்குமே' என இராம நாடகத்திலும், 'பூவையை வளர்த்துப் பூனைக்கு ஈயவோ' என்று மனோன்மணீயம் நாடகத்திலும் பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## இலக்கியப்பெருமையும்பழமொழியும்

தமிழ் இலக்கியங்களில் சிறப்பு வாய்ந்தவை திருக்குறளும், நாலடியாரும். இவற்றின் பெருமையை வெளிப்படுத்துகின்ற வகையிலும் பழமொழிகள் வழங்குகின்றன.

*பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்*
*ஆலும் வேலும் பல்லுக்குறுதி*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி*

என்பவை குறளுக்கும் நாலடியாருக்கும் சிறப்பைத் தரும் பழமொழிகள். அதைப்போல, 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று பழமொழிகளால் குறிப்பிடுவதைக் காணலாம்.

## தமிழ்மொழியின்சிறப்பு

ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற அனைத்து மொழிகளிலும் பழமொழிகள் உண்டு. ஆனால் எம்மொழியிலும் பழமொழிக்கென்று ஒரு தனிநூல் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழில் பழமொழிக்கென்று நூல்கள் உள்ளன. அவை ' பழமொழி நானூறு' மற்றொன்று பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம் என்பன. இத்தனைச் சிறப்பு பழமொழிக்கு உரியது ஆவதற்கு என்ன காரணம் என்று பார்ப்போமோ?

குறிப்பு

## பழமொழி – அமைப்பும்சிறப்பும்

### பழமொழி என்ற சொல் – விளக்கம்

1. பழமையான மொழி – தொன்மையானது (அனுபவ மொழிகள் )
2. பழம் போன்ற மொழி – பழம் போல்இனிமையானது. சுவை உடையது. (இலக்கியச்சுவை )
3. பழம் போல் நன்மையளிப்பது (வாழ்க்கையில் நெறிப்படுத்துவது)
4. பழம் போல் நெகிழ்ந்த தன்மை – புரிந்து கொள்ள எளிமையானது.

என்கிற அனைத்துப் பொருளையும் உள்ளடக்கியுள்ளது. பழமொழி என்ற சொல் மிகவும் பொருளாழம் உடையது இல்லையா?

### இலக்கணம்

தொல்காப்பியர் பழமொழியை “முதுமொழி” என்று குறிப்பிடுகிறார்.

*அங்கதம் முதுசொலோடு*

(தொல். பொருள்.செய்:79)

இம்முதுமொழிக்குரிய இலக்கணத்தைத் தொல்காப்பியர் வகுத்தும், தொகுத்தும் உரைக்கிறார்.

*நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்*
*குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்*
*ஏது முதலிய முதுமொழி யென்ப*

(தொல். பொருள்.செய்:177)

இதன்பொருளாவது:

1. பழமொழி கூர்மையோடு திட்ப நுட்பம் உடையதாய் இருத்தல் வேண்டும்.
2. சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டும்.
3. சிறந்ததாக எளிமையாக அமைந்து இருக்க வேண்டும்.
4. குறித்த பொருள் ஒன்றினை வரையறுத்துக் கூற வேண்டும்.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த இலக்கணங்கள், இன்று பழமொழிக்கு மேலைநாட்டார் கூறும் விளக்கத்தோடு பொருந்துகின்றன என்பது வியப்பைத் தருகிறது.

குறிப்பு

## தொல்காப்பியமும் பழமொழியும்

மேற்கூறிய கருத்துகள் பெரும்பாலும் தொல்காப்பியர் கருத்துகளுடன் ஒத்துச் செல்கின்றன. தொல்காப்பியர் கூறிய பழமொழி இலக்கணங்களுக்கு ஏற்பவே பழமொழி நானூறு சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது. எளிமையாக, அதே சமயம் கூர்மையாக,

கூறவந்த கருத்தை வரையறுத்துச் சொல்வதாக இருக்கிறது. சுவையாக அமைந்து எக்காலத்தும் பயன்படுத்தும் வண்ணம் நின்று நிலவும் பெருமை உடையதாய் உள்ளது.

## அமைப்பு

முதல் இரண்டடிகளில் ஆசிரியர் தாம் எடுத்துக் கொண்ட பொருளைக் கூறுவார். மூன்றாமடியில் ஆணையோ, பெண்ணையோ விளித்துக் கூறுதலைக் காணலாம். அதனைத் தொடர்ந்து நான்காம் அடியில் பழமொழியைக் காணலாம்.

## வரலாற்றுக் குறிப்புகளும் புராணக் குறிப்புகளும்

பண்டைய வரலாற்று நிகழ்ச்சிகள் பல இந்நூலில் குறிக்கப்படுவதைக் காணலாம். மனுநீதிச் சோழன், பொற்கைப் பாண்டியன், பாரி, பேகன், கரிகாற் சோழன், சேரன்

செங்குட்டுவன் ஆகியோரைப் பற்றிய செய்திகள் சில குறிக்கப்படுகின்றன.

தவறு செய்த தன் மகனைத் தேரின் சக்கரத்தால் கொல்லும்படி ஆணையிட்ட, மனுநீதிச் சோழனைப் பற்றிக்

*கறவைக் கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்*

(பழ–242)

என்று பழமொழி கூறுகிறது.

*தவற்றை நினைத்துத் தன் கைகுறைத்தான் தென்னவனும்*

(பழ–76)

*முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்*

(பழ– 74)

*நரை முடித்துச் சொல்லால் முறைசெய்தான் சோழன்*

(பழ– 6)

இராமாயண, மகாபாரதக் கதைக் குறிப்புகளும், மாவலி, வாமனன், மதுகைடவர் என்போரைப் பற்றிய புராணக் குறிப்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன.

குறிப்பு

## கல்வி

கல்வியின் சிறப்பைப் பற்றி அறநூல்கள் கூறுகின்றன. அதைப்போல், பழமொழியும் கல்வியின் பெருமையைக் கூறுகின்றது. கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு உண்டு. அறிவுடையவர் புகழ் நான்கு திசைகளிலும் சென்று பரவும். எனவே, அறிவுடையவர்க்கு எந்த நாடும் அயல்நாடாகாது. அவர் சொந்த நாடேயாகும். தன் சொந்த ஊரில் இருப்பது போல இருக்க முடியும். ஆதலால் வழியில் உண்பதற்கு உணவு கொண்டு செல்ல வேண்டியதில்லை. இதனை,

*ஆற்றுணா வேண்டுவதில்*

என்று பழமொழி (4) கூறுகிறது.

அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்புவான். செல்கின்ற இடந்தோறும் அவன் பலராலும் உபசரிக்கப்படுவான். அவனுக்கு வேண்டுவன கிடைக்கும் என்று கல்வியின் சிறப்பும் உயர்வும் கற்றவர் சிறப்பும் உயர்வும் ஒருங்கே உணர்த்தப்படுவதைக் காணலாம்.

## கற்றோர்சிறப்பு

பல நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் அடக்கம் உடையவராய் இருப்பர். தம்மைப் புகழ்ந்து பேசமாட்டார்கள். நீர் நிறைந்த குடம் ஆரவாரம் செய்யுமோ? செய்யாதல்லவா? அதைப் போலவே நிறையக் கற்றுணர்ந்தவர்கள் ஆரவாரம் செய்யமாட்டார்கள் என்பதை விளக்க வந்த பழமொழி.

*நிறைகுடம் நீர்தளும்பல் இல்* (பழ:9)

### அறிவுடைமை

அறிவுடையார் சிறப்புப் பற்றி, பழமொழி என்ன சொல்கிறது என்று பார்ப்போமா? அறிவுச் செல்வம் சிறந்த செல்வம். பொன்னும், இரத்தினமும், சந்தனமும், மாலையும் போன்ற பிற அணிகள் யாவும் ஒருவனை அழகுறச் செய்கின்றன. எப்போது? அவன் அணிந்திருக்கின்ற ஆடை ஒழுங்காக இருக்கும் போதுதான். அதுபோல் அறிவாகியபெருமைஒருவனுக்குஆடைபோன்றது. அறிவாகிய பெருமை இல்லாதவன் செல்வத்தைப் பெற்றதனால் பெருமை அடையமாட்டான்.

*அணியெல்லாம் ஆடையின் பின்* (பழ:26)

என்ற பழமொழி இவ்வாறு அறிவுடைமையின் சிறப்பைப் பேசுகிறது.

வானில் ஆயிரம் நட்சத்திரங்கள் மின்னுகின்றன. ஒப்பற்ற ஒரு சந்திரனும் வானில் ஒளி வீசிக் கொண்டிருக்கிறான். ஆயிரம் நட்சத்திர ஒளி ஒன்று

**குறிப்பு**

கூடினாலும், ஒரு சந்திரனைப் போல் ஒளி தந்து உலகிற்குப் பயன்படாது. அறிவிலார் பலர் சேர்ந்தாலும் அறிவுடையான் ஒருவனுக்கு நிகராகமாட்டார்கள் என்ற கருத்தை விளக்கும் பழமொழிப் பாடல் இதோ:

*ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்*
*மாயிரு ஞாலத்து மாண்(பு) ஒருவன் போல்கலார்*
*பாய்இருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும்*
*காய்கலா ஆகும் நிலா* (பழ:27)

## கல்லாதவர்

இனி,கல்லாதவர் நிலைபற்றிப் பழமொழி என்ன சொல்கிறதென்று பார்ப்போமா? நடக்க முடியாத முடவன் ஒருவன் ஊன்றுகோலை ஊன்றிக் கொண்டு எழுகிறான். எழுந்து என்ன செய்யப் போகிறான்? யானையோடு விளையாடப் போகிறானாம். நமக்கு நகைப்பாக இருக்கிறது. திகைப்பாக இருக்கிறது. ஆனால் அவன் அடையப் போவது

அவமானமும் துன்பமுமே. இதுபோன்ற அவமானத்தையும் துன்பத்தையும் தான் கல்லாதவர் கற்றவரோடு வாதம் செய்யின் அடைவர். இக்கருத்தைச் சொல்லும் பழமொழிப்பாடல் இதோ!

*கல்லாதார் ஆற்றுவாரைக் கறுப்பித்துக் கல்லாதார்*
*சொல்தாற்றுக் கொண்டு சுவைத்துஎழுதல் எற்றெனின்*
*தானும்! நடவான் முடவன் பிடிப்(பு) ஊணி*
*யானையோடு ஆடல் உறவு* (பழ:16)

(கறுப்பித்து = கோபமூட்டி சுனைத்து = சினந்து பிடிப்பு ஊணி = ஊன்று கோலை ஊன்றி)

## தற்சிறப்புப் பாயிரம்

*பிண்டியின் நீழல் பெருமான் அடி வணங்கி,*
*பண்டைப் பழமொழி நானூறும் கொண்டு, இனிதா,*
*முன்றுறை மன்னவன், நான்கு அடியும் செய்து அமைத்தான்,*
*இன் துறை வெண்பா இவை.*

அசோக மரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் அருகக்கடவுளின் திருவடிகளைத் தொழுது பழைய பழமொழிகள் நானூறைத் தழுவி மூன்றுரை அரசர் இனிய பொருட்முறைகள் அமைந்த வெண்பாக்களாக்கி இந்நூ ற்பாட்டுக்களின் நான்கடியும் சுவை தோன்ற பாட்டமைத்தார். இறைவனை வணங்கி இப்பழமொழி நானூறும் பாடப்பெற்றன.

குறிப்பு

## கடவுள்வணக்கம்

*அரிது அவித்து, ஆசு இன்றுஉ ணர்ந்தவன் பாதம்,*
*விரி கடல் சூழ்ந்த வியன் கண் மா ஞாலத்து,*
*உரியதனில் கண்டு உணர்ந்தார் ஒக்கமே – போல,*
*பெரியதன் ஆவி பெரிது.*

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களையும் அருமைகாக கெடுத்தலாம். குற்றமின்றி முற்றும் அறிந்த கடவுளின் திருவடிகளையே அகன்ற கடலால் சூழப்பெற்ற அகன்ற இடத்தினையுடைய பெரிய இவ்வுலகில் உரிமைப் பொருளைப் போலக் கருதி அறிந்தவர்களது உயர்வே பேருடம்பினையுடைய ஆவியைப் போன்று பெரிது

**கருத்து:** கடவுளின் திருவடிகளை உரிமையாக வணங்கியவர்களது உயர்வே மிகச் சிறந்தது.

## 1. கல்வி

*ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்*
*போற்றும் எனவும் புணருமே? – ஆற்றச்*
*சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லையே இல்லை,*
*மரம் போக்கிக் கூலி கொண்டார்.* 1

மிகவும் வழியைக் கடக்கவிட்டு தீர்வைப் பொருள் அடைபவர்கள் இல்லை ஓடத்தைச் செலுத்தி நிறுத்தியபின் கூலியைப் பெறுபவர்கள் இல்லை. (அவைபோல) கல்வியைக் கற்றற்குரிய இளமையில் கல்லாதவன் முதுமையின்கண் கற்று வல்லவனாவான் எனவும் புணருமோ என்று சொல்லுதலும் கூடுமோ? இல்லை.

**கருத்து:** கற்றற்குரிய இளமைப் பருவங் கழிவதற்குமுன்னேகல்வி கற்க வேண்டும்.

*சொற்றொறும் சோர்வு படுதலால், சோர்வு இன்றிக்*
*கற்றொறும்,"கல்லாதேன்" என்று, வழி இரங்கி,*
*உற்று ஒன்று சிந்தித்து, உழந்து ஒன்று அறியுமேல்,*
*கற்றொறும் தான் கல்லாத வாறு.* 2

(கற்றார்முன்பு) ஒன்றைச் சொல்லுந்தோறும் குற்றம் உண்டாதலால் மனத்தளர்வின்றி கற்குந்தோறும் நான் கல்லாதவன் என்று கருதி கல்லா தொழிந்த நாட்களுக்கு வருந்தி மனம் பொருந்தி ஒருமைப்பட மீண்டும் மீண்டும் நினைத்து உழன்று ஒன்று அறியுமேல் – வருந்தி அறிந்திராத ஒரு பொருளை

**குறிப்பு**

அறிவானாயின் பின்னும் நூல்களைக் கற்குந்தோறும் தான்கல்லாதவனாகவே நினைத்துக் கற்கக் கடவன்.

**கருத்து:** படிக்குந்தோறும் அறியாதவனாக நினைத்து ஒவ்வொருவனும் படிக்கவேண்டும்.

*விளக்கு விலை கொடுத்துக் கோடல், விளக்குத்*
*துளக்கம் இன்று என்று அனைத்தும் தூக்கி விளக்கு*
*மருள் படுவது ஆயின், –மலைநாட! – என்னை*
*பொருள் கொடுத்துக் கொள்ளார், இருள்.* 3

மலைநாட்டையுடையவனே விளக்கிற்கு வேண்டிய நெய் முதலியவற்றை விலைப்பணம் கொடுத்துக் கொள்வது விளக்கினால் பொருள் வேறுபாடு இல்லை என்று விளக்கின் தன்மை முழுமையும் ஆராய்ந்தேயாகும் விளக்கு தெளிவாகக் காட்டாது தானே மழுங்குதலைச் செய்யின் பொருள் கொடுத்துப் பெற்ற அதனால் அவர்க்கு வரும் பயன் யாது? (ஆதலால்) பொருளைக் கொடுத்து இருளைக் கொள்ளார்.

**கருத்து:** ஞானநூல்களைக் கற்றல் வேண்டும்.

*ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃது உடையார்*
*நால் திசையும் செல்லாத நாடு இல்லை அந் நாடு*
*வேற்று நாடு ஆகா தமவே ஆம் ஆயினால்,*
*ஆற்று உணா வேண்டுவது இல்.* 4

மிகுதியும் கற்கவேண்டிய நூல்களை அறிந்தவர்களே அறிவுடையார் எனப்படுவார் அவ்வறிவு படைத்தவர்களது (புகழ்) நான்கு திசையின் கண்ணும் பரவாத நாடுகளில்லை அந்த நாடுகள் அயல் நாடுக ளாகா அவ்வறிவுடையோர் நாடுகளேயாம் அங்ஙனமானால் வழியில் உண்பதற்கு உணவு (கட்டமுது) கொண்டு செல்ல வேண்டியதில்லை.

**கருத்து:** கற்றாருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

*“உணற்கு இனிய இந் நீர் பிறிதுஉழி இல்”*
*என்னும் கிணற்று அகத்துத் தேரைபோல் ஆகார், கணக்கினை*
*முற்றப் பகலும் முனியாது இனிது ஓதிக்*
*கற்றலின், கேட்டலே நன்று.* 5

குடித்தற்கு இனிய உவர்ப்பில்லாத நன்னீர் வேறு இடங்களில் இல்லையென்று நினைக்கும் கிணற்றினுள்ளே வாழும் தவளையைப்போல் தாமுங் கருதாமல் நூல்களை நாள் முழுமையும் வெறுப்பின்றி இனிதாகப் படித்து அறிதலைக்

குறிப்பு

காட்டினும் (அறிஞர்களிடம்) விரும்பிக் கேட்டலே நன்று. (கற்றலிற் கேட்டலே இனிது.)

**கருத்து:** தேரைபோ லாதலாவது தாம் விரும்பிச் செய்யும் கற்றதனாலன்றிக் கேட்டறிதலினாற் பயனில்லை என்று கருதுதல்.

*“உரை முடிவு காணான் இளமையோன்!” என்ற*
*நரை முது மக்கள் உவப்ப – நரை முடித்து,*
*சொல்லால் முறை செய்தான், சோழன் – குலவிச்சை*
*கல்லாமல் பாகம் படும்.* 6

வழக்கினது முடிவான உண்மையை ஆராயும் அறிவு நிரம்பப் பெறாதவன் சிறுவயதினன் என்றிகழ்ந்த நரைமயிருள்ள முதியோர் இருவரும் மகிழும்படி நரைமயிரை முடியின்கண் முடித்து வந்து (அவர்கள்கூறிய) சொற்களைக் கொண்டே நீதி கூறினான் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன் தத்தம் குலத்திற்குரிய அறிவு அந்நூல்களைக் கல்லாமலே இனிது அமையும்.

**கருத்து:** குலவித்தைகல்லாமலே அமையும்.

*புலம் மிக்கவரைப் புலமை தெரிதல்*
*புலம் மிக்கவர்க்கே புலனாம் – நலம் மிக்க*
*பூம் புனல் ஊர்! – பொது மக்கட்கு ஆகாதே*
*பாம்பு அறியும் பாம்பின் கால்.* 7

நன்மை மிகுந்த அழகிய நீர்வளம் நிரம்பிய ஊரனே! பாம்பினுடைய கால்களைத் தமக்கு இனமாகிய பாம்புகளே அறியுந் தன்மையுடையன. அதுபோல் அறிவிற் சிறந்தவர்களை அறிவினால் தெரிந்துகொள்ளும் திறம் (அவர்கள் போன்ற) அறிவிற் சிறந்தவர்களுக்கே விளங்கும் கல்வியறிவில்லாதவர்களுக்கு விளங்காது,

**கருத்து:** கற்றோர் பெருமையைக் கற்றோர் அறிவார்.

*நல்லார் நலத்தை உணரின், அவரினும்*
*நல்லார் உணர்ப் பிறர் உணரார் – நல்ல*
*மயில் ஆடும் மா மலை வெற்ப! –மற்று என்றும்,*
*அயிலாலே போழ்ப, அயில்.* 8

கண்களுக்கினிய மயில்கள் (தோகையை விரித்து ஓகையொடு) நடமாடும் சிறந்த மலைநாட்டையுடையவனே! எக்காலத்தும். அயில் அயிலாலே போழ்ப – இரும்பைக் கூரிய இரும்பினாலேயே பிளப்பர் – (அதுபோல) கற்றவாறமைந்த நற்குணமுடையோர்களது அறிவின் நன்மையைஅறிவதாயின் அவர்களைவிடக்

கல்வி ஒழுக்கங்களில் மிக்க அறிஞர்களே அதனை அறிவார்கள் கல்வி ஒன்றே உடையஒத்தாரும் அவையின்றி இழிந்தாரும் அறியமாட்டார்கள்.

**கருத்து:** நல்லார் அறிவினை அவரினும் நல்லாரே அறிவர்.

**குறிப்பு**

*கற்று அறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்*
*பொச்சாந்து தம்மைப் புகழ்ந்து உரைப்பர் – தெற்ற*
*அறை கல் அருவி அணி மலை நாட!*
*நிறை குடம் நீர் தளும்பல் இல்.* 9

பாறைக் கற்களினின்றும் இழிகின்ற அருவிகளை (மாலையாக) அணிந்த மலைநாட்டை யுடையவனே! நீர் நிறைந்த குடம் ஆரவாரித் தலைதல் இல்லை நூல்களைக் கற்று அவைகளின் உண்மைகளை அறிந்தவர்கள் தமது வாழ்வில் அமைத்துக் கண்டனவே அடக்கத்திற்குரிய செயல்களாம். அறியாதார் – கற்றதோடமைந்து நூல் உண்மையையும் அநுபவ உண்மையையும் அறியாதார் மறந்து தங்களைத் தெளிவாக வாயாரப் புகழ்ந்து பேசுவர்.

**கருத்து:** கற்றறிந்தவர்கள்தங்களைப்புகழ்ந்துபேசமாட்டார்கள்.

*விதிப் பட்ட நூல்உணர்ந்து வேற்றுமை இல்லார்,*
*கதிப்பவர் நூலினைக் கையிகந்தார் ஆகி,*
*பதிப்பட வாழ்வார் பழி ஆய செய்தல், –*
*மதிப்புறத்துப் பட்ட மறு.* 10

நல்ல நெறிகள் அமைந்த நூல்களை அறிந்து நூல்களின் விதிகளுக்கும் தமது வாழ்விற்கும் வேறுபாடு இல்லாதவர்கள் மாறுபட்டு எழுந்தோர்களுடைய நூலின் கொள்கைகளைத் தம் வன்மையால் வென்று தலைமைப் பேறுற வாழ்கின்ற அறிஞர்கள் இகழ்தற்குரிய செயல்களைச் செய்தல் திங்களின்கண் இலங்கும் களங்கம் போல் விளங்கித்தோன்றும்.

கருத்து: அறிவுடையோர் மாசுற்ற செயல்களைச் செய்வாராயின் அதுதேசுற்றுத் தோன்றும்.

## 2. கல்லாதார்

*கற்றானும், கற்றார் வாய்க் கேட்டானும், இல்லாதார்*
*தெற்ற உணரார், பொருள்களை – எற்றேல்,*
*அறிவு இலான் மெய்த் தலைப்பாடு? பிறிது இல்லை*
*நாவல்கீழ்ப் பெற்ற கனி.* 11

நூல்களைத் தாமே கற்றாயினும் கற்றவர்களிடம் கேட்டாயினும் கல்வி கேள்வி இல்லாதவர்கள் பொருள்களை – பொருள்களின் உண்மையைத்

தெளிவாக அறியார்கள் கல்வி கேள்விகளின் அறிவு இல்லாதான் உண்மைப் பொருள்களை ஒருகால் அறிதல் எத்தன்மைத் தெனில் நாவல் மரத்தின் அடியில் தானே விழுந்த கனியைப் போல்வதன்றி கல்வி கேள்விகளுள் எதுவும் காரணமாக இல்லை .

**குறிப்பு**

**கருத்து:** கல்வி கேள்வி இல்லாதவர்கள் உண்மைப் பொருள்களை அறியமாட்டார்கள்.

*கல்லாதான் கண்ட கழி நுட்பம் கற்றார்முன்*
*சொல்லுங்கால், சோர்வு படுதலால் – நல்லாய்*
*வினா முந்துறாத உரை இல்லை இல்லை,*
*கனா முந்துறாத வினை.* 12

நற்குணம் உடைய பெண்ணே! நூல்களைக் கல்லாதவன் அறிந்த மிக்க நுண்பொருள் நூல்களைக் கற்றார் முன்பு சொல்லும்பொழுது அப்பொருள் வலியிழத்தலால் வினாவானது முற்பட்டுத் தோன்றாத விடையில்லை கனா முந்துறாதவினை இல்லை – கனாவானது முற்பட்டு நடவாத செயலும் இல்லை. (கல்வியின்றி விளங்கும் நுண்பொருளும் இல்லை.)

**கருத்து:** கல்லாதான் கண்ட நுண்பொருள்விளங்குதல் இல்லை.

*கல்லாதான் கண்ட கழி நுட்பம் காட்டு அரிதால்*
*"நல்லேம் யாம்' என்று ஒருவன் நன்கு மதித்தல் என்?*
*சொல்லால் வணக்கி, வெகுண்டு, அடுகிற்பார்க்கும், –*
*சொல்லாக்கால் சொல்லுவது இல்.* 13

நூல்களைக் கல்லாதவன் தான் நுண்மையுற அறிந்ததாக நினைக்கும் மிக்க நுண்பொருளை பிறருக்கு விளங்கும்படி எடுத்துக்காட்டுதல் இயலாது. (ஆனபின்) கல்வியும் சொல்வன்மையும் இல்லாத ஒருவன் நல்ல பொருள் விளக்கம் உடையேம் என்று தன்னைத் தானே மிகப் பாராட்டுதல் எக்காரணம் பற்றி? தமது சொற்களால் தவத்திற்குப் பகையாயினாரைப் பணியச்செய்து, பணியாராயின் சினந்து கொல்லுகின்ற முனிவர்களுக்கும் தாங் கருதியதை எடுத்துச்சொல்ல முடியாத விடத்து தவத்திற்குச் சொல்லப்பட்ட ஆற்றல்கள் இலவாம்.

**கருத்து:** கற்றார்க்குச் சொல்வன்மை இன்றியமையாது வேண்டப்படும்பொருள்.

*கல்வியான் ஆய கழி நுட்பம், கல்லார் முன்*
*சொல்லிய நல்லவும், தீய ஆம், – எல்லாம்*
*இவர் வரை நாட!–தமரை இல்லார்க்கு*
*நகரமும் காடு போன்றாங்கு.* 14

**குறிப்பு**

எல்லாப் பொருள்களாலும் விரும்பப்படும் மலைநாட்டை உடையவனே! (முன்னர்ப் பெற்றிருந்து பின்னர்) உறவினரை இல்லார்க்கு நகரமும் காட்டை ஒத்துத் துன்பம் பயத்தல்போல நூல்களைக் கற்றதனாலாய மிக்க நுண்பொருள்களுள் நூல்களைக் கல்லார் முன்பு கூறிய நல்லனவும் பொருளற்றனவாகத் தீயவாய் முடியும்.

**கருத்து:** கற்றார், கல்லார் அவையின்கண் சிறந்த பொருள்களைக் கூறாதிருக்கக்கடவர்.

*கல்லாதவரிடைக் கட்டுரையின் மிக்கது ஓர்*
*பொல்லாதது இல்லை ஒருவற்கு – நல்லாய்!*
*இழுக்கத்தின் மிக்க இழிவு இல்லை இல்லை,*
*ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.* 15

நற்குணமுடைய பெண்ணே! தத்தம் நிலைக்கு ஒதப்பட்ட ஒழுக்கத்தினின்றும் வழுவுதலின் மிக்க தாழ்வு ஒருவற்கு இல்லை தத்தம் நிலைக்கு ஒதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதலின் மிக்க உயர்வு ஒருவற்கு இல்லை, (ஆகையால்) கல்வியறிவு உடைய ஒருவனுக்கு நூல்களைக் கல்லாதவரிடத்து விரித்துக்கூறும் கட்டுரையின் மிக்கதோர் பொல்லாதது இல்லை – கட்டுரையைப் பார்க்கிலும் தீமைதருஞ் செயல் பிறிதொன்றில்லை.

**கருத்து:** கற்றார் கட்டுரை, கல்லாதாரிடைப் பொல்லாதாகவே முடியும்.

*கற்று ஆற்றுவாரைக் கறுப்பித்து, கல்லாதார்*
*சொல் தாற்றுக் கொண்டு சுவைத்து எழுதல் – எற்று எனின்*
*தானும் நடவான் முடவன், பிடிப்பூணி,*
*யானையோடு ஆடல் உறவு.* 16

அறியாதவர்கள் நூல்களைக் கற்று (அவைகளிற் கூறியபடி) செயலிற் செய்வாரைக் கோபமூட்டி சொற்களைக் கொழித்துக்கொண்டு (மன எழுச்சியால் அவரோடு மாறுகொண்டு) மிக்கு எழுதல் எத்தன்மைத்தெனின் தானும் நடக்கமுடியாதவனாகிய காற்கூழையன் ஊன்றுகோலை ஊன்றி யானையோடு விளையாடல் உறுதலோடு ஒக்கும்.

**கருத்து:** கல்லார் கற்றாரோடு வாதஞ் செய்யின் அவமானம் அடைவர்.

## 3. அறிவுடைமை

*அறிவினால் மாட்சி ஒன்று இல்லா ஒருவன்*
*பிறிதினால் மாண்டது எவனாம் – பொறியின்*
*மணி பொன்னும், சாந்தமும், மாலையும், மற்று இன்ன*
*அணி எல்லாம், ஆடையின் பின்.* 26

சாணையாற் கழுவுதலையுடைய இரத்தினாபரணமும் பொன்னாபரணமும் கலவையும் பூமாலையும் இவைபோன்ற பிற அணிகள் யாவும் அழகுறச் செய்வதில் உடையின் பின்னேவைத்து எண்ணத்தக்கனவாம். ஆதலால் அறிவினாலாகிய பெருமை ஒருசிறிதும் பெறாத ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் மாட்சிமையுடையதனால் அவனுக்கு என்ன பெருமையைக் கொடுக்கும்?

குறிப்பு

**கருத்து:** செல்வம்உடையோரினும் அறிவுடையாரே சிறந்தோர் ஆவர்.

*ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்,*
*மா இரு ஞாலத்து மாண்பு ஒருவன் போல்கலார்*
*பாய் இருள் நீக்கும் மதியம்போல், பல் மீனும்,*
*காய்கலா ஆகும் நிலா.* 27

பரவிய இருளைப் போக்கும் சந்திரனைப்போல் பல விண்மீன்கள் ஒன்றுகூடினும் நிலவை எரிக்கமாட்டா. (அதுபோல) அறிவு இல்லாதவர்கள் ஆயிரம் பேர் திரண்டனராயினும் பெருமையை உடைய பெரிய இவ்வுலகின் கண அறிவினால் மாட்சிமைப்பட்ட ஒருவனைப்போல் விளங்கார்.

**கருத்து:** அறிவிலார் பலர் திரண்டாலும் அறிவுடையான் ஒருவனைஒவ்வார்.

*நற்கு அறிவு இல்லாரை நாட்டவும் மாட்டாதே,*
*சொல் குறிகொண்டு துடி பண்ணுறுத்ததுபோல்*
*வெற்பு அறைமேல் தாழும் விலங்கு அருவி நல் நாட!*
*கற்றறிவு போகா கடை.* 28

மலையினின்றும் பாறையின்மேல் விழும் விளங்குகின்ற அருவி பாயும் நல்ல நாட்டை உடையவனே! சொல்லால் குறிக்கப்படும் பொருளை உடுக்கையைக் கொண்டு (அதன் கண்) பண் உண்டாக்குவதைப்போல மிகவும் இயற்கையறிவு இல்லாரை கல்வி யறிவைப் போதித்ததனால் சிறந்தவனாக நிலைநாட்ட முடியாது. (ஆகையால்) நூல்களைக் கற்றலால் ஆகிய அறிவு முற்றிலுஞ்செல்லாது.

**கருத்து:** கல்வியறிவோடு இயற்கை யறிவும் உடையான் சிறந்து விளங்குவான்.

*ஆணம் உடைய அறிவினார் தம் நலம்*
*மானும் அறிவினவரைத் தலைப்படுத்தல், –*
*மான் அமர்க் கண்ணாய்! – மறம் கெழு மாமன்னர்,*
*யானையால் யானை யாத்தற்று.* 29

மான் விரும்பும் கண்ணை உடையாய் மனத்திட்பம் உடைய அறிஞர்கள் தம்மைக் கல்வி யறிவால்ஒத்த அறிஞர்களைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளுதல்

வீரம் பொருந்திய பேரரசர்கள் யானையைக் கொண்டு யானைகளைப் பிடித்ததனோ டொக்கும்.

**கருத்து:** அறிவுடையார் அறிவுடையாரையே சேர்த்துக் கொள்வர்.

**குறிப்பு**

*தெரிவு உடையாரோடு, தெரிந்து உணர்ந்து நின்றார்,*
*பரியாரிடைப் புகார், பண்பு அறிவார், மன்ற*
*விரியா இமிழ் திரை வீங்கு நீர்ச் சேர்ப்ப*
*அரிவாரைக் காட்டார் நரி.* 30

பரவி ஒலிக்கின்ற அலைகள் மிகுதியும் உடைய கடற்கரையை உடையவனே! நெல்லரிவோர்களுக்கு (அவ்வேலை கொடும்படி) நரியைக் காண்பியார் (அதுபோல்) ஆராய்ச்சி உடையாருடன் ஆராய்ந்து உண்மை கண்டுணர்ந்தார் நுண்ணறிவு இல்லாரிடம் செல்லார் அவர் குணங்களை ஒருதன்மையாக அறிவார் ஆதலான்.

**கருத்து:** அறிவுடையார் தம் போன்றாரை அறிவிலாரிடம் அழைத்துச் செல்லார்.

*பொற்பவும் பொல்லாதனவும், புணர்ந்திருந்தார்*
*சொல் பெய்து உணர்த்துதல் வேண்டுமோ?–விற் கீழ்*
*அரி தாய்ப் பரந்து அகன்ற கண்ணாய்! – அறியும்,*
*பெரிது ஆள் பவனே பெரிது.* 31

வில்லைப்போன்ற புருவத்தின்கீழ்ச் செவ்வரி படர்ந்திருக்கின்ற மிகவும் அகன்ற கண்ணை உடையாய்! நன்மையையும் தீமையையும் நிரல்படப் புனைந்து மருங்கு இருந்தார் சொற்களால்

கூறவும் வேண்டுமோ? எல்லாவற்றையும் தன்வயமாக நடத்தும் அவனே நன்மை தீமைகளை மிகவும் அறிவான்.

**கருத்து:** கற்றறிந்தவன் எல்லாவற்றையும் தானே பகுத்தறிந்துநடப்பான்.

*பரந்த திறலாரைப் பாசி மேல் இட்டு,*
*கரந்து மறைக்கலும் ஆமோ? –நிரந்து எழுந்து*
*வேயின் திரண்டதோள், வேற்கண்ணாய்! விண் இயங்கும்*
*ஞாயிற்றைக் கைம் மறைப்பார் இல்.* 32

நிரல்பட உயர்ந்து மூங்கில் போன்ற திரண்ட தோள்களையும் வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே! வானிற் செல்லும் சூரியனைக் கையால் மறைப்பவர்கள் இல்லை (மறைக்க முடியாது.) (அதுபோல) மிகுந்த அறிவு ஆற்றல் உடையவர்களை பாசியைப்போன்ற அடாத சில சொற்களையும்

குறிப்பு

செயல்களையும் அவர் மேலிட்டு அவர் புகழை மறைத்து ஒளிக்கவும் முடியுமோ? (மறைக்க முடியாது.)

**கருத்து:** அறிவுடையார் புகழைமறைப்பின் மறைபடாது என்பதாம்.

*அரு விலை மாண் கலனும், ஆன்ற பொருளும்,*
*திருஉடையராயின், திரிந்தும்–வருமால்*
*பெரு வரை நாட! பிரிவு இன்று, அதனால்*
*திருவினும் திட்பம் பெறும்.* 33

பெரிய மலைநாட்டை உடையவனே! செல்வம் உடையவர்களுக்கு ஆயின் (அவர்தம்) அரிய விலையுடைய மாட்சிமைப்பட்ட பூண்களும் நிறைந்த செல்வமும் நிலைபெறாது மாறி வரும் இயல்பை உடையன (அறிவுச் செல்வம் உடையோர்க்கு ஆயின் அவர் தம் செல்வம்) பிரிதலில்லை அத்தன்மையால் செல்வத்தினும் அறிவே உயர்வைப் பெறும்.

**கருத்து:** அறிவுச்செல்வம் பொருட்செல்வம்போல் பிரிதலில்லாமையால் அதனையேதேடுதல் வேண்டும்.

## வினா விடைகள்

1. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?

   முன்றுறையரையனார்.

2. \நிறைகுடம் நீர் தளும்பல் இல்' என்ற பழமொழி விளக்கும் கருத்து யாது?

   நிறையக் கற்றவர்கள் அடக்கத்துடன் இருப்பர்.

3. தானும் துய்க்காமல் மற்றவர்க்கும் கொடுக்காமல் ஒருவன் வைத்திருக்கும் செல்வம் எதைப் போன்றது?

   நாய் பெற்ற தெங்கம்பழம்.

4. \கல் தேயும் தேயாது சொல்' என்பதன் மூலம் நூலாசிரியர் எந்தக் கருத்தை விளக்குகிறார்?

   மலைகள் தேய்வடையும். ஆனால் பழிச்சொல் மறைவதில்லை. எனவே தனக்குக் கேடு வருவதாக இருந்தாலும் ஒருவன் பழி உண்டாக்கக் கூடிய செயல்களைச் செய்யக் கூடாது. இக்கருத்தையே நூலாசிரியர் விளக்குகிறார்.

# கூறு 6

# நல்வழி

குறிப்பு

அவ்வையார் என்ற பெயரில் தமிழகத்தில் ஒரு பெண் பால் புலவர் இருந்துள்ளனர் என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் அவ்வையார் என்ற பெயரில் நான்கு புலவர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் இருந்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முதலாவதாக வாழ்ந்தவர் சங்ககால அவ்வையார். இவர் தொண்டை நாட்டு மன்னர் அதியமானுக்கு நல்ல நண்பர். நீண்டநாள் வாழ்வைத் தரும் நெல்லிக்கனியை மன்னர் அதியமான் தான் உண்ணாது அவ்வை நீண்டநாள் வாழவேண்டும் எனக் கருதி கொடுத்தார் என்பது வரலாற்றுக்கதை. இந்த அவ்வையார் சங்க இலக்கியத்தில் 59 பாடல்களைபாடியுள்ளார்.

பக்திக்கால் இறுதியில் விநாயகர் அகவலைப் பாடியவர் இரண்டாவது அவ்வையார். இவர் பாடிய விநாயகர் அகவலைத்தான் விநாயகரை வழிபடுபவர்கள் முதல் நூலாகக் கொள்வர். இது மிகுந்த பக்திச் சுவையுடைய நூல். ஆழ்ந்தபொருளுடையது. அதற்குப் பலர் பல விளக்கங்கள் எழுதியுள்ளனர்.

மூன்றாவது அவ்வையார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர். சங்ககால அவ்வையார் அரசர்களோடு பழகி வாழ்ந்தவர். இரண்டாம்

அவ்வையார் பக்தர்களோடு வாழ்ந்தவர். மூன்றாம் அவ்வையார் குழந்தைகளோடு வாழ்ந்தவர். குழந்தைகளுக்காக நீதி நூல்களை எழுதியவர். சிறுவயதில் மனப்பாடம் செய்து கொண்டு, வயதான பின்பு பொருளைத் தெளிவாக உணரும் நிலையில் அமைந்தவை இவர் பாடல்கள்.

நான்காவது அவ்வையார் தனிப்பாடல்கள் மிகுதியாகப் பாடியவர். முருகன் குழந்தை நிலையில் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று அவ்வைப்பாட்டியிடம் கேட்க, அவன் மரத்தை உலுப்ப, பழங்கள் மண்ணில் விழ, பழத்திலுள்ள மண்ணை நீக்க அவ்வை ஊத, 'பழம் சுடுகிறதா? பாட்டி, என்ற கதையுடன் தொடர்புடைய அவ்வையார். இவர் மிகச் சிறந்த கருத்துள்ள தனிப்பாடல்களைப் பாடியுள்ளார்.

வாழ்க்கைக்கு நல்ல வழியைக் காட்டும் நூல் என்றதால் இப்பெயர் பெற்றது. கடவுள் வாழ்த்து உட்பட 41 வெண்பாக்களையுடைய நூல்.

குறிப்பு

## கடவுள்வாழ்த்து

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்*
*சங்கத் தமிழ் மூன்றும் தா.*

## நூல்

*புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை*
*மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் – எண்ணுங்கால்*
*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தார் சொல்லும்*
*தீதொழிய நன்மை செயல்.* 1

மண்ணில் பிறந்தவர் வைத்திருக்கும் பொருள் போன பிறவியில் செய்த புண்ணியம் பாவம்

என்னும் இரண்டே. இதைத் தவிர வேறு இல்லை என்று எல்லாச் சமயங்களும் கருதிப் பார்த்துச் சொல்லுகின்றன. எனவே தீமைகளை விலக்கித் தள்ளிவிட்டு நன்மை தரும் செயல்களைச் செய்வோம். அதனால் புண்ணியம் பெருகும். பாவம் போய்விடும். அடுத்த பிறவிக்கு முதலாக இருக்கும்.

*சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்*
*நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்*
*இட்டார் பெரியோர் இடாதார்இழி குலத்தோர்*
*பட்டாங்கில் உள்ள படி.* 2

பட்டறிவு கண்டு வைத்துள்ளபடியும், நீதி தவறாத நெறிமுறைப்படியும் பறைசாற்றினால், இந்த உலகில் இருப்பவை இரண்டே சாதியைத் தவிர வேறு இல்லை. இல்லாதவர்களுக்குக் கொடுப்பவர்கள் பெரியோர் ஆவர், அவர்கள் உயர்ந்த சாதி. கொடுக்காதவர்கள் தாழ்ந்த சாதி.

*இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே*
*இடும் பொய்யை மெய் என்று இராதே – இடும் கடுக*
*உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்*
*விண்டாரைக் கொண்டாடும் வீடு.* 3

இந்த உடம்பே துன்பத்துக்கெல்லாம் பெரும் துன்பமாக இருக்கிறது அல்லவா?. இது பொய்யான உடம்புதானே. இதனை மெய் என்று எண்ணிக்கொண்டு இருக்கலாமா? கூடாது. ஊழ்தான் இதனை இட்டுக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. நல்லூழ் இருந்தால் இதுநன்றாக இருக்கும். இதற்கு ஊழே பெரிய வலிமை. நோய் இந்த உடம்பிற்கு இடும்பை. இதனை

குறிப்பு

விளங்கிக்கொண்டு வாழ்வதுதான் வீடுபேறு. இந்த வீடுபேற்றினைப் பெற்று வாழ்பவர்களை உலகம் கொண்டாடும்.

*எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது*
*புண்ணியம் வந்து எய்த போது அல்லால் – கண் இல்லான்*
*மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே*
*ஆங்காலம் ஆகும் அவர்க்கு.* 4

எண்ணி ஒரு செயலை யாராலும் செய்துமுடிக்க இயலாது, செய்துமுடிக்கும் செயலெல்லாம் அவன் செய்த புண்ணியத்தால் நிறைவேறியது. கண் தெரியாத ஒருவன் தன் கையிலிருந்த தடியை வீசி மாங்காய் விழுவது போன்று அது நிறைவேறும். அது அவனுக்கு ஆகும் காலம். ஆகு ஊழால் தோன்றும் அசைவு இன்மை, கைப்பொருள் போகு ஊழால் தோன்றும் மடி – திருக்குறள்

*வருந்தி அழைத்தாலும் வாராத வாரா*
*பொருந்துவன போமின் என்றால் போகா – இருந்து ஏங்கி*
*நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைத்து*
*துஞ்சுவதே மாந்தர் தொழில்.* 5

வருத்தப்பட்டு முயன்று அழைத்தாலும் நமக்குச் சேரவேண்டியவை அல்லாதன நமக்கு வந்து சேர்வதில்லை. நம்மிடம் வந்து பொருத்த வேண்டியவை நம்மை விட்டுப் போகவேண்டும் என்றால் போவதும் இல்லை. அப்படி இருக்கும் போது ஒன்றை அடையவேண்டும் என்னும் ஏக்கத்தோடு நெஞ்செல்லாம் புண்ணாகும்படி நெடுந்தூரம் திட்டமிட்டுக்கொண்டிருந்து சாவதே மாந்தரின் தொழிலாகப் போய்விட்டது.

*உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்*
*கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்*
*கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்*
*உடலோடு வாழும் உயிர்க்கு.* 6

ஒருவருக்கென்று உள்ளது அவரது உடல், உயிர், இவற்றில் முளையாக ஊறிக்கிடக்கும் ஊழ் ஆகியவற்றை அன்றி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளத்தக்க சுகம் வேறொன்றும் இல்லை. வெள்ளத்திலோ, கடலிலோ ஓடியோ, இழுத்துச் சென்றோ மீண்டு வரையேறினாலும் அவரவர் உடலில்தான் சுகம் காணமுடியும். ஆண் பெண் உறவில்கூடத் தருவது மற்றொருவராயினும் சுகம் காண்பது அவரவர் உடலோடு வாழும் உயிர்தான்.

*எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு*
*பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை – நல்லார்*

*அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்*
*பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு.* 7

எல்லாப் படியாலும் எண்ணினால்இவ் உடம்பு பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை, நல்லார் அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்க மலம் நீர் போல் பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு இப்படி அப்படி எப்படி என்று எல்லாப் படியாலும் எண்ணினால், இந்த உடம்பானது பொல்லாப் புழு மலிந்திருக்கும் நோய் ஆகும். நல்லவர்கள் இதனை அறிந்துகொண்டிருப்பர். ஆதலினால் இதனைப் பிறிதென்றே எண்ணிக்கொண்டிருக்க வேண்டும். உடலிலிருந்து பிரியும் மலம், சிறுநீர் ஆகியவற்றை பற்றி யாரும் பேசுவதில்லை . அது போல இந்த உடம்பு இவ்வளவு அழகு, இவ்வளவு இன்பம் என்று யாரும் பேசமாட்டார்கள். குரம்பை = உடம்புக்கூடு.

**குறிப்பு**

பொல்லாப் புழு என்றது உடம்பிலுள்ள செல் – அணுக் கூறுகளை. தெம்பு, சோர்வு போன்ற உணர்வுகளை எண்ணிப்பார்த்த ஔவை ஏதோ புழு நெண்டுகிறது என்று கண்டுணர்ந்து

கூறியிருக்க வேண்டும். அல்லது குடலானது புழு போன்று இருப்பதை எண்ணியிருக்க வேண்டும்.

*ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்*
*கூட்டும்படி அன்றிக் கூடாவாம் – தேட்டம்*
*மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்*
*தரியாது காணும் தனம்.* 8

பொருள் ஈட்டும் முயற்சி கணக்கில் அடங்காத பலவாயினும் கைக்கூடுவது ஊழின் அளவே நிகழும். அதற்கு மேல் செல்வம் சேராது. தேடிய செல்வத்தால் மரியாதை காணும் மகிமை பொருந்திய உலக மக்களே! இதனைக் கேட்டுக்கொள்ளுங்கள். அந்தச் செல்வமும் ஒருவரிடம் நிலையாகத் தரித்து இருப்பதில்லை.

*ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு*
*ஊற்றுப் பெருக்காம்உலகு ஊட்டும் – ஏற்றவர்க்கு*
*நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்*
*இல்லை என மாட்டார் இசைந்து.* 9

ஆற்றில் வரும் மழைவெள்ளத்தின் வரத்து அற்றுப்போயிற்று. ஆற்று மணல் நடப்பவரின் காலடியைச் சுடுகிறது. அப்படிப்பட்ட காலத்திலும் ஊற்று வெள்ளம் வந்து உலகுக்கு நீரை ஊட்டும். நல்ல குடியில் பிறந்த மேன்மக்களும் அப்படித்தான். தம் செல்வத்தை இழந்து வறுமையில் வாடினாலும் மனம் ஒப்பி இல்லை என்று சொல்லமாட்டார்கள்.

*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் – வேண்டாம்*
*"நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்*
*எமக்கு என் " என்று இட்டு உண்டு இரும்.* 10

**குறிப்பு**

இறந்தவரை எண்ணி ஆண்டுக்கணக்கில் அழுது புரண்டாலும், இறந்தவரின் நினைவுநாள் ஆண்டு அண்டு தோறும் வரும்போதெல்லாம் இறந்தவரை நினைத்துக்கொண்டு அழுது அழுது புரண்டாலும், மாண்டு போனவர் திரும்பி வருவது இல்லை. மாயிலத்தில் உள்ளவர்களே! அழவேண்டாம். நமக்கும் அவர் போன் அதே வழிதான். எனவே, எனக்கு இவை எதற்கு என்று எண்ணி மற்றவர்களுக்கு உணவிட்டுத் தானும் உண்டு வாழ்ந்துகொண்டிருங்கள். நாம் போகும் வரை இட்டும் உண்டும் வாழ்ந்து கொண்டிருங்கள்.

*ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்*
*இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் – ஒரு நாளும்*
*என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!*
*உன்னோடு வாழ்தல் அரிது.* 11

என் வயிறே! இன்று உணவுகிடைக்கவில்லை. இன்று ஒரு நாளைக்கு மட்டும் சாப்பிடாமல் இரு என்று சொன்னால் இருக்கமாட்டேன் என்கிறாய். வயிற்றுப் பசி கிள்ளுகிறது. இன்று நிறைய உணவு கிடைத்திருக்கிறது. இரண்டு நாளைக்குச் சாப்பிட்டுகொள் என்று சொன்னாலும்

சாப்பிடமாட்டேன் என்கிறாய். உணவுக்காக நான் போராடும் துன்பம் உணவுக்குத் தெரியவில்லை. உடம்புத் துன்பத்தை அதிகமாக்கிக்கொண்டே இருக்கிறாய். அதனால் வயிறே! எப்படியும் உன்னோடு நிம்மதியாக வாழமுடியவில்லை.

*ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய*
*வீற்றிருந்த வாழ்வும் வீழும் அன்றே – ஏற்றம்*
*உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்*
*பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு.* 12

ஆற்றங்கரையில் ஆற்றுநீரை உண்டுகொண்டு வளமோடு இருந்த மரமும் ஒருநாள் விழுந்துவிடும். அரசனே எண்ணிப் பார்க்கும்படி பெருமிதத்தோடு வாழ்ந்த வாழ்வும் ஒருநாள் விழுந்துவிடும். பின் எதுதான் விழாது என்கிறீர்களா? உழுது, அதன் விளைச்சலை உண்டு வாழ்தலே ஏற்றம். பெருமை. இதற்கு ஒப்பான வாழ்வு வேறு எதுவும் இல்லை. வேறு எந்தப் பணியாக இருந்தாலும் அதற்குப் பழுது உண்டு.

குறிப்பு

*ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றிச்*
*சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்*
*ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?*
*மெய் அம்புவி அதன் மேல்.* 13

நன்மை அடைபவரை யாரால் அழிக்கமுடியும்? சாவாரை யாரால் தடுக்கமுடியும்? பிச்சை எடுப்பவரை யாரால் விலக்கமுடியும்? உலகில் இவை நிகழத்தான் செய்யும். ஓவாமல் = சளைக்காமல்.

*பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்*
*இச்சை பல சொல்லி இடித்து உண்கை – சீச்சி*
*வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது*
*உயிர் விடுகை சால உறும்.* 14

பிச்சை எடுக்கும் வாழ்க்கை மிகமிக இழிவு. அந்த வாழ்க்கைக்கு மூத்த குடிவாழ்க்கை எது தெரியுமா? சொல்கிறேன் கேள். பலப்பல ஆசைகளைக் காட்டி கேட்போர் மனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இடித்து நப்பாசை கொள்ளும்படிச் செய்து அவர்கள் தரும் பொருளால் தன் வயிற்றை வளர்த்தல் ஆகும். சீச்சீ! இப்படி வாழ்வது மானக்கேடு. இந்த மானக்கேட்டோடு வாழ்வதைக் காட்டிலும் தன் உயிரை விட்டுவிடுவது மேலானது.

*சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு*
*அபாயம் ஒரு நாளும் இல்லை – உபாயம்*
*இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்*
*விதியே மதியாய் விடும்.* 15

சிவாயநம என்னும் சிந்தனையில் ஆழ்ந்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை. மகிழ்வாக வாழ்வதற்கு உரிய தந்திர மந்திரம் இதுதான். இதுவே நமது அறிவு கண்ட மதியாக இருக்கவேண்டும். அல்லாத அறிவின் மதிப்பீடு எல்லாம் விதியால் நமக்குக் கிடைத்தவை.

சிவாயநம, சிவ்ஆயம்நம, சிவன் துணவர் நம்முடையவர், சிவன் தோழராக நாம் இருப்போம், நிகழ்வுகள் எல்லாமே சிவ் என்னும் உணர்வு.

*தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்*
*கண் நீர்மை மாறாக் கருணையால் – பெண்ணீர்மை*
*கற்பு அழியா ஆற்றால் கடல் சூழ்ந்த வையகத்துள்*
*அற்புதமாம் என்றே அறி.* 16

**குறிப்பு**

உலகில் பல அற்புதங்கள். வியப்பு. தண்ணீரின் இருப்பும் சுவையும் நிலத்தில் நலத்தன்மையால் அமைகிறது. கொடைக்குணம் படைத்தோரைத் தக்கோர் என்கிறோம். கண்ணுக்கு நீர்மை என்னும் நன்னெறி கருணை காட்டுவதால் வெளிப்படுகிறது. பெண்ணுக்கு நீர்மை என்னும் நன்னெறி கற்பு அழியாமல் இருக்கும் அவளது ஆற்றலால் அமைகிறது. வையத்துக்குப் பாதுகாப்பு கடல். இவை எல்லாமே அற்புதம்.

*செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்*
*எய்த வருமோ இரு நிதியம்?–வையத்து*
*அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று*
*வெறும் பானை பொங்குமோ மேல்!* 17

செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இருநிதியம் வையத்து அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று வெறும்பானை பொங்குமோ மேல் வெறும் பானை பொங்குமோ? (உலையில் அரிசி போட்டு அடுப்பு எரித்தால்தானே சோறு பொங்கும்.) அதுபோல, முன்பு கொடுத்து வைத்திருந்தால்தானே இன்று செல்வம் நமக்குத் திரும்ப வந்து சேறும். பாவம் செய்துவிட்டு, முயன்று ஈட்டியும் பணம் சேரவில்லையே என்று தெய்வத்தை நொந்துகொள்வதால் என்ன பயன்.

*பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்*
*உற்றார் உகந்தார் என வேண்டார்–மற்றோர்*
*இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே*
*சரணம் கொடுத்தாலும் தாம்.* 18

தாய்தந்தையர், உடன்பிறந்தவர், உறவினர்கள், வேண்டியவர் என்று யாராய் இருந்தாலும், இந்தப் பெருலகில் பெருமை மிக்க நாட்டில் வாழ்பவர் ஆயினும், நச்சரித்து வற்புறுத்தினால்தான் கொடுப்பார்கள். வணங்குக் கேட்டால் தரமாட்டார்கள். இரணம் – ரணம் = காயம், உதைத்தால் கிடைக்கும். கெஞ்சினால் கிடைக்காது. கொடை வன்முறையால் பெறலாம் என்பது ஒரு கோட்பாடு.

*சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்*
*பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் போவிப்பம்*
*பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்*
*நாழி அரிசிக்கே நாம்.* 19

பாழாப் போன உடம்பைப் பாதுகாப்பதற்காக, வயிற்றுப்பசிக் கொடுமைக்கு நாள்தோறும் ஒரு படி அரிசி வேண்டும். அதற்காக யார்யாருக்கோ கும்பிடு

போடுகிறோம். யார்யாரிடமோ சென்று கெஞ்சிப் பிச்சை வாங்குகிறோம். கடல் கடந்து சென்று பாவனைத் தொழில் புரிகிறோம். யார்யாரையோ பாராட்டுகிறோம். பாட்டுப் பாடுகிறோம். –அந்தோ! எல்லாமே வயிற்றுப் பிழைப்புக்காக. சேவித்தல் = வணங்குதல், பாவித்தல் = நடித்தல், போவித்தல் = போற்றல், நாழி = படி (கொள்ளல்–அளவை).

*அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்*
*கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம்–இம்மை*
*மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி*
*வறுமைக்கு வித்தாய் விடும்.* 20

அம்மி துணையாக ஆறு இழிந்த ஆறு ஒக்கும் கொம்மைமுலை பகர்வார்க் கொண்டாட்டம் இம்மை மறுமைக்கும் நன்று அன்று. மா நிதியம் போக்கி வெறுமைக்கு வித்தாய் விடும். (ஓடத்தில் ஏறி ஆற்றைக் கடக்க வேண்டும்) அதை விடுத்து, கல்லில் செய்த அம்மிமீது ஏறி ஆற்றைக் கடப்பது போல, முலையை ஏலம் போட்டு விற்கும் பெண்களைக் கொண்டாடித் துய்க்கும் இன்பம் இவ்வுலக வாழ்க்கைக்கும், மறுபிறவி வாழ்க்கைக்கும் நன்மை பயக்காது. வைத்திருக்கும் பெருஞ் செல்வத்தை அழித்துவிடும். அது ஒரு விதை. கையில் காசில்லாதவனாக்கும் விதை.

## வினா–விடைகள்

1. நல்வழி – பெயர்க்காரணம்தருக.

   மக்கள் நல்ல வழியில் நடப்பதற்கு உதவும்அறக் கருத்துகளைக் கூறுவதால் நல்வழி எனப்படுகிறது.

2. ஆற்றில் தண்ணீர் ஓடவில்லை என்றால் அந்த ஆறு எதன் மூலம் தண்ணீர் கொடுக்கும்?

   ஆற்றில் தண்ணீர் ஓடவில்லை என்றால்,“ஊற்று’ மூலம˙ ஆறு தண்ணீர ˙கொடுக்கும்,

3. செல்வம் இல்லாதவனை யார் எல்லாம் விரும்பமாட்டார்கள்? செல்வம் இல்லாதவனை அவனது மனைவி கூட விரும்பமாட்டாள் அவனைப் பெற்றதாயும் விரும்பமாட்டாள்.

4. எத்தொழிலுக்கு ஒப்பான தொழில் எதுவும் இல்லை? உழவுத் தொழிலுக்கு ஒப்பான தொழில் எதுவும் இல்லை.

5. வன்சொல்லால் வெல்ல முடியாததை எச்சொல்லால் வெல்ல முடியும்?

   வன்சொல்லால் வெல்ல முடியாததை இன்சொல்லால் வெல்ல முடியும்

குறிப்பு

# கூறு 7

# இன்னா நாற்பது

நாற்பது என்னும் எண்தொகையால் குறிக்கப்பெறும் நான்கு நூல்கள் கீழ்க்கணக்கில் உள்ளன. அவற்றுள் கார்நாற்பதும், களவழி நாற்பதும் முறையேஅகம், புறம் என்னும் பொருள் பற்றிப் பாடப்பெற்றவை. எஞ்சிய இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் அறம் உரைப்பன. இவ் இரண்டும் முறையேதுன்பம் தரும் நிகழ்ச்சிகளும் இன்பம் தரும் செயல்களும் இன்னின்ன எனத் தொகுத்து உரைக்கின்றன. நூலுக்குப் புறம்பான கடவுள் வாழ்த்திலுங்கூட, 'இன்னா", 'இனிதே' என்னும் சொற்கள் அமைந்துள்ளன.

நானாற்பது குறித்து இலக்கண விளக்கப்பாட்டியலில்,˙

*காலம் இடம் பொருள் கருதி நாற்பான்*
*சால உரைத்தல் நானாற்பதுவே* (91)

என்னும் ஒரு சூத்திரம் உளது. இதன் உரையில், 'காலம்பற்றி வருவது கார் நாற்பது˙ இடம் பற்றி வருவது களவழி நாற்பது˙ பொருள் பற்றி வருவன இன்னா நாற்பது இனியநாற்பதாம். இன்னலாக்குதலை இன்னா என்றும், இனிமையாக்குதலை இனிய என்றும் கூறினார்' என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. தண்டியலங்கார உரையிலும் (5) இடம் பற்றியும் காலம்பற்றியும் தொகுத்த நூல்களுக்குக் களவழிநாற்பதும், கார் நாற்பதும் உதாரணமாகக் காட்டப்பெற்றுள்ளன.

வீர சோழிய உரைகாரர்நால் – நாற்பது நூல்களைப் 'பின் மொழி எண் தொகை' என்பர். அவர் உரைப் பகுதி வருமாறு:

"இன்னா என்னும் சொல்லினையுடைய நாற்பது கவியாதொரு நூலின் உண்டு, அந்நூல் இன்னாநாற்பது எனவும், இவ்வண்ணம் இனிய நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது எனவும் வருவன பின் மொழிகள்எண் மொழிகள் ஆதலால், பின்மொழி எண்தொகை.' இவ்உரைகாரர் இன்னா நாற்பதை முதலில் கூறி, அதன்பெயர்க்கு விளக்கம் கூறுதலின், இது இனியவை நாற்பதிற்கு முன்னர்த் தோன்றியது என்று கருதலாம். ஏட்டுப் பிரதிகளில் இன்னா நாற்பதின் பின்னரே இனியவை நாற்பது எழுதப்பெற்றிருத்தலும் இக் கருத்தை ஒரு வகையில் வலியுறுத்துகின்றது.

இன்னா நாற்பதில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன. நூல்அமைப்பில் இனியவை நாற்பதினும் இது செவ்வியமுறையை மேற்கொண்டுள்ளது எனலாம். ஒவ்வொரு பாடலிலும் நந்நான்கு

கருத்துகளைக்கொண்டு நான்மணிக்கடிகையைப் போன்று இந் நூல் அமைந்த போதிலும், ஒவ்வொன்றையும் 'இன்னா' என எடுத்துக் கூறுதலின், இது 'இன்னா நாற்பது' என்னும் சிறப்பைப் பெற்றுள்ளது. சிற்சில பொருள்களை இவ்வாசிரியர் மீண்டும் எடுத்துக் கூறுதல் அந்தஅறங்களை வற்புறுத்தி உணர்த்துதற் பொருட்டேயாதல் வேண்டும்.

குறிப்பு

இந் நூலை இயற்றியவர் கபில தேவர். தமிழுலகில் கபிலர் என்ற பெயருடையார் பலர் உள்ளனர். இவர்களில் முக்கியமாக ஐவரைக் குறிப்பிடலாம். முதலாமவராகக் கூறத்தக்கவர் சங்க காலத்தில் பாரிக்கு உற்ற நண்பராய் விளங்கிய அந்தணராகியகபிலர். இவருக்குப்பின் கூறத்தக்கவர் இன்னாநாற்பது செய்த பிற்சான்றோராகிய கபிலர். அடுத்து, பதினோராந் திருமுறையில் வரும் கபிலதேவ நாயனார்என்பவரைக் குறிக்கலாம். பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூலில் கபிலர் பெயரால் அமைந்த சூத்திரங்கள் உள்ளன. 'கபிலர் அகவல்' என்னும் நூலை இயற்றிய கபிலர் ஒருவரும் உள்ளனர். இவர்களுள் பன்னிருபாட்டியலில் குறிக்கப் பெறுபவரையும் இன்னா நாற்பது செய்தவரையும், மொழியின் இயல்பைக் கொண்டு, ஒருவராகத் துணியலாம் என்பர் சிலர். மேற் குறித்த ஒவ்வொருவரும் புகுந்துள்ள துறை வேறுவேறாக இருத்தலையும், அந் நூல்களின் காலம் குறித்து வெவ்வேறு கருத்துகள் ஆராய்ச்சியாளர்களிடையே நிலவுவதையும் நோக்கின், ஐவரும் கபிலர் என்றபெயரில் வேறுவேறு காலத்தில் வாழ்ந்த புலவர் எனக்கொள்ளுதலே தகும்.

இன்னா நாற்பதின் ஆசிரியர் தமதுகடவுள் வாழ்த்தில் சிவபெருமான்,பலராமன், திருமால், முருகன் ஆகியோரைக் குறித்துள்ளார். இதனால், இவர் சமயப் பொது நோக்கு உடையார் என்று எண்ண இடமுண்டு. புறநானூறு 56–ஆம் பாடலில் இந் நால்வரும் இம்முறையே கூறப்பட்டுள்ளனர். சிலப்பதிகாரத்திலும் நால்வரும் அடுத்தடுத்துக் குறிக்கப் பெற்றாலும், சிவபெருமானைத் தவிர ஏனையோரைச் சுட்டும் வரிசையில் சிறிது மாறுபாடுள்ளது (5,169–172 14, 7–10). இவற்றால் இந்நாற் பெருந் தெய்வங்களையும் ஒரு சேரப் போற்றும் வழக்கம் அக்காலத்து இருந்தது போலும்!

## கடவுள் வாழ்த்து

*முக் கட் பகவன் அடி தொழாதார்க்கு இன்னா*
*பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகு இன்னா*
*சக்கரத்தானை மறப்பு இன்னா ஆங்கு இன்னா,*
*சத்தியான் தாள் தொழாதார்க்கு.*

முக்கண்களுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்காதவர்களுக்குத் துன்பமுண்டாம். அழகிய பனைக் கொடியையுடையவனாகிய பலராமனை

நினையாமல் இருத்தல் துன்பமாம். திருமாலை மறத்தல் துன்பம்தரும். அவ்வாறே சக்தியான் வேற்படையை உடையவனாகிய முருகக் கடவுளின் திருவடிகளைத் தொழாதார்க்குத் துன்பம் உண்டாகும்.

## குறிப்பு

**(பதவுரை)** முக்கண்பகவன் – மூன்று கண்களையுடைய இறைவனாகிய சிவபெருமானுடைய, அடி – திருவடிகளை, தொழாதார்க்கு – வணங்காதவர்களுக்கு, இன்னா – துன்பமுண்டாம் பொன்பனை வெள்ளையை – அழகியபனைக் கொடியையுடையவனாகிய பலராமனை, உள்ளாது – நினையாமல், ஒழுகு – நடத்தல், இன்னா – துன்பமாம் சக்கரத்தானை திகிரிப்படையயையுடையவனாகிய மாயோனை, மறப்பு மறத்தல், இன்னா – துன்பமாம் ஆங்கு – அவ்வாறே, சத்தியான் வேற்படையை யுடையவனாகிய முருகக் கடவுளின், தான் திருவடிகளை, தொழாதார்க்கு – வணங்காதவர்களுக்கு, இன்னா – துன்ப மூண்டாகும் எ-று.

முக்கண் – பகலவன் திங்கள் எரி யென்னும் முச்சுடராகிய மூன்று நாட்டங்கள், பகவன் பகம் எனப்படும் ஆறு குணங்களையும் உடையவன். அறுகுணமாவன: முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல், என்பன. பகவன் என்பது பொதுப்பெயராயினும் ‘முக்கண்’ என்னுங் குறிப்பால் இறைவனை யுணர்த்திற்று இறைவனுக்கு உண்மையும் ஏனையர்க்கு முகமனும் எனக் கொள்ளலுமாம்.

*“ஏற்றுவலனுயரிய வெரிமரு ளவிர்சடை*
*மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனுங்*
*கடல்வளர் புரிவளை புரையு மேனி*
*யடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனு*
*மண்ணுறு திருமணி புரையு மேனி*
*விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனு*
*மணிமயி லுயரிய மாறா வென்றிப்*
*பிணிமுகவூர்தியொண்செய்யோனுமென*
*ஞாலங் காக்குங் கால் முன்பிற்*
*றோலா நல்லிசை நால்வ ருள்ளும்”*

என்னும் **புறப்பாட்டால்** பலராமனைக் கூறுதல் தமிழ் வழக்காதலுணர்க. பலராமன் வெண்ணிற முடையனாகலின் வெள்ளை எனப்பட்டான். பொற்பனவூர்தி என்னும்

பாடத்திற்கு அழகிய அன்ன வாகனத்தையுடைய பிரமன் என்று பொருள் கூறிக்கொள்க இனியவை நாற்பதில் அயனையும் வாழ்த்தினரை காண்க. ஒழுகு முதனிலைத் தொழிற்பெயர்.

குறிப்பு

## நூல்

*பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா*
*தந்தை இல்லாத புதல்வன் அழகு இன்னா*
*அந்தணர் இல் இருந்து ஊண் இன்னா*
*ஆங்கு இன்னா, மந்திரம் வாயா விடின்.* 1

சுற்றமில்லாத மனையின் அழகு துன்பம். தந்தையில்லாத மகனின் அழகு துன்பம். துறவோர் வீட்டிலிருந்து உண்ணுதல் துன்பம். அவ்வாறே மந்திரங்கள் பயன் தராவிடில் துன்பம்.

**(பதவுரை)** பந்தம் இல்லாத–சுற்றமில்லாத, மனையின் இல்வாழ்க்கையின், வனப்பு – அழகானது, இன்னா – துன்பமாம் தந்தையில்லாத – பிதா, இல்லாத, புதல்வன் – பிள்ளையினது, அழகு – அழகானது, இன்னா – துன்பமாம் அந்தணர் – துறவோர், இல் இருந்து – வீட்டிலிருந்து, ஊண் – உண்ணுதல், இன்னா துன்பமாம் ஆங்கு – அவ்வாறே, மந்திரம் – மறைமொழியாய மந்திரங்கள், வாயாவிடின் – பயனளிக்காவிடின், இன்னா துன்பமாம் எ-று.

பந்தம் – கட்டு சுற்றத்திற்காயிற்று, மனை – மனைவாழ்க்கை அதன் வனப்பாவது செல்வம். "**சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயன்**" என்பவாகலின் சுற்றமில்லாத மனையின் வனப்பு இன்னாவாயிற்று. இனி, அன்பில்லாத இல்லாளின் அழகு, இன்னாவாம் எனினும் அமையும் '**தந்தையொடு கல்வி போம்**' ஆதலின்தந்தையில்லாத' என்றதனால் கல்விப் பேற்றையிழந்த, என்னும் பொருள் கொள்ளப்படும். அந்தணர் துறவோர் இதனை, அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்' என்னும் **பொய்யா மொழியா** னறிக. துறவறத்தினர் காட்டில் கனி கிழங்கு முதலிய உண்டலேனும், நாட்டில் ஒருவழித் தங்காது திரிந்த இரந்துண்டலேனும், செயற்பாலரன்றி, ஒரு மனையின்கட்டங்கியுண்ணற்பாலரல்ல ரென்க. மந்திரம் இன்னதென்பதனை "**நிறைமொழி மாந்த**ராணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப"

என்னும் தொல்காப்பியத்தா னறிக. மந்திரம் அமைச்சரது சூழ்ச்சி எனப்பொருள் கோடலும் ஆம் சூழாது செய்யும் வினை துன்பம் பயக்கு மென்பது கருத்து.

*பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல்இன்னா*
*ஆர்த்த மனைவி அடங்காமை நற்கு இன்னா*
*பாத்து இல் புடைவை உடை இன்னா ஆங்கு இன்னா*
*காப்பு ஆற்றா வேந்தன் உலகு.* 2

பார்ப்பாருடைய வீட்டில் நாயும்,கோழியும் இருத்தல் துன்பம். கட்டிய மனைவி கணவனுக்கு அடங்காமை துன்பம். பகுப்பு இல்லாத புடைவையை உடுத்தல் துன்பம். அவ்வாறே காப்பாற்ற அரசன் இல்லாத நாடு துன்பம்.

குறிப்பு

**(பதவுரை)** பார்ப்பார் – பார்ப்பாருடைய, இல் – மனையில், கோழியும் நாயும், புகல் – நுழைதல், இன்னா – துன்பமாம் ஆர்த்த – கலியாணஞ் செய்துகொண்ட, மனைவி – மனையாள் அடங்காமை – (கொழுநனுக்கு) அடங்கி நடவாமை, நன்கு இன்னா – மிகவும்ந் துன்பமாம் பாத்துஇல் – பகுப்பு இல்லாத, புடைவை – புடைவையை, உடை – உடுத்தல், இன்னா – துன்பமாம், ஆங்கு அவ்வாறே, உலகு – நாடு, இன்னா – துன்பமாம்எ – று.

பார்ப்பாரில்லிற் கோழியும் நாயும் புகலாகா தென்பதனை “மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது” என்னும் பெரும்பாணாற்றுப்படையடியானு மறிக. ஆர்த்தல் – கட்டுதல் அது தொடர் புண்டாமாறு கலியாணஞ் செய்து கொள்ளுதலையுணர்த்திற்று. அடங்காமை – எறியென் றெதிர் நிற்றல் முதலியன. பாத்து பகுத்து என்பதன் மரூஉ: ஈண்டுத் தொழிற் பெயர் சிலப்பதிகாரத்தில் ‘பாத்தில் பழம்பொருள்” என வருதலுங் காண்க. புடைவை – ஆடவருடையையும் குறிக்கும். ‘பாத்தில் புடைவையுடையின்னா” என்றதனாற் சொல்லியது ஒன்றுடுத்தலாகாதென்பதாம். ‘ஒன்றம ருடுக்கை” என்னும் பெரும்பாணாற்றடி ஒன்றுடாமையே தகுதி யென்பது காட்டி நிற்கின்றது. காப்பு ஆற்றா – காத்தலைச் செய்யாத: ஒரு சொல்லுமாம்.

*கொடுங் கோல் மற மன்னர் கீழ் வாழ்தல் இன்னா*
*நெடுநீர் புணை இன்றி நீந்துதல் இன்னா*
*கடு மொழியாளர் தொடர்பு இன்னா இன்னா,*
*தடுமாறி வாழ்தல் உயிர்க்கு.* 3

கொடுங்கோல் அரசனது கீழ் வாழ்தல் துன்பம். தெப்பம் இல்லாமல் பெரிய ஆற்றினைக் கடந்து செல்லுதல் துன்பம். வன்சொல் கூறுவோரது தொடர்பு துன்பம். உயிர்கள் மனம் தடுமாறி வாழ்தல் துன்பம்.

**(பதவுரை)** கொடுங்கோல் – கொடுங்கோல் செலுத்தும், மறம் கொலைத் தொழிலையுடைய, மன்னர்கீழ் – அரசரது ஆட்சியின் கீழ், வாழ்தல் – வாழ்வது, இன்னா துன்பமாம் நெடுநீர் மிக்க நீரை, புணைஇன்றி – தெப்பமில்லாமல், நீந்துதல் – கடந்து செல்லுதல், இன்னா – துன்பமாம் கடு மொழியாளர் – வன்சொல் கூறுவோரது, தொடர்பு – நட்பு, இன்னா – துன்பமாம் உயிர்க்கு உயிர்களுக்கு, தடுமாறி, – மனத்தடுமாற்ற மடைந்து, வாழ்தல் வாழ்வது, இன்னா – துன்பமாம் எ-று.

**குறிப்பு**

கொடுங்கோல் – வளைந்தகோல் அரச நீதியாகிய முறையினைச் செங்கோல் என்றும், முறையின்மையைக் கொடுங்கோல் என்றும் கூறுதல் வழக்கு : இவை ஒப்பினாகிய பெயர். மன்னர் என்பது அவரது ஆட்சிக்காயிற்று. கடுமொழியாளர் – மிகுதிக் கண் கழறிக் கூறுமுறையன்றி, எம்பொழுதும் வன்சொல்லே கூறுமியல்பினர் என்றபடி, தடுமாற்றம் – வறுமை முதலியவற்றாலுண்டாகும் மனவமைதி யின்மையாகிய துன்பம் உயிரென்றது ஈண்டு மக்களுயிரை.

*எருது இல் உழவர்க்குப் போகு ஈரம் இன்னா*
*கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா*
*திருவுடையாரைச் செறல் இன்னா இன்னா,*
*பெரு வலியார்க்கு இன்னா செயல்.*

எருது இல்லாத உழவர்க்கு அருகிய ஈரம் துன்பமாம். கருவிகளை இழந்து போரில் புறமுதுகிடுதல் துன்பமாம். செல்வம் உடையவர்களிடம் கோபம் கொள்ளுதலும், திறனுடையவர்களுக்குத் தீங்கு செய்தலும் துன்பமாம்.

**(பதவுரை)** எருது இல் – (உழவுக்குரிய) எருது இல்லாத – உழவர்க்கு – உழுதொழிலாளர்க்கு, போகு ஈரம் – அருகிய ஈரம் , இன்னா – துன்பமாம் கருவி – படையின் தொகுதி, கண்மாறி, நிலையழிந்து, புறங்கொடுத்தல் – முதுகு காட்டுதல், இன்னா – துன்பம்ந் தருவதாகும் திருஉடையாரை – (மிக்க) செல்வமுடையவர் பால், செறல் – செற்றங் கொள்ளல், இன்னா – துன்பந் தருவதாகும் பெருவலியார்க்கு – மிக்க திறலுடையார்க்கு, இன்னா செயல் – தீமை செய்தல், இன்னா துன்பந் தருவதாகும்எ-று

போகுதல் – அருகுதல், ஒழித்தல் 'மன்னர் மலைத்தல் போகிய' என்புழி இப் பொருட்டாதல் காண்க. கருவி – தொகுதி ஈண்டுப்படையதுதொகுதி யென்க. கண்மாறி:

ஒருசொல் : 'ஆங்கவனீங் கெனையகன்று கண்மாறி" என்புழிபோல. இனி, கண்மாறி யென்பதற்கு அரசனிடத் தன்பின்றி எனப்பொருள் கொள்ளலுமாம். கருவிகள் மாறி எனப் பிரித்தல் பொருந்து மேற்கொள்க. பெருவலியார் – பொருள் படை முதலியவற்றாற் பெருவலி யுடையராய அரசரும், தவத்தால் ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலுமாம். பெருவலி பெற்றுடையராய முனிவரும் ஆம் பெருவலியார்க் கின்னா செயல் துன்பந்தரும் என்பதனைக், 'கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க், காற்றாதாரின்னா செயல்' என்னுந் திருவள்ளுவப்பயனாலு மறிக,

*சிறை இல் கரும்பினைக் காத்து ஓம்பல் இன்னா*
*உறை சோர் பழங் கூரை சேர்ந்து ஒழுகல் இன்னா*

*முறை இன்றி ஆளும் அரசு இன்னா இன்னா,*
*மறை இன்றிச் செய்யும் வினை.*

குறிப்பு

வேலியில்லாத கரும்புப் பயிரைப் பாதுகாத்தல் துன்பமாம். மழைத்துளி ஒழுகுதலையுடைய பழைய கூரையையுடைய மனையில் வாழ்தல் துன்பமாம். நீதி இல்லாமல் ஆளுகின்ற அரசரது ஆட்சி துன்பமாகும். வெளிப்படையாகச் செய்யும் வேலை துன்பமாகும்.

**(பதவுரை)** சிறைஇல் – வேலியில்லாத, கரும்பினை – கரும்புப்பயிரை, காத்துஓம்பல் – பாதுகாத்தல், இன்னா – துன்பமாம் உறைசேர் – மழைத்துளி ஒழுகுதலையுடைய, பழங்கூரை – பழைய கூரையையுடைய மனையில், சேர்ந்து ஒழுகல் – பொருந்தி வாழ்தல், இன்னா – துன்பமாம் முறை இன்றி – நீதி யில்லாமல், ஆளும் – ஆளுகின்ற, அரசு – அரசரது ஆட்சி, இன்னா – துன்பமாம் மறை இன்றி – சூழ்தலில்லாமல், செய்யும், வினை – செய்யுங்கருமம், இன்னா – துன்பந்தருவதாகும் எ – று.

காத்தோம்பல் : ஒரு பொருளிருசொல் உறைசேர் பழங்கூரை என்றது செய்கையழிந்து சிதைவுற்று மழைநீர் உள்ளிழியுஞ் சிறு கூரையினை. அரசு – அரசனுமாம் அரசன் முறையிலனாயின் முறையிழத்தலானே யன்றி மழையின்மையாலும் நாடு துன்புறும் 'முறைகோடி மன்னவன் செய்யினுறைகோடி, யொல்லாது வானம் பெயல்' என்பது காண்க. அமைச்சருடன் மறைவிற் செய்யப்படுவதாகலின் சூழ்ச்சி மறையெனப்பட்டது.

*அற மனத்தார் கூறும் கடு மொழி இன்னா*
*மற மனத்தார் ஞாட்பில் மடிந்து ஒழுகல் இன்னா*
*இடும்பை உடையார் கொடை இன்னா இன்னா,*
*கொடும்பாடு உடையார் வாய்ச் சொல்.* 6

அறத்தை விரும்பும் நெஞ்சத்தினர் கூறும் கடும் மொழியும் துன்பமாம். வீரத்தன்மையுடையவர்கள் போரில் சோம்பலுடன் இருத்தல் துன்பமாம். வறுமை உடையவரது கொடை தன்மை துன்பமாகும். கொடுமையுடையாரது வாய்சொல்லும் துன்பமாகும்.

**(பதவுரை)** அறம் மனத்தார்–அறத்தை விரும்பும் நெஞ்சத்தினர், கூறும் – சொல்லுகின்ற,கடுமொழியும்–கடுஞ் சொல்லும்,இன்னா–துன்பமாம் மறம் மனத்தார் – வீரத் தன்மையையுடைய நெஞ்சத்தினர்,ஞாட்பில் போரின்கண், மடிந்து ஒழுகல் சோம்பி இருத்தல்,இன்னா–துன்பமாம்இடும்பை உடையார்– வறுமை உடையாரது, கொடை–ஈகைத்தன்மை, இன்னா துன்பமாம்கொடும்பாடு உடையார் – கொடுமையுடையாரது,வாய்ச்சொல்–வாயிற் சொல்லும்,இன்னா – துன்பமாம் எ-று.

“அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கும், இழுக்கா வியன்ற தறம்’ என்பவாகலின்அறமனத்தார் கூறுங் கடு மொழியும் இன்னாவாயிற்று.உம்மை: எச்சப்பொருள்து. இடும்பை—துன்பம்ஈண்டுக் காரணமாய வறுமைமேல் நின்றது. ‘வளமிலாப் போழ் தத்து வள்ளன்மை குற்றம்’ என்று பிற சான்றோருங் கூறினர். கொடும்பாடு—கொடுமை:ஒரு சொல்.“அருங்கொடும்பாடுகள் செய்து’ என்பது திருச்சிற்றம்பலக் கோவையார் நடுவுநிலை யின்மையும் ஆம். வாய்ச்சொல் என வேண்டாது கூறியது தீமையே பயின்ற தென வேண்டியது முடித்தற்கு. வாய்ச்சொல்லும் என்னும் உம்மை தொக்கது.

குறிப்பு

*ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா*
*நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா ˙*
*தேற்றம் இலாதான் துணிவு இன்னா ஆங்கு இன்னா,*
*மாற்றம் அறியான் உரை.* 7

வலிமையில்லாதவன் கையில்பிடித்த ஆயுதம் துன்பமாகும். மணமில்லாத மலரின் அழகு துன்பமாகும்.தெளிவு இல்லாதவன் செய்யும் வேலை துன்பமாகும். அவ்வாறே சொற்களின் நுட்பத்தை அறியாதவனது சொல்லும் துன்பமாகும்.

**(பதவுரை)** ஆற்றல் இலாதான்—வலியில்லாதவன், பிடித்த படைகையிற்பிடித்த படைக்கலம்,இன்னா—துன்பமாம்நாற்றம் இலாத—மணமில்லாத, மலரின் அழகு—பூவின்

அழகானது. இன்னா—துன்பமாம்தேற்றம் இலாதான்—தெளிவு இல்லாதவன், துணிவ —ஒரு வினை செய்யத்துணிதல்,இன்னா—துன்பமாம்ஆங்கு—அவ்வாறே மாற்றம் — சொல்லின் கூறுபாட்டினை,அறியான்—அறியாதவனதுஉரை சொல், இன்னா —துன்பமாம் எ-று.

ஆற்றல்—ஈண்டு ஆண்மை யெனினும் ஆம், ‘வானொடென் வன்கண்ணரல்லார்க்கு’ என்பது காண்க.தேற்றம்—ஆராய்ந்து தெளிதல் ‘தெளிவி லதனைத் தொடங்கார்’ என்பது வாயுறை வாழ்த்து.மாற்றம்—பேசும் முறைமை யென்றும்,எதிருரைக்கும் மொழியென்றும் கூறலுமாம்.

*பகல் போலும் நெஞ்சத்தார் பண்பு இன்மை இன்னா*
*நகை ஆய் நண்பினார் நார் இன்மை இன்னா*
*இகலின் எழுந்தவர் ஓட்டு இன்னா இன்னா,*
*நயம் இல் மனத்தவர் நட்பு.* 8

ஞாயிறு போலும் நெஞ்சத்தை உடையவர்கள் பண்பில்லாமல் இருத்தல் துன்பமாகும். நகுதலையுடைய நட்பினர் அன்பில்லாதிருத்தல் துன்பமாகும்.

போரிலே புறமுதுகிடுதல் துன்பமாகும். நீதியில்லாத மனத்தினை உடையவர்களது நட்பு துன்பமாகும்.

**குறிப்பு**

**(பதவுரை)** பகல்போலும்–ஞாயிறுபோலும்,நெஞ்சத்தார்–மனமுடையார், பண்புஇன்மை–பண்பில்லாதிருத்தல்,இன்னாதுன்பமாம் நகை ஆய– நகுதலையுடைய, நண்பினார்–நட்பாளர்நார்இன்மை–அன்பில்லாதிருத்தல ,இன்னாதுன்பமாம் இகலின்எழுந்தவர்–போரின்கண்ஏற்றெழுந்தவர்,ஒட்டு– புறங்காட்டிபோடுதல்,இன்னா – துன்பமாம்நயம்இல் நீதியில்லாத,மனத்தவர்– நெஞ்சினையுடையாரதுநட்பு–கேண்மை, இன்னா–துன்பமாம்எ-று.

பகல்போலும் நெஞ்சம் – ஞாயிறு திரிபின்றி ஒரு பெற்றித்தாதல் போலத் திரிபில்லாத வாய்மையையுடைய நெஞ்சம்|ஞாயிறன்ன வாய்மையும்"என்பது புறம். இனி நுகத்தின் பகலாணி போல் நடுவுநிலை யுடைய நெஞ்சம் எனினும் பொருந்தும். "நெடுநுகத்துப் பகல்போல, நடுவு நின்ற நன்னெஞ்சீனோர்" என்பது பட்டினப்பாலை பண்பாவது உலகவியற்கை யறிந்து யாவரொடும் பொருந்தி நடக்கும் முறைமை. "பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்" என்பது கலித்தொகை தூயமனமுடையரேனும் உலகத்தோடு பொருந்தி நடவாமை தீதென்பதாம் நகையாய நண்பீனார் நாரின்மையாவது,முகத்தால் நகுதல் செய்து அகத்தே அன்பு கருங்குதல். நயம்–நீதி யென்னும் பொருள்தாதலைத் திருக்குறள் பரிமேலழகருரை நோக்கித் தெளிக்இனிமை யெனவும் விருப்பம் எனவும் பொருள் கூறலும் ஆம்.

*கள் இல்லா மூதூர் களிகட்கு நற்கு இன்னா*
*வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன் இன்னா*
*வண்மை இலாளர்வனப்புஇன்னா ஆங்குஇன்னா,*
*பண் இல் புரவிப் பரிப்பு.* 9

கள் இல்லாத மூதூரில் கள்ளுண்டு களிப்பார்க்கு மிகவும் துன்பமாகும். வள்ளல்கள் இல்லாதிருத்தல் இரவலர்க்கு மிகவும் துன்பமாகும். ஈகைக் குணமில்லாதவர்களுடைய அழகு துன்பமாகும். அவ்வாறே சேணம் இல்லாத புரவி தாங்குதல் துன்பமாகும்.

**(பதவுரை)** கள் இல்லா–கள் இல்லாத,மூதூர்–பழைமையாகிய ஊர்,களிகட்கு – கள்ளுண்டு களிப்பார்க்கு,நன்கு,இன்னா–மிகவுந் துன்பமாம்வள்ளல்கள்– வள்ளியோர், இன்மை–இல்லாதிருத்தல்,பரிசிலர்க்கு–(பரிசில்பெறும்)இர வலர்க்கு,முன்இன்னா – மிகவுந்துன்பமாம்வண்மை இலாளர்–ஈகைக்குண மில்லாதவர்களுடைய,வனப்பு – அழகு,இன்னா–துன்பமாம்ஆங்கு–அவ்வாறே,பண் இல்–கலனையில்லாத,புரவி–குதிரை, பரிப்பு–தாங்குதல்இன்னா–துன்பமாம் எ-று.

குறிப்பு

களிகட்கு இன்னா என்றது எடுத்துக்காட்டு மாத்திரையே, களித்த லென்னுஞ் சொல் கள்ளுண்டு மகிழ்தல் என்னும் பொருளில் முன் வழங்கியது இக் காலத்தே பொதுப்பட மகிழ்தல் என்னும் பொருளதாயிற்று. களி—கள்ளுண்போன்.முன்: மிகுதியென்னும்பொருளது. பண்கலனை இதுகல்லணையெனவும் வழங்கும்.

*பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டு உரைத்தல் இன்னா*
*இருள் கூர் சிறு நெறி தாம் தனிப்போக்கு இன்னா*
*அருள் இல்லார் தம் கண் செலவு இன்னா இன்னா,*
*பொருள் இல்லார் வண்மை புரிவு.*

பொருள் அறியும் அறிவுடையார் இல்லாத இடத்தில் பாட்டுரைத்தல் துன்பமாகும். இருள் நிறைந்த சிறிய வழியில் தனியாகப் போகுதல் துன்பமாகும். அருள் இல்லாதவர்களிடம் இரப்போர் செல்லுதல் துன்பமாகும். அதுபோலப் பொருள் இல்லாதவர்கள் ஈதலைப் புரிதல் துன்பமாகும்.

**(பதவுரை)** பொருள் உணர்வார்—(பாட்டின்) பொருளை அறியும் அறிவுடையார், இல்வழி—இல்லாத இடத்தில்,பாட்டு உரைத்தல் செய்யுளியற்றிக்கூறுதல்,இன்னா – துன்பமாம் இருள் கூர்—இருள்மிகுந்த,சிறுநெறி—சிறிய வழியிலே,தனிபோக்கு – தனியாகப் போகுதல்,இன்னா—துன்பமாம் அருள் இல்லார் தம்கண் தண்ணளியில்லாதவரிடத்தில். செலவு—(இரப்போர்)செல்லுதல் இன்னா துன்பமாம் பொருள் இல்லார் பொருளில்லாதவர்,வண்மை புரிவு ஈதலை—விரும்புதல்,இன்னா—துன்பமாம் எ-று.

புலவராயினார் பாட்டின் பொருளுணரும் அறிவில்லார்பால் தாம் அரிதிற் பாடிய பாட்டுக்களைக்கூறின்,அவர் அவற்றின் பொருளை அறியாராகலின், தம்மை நன்கு மதித்தல் செய்யார் அதுவேயன்றி இகழ்தலுஞ் செய்வர் அவற்றின் மிக்க துன்பம் பிறிதில்லை யாகலின் பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரை தலின்னா' எனப்பட்டது.

*“புலமிக் கவரைப் புலமை தெரிதல்*
*புலமிக் கவர்க்கே புலனாம்”*
*“கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்*
*பொல்லாத தில்லை யொருவற்கு*

என்னும் பழமொழிச் செய்யுட்கள் இங்கே கருதற்பாலன. தாம் அசை. தம்: சாரியை

குறிப்பு

## வினா விடைகள்

1. இன்னாநாற்பது நூலின˙ ஆசிரியர் யார்?

   கபிலர்

2. இன்னாதன என்று மொத்தம் எத்தனை கருத்துகள் இன்னா நாற்பதில் சொல்லப்படுகின்றன?

   164.

3. இன்னா நாற்பது குறிப்பு வரைக

   இன்னா நாற்பது

   கபிலர் என்னும் புலவர் இயற்றியது இன்னா நாற்பது ஆகும். நாற்பத்தொரு பாடல்களைக் கொண்ட இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுதியுள் அடங்குவது.உலகத்தில் கூடாதவை என்னென்ன என்பது பற்றிக் கூறி, நீதி உரைக்கிறது இந்நூல்.

   ‘அறிவிற் சிறந்தவர்கள் வீற்றிருக்கின்ற சபையிலே அறிவில்லாத ஒருவன் புகுவது துன்பத்தைத் தரும். இருட்டிய பின்னர் வழியிற் செல்வது பெரிதும் துன்பம் விளைவிக்கும். விளையக்கூடிய துன்பங்களைத் தாங்கக் கூடிய ஆற்றல் இல்லாதவர்களுக்கத் தவம் இந்த சின்னப் பெற்ற அன்னையைப் பேணிக் காப்பாற்றாமல் துன்பமாகும்’ என்று மனித வாழ்வில் துன்பத்துக்குரியவதும் இழி நிதி புகட்டும் பாடல்:

   *இகழ்த்த சான்றோருட் பேதை புகலின்னா*
   *அதுதுன்பு, போழ்தின் வழங்கல் பெரிதின்னா*
   *இதேது வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா*
   *போம்பா விடல்.*

# கூறு 8
# இனியவை நாற்பது

குறிப்பு

## முகவுரை

இனியவை நாற்பது இன்னா நாற்பதோடு பெயர் ஒற்றுமை உடையது. இந்நூலாசிரியரும் கடவுள் வாழ்த்தில் கபில தேவரைப் போன்றே சிவபெருமானை முற்படக் குறிக்கின்றார். கபில தேவர் இன்னா என்று சுட்டியதை ஒப்ப, இவரும் தாம்கூறும் அறங்களை இனிது என்னும் சொல்லால் குறிக்கின்றார். இனிய பொருள்களை நாற்பது பாடல்களில் இவர் தொகுத்துக் கூறியுள்ளமையால் இவரது நூல் 'இனியவை நாற்பது எனவழங்கப் பெறுவதாயிற்று.

எனினும், இன்னா நாற்பது போன்ற கட்டுக்கோப்பு இந் நூலகத்து இல்லை. இன்னா நாற்பதில் ஒவ்வொரு பாடலிலும் நான்கு இன்னாத பொருள்கள் கூறப்படுகின்றன. இந்நூலில் நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறும் பாடல்கள் நான்கே நான்குதான் உள்ளன(1,3,4,5).எஞ்சிய எல்லாம் மும்மூன்று இனிய பொருள்களையே சுட்டியுள்ளன் இவற்றில் எல்லாம் முன் இரண்டு அடிகளில் இரு பொருள்களும், பின் இரண்டு அடிகளில் ஒரு பொருளுமாக அமைந்துள்ளமை கவனத்திற்கு உரியது.

மூன்று இனிய பொருள்களை மிகுதியும் எடுத்துக்கூறும் இந்நூல் திரிகடுகத்தோடு ஒத்த பண்புஉடையது என்று கொள்ளலாம். அன்றியும் திரிகடுகத்தில் எடுத்தாளப் பெறும் சொற்பொருளமைதிகளை இனியவை நாற்பதுபெரிதும் அடியொற்றிச் செல்லுகிறது. இவற்றை நோக்கினால், பொருளமைப்பில் திரிகடுகத்தையும், நூல் அமைப்பில் இன்னா நாற்பதையும் இந்த ஆசிரியர் மேற்கொண்டனராதல் வேண்டும். திரிகடுகத்தை இளம்பூரணர் முதலிய பழைய உரைகாரர்கள் எடுத்தாளுதலினாலும், இந் நூலை எவரும் எடுத்தாளாமையினாலும், இந்நூல் திரிகடுகத்திற்குப் பிற்பட்டது என்று கருத இடமுண்டு.

இந் நூலின் பெயரை 'இனியது நாற்பது' என்றும், 'இனியவை நாற்பது' என்றும்,\இனிது நாற்பது' என்றும், 'இனிய நாற்பது' என்றும், பதிப்பாசிரியர்கள் முதலியோர் குறித்துள்ளனர். 'இன்னா நாற்பது' என்பதைப் போல 'இனியவை நாற்பது' எனஇந் நூற் பெயரைக் கொள்ளுதல் நலம்.

இந் நூலின் ஆசிரியர் ,மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார். இப்பெயரில் சேந்தனார் என்பது இயற்பெயர்.பூதன் என்பது இவர் தந்தையார்பெயர்.' இவர் தந்தையார் மதுரையில் தமிழாசிரியராய்ச் சிறந்து

குறிப்பு

விளங்கியமை குறித்து, மதுரைத் தமிழாசிரியர் என்னும் சிறப்புப் பெயருடன் வழங்கப்பெற்றார். சேந்தன் என்பது முருகனுக்கு உரிய பெயர்களில் ஒன்று ஆகும். பதினோராந் திருமுறையில் திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார் என்பதும், திவாகரம் செய்வித்தவன் சேந்தன் என்னும் பெயர்பெற்றிருத்தலும் ஈண்டுச் சிந்தித்தற்குரியன.

பூதஞ் சேந்தனார் சிவனை முதலிலும், அடுத்துத் திருமாலையும், பின்னர்ப் பிரமதேவனையும் தமது கடவுள் வாழ்த்தில் குறிப்பிடுகின்றார்.

பிரமதேவன் வணக்கம் பின் சளுக்கியர் காலத்திலேதான் பிரபலமாகக்காணப்படுகிறது. கி.பி. 9–ஆம் நூற்றாண்டில் இவ் வணக்கம் தமிழ்நாட்டில் புகுந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். பொலிசை' என இவர் ஆளும் சொல்(39) இலக்கிய வழக்கிலோ சாசன வழக்கிலோ, இக்காலத்திற்கு முன்னர்க் காணப்பெறவில்லை சீவக சிந்தாமணியிலேதான் (2546) இச்சொல்வழக்குஉள்ளது. எனவே, சீவக சிந்தாமணி தோன்றிய காலப் பகுதியில் இனியவைநாற்பதும் தோன்றியிருக்கலாம்.

கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் இந் நூலில் உள்ளன. இவற்றுள், 'ஊரும் கலிமா' எனத் தொடங்கும் பாடல் ஒன்றுமே (8) பஃறொடை வெண்பா. ஏனைய எல்லாம் நாலடி கொண்ட அளவியல் வெண்பாக்கள். இந்நூல் முழுமைக்கும் செம்மையாய் அமைந்த பழைய உரை உள்ளது.

## கடவுள்வாழ்த்து

*கண்மூன் றுடையான்தாள் சேர்தல் கடிதினிதே*
*தொல்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே*
*முந்துறப் பேணி முகநான் குடையானைச்*
*சென்றமர்ந் தேத்தல் இனிது.*

மூன்று கண்களையுடைய சிவபெருமானது திருவடிகளை அடைதல் இனிது. பழமையான திருத்துழாய் மாலையை அணிந்த திருமாலை வணங்குதல் இனிது. நான்கு முகங்களை உடைய பிரமதேவன் முன் அமர்ந்து அவனை வாழ்த்துதல் இனிது.

(பதவுரை) கண் மூன்று உடையான்–மூன்று கண்களையுடைய சிவபெருமானது, தாள் – திருவடிகளை,சேர்தல்–அடைதல் கடிது இனிது–மிகவினிதுதொல் – பழைமையாகிய, மாண்–மாட்சிமை பெற்ற,துழாய் மாலையானை – திருத்துழாய் மாலையை யணிந்த திருமாலை, தொழல் – கைத்தொழுதல், இனிது – முகம்நான்குஉடையானை – நான்குமுகங்களையுடையபிரமதேவனை, சென்று

**குறிப்பு**

(அவன் திருமுன்) சென்று, அமர்ந்து – மேவியிருந்து, பேணி ஏத்தல் – விரும்பி வாழ்த்தல், முந்துற இனிது–முற்படவினிது.

கண்மூன்றாவன சோம சூரி யாக்கினி . சேர்தல்–இடைவிடாது நினைத்தல்.

*"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்"* (குறள் – 3)

என்னும் பாவிற்குப் பரிமேலழகர் கண்ட உரையானஃதுணர்க் இனி, 'தஞ்சமாகக் கொண்டடைதல்' எனினுமாம். கடிது – 'கடி' என்னும் உரிச்சொற் றிரிபென்க. 'முந்துற' வென்பது 'இனிது' என்னுங் குறிப்புவினையொடு முடிந்தது. 'பேணிமுந்துற வென முடித்து, '(அவன்) மற்றெல்லா வுயிரினும் (தன்னை) விரும்பி முன்வர' எனவும் ' முந்துறப் பேணி' என முடித்து, (ஏத்துவார்) முன்வர விரும்புகின்றவனாகிய அல்லது (ஏத்துவாரை) 'முற்படப் பாதுகாப்பவனாகிய' (பேணி ஈண்டுப் பெயர்) எனவும் \முந்துசென்று உற பேணி ஏத்தல்' என முடித்து 'திருமுன் சென்று நன்கு விரும்பி வாழ்த்தல் எனவும் 'முந்து அமர்ந்து உற பேணி ஏத்தல் என முடித்து திருமுன் இருந்து நன்கு விரும்பி வாழ்த்தல் எனவும் பொருள்கோடற்கிடனிருத்த லறிக் சேர்தல் ஏத்தல் 'தொழல்' என மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரண வழிபாடு| கூறினாராதலுணர்க.

## நூல்

*பிச்சைக் காயினுங் கற்றல் மிகஇனிதே*
*நற்சாலையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே*
*முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே*
*தெற்றவும் மேலாயார்ச் சோர்வு,*

பிச்சையெடுத்தாவது கற்பது இனிது. அப்படி கற்ற கல்வி நல்ல சபையில் உதவுவது மிக இனிது. முத்தையொக்கும் மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோல பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல் இனிது.

(பதவுரை) பிச்சை புக்கு ஆயினும் – பிச்சை யெடுத்துண்டாயினும் கற்றல் – கற்பனவற்றைக் கசடறக் கற்றல் மிக இனிது நல் சவையில் – (அங்ஙனங் கற்ற கல்விகள்) நல்ல சபையின் கண் கைக்கொடுத்தல் – (தமக்கு) வந்துதவுதல், சாலவும் – மிகவும், முன் இனிது – முற்பட வினிது முத்து ஏர் முறுவலார் –முத்தையொக்கும் பற்களையுடைய மகளிரது, சொல் – வாய்ச்சொல், இனிது ஆங்கு – அது போல, மேலாயார்ச் சோர்வு – பெரியாரைத் துணைக் கொள்ளுதல், தெற்றவும் இனிது – தெளியவுமினிது.

*|ஆயினும் என்புழி உம்மை இழிவு சிறப்பு.|*
*"கற்கை நன்றே கற்கை நன்றே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே"*

**குறிப்பு**

என்றார் பின்னோரும். சவை – 'சபா' என்னும் வடசொல் 'ஆ' ஈறு 'ஐ' ஆதல் முறைபற்றிச் 'சபை' என்றாகி, சகர வகர வொற்றுமை பற்றிச் 'சவை' என்றாயது.

நற்சவை – சபைக்கு நன்மையாவது நல்லோர் கூடியிருத்தல். அதனை.

*"நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவ ராடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"* (புறம்: 177)

என்பதனா னறிக. கைக்கொடுத்தலாவது கற்றன வெல்லாம் வேண்டுமுன் நினைவிற்கு வந்து நிற்றல்.

*"நெடும்பகற் கற்ற அவைய முகவுரைத் துதவாது*
*உடைந்துளார் உட்குவருங் கல்வி – கடும்பகல்*
*ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே*
*தீதென்று நீப்பரி தால்"*

என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுள் ஈண்டறியத்தக்கது. ஏர்: உவமவுருப்பு 'தணிகை வெற்பேரும்' என்றார் பெரியாரும், 'ஏர்' என்பதற்கு 'அழகு' எனப்பொருள் கோடலுமொன்று, மகளிர் சொல் இனிதாதலைத் 'தேன் மொழியார்' என்னும் பெயரானு மறிக. சிலப்பதிகாரமுடையார்,

*"பாகுபொதி பவளந் திறந்து நிலா உதவிய*
*நாகிள முத்தி னகைநலங் காட்டி"*

என்றமையும் அப் பொருளை வற்புறுத்து மென்க. தெற்ற இனிதாதலாவது, மிக வினிதாதல்.

*உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்*
*மனைவாழ்க்கை முன் இனிது மாணாதா மாயின்*
*நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்*
*தலையாகத் தான்இனிது நன்கு.*

பொருள் உடையவனது ஈகை இனிது. மனைவியுள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபடக் கூடுமாயின் மனை வாழ்க்கை இனிது. உலக வாழ்க்கை நிலையில்லாதது என்று ஆராய்ந்துணர்ந்து முற்றும் துறத்தல் இவை அனைத்திலும் மிக இனிது.

**குறிப்பு**

**(பதவுரை)** உடையான் – பொருளுடையானது, வழக்கு – ஈகை, இனிது – ஒப்ப முடிந்தால் – மனைவி யுள்ளமுங் கணவனுள்ளமும் (மாறுபாடின்றி) ஒன்றுபடக் கூடுமாயின். மனை வாழ்க்கை – இல்வாழ்க்கையானது, முன் இனிது – முற்பட வினிது' மாணாதாம் ஆயின் – (அங்ஙனம்) மாட்சிமைப்படா தெனின், நிலையாமை நோக்கி – (யாக்கை முதலியன) நில்லாமையை ஆராய்ந்து, நெடியார் – தாமதியாதவராய், துறத்தல் – (அகம் புறமாகிய இருவகைப் பற்றுகளையும்) விடுதல், தலையாக நன்கு இனிது – தலைப்பட மிக வினிது.

ஒப்பமுடிதலின் அருமை தோன்ற 'ஒப்ப முடிந்தால்' என்றார்.

*காதல் மனையாளுங் காதலனும் மாறின்றித்*
*தீதி லொருகருமஞ் செய்பவே – ஓதுகலை*
*எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல் தான்*
*கண்ணிரண்டும் ஒன்றையே காண்"*

என நன்னெறியும்.

*"மருவிய காதல் மனையாளுந் தானும்*
*இருவரும் பூண்டுய்ப்பி னல்லான் – ஒருவரான்*
*இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடஞ்*
*செல்லாது தெற்றிற்று நின்று "*

என அறநெறிச்சாரமும் கூறுதல் காண்க.

மனைவாழ்க்கை ஏனைய துறவற வாழ்க்கையைக் காட்டிலும் இனிதாதலை,

*"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"* (குறள்–46)

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் கூறினார். துறத்தல் (புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய உடம்பின்கண்ணும் உளதாய பற்றினை அவற்றது நிலையாமை நோக்கி) விடுதல் நெடியார் (செல்லற்குக் காலம்) நீட்டியாதவராய் இது முற்றெச்சம் இஃது இப்பொருட்டாதலை.

*"இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றஞ்*
*செல்வம் வலியென்று இவையெல்லாம் – மெல்ல*
*நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்*
*தலையாயார் தாமுய்யக் கொண்டு "*

என்னும் நாலடிச் செய்யுள் வலியுறுத்தும்.

குறிப்பு

"தலையாகத் துறத்தல்' என முடித்து, 'தலைப்பட்டார் தீரத்துறந்தார் என்பதற் கொப்பத் '(தாம்) தலைப்படுமாறு துறத்தல்' எனப் பொருளுரைப்பாரு முளர்.

*ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே*
*நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே*
*ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே*
*தேரிற்கோள் நட்புத் திசைக்கு.*

சொன்ன வேலைகளை மாற்றமில்லாமல் செய்யும் வேலைக்காரர்களைக் கொண்டிருப்பது இனிதாகும். குற்றங்களில் ஈடுபடாமல் கற்றல் மிக இனிதாகும். ஏரினையும் உழவுமாடுகளையும் சொந்தமாக வைத்திருப்பவன் விவசாயம் செய்வது இனிது. அதுபோல் ஆராயின் செல்லுந்திசையில் நட்புக்கொள்ளுதல் இனிது,

**(பதவுரை)** ஏவது மாறா – ஏவலை மறாது செய்யும், இளங்கிளைமை மக்களுடைமை, முன்இனிது – முற்படவினிது˙ நவை போகான் – குற்றங்களிற் செல்லாதவனாய், நாளும் கற்றல் – நாடோறுங் கற்றல், மிக இனிது – ஏர்உடையான் – (தனதென) உழுமாடுகளையுடையானது, வேளாண்மை – பயிர்த்தொழில், இனிது – ஆங்கு – அதுபோல, தேரின் – ஆராயின், திசைக்கு – (தான் செல்லுந்திசையில், கோன் நட்பு – நட்புக்கொள்ளுதல், இனிது

ஏவது 'ஏவு' முதனிலைத் தொழிற்பெயரும், 'உணர்வதுடையார்' (நாலடி) என்புழிப்போல 'அது' பகுதிப் பொருள் விகுதியுமாம். அன்றி, 'மேவா ரிலாஅக் கடை' (திருக்குறள்) என்புழிப்போல, 'ஏவுவது' என்பது விகாரமாயிற் றென்பது மொன்று. இனி 'ஏவியது' என்னும் வினையாலணைந்த பெயர் 'ஏவது' எனக் குறைந்த தென்பாருமுளர். இளங்கிளையாவார் மிக்க ளென்க் 'கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி' என்னும் நாலடிச் செய்யுள் காண்க. ஏர் – எருது˙ 'ஏரழ குழுபெற்றப்பேர்' என்னும் 11 ஆவது நிகண்டு. நாளுங்கற்றல் – நாண்முழுதுங் கற்றலுமாம். வேற்றூராகலின் நட்புக் கோடல் நன்றென்பார்,\ கோணபட்புத்திசைக்கு என்றார். திசைக்கு : வேற்றுமை மயக்கம். 'தான் செல்லுந், திசைக்குப் பாழ் நட்டாரையின்மை என்னும் நான்மணிக்கடிகையும் ஈண்டுக் கருதத்தக்கது.

*யானை யுடைய படைகாண்டல் முன்இனிதே*
*ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே*
*கான்யாற் றடைகரை யூர்இனி தாங்கினிதே*
*மான முடையார் மதிப்பு.*

குறிப்பு

அரசன் யானைப் படைகளைக் கொண்டிருத்தல் இனிது. தசையைத் தின்று உடம்பை வளர்க்காமை இனிது. முல்லை நிலத்தில் ஆற்றினது நீராட கரைக்கண் உள்ள ஊர் இனிது. அதுபோல் மதிப்புடையவரது மதிப்பு கொள்ளுதல் இனிது.

**(பதவுரை)** யானையுடைய படை – யானைகளையுடைய சேனையை, காண்டல் – (அரசன்) செய்து கொள்ளுதல் முன் இனிது – முற்பட வினிது ஊனை தின்று – (பிறிதோருயிரின்) தசையைத் தின்று ˙ ஊனைப்பெருக்காமை – (தன்) உடம்பை வளர்க்காமை, முன் இனிது – கான்யாற்று அடைகரை ஊர் – முல்லை நிலத்து யாற்றினது நீரடை கரைக்கண் உள்ள ஊர், இனிது – வாழ்தற் கினிது ஆங்கு – அவைபோல, மானம் உடையார் – மானமுடையவரது, மதிப்பு கொள்கை , இனிது –

*“கடலெனக் காற்றெனக் கடுங்கட்கூற்றென*
*வுடல்சின வுருமென”* (குணமாலையார் – 123)

எனவும்,

*“காற்றெனக் கடலெனக் கருவரை யுருமெனக்*
*கூற்றென்”* (கனகமாலையார் – 281)

எனவும் சிந்தாமணி யுடையார் கூறியபடி, விசையாற் காற்றும், ஒலியாற் கடலும், வடிவால் வரையும், அச்சத்தா லுருமும், கொலையாற் கூற்று மெனத்தக்க யானைகளைப் பெறுதலின் அருமையும், பெற்ற வழி யுளதாம் பயனுந் தோன்ற ‘யானையுடைய படைகாண்டன் முன்னினிதே’ எனவும்,

*“தன்னூன் பெருக்கற்குத் தான் பிறி தூனுண்பான்*
*எங்ஙன மாளு மருள்”* (குறள் – 251)

என்றபடி, தன்னூன் வளர்த்தல் கருதிப் பிறிதோருயிரின் தசையைத் தின்பவன் அருளிலனாய் அவ்வுலகத்தை இழத்தலின், ‘ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே’ எனவும்,

*“மானயா நோக்கியர் மருங்கல் போல்வதோர்*
*கானயாற் றடைகரைத் கதிர்கண் போழ்கலாத்*
*தேனயாம் பூம்பொழிற் றிண்ணை வெண்மணல்”*

(கனகமாலையார் – 266)

எனச் சிந்தாமணியுடையார் உரைத்தவாறு, நுடக்கமும் அழகுமுடைய கான்யாற்று நீரடைகரை பொழில் செறிந்து வெண்மணல் பரந்திருத்தலின் வாழ்தற்கு வசதியுண்மை தோன்றக் ‘கான்யாற்றடைகரை யூரினிது’ எனவும், தம்

குறிப்பு

நிலையிற் றாழாமையுந் தெய்வத்தாற் றாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாகிய மானமுடையார் கொள்கை,

*“இம்மையு நன்றா மியனெறியுங் கைவிடா*
*தும்மையு நல்ல பயத்தலாற் – செம்மையி*
*னானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்*
*மான முடையார் மதிப்பு”*

என்று நாலடியாரிற் கூறிவண்ணம் இருமையும் பயத்தலின் மானமுடையார் மதிப்பு இனிதே' எனவுங் கூறினா ரென்க.

காண்டல் – செய்தல் ‘நகரங்கண்டான்’ என்னும் வழக்குண்மை தெரிக. இனி, ‘காண்டல்|\பார்த்தல்’ என்பாருமுளர்.

பின்னர் நிற்கும் ‘ஊன்’ கருவியாகுபெய ரென்க.

*கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயஞ்*
*செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்*
*எய்துங் திறத்தால் இனிதென்ப யார்மட்டும்*
*பொல்லாங் குரையாமை நன்கு.* 5

கொல்லாமை முன் இனிது. அரசன் நடுவு நிலைமை தவறி சிறப்பு செய்யாமை இனிது. செங்கோலனாக இருப்பது இனிது. யாவரிடத்தும் திறமையால் கூடியமட்டும் குற்றம் கூறாமை மிக இனிது.

**(பதவுரை)** கொல்லாமை – (ஓருயிரைக்) கொல்லாமை, முன் இனிது மிக வினிது˙ கோல் கோடி – (அரசன்) நடுவு நிலைமை தவறி, மாராயம் செய்யாமை (தன்கண் வினை செய்வார்க்குச் சிறப்புச் செய்யாமை முன் இனிது – மிக வினிது, செங்கோலன் ஆகுதல் (அவன்) முறை செலுத்துவோனாதல், (முன்னினிது) மிகவினிது் யார் மாட்டும் – யாவரிடத்தும், எய்தும் திறத்தால் கூடியமட்டில், பொல்லாங்கு உரையாமை – (பிறர்மீது) குற்றங்கூறாமை, நன்குஇனிது – மிக வினிது, என்ப – என்பர் (மேலோர்)

கொலை பஞ்சமா பாதகங்களி லொன்றாகலின் ‘கொல்லாமை முன்னினிது’ என்றார்.\கோல் கோடி மாராயன் செய்யாமை’ என்பது பாடமென்ப ‘ராயன்’ என்னும் வடசொற்றிரிபு அக்காலத்து வழங்கக் காணாமையானும்,\ கோடி செய்யாமை என்னும் முடிபு நேரிதன்மை யானும், கோல் கோடிச் செய்யாமையே செங்கோல் னாகுதலாகலிற், கூறியது கூறல் என்னுங் குற்றம் நேர்தலானும் அது பாடமாகாதென்க. ‘மாராயம்’ – அரசனாற் செய்யுஞ் சிறப்பு என்பர் நச்சினார்க்கினியர், (பொருளதிகாரம்,புறத் – 69). அரசன் தக்க காரணமின்றி விளையாட்டாக வேட்டமாடி உயிர்களைக் கொல்லுதலும்,

தன்கண் வினை செய்வார் பலருள்ளும் ஒருவன்மாட்டு விருப்புற்று நடுவு நிலைமை தவறி அவற்குரித்தாகாத சிறப்புகளைச் செய்தலும், மற்றொருவன் மாட்டு வெறுப்புற்று அவன்மீது குற்றஞ் சாற்றலும் கூடாவாம் இவையின்றி நீதி செலுத்தல் இனிதென்பது கருத்தென்க. பொல்லாங்குரையாமையைச் சோர்வற மேற்கொள்ளுத லரிதென்பார்,"எய்துந்திறத்தால்' என்றார். 'கோல் கோடி' என்புழிக் கோலென்றது தராசுக்கோலை என்றுணர்க. செவ்விய கோலொத்தலின் 'செங்கோல்' ஆயிற்றென்ப.

குறிப்பு

*ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்இனிதே*
*பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே*
*வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்*
*காப்படையக் கோடல் இனிது.*

கூடிய மட்டும் தருமம் செய்தல் இனிது. சான்றோர்களின் பயனுடைய சொல் இனிது. கல்விச் செல்வம் அதிகாரம் ஆண்மை முதலிய எல்லாம் இருந்தும் 'நான்' என்ற குணம் இல்லாதவனைத் துணையாகக் கொள்வது இனிது.

**(பதவுரை)** ஆற்றுந் துணையால் – கூடிய மட்டும், அறஞ்செய்கை – தருமஞ் செய்தல், முன் இனிது – மிக வினிது பால்பட்டார் நன்னெறிப்பட்டார் , கூறும் – சொல்லும், பயம்மொழி – பயனுடைய சொல்லின், மாண்பு – மாட்சிமை, இனிது – வாய்ப்பு உடையர் ஆகி (கல்வி, செல்வம், அதிகாரம், ஆண்மை முதலிய நலம் யாவும்) பொருந்துதலுடையவராய், வலவைகள் அல்லாரை நாணிலிகளல் லாதவரை, காப்பு அடைய கோடல் – காப்பாகப் பொருந்தக் கொள்ளுதல், இனிது .

அறமாவது நல்லன நினைத்தாலும், நல்லன சொல்லுதலும், நல்லன செய்தலுமாம். ஆற்றுந்துணையாவது பொருளளவிற்கேற்பச் செய்தல்.

*"ஒல்லும் வகையான் அறவினை யோவாதே*
*செல்லும்வா யெல்லாஞ் செயல்"* (குறள் – 33)

என்றார் பொய்யில் புலவரும். தமது தன்மையை விடாதார் பகைவராயினும், நொதுமலராயினும், நண்பராயினும் பயனுடை மொழிகளையே பகர்தலின் ' பாற்பட்டார் கூறும் பயமொழி' என்றார். கல்வி, செல்வம், அதிகாரம், ஆண்மை முதலிய எல்லா மிருந்தும் ஒருவன் கண் நாணொன் றில்லையாயின அவன், தன்னை யடைந்தாரைக் கைவிடுவ னென்பது, 'வாய்ப்புடையராகி வலகைளல்லாரைக் காப்படையக் கோடலினிது' என்பதன் கருத்தென்க.

*அந்தண ரோத்துடைமை ஆற்ற மிக இனிதே*
*பந்தம் உடையான் படையாண்மை முன்இனிதே*

*தந்தையே ஆயினுந் தானடங்கான் ஆகுமேல்*
*கொண்டடையா னாகல் இனிது.*

**குறிப்பு**

பிராமணர்க்கு வேதம் ஓதுதல் இனிது. இல்லறத்தாருக்கு பற்றுபாசம் இனிது. படையுடையானுக்கு வீரம் இனிது. தந்தையே ஆனாலும் அவர் கூறும் தவறானவற்றைச் செய்யாமை இனிது.

**(பதவுரை)** அந்தணர் – பிராமணர்க்கு, ஓத்து உடைமை – வேதத்தினை, மறவாமை, ஆற்ற மிக இனிது – மிகவினிது பந்தம் உடையான் – (மனைவி மக்கண் முதலியோர் மாட்டுப்) பற்றுடையவன், படை ஆண்மை – சேனையை ஆளுந்தன்மை, முன் இனிது – முற்பட வினிது ˙ தந்தையே ஆயினும் (தன்னைப்பெற்ற) தந்தையே யானாலும், தான் அடங்கான் ஆகுமேல அவன் (மனமொழி மெய்கள் தீ நெறிக்கட் சென்று) அடங்கானெனின், கொண்டு அடையான் ஆதல் – அவன் சொற் கொண்டு அதன்வழி நில்லாதானாதல், இனிது.

அந்தணர் – அழகிய தன்மையுடையார் அல்லது வேதாந்தத்தை அணவுவார் என்பது சொல்லின்படி பொருள். அதனை,

*“அந்தண்மை பூண்ட அருமறை யந்தத்துச்*
*சிந்தைசெ யந்தணர்”*

என்னுந் திருமூலநாயனார் திருவாக்கா னறிக. ஓதப்படுதலின் ஓத்தாயிற்று. பார்ப்பார் வேதத்தை மறந்துழி இழிகுலத்தரா மாகலின், மறக்கலாகா தென்னுங் கருத்தாற் செந்நாப்போதாரும்,

*“மறப்பினு மோத்து கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்”*

என்னும் பாவின்கண் ‘மறப்பினும்’ என்றமை காண்க. உறவினர் மாட்டுப் பற்றுடையானாயின் பழிக் கஞ்சித் தன் சேனையில் ஓருயிர்க்கும் வீணாக இழிவு நேராதபடி பாதுகாப்பானாகலின் பந்தமுடையான் படையாண்மை முன்னினிதே’ என்றார்.

*“அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்*
*பற்றிலர் நாணார் பழி”* (குறள் – 506

என்றிருத்தல் காண்க. இதற்குச் சுற்றமுடையார் படையை ஆளுந்தன்மை மிகவினிது’ எனப் பொருளுரைப்பாரு முளர்.

*“ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்*
*பேதையிற் பேதையா ரில்”* (குறள் – 334)

குறிப்பு

என்றிருத்தலின் தந்தையாயினும் மனமொழி மெய்களினடங்கானாயின், அவன்பால் உபதேச மொழிகளைக் கேட்டு அவற்றின் வழியொழுகாமை இனி தென்றார். இதற்குத் தந்தையே யானாலும் அவன் அடங்காதவனானால் அவனை உடன் கொண்டு ஓரிடத்தை அடையாதவனாகுதல் இனிது என்றுரை பகர்வாருமுளர். ஏல் : 'எனின்' என்பதன் மரூஉ .

*ஊருங் கலிமா உரனுடைமை முன்இனிதே*
*தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்*
*கார்வரை யானைக் கதங்காண்டல் முன்இனிதே*
*ஆர்வ முடையவர் ஆற்றவும் நல்லவை*
*பேதுறார் கேட்டல் இனிது* 8

வீரனுக்கு வலிமையான குதிரை இனிது. மாலையணிந்த அரசர்களுக்கு போர்க்களத்தில் கரிய மலைபோன்ற யானைகள் சினம் கொண்டு போரிடுதலைப் பார்த்தல் இனிது. அன்புடையார் வாய்ச் சொற்கள் கேட்பது இனிது.

**(பதவுரை)** ஊரும் கலிமா – (தான் ஏறிச்) செலுத்துகின்ற போருக்கு உரிய குதிரை, உரனுடைமை – வலிமையுடையதாயிருத்தல், முன் இனிது – மிக வினிது தார்புனை மன்னர் தமக்கு – மாலையணிந்த அரசர்களுக்கு உற்ற வெஞ்சமத்து – போர் வாய்த்த களத்தில், கார் வரை யானை – கரிய மலை போன்ற யானைகளின், கதம் – வெகுண்டுச் செய்யும் போரை, காண்டல் – காணுதல், முன் இனிது – ஆற்றவும் ஆர்வம் உடையவர் – மிகவும் அன்புடையார், நல்லவை – நல்ல கேள்விகளை, பேது உறார் – மயக்கமடையாதவர்களாய், கேட்டல் – கேட்பது இனிது .

அரசன் ஏறிச் செல்லுங் குதிரைக்குப் பசிதாகம் பொறுத்தற்கும் வேண்டியபோது விரைந்தோடுதற்கும் நெடிது நேரஞ்சாரி செல்வதற்கும் வலிமை வேண்டுதலின், 'ஊருங்கலிமா வுரனுடைமை முன்னினிதே' என்றார். தார் அடையாள மாலை் 'கண்ணியுந் தாருமெண்ணின ராண்டே' என்னுந் தொல்காப்பயிச்சூத்திர வுரை காண்க.

*"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று*
*உண்டாகச் செய்பவான் வினை"* (குறள் – 758)

என்றவாறு யானைப்போர் காண்டற்குத் தக்க காட்சியாதலுணர்க. 'ஆற்றவும்

ஆர்வமுடையார் நல்லவை பேதுறார் கேட்டல் இனிது' என்றார் பேரார்வமுடையார்க்கன்றிக் கேட்ட நற்பொருள்களை உட்கொள்ளுதலும், உள்ளத்தமைத்தலும், பின் சிந்தித்துத் தெளிதலும், தெளிந்தவழி நிற்றலுங் கூடாமையினென்க.

\ஆற்றவும் நல்லவை' என முடிப்பாரு முளர். பேதுறார்: ஒரு சொல் லெனினுமாம். இது பஃறொடை வெண்பா.

**குறிப்பு**

*தங்க ணமர்புடையார் தாம் வாழ்தல் முன்இனிதே*
*அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்பினிதே*
*பங்கமில் செய்கைய ராகிப் பரிந்துயார்க்கும்*
*அன்புடைய ராதல் இனிது.*

தம்மை ஒட்டி வாழும் நண்பர்கள் செல்வத்துடன் வாழ்தல் இனிது. அழகிய அகன்ற வானத்தில் விரிந்த நிலாவைக் காணுதல் இனிது. குற்றமில்லாத செய்கை உடையவராய் அன்புடையவராயிருத்தல் இனிது.

**(பதவுரை)** தங்கண் – தங்குமிடத்தே, அமர்பு உடையார் நட்புடையார், வாழ்தல் – (செல்வமுடையராய்) வாழ்தல், முன்இனிது – மிக வினிது அம் கண் விசும்பின் – அழகிய இடமகன்ற வானத்தில் அகல் நிலா – விரிந்த நிலாவை, காண்பு – காணுதல், இனிது– பங்கம் இல் செய்கையர் ஆகி – குற்றமில்லாத நடையுடையவராய், யார்க்கும் பரிந்து – யாவர்க்கும் இரங்கி, அன்புடையர் ஆதல் – அன்புடைய ராயிருத்தல், இனிது.

தம்மை யடுத்து ஒட்டி வாழ்பவர் நன்மைகளைப் பெற்று வாழ்தல், தம் பெருமிதத்திற்கு கேதுவாகலின், 'தங்க ணமர் புடையார் தாம் வாழ்தல்முன்னினிதே

\எனவும், அழகுந் தன்மையுமுடைத்தாய் விழிக்கு விருந்து செய்தலின், 'அகனிலாக் காண்பினிதே 'எனவும்.

*'என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*யன்பி லதனை யறம்'* (குறள் – 77)

என்றிருத்தலின், 'யார்க்கு மன்புடைய ராத லினிது 'எனவுங் கூறினாரென்க.

தாம்: அசை.

*கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே*
*நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே*
*மனமாண்பி லாதவரை யஞ்சி யகறல்*
*எனைமாண்புந் தான் இனிது நன்கு.* 10

கடன் வாங்கி வாழாமல் இருத்தல் இனிது. கற்பில்லாத மனைவியை நீக்கிவிடுதல்இனிது. மனத்தின்கண் பெருமை இல்லாதவரை விட்டு அஞ்சி அகலுதல் எல்லாவற்றையும் விட மிக இனிது.

**குறிப்பு**

**(பதவுரை)** கடம் உண்டு – கடன் கொண்டு உண்டு, வாழாமை காண்டல் – வாழாதிருத்தல், இனிது நிறை மாண்பு இல் – கற்பு மாட்சிமையில்லாத, பெண்டிரை – மனைவியரை, நீக்கல் – விலக்கி விடுதல், இனிது மனம் மாண்பு இலாதவரை – மனத்தின்கண் மாட்சிமை யில்லாதவரை, அஞ்சி அகறல் – அஞ்சி நீங்குதல், எனை மாண்பும் – எல்லா மாட்சியினும், நன்கு இனிது – மிக வினிது.

*"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங்*
*கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றாகுதல்*
*பண்டுமிவ் வுலகத் தியற்கைஃ தின்றும்*
*புதுவ தன்றே புலனுடைய மாந்திர்"* (கலி – 22)

எனவும்,

*"விடன் கொண்ட மீனைப் போலும்*
*வெந்தழன் மெழுகைப் போலும்*
*படன்கொண்ட பாந்தள் வாயிற்*
*பற்றிய தேரை போலுந்*
*திடன்கொண்ட ராம பாணஞ்*
*செருக்களத் துற்ற போது*
*கடன் கொண்ட நெஞ்சம் போலுங்*
*கலங்கின னிலங்கை வேந்தன்"*

எனவும் இருத்தலின், 'கடமுண்டு வாழாமை காண்ட லினிதே' என்றார். 'நிறை மாண்பில் பெண்டிரை நீக்க லினிதே' என்றது. கற்பழிந்த மனைவியொடு கலந்து வாழ்தல் இம்மையிற் றலையிறக்கத்தையும் பெருந்துன்பத்தையும் தருதலே யன்றி, மறுமையினும் நரகத்தைத் தருதல் பற்றி யென்க. அது கூடாதென்பதனை,

*"வினையிலென் மகன்றனுடல் வேறுசெய்வித் தோனைக்*
*குனிசிலையி னாளையுயிர் கோறல்புரி யேனேல்*
*மனைவியய லான்மருவல் கண்டுமவள் கையாற்*
*றினையளவு மோர்பொழுது தின்றவனு மாவேன் "*

(பாரதம்)

*"கற்பழி மனைவி யோடு கலந்திருப் பவனு மற்றோர்*
*பொற்புடை மனைவி தன்னைப் புணர்வதற் கெண்ணு வானுஞ்*
*சொற்பொரு ளுணர்த்தி னானைத் தொழவுள நாணு வானும்*
*விற்பன வலாத விற்று மெய்வளர்த் தழிகு வானும்"*

“ஆவனா னுண்மை ..... (பிரபுலிங்கலீலை) என்றிருத்தலிற்றெளிக.

குறிப்பு

மன மாண்பிலாதவார் – கெட்ட எண்ணமுடையார் துட்டர்கள். ‘துட்டரைக் கண்டாற் றூரநில்’ என்னும் பழமொழி காண்க. ‘எனை, மாண்பு’ என்புழி இன்னும் உம்மையும் செய்யுள் விகாரத்தாற்றொக்கன.

## வினா விடை

1. இனியவை நாற்பது குறிப்பு வரைக

### இனியவை நாற்பது

பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றியது இனியவை நாற்பது. இது பொது வெண்பாக்களினால் ஆனது. பண்டைக்கால தமிழ்நூல் தொகுப்புகளில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் இதுவும் மூன்று உலகில் நல்ல அல்லது இனிமையான கருத்துக்களை கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம், ஒவ்வொரு பாடலும் மூன்று நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றது.

‘சுற்றியிருப்பவர்களுக்குக் கல்வி கற்பித்தல் மிகவும் நல்லது. சுற்றறிந்த பெரியோர்களைத் துணை கொண்டு வாழ்தலும் மிக நன்று சிறிய அளவிலாயினும் தேவைப்படுபவர்களுக்குக் கேட்காமலேயே கொடுப்பது எப்பொழுதுமே நல்லது’ என்னும் பொருள்படும் இந்நூற் பாடல் பின்வருமாறு:

*“கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே*
*மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே*
*எள்துணை யானும் இரவாது தான்ஈதல்*
*எத்துணையும் ஆற்ற இனிது.”*

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள நாற்பது பாடல்களைக் கொண்ட நான்கு நூல்களில் இரண்டாவதாகும். இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் எனப்படுவர். இவர் தந்தையார் மதுரைத் தமிழாசிரியர் பூதன். இவர் வாழ்ந்த நாடு பாண்டி நாடு. இவர் சிவன், திருமால், பிரமன் முதலிய மூவரையும் பாடியிருப்பதால் சர்வ சமய நோக்குடையவராயிருந்திருக்க வேண்டும். இவர் பிரபதுதித்திருப்பதால் கி.பி ஏழாம் நூற்றாண்டுக்குப் பிந்தியவர் என, இன்னா நாற்பதின் பல கருத்துகளை அப்படியே எடுத்தார்க்கு இவர் அவருக்கும் பிந்தியவர் எனலாம். அதனால் இவரது இவர் இந்தக் கி.பி. 725–750 எனப்பட்டது. இந்நூல் கடவுள் வாழ்த்து நீங்கப்பும்

குறிப்பு

செய்யுட்களைக் கொண்டது. இவற்றுள், 'ஊரும் கலிமா' தொடங்கும் பாடல் ஒன்று மட்டுமே (8) பஃறொடை வெண்பா ' அனைத்தும் இன்னிசை வெண் பாவினால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூல் நான்கு இனிய பொருள்களை எடுத்துக் கூறும் பாடல்கள், நான்கு தான் உள்ளன(1, 3, 4, 5). எஞ்சிய எல்லாம் (மும் இனிய பொருள்களையே சுட்டியுள்ளன இவற்றில் எல்லாம் முன் (6) அடிகளில் இரு பொருள்களும், பின் இரண்டு அடிகளில் ஒரு பொருள் அமைந்துள்ளமை கவனிக்கத் தக்கது. வாழ்க்கையில் நன்மை கருத்துகளைத் தேர்ந்தெடுத்து "இனிது" என்ற தலைப்பு அமைத்திருப்பதால் இஃது "இனியவை நாற்பது" எனப்பட்டது. இதனை "இனிது நாற்பது", "இனியது நாற்பது", "இனிய நாற்பது" என்றும் உரைப்பர்.

## வினாக்கள்

1. இனியவை நாற்பது ஆசிரியர்
2. இனியவை நாற்பது நூலில் —————— – இனியவை கூறப்பட்டுள்ள.
3. ஆற்றுந்துணையால் அறம் செய்கை முன் இனிதே.
4. ஏருடையான் முன் இனிதே.
5. பிச்சை புக்காயினும் மிக இனிதே.
6. ஊனைத்தின்று ————— – பெருக்காமை இனிது.
7. கற்றோர் செயல்குறித்து இனியவை நாற்பது கூறும் கருத்துக்களைக் கூறுக.
8. குடும்பம், உறவுகள் பற்றி இனியவை நாற்பது கூறுவன யாவை?
9. இனியவை நாற்பது நட்பு குறித்துக் கூறுவன யாவை?
10. நும் பாடப்பகுதியிலுள்ள இனியவை நாற்பது கூறும் இனியவைகளைத் தொகுத்துரைக்க.

குறிப்பு

# கூறு 9

# திருவிரட்டை மணிமாலை

—காரைக்கால் அம்மையார்

*கிளர்ந்துந்து வெந்துயர் வந்ததும் போதஞ்சி நெஞ்சமென்பாய்*
*தளர்த்திங் கிருதல் தவிர்த்திகண் டாய்தள ராதுவந்தி*
*வளர்ந்துந்து கங்கையும் வானதி திடைவளர் கோட்டு வெள்ளை*
*இழந்திங் களும்எருக் கும்இருக் குஞ்சென்னி ஈசனுக்கே* (1)

**பதவுரை:** நெஞ்சம் – மனமே,கிளர்ந்து உந்து வெந்துயர்–அதிகமாக உயர்ந்து எழுகின்ற கொடுமையான துன்பம், வந்து அடும்போது – வந்து வருத்தும், அஞ்சி– பயம் கொண்டு, என்பதை தளர்ந்து இங்கு இருத்தல் – எலும்பு வடிவத்தோடு மண்ணுலகில் வாழ்வதை, தவிர்த்து – நீக்கிக் கொள்வதற்காக, தளராது வந்து வளர்ந்துந்து கங்கையும்–சோர்வில்லாமல் எப்போதும் நீர்பெருக்கோடு விரைந்து செல்லும் கங்கை ஆறையும்,வானத்திடைவளர்கோட்டு வெள்ளை இளந்திங்களும்– வானில் விளங்கும் ஒளி நிறைந்த இளமையான பிறை நிலவையும் இருக்கும் – எருக்கு மலரையும், இருக்கும்– அணிந்திருக்கும், சென்னி ஈசனுக்கு – சடையுடைய இறைவனுக்கு, அடிமையாகத் தொண்டு செய்வதை, கண்டாய்– அறிந்து கொண்டாயா?

**தெளிவுரை:** மனமே! அதிகமாக உயர்ந்து எழுகின்ற கொடுமையான துன்பம் வந்து வருத்தும் பயம் கொண்டு எலும்பு வடிவத்தோடு மண்ணுலகில் வாழ்வதை நீக்கிக்கொள்வதற்காகச் சோர்வில்லாமல் எப்போதும் நீர்ப் பெருக்கோடு விரைந்து செல்லும் கங்கை ஆறையும், வானில் விளங்கும் ஒளி நிறைந்த இளமையான பிறை நிலவையும், எருக்க மலரையும் அணிந்திருக்கும் சடையுடைய இறைவனுக்கு அடிமையாகித் தொண்டு செய்வதை அறிந்து கொண்டாயா?

*ஈச னவனல்லா தில்லை யெனநினைந்து*
*கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து – பேசி*
*மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்*
*பிறவாமைக் காக்கும் பிரான்.* (2)

**பதவுரை:** நெஞ்சே – மனமே, பிரான்– இறைவன், ஈசன் அவன் அல்லாது – தவிர, இல்லை என நினைத்து– வேறு தெய்வம் இல்லை என நினைத்து, கூசி மணத்தக்கது– பிற கடவுள்களைக் கண்டு மனத்தால் கூச்சம் கொண்டு, பேசிக் கொண்டிருந்து – அதியந்தமற்ற சிவனின் பெருமைகளைப்

குறிப்பு

பேசி, மறவாது வாழ்வோரை– அவனை மரகத மனம் உடையவர்களை, மண்ணுலகத்து– மண்ணுலகில், என்றும் – எக்காலத்திலும், பிறவாமைக்கு – மண்ணுலகில் மீண்டும் பிறவியை எடுக்காமல், ஆகும்–இறைவன் தடுப்பான்.

**தெளிவுரை:** மனமே! இறைவன் தவிர வேறு தெய்வம் இல்லை என நினைத்துப் பிறகடவுளர்களைக் கண்டு மனதால் கூச்சம் கொண்டு ஆத்யந்தமற்ற சிவனின் பெருமைகளைப் பேசி அதனை மறக்காத மனம் உடையவர்களை மண்ணுலகில் எக்காலத்திலும் மீண்டும் பிறவியை எடுக்காமல் ஆட்கொண்டு அருள்வான்.

*பிரானென்ன தன்னைப்பன் னாள்பர வித்தொழு வாரிடர்கண்*
*டிராடினேன்ன நிற்கின்ற ஈசன்கண் டீரின வண்டு கிண்டிப் (வாய்)*
*பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க் கிடந்துபொம ்மென்றுறை*
*அராநின் நிறைக்குஞ் சடைச்செம்பொன் நீள்முடி அந்தணனே.* (3)

**பதவுரை:** இனவண்டுகிண்டி– வண்டுகள் மொய்க்கின்ற, பொராநின்ற– மோதிச் சிதைக்கின்ற, கொன்றைப் பொதும்பர்க்கிடந்து – கொன்றை மலர்கள் நிறைந்த சோலையில் தங்கியிருந்து, பொம் என்று உரை – ஓம் என்னும் மந்திரத்தால் ரீங்காரம் செய்து கொண்டு, வாய் – தான் வீற்றிருக்கும் கொன்றை மலரையும், அரா நின்று இறைக்கும் – நாகம் தங்கிருந்து மூச்சுவிடும். செம்பொன் சடை – செம்மை நிறமாகிய பொன்போன்ற சடை, நீண்டமுடி அந்தணன் – நீண்ட சடைமுடியை உடைய இறைவன், பிரானென்று தன்னை – உலகப் பொருள்களுக்கெல்லாம் தலைவன் என்று தன்னை, பரவித்தொழுவார் இடர்கண்டு – வணங்கிப் பணிபவர்களின் துன்பங்களைக் கண்டு, இரான் – பொறுமையோடு இருக்கமாட்டான், என்ன – என்று கூறுகின்றபடி, நிற்கின்ற – எல்லா மனங்களுக்கும் இறைவனாக விளங்கும், ஈசன் – சிவன், கண்டீர் – தெரிந்து கொள்வீர்களாக.

**தெளிவுரை:** வண்டுகள் மொய்த்துச் சிதைக்கின்ற கொன்றைமலர்கள் நிறைந்த சோலையில் தங்கியிருந்து ஓம் என்னும் மந்திரத்தால் ரீங்காரம் செய்துகொண்டு தான் வீற்றிருக்கும் கொன்றை மலரையும் நாகம் தங்கியிருந்து மூச்சுவிடும் செம்மை நிறம் பொருந்திய பொன் போன்ற சடையினையும் நீண்ட சடை முடியினையும் உடைய இறைவன்ளூ உலகப் பொருள்களுக்குகெல்லாம் தலைவன் என்று தன்னை வணங்கிப் பணி பவர்களின் துன்பங்களைக் கண்டு பொறுமையோடு இருக்கமாட்டான் என்று கூறுகின்றபடி எல்லா மனங்களுக்கும் இறைவனாக விளங்குபவன் சிவன் என்று அறிந்து கொள்வீர்களாக.

*அந்தணனைத் தஞ்சமென் றாட்பட்டார் ஆழாமே*
*வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் – கொந்தணைந்த*
*பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே*
*என்கண்டாய் நெஞ்சே இனி.* (4)

**குறிப்பு**

**பதவுரை:** நெஞ்சே – மனமே, அந்தணனைத் தஞ்சமென்று ஆட்பட்டார் – இறைவனிடம் நீயே எனக்கு எல்லாம் என்று அடிமையானவர்களை, ஆழாமே – பிறசமயங்கள் என்னும் மீள இயலாத படுகுழியில் விழுந்து விடாமல், வந்தணைந்து – முன் தோன்றி, காத்து அளிக்கும் – காத்தருளும், வல்லாளன் – வலிமை உடையவன், கொந்தணைந்த பொன் கண்டால் பூணாது – சிறப்புடைய பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்து பொருந்திய பாம்பினை அணிகலனாக அணிந்தவனை, இனி – இனிமேல், என்கண்டாய் – இறைவனை எத்தகைய தன்மை உடையவனாக நினைத்திருக்கிறாய்?

**தெளிவுரை:** மனமே! இறைவனிடம் நீயா எனக்கு எல்லாம் என்று அடிமையானவர்களைப் பிறசமயங்கள் என்னும் மீள இயலாத படுகுழியில் விழுந்துவிடாமல் முன்தோன்றிக் காத்தருளும் வலிமை உடையவன். சிறப்புடைய பொன்னாலாகிய அணிகலன்களை அணிந்து கொள்ளாமல் விடம் பொருந்திய பாம்பினை அணிந்துருப்பானவனான, இறைவனை எத்தகைய தன்மை உடையவன் என்று நினைத்திருக்கிறாய்?

*இனிவார் சடையினிற் கங்கையென் பாளை அங் கத்திருந்த*
*கனிவாய் மலைமங்கை காணில்என் செய்திகை யிர்சிலையான்*
*முனிவார் திரிபுரம் மூன்றும் வெந் தன்றுசெந் தீயின்மூழ்கத்*
*தனிவார் கணையொன்றி னால்மிகக் கோத்தளஞ் சங்கரனே.* (5)

**பதவுரை:** கையில் சிலையால் – கையில் கொண்டிருக்கும் வில்லால், முனிவார் திரிபுர மூன்றும் – கோபம் கொண்ட திரிபுர அசுரர்களின் கோட்டைகளையும், வெந்து அன்று – எரிந்து போகுமாறு முற்காலத்தில், செந்தீயின் மூழ்க – செம்மை நிறம் பொருந்திய நெருப்பால் அழியும்படி, தனிவார் கணை ஒன்றினால் – மிகக் கோத்த அதிகமாக எய்த, எம் சங்கரனே – எம்முடைய இறைவனே, இனி – இனிமேல், வார் சடையினில் – நீண்ட சடையினில், கங்கை என்பாளை – கங்கையாகிய பெண்ணை, அங்கத்திருந்த – இறைவனே! உன்னுடைய இடது பக்கத்தில் கொண்டிருக்கும், கனிவாய் கொவ்வை – மலையரசனின் மகளாகிய உம்மையம்மை காணில் – தலையில் இருக்கின்ற கங்கையைப் பார்த்து இவள்யார் எனக்கேட்டால், என் செய்தி – என்ன சொல்வீர்?

**தெளிவுரை:** கையில் கொண்டிருக்கும் வில்லால் கோபம் கொண்ட திரிபுர அசுரர்களின் கோட்டைகள் மூன்றும் அன்று அழிந்து போகுமாறு நெருப்பின் தன்மை உடைய நீண்ட அம்பினை எய்த எம்முடைய இறைவனே! இனிமேல் நீண்ட சடையில் கங்கையாகிய பெண்ணை அணிந்திருப்பதைப் பார்த்து உன்னுடைய இடப்பாகத்தில் இருக்கும் மலையரசன் மகளாகிய உம்மையம்மை இவள் யார் எனக் கேட்டால் என்ன சொல்வீர்கள்? சொல்லியருள வேண்டும்.

குறிப்பு

*சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்*
*பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை அங்கொருநாள்*
*ஆவாவென் றாழாமைக் காப்பானை எப்பொழுதும்*
*ஓவாது நெஞ்சே உரை.* (6)

**பதவுரை:** நெஞ்சே – மனமே! சங்கரனை – இறைவனை, தாழ்ந்த சடையானை – நீண்ட சடைமுடி உடையவனை, அச்சடைமேல் பொங்கு அரவம் வைத்துகந்த புண்ணியனை – அத்தகைய சடையில் பாம்பினை அணிந்திருக்கும் புண்ணியம் நிறைந்தவனை, அங்கொரு நாள் – மனம் உடலை விட்டு நீங்கும் காலத்தில், ஆவா என்று ஆழாமை காப்பானை – காண்கின்றவர்கள் துன்பத்தால் இறங்கிப் பிறவியில் துன்பமடையாதவாறு காப்பவனை, எப்பொழுதும் – சிறுகணமேனும் நீங்காமல், ஓவாது உரை – அவனையே நினைத்துத் துதிப்பாயாக.

**தெளிவுரை:** மனமே! இறைவனை, நீண்ட சடைமுடி உடையவனை, சடையில் பாம்பினை அணிந்திருக்கும் புண்ணியம் நிறைந்தவனை, மனம் உடலை விட்டு நீங்கும் காலத்தில் உயிர்கள் மீண்டும் பூமியில் பிறந்து அருத்தம் கொள்ளாமல் காக்கின்றவனை எப்போதும் சிறிது கணநேரம் கூட மறவாமல் துதிப்பாயாக.

*உரைக்கப் படுவது மொன்றுண்டு கேட்கிற்செவ் வான்தொடைமேல்*
*இறைக்கின்ற பாம்பினை என்றுந் தொடேல்இழிந் தோட்டத்தெங்குந்*
*திரைகின்ற கங்கையுந் தேநின்ற கொன்றையுஞ் செஞ்சடைமேல்*
*விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித் தலைவைத்த வேதியனே.* (7)

**பதவுரை:** இழிந்து – சடையில் இருந்து கீழிறங்கி, ஓடாது எங்கும் – ஓடுகின்ற எல்லா இடங்களிலும் திரைக்கின்ற – அலைகளை எழுப்புகின்ற, கங்கை – கங்கையரும், தேனின்ற கொன்றையும் – தேன் நிரம்பிய கொன்றை மலர்களை அணிந்திருக்கும், செஞ்சடை மேல் – சிவந்த சடையில், விரைக்கின்ற வன்னியும் – மணம் நிரம்பிய வன்னி மலரையும், சென்னித் தலை வாய்த்த – தலையில் அணிந்திருக்கும், வேதியனே – வேதமானவனே, உரைக்கப்படுவதும் ஒன்று உண்டு – உன்னிடம் சொல்லவேண்டிய ஒன்று

குறிப்பு

இருக்கிறது, கேட்கில் – அதனை நீ கேட்பாயானால், செவ்வான் தொடைமேல் – சிறப்பும் உயர்வும் உடைய மாலையின்மேல் , இறைக்கின்ற பாம்பினை – மூச்சோடு சீரும் தன்மை உடைய பாம்பினை, என்றும் தொடேல் – அணிந்திருப்பதை விட்டுவிடுக.

**தெளிவுரை:** சடையில் இருந்து கீழிறங்கி ஓடுகின்ற எல்லா இடங்களிலும் அலைகளை எழுப்புகின்ற கங்கையினையும், தேன் நிரம்பிய கொன்றை மலர்களையும், சிவந்த சடையில் மணம் நிரம்பிய வன்னி மலரையும் அணிந்திருக்கின்ற தேவமானவனே! உன்னிடம் சொல்ல வேண்டிய ஒன்று இருக்கிறது. அதனை நீ கேட்க வேண்டும். சிறப்பும் உயர்வும் உடைய மாலையின் மேல் மூச்சோடு சீறும் தன்மை உடைய பாம்பினை அணிந்திருப்பதை விட்டுவிடுவாயாக. (அடியார்கள் பாம்பினைக் கண்டு அச்சம் கொள்வார்கள்)

*வேதியனே வேதப் பொருளானை வேதத்துக்*
*காதியனை யாதிரைநன் னாளானைச் – சோதிப்பான்*
*வில்லேன மாய்ப்புக்கு மாலவினும் மாட்டாது*
*கில்லேன மாவென்றான் கீழ்.* (8)

**பதிவுரை:** வேதியனை – வேதமாகவும் தேவப் பொருளாணை – வேதத்தின் உட்பொருளாகவும். வேதத்துக்கு ஆதியனை – வேதத்துக்கு முன்தோன்றியவனாகவும், ஆதிரை நல் நாளானை– ஆதிரையான் என்னும் பெயரைப் பெற்றவனாகவும் உள்ள இறைவனின், சோதிப்பான் – பாதங்களைக் காண்பதற்காக, வில் ஏனமாய் – வலிமை உடைய பன்றியாய், கீழ்புக்கு – பூமியின் கீழே தோண்டிச் சென்ற, மாலவனும் – திருமாலும், மாட்டுகில்லேன் – தேடியும் காண இயலவில்லை என்று, நமா என்றான் – நமசிவாய என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நின்றான்.

**தெளிவுரை:** வேதமாகவும் வேதத்தின் உட்பொருளாகவும் வேதத்துக்கு முன் தோன்றியவனாகவும் ஆதிரையான் என்னும் பெயரைப் பெற்றவனாகவும் உள்ள இறைவனின் பாதங்களைக் காண்பதற்காகளூ வலிமை உடைய பன்றியைப் பூமியின் கீழே தோண்டிச் சென்ற திருமால், தேடியும் காண இயலவில்லை என்று நமசிவாய என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நின்றான்.

*கிழா யினதுன்ப வெள்ளக் கடல்தள்ளி யுள்ளுறப்போய்*
*வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்வீர வார்புரங்கள்*
*பாழா யிடக்கண்ட கண்டனென் தோளன்பைம் பொற்கழலே*
*தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளுந் தலைநின்மினே* (9)

**பதவுரை:** கீழாயின – பூவுலகில், துன்பவெள்ளம் – துன்பமாகிய வெள்ளம், கடல்தள்ளி – பிரவிக் கடலில் விழுந்து, உள்ளுறப் போய் சென்று, வீழாதிருத்து – விழாமல் நழுவி, இன்பம் வேண்டும் என்பிர் – இறைவனின் பாதங்களில் நீக்கமற இணைந்திருப்பதாகிய பேரின்பத்தின்மேல் விருப்பம் கொண்டு இருந்தால், விரவார் புரங்கள் – தன்மை அழிவில்லாதவர்கள் என்று நினைத்துக் கொண்டியிருந்த திரிபுராசுரர்களின் கோட்டைகள் மூன்றையும் அழியுமாறு கண்ணால் பார்த்தருளிய நீலநிறமான கழுத்தை உடையவனும், எட்டுத்தோள்களை உடையவனுமாகிய சிவனின் பசுமையான பொன்னாலாகிய கழலை அணிந்திருக்கும் பாதங்களை உலக இன்பத்தில் விழுந்து காலம் போக்கமால் வனாங்கிப் பலநாளும் பணிவீர்களாக.

குறிப்பு

*தலையாய ஐந்திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து*
*தலையா யினயுணர்ந்தோர் காண்பர் – தலையாய*
*அண்டத்தான் அதிரையான் ஆலாலம் உண்டிருண்ட*
*கண்டத்தான் செம்பொற் கழல்.* (10)

**பதவுரை:** தலையாய அண்டத்தான் – எல்லாம் உயிர்களுக்கும் தலைவனாகிய சிவன் சிவலோகத்தில் எழுந்தருளி இருப்பவன், ஆதிரையான் – ஆதிரையான் என்று அழைக்கப்படுவான், ஆலாலம் உண்டிருண்ட கண்டத்தான் – ஆலாலம் விடத்தை உண்டு கருமையான கழுத்தை உடையவன், செம்பொற்கழல் – செம்மை நிறமுடைய பொன்னால் செய்யப்பட்ட கழலை அணிந்த பாதங்களை, தலையாய ஐந்திணை – அவனது சிறப்பைக் கூறும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை, சாதித்து – இடைவிடாதுகூறி, தாழ்ந்து – வணங்கி, தலையாயின உணர்ந்தோர் – சிவ அருள் கிடைக்கப் பெற்றவர்கள், காண்பர்– காண்பார்கள்.

**தெளிவுரை:** எல்லா உயிர்களுக்கும் தலைவனாகிய சிவன் சிவலோகத்தில் எழுந்தருளி இருப்பவன். அதிரையான் என்று அழைக்கப்படுபவன் . ஆலகால விடத்தை உண்டு கருமையான கழுத்தை உடையவன். அவனது செம்மை நிறமுடைய பொன்னால் செய்யப்பட்ட கழலை அணிந்த பாதங்களைளூ அவனது சிறப்பைக் கூறும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை இடைவிடாது கூறி வணங்கிச் சிவ அருள் கிடைக்கப் பெற்றவர்கள் காண்பார்கள்.

*கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்*
*நிழற்கண்ட போழ்தத்து நில்லா ரேதுமின்றித்*
*தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்துய்த்*
*தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மேடுந் தொல்வினையே* (11)

குறிப்பு

**பதவரை:** கழற் கொண்ட சேவடி – கழல்களை அணிந்திருக்கும் சிவந்த பாதங்களை, காணலுற்றார் தம்மை தவத்தின் வழி நின்று கண்டு வழிபடும் பேறு பெற்ற இரையாடியர்களை, பேணலிற்றார் விருப்பமுடன் அவ்விடியார்களை வணங்குபவர்களின், நிழற்கண்ட போழ்து – நிழலைக் கண்டபோது, வினை நில்லா வினைகள் அதன் முன் நில்லாமல் தொலைந்துபோகும், நிகரேதுமின்றி – ஒப்புமை கூற இயலாத, தழற்கொண்டசோதி – வெப்பமான ஒளியுடைய, செம்மேனி என்மானை – சிவந்த உடலை உடைய எனமுடைய இறைவனை , கைம்மாலர் தூய்த்தொழக் கண்டும் – கையினால் மலர்களைத்தூவி வழிபட்டு வணங்குவதைப் பார்த்தும் துன்னி நம்மடும் தொல்வினை – நம்மை நெருங்கி விருத்தம் கொள்ளச் செய்யும் பழமையான வினைகள், நிற்கிற்குமோ நில்லாமல் வலிமை இழந்து விடும்.

**தெளிவுரை:** கழல்களை அணிந்திருக்கும் சிவந்த பாதங்களைத் தவத்தின் வழிநின்று கண்டு வழிபடும் பேறு பெற்ற இறையடியார்களை விருப்பமுடன் வணங்குவார்களின் நிழலைக் கண்டபோது வினைகள் நில்லாமல் தொலைந்துபோகும். ஒப்புமை கூற இயலாத வெப்பமான ஒளியுடைய சிவந்த வடிவினனான எனமுடைய இறைவனைக் கையினால் மலர்களைத் தூவி வழிபட்டு வணங்குவதைப் பார்த்தும் நெருங்கி வருத்தம் கொள்ளைச் செய்யும் பழமையான வினைகள் நில்லாமல் வலிமை இழந்துவிடும்.

*தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே*
*ஒல்லை வணங்கி உமையென்னும் – மெல்லியலோர்*
*கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு*
*நீற்றானை நெஞ்சே நினை.* (12)

**பதவுரை:** நெஞ்சமே – மனமே, தொல்லை வினைவந்து சூழமுன் – பழமையான வினைகள் வந்து வருத்தம் கொள்ளச் செய்வதற்கு முன், தாழமே எல்லை – காலம் தாழ்த்தாமல் விரைவாக, உமை என்னும் மெல்லியலோர் கூற்றானை – உமையம்மையை இடப்பக்கம் கொண்டிருப்பவனை, கூற்றுருவங் காய்ந்தானை – மார்க்கண்டேயனுக்காக இயமனின் மீது கோபம் கொண்டவனை, வாய்ந்திலங்கு – பொருத்தமாக அமைந்திருக்கின்ற, நீற்றானை – திருநீறு அணிந்த உடல் உடைவனை, வணங்கி நினை – வணங்கி மனதால் நினைத்திருப்பாயாக.

குறிப்பு

**தெளிவுரை:** மனமே ! பழமையான வினைகள் வந்து வருத்தம் கொள்ளச் செய்வதற்கு முன்னர் காலம் தாழ்த்தாமல் விரைவாகவூ உமையம்மையை இடப்பாகம் கொண்டிருப்பவனை, மார்க்கண்டேயனுக்காக இயமனின் மீது கோபம் கொண்டவனை, பொருத்தமாக அமைத்திருக்கின்றன திருநீர் அணிந்த உடல் உடையவனை வணங்கி மனதால் நினைத்திருப்பாயாக.

*நினைய தொழுதிகண் டாய்நெஞ்ச மெயிங்கோர் தஞ்சமென்று*
*மனையா ளையும்மக்கள் தம்மையுந் தேறி யோராறு புக்கு*
*நனையாச் சடைமுடி நம்பன்நந் தாதைநொந் தாதசெந்தீ*
*அணையான் அமரர் பிரான் அண்ட வாணன் அடித்தலமே.* (13)

**பதவுரை:** நெஞ்சே – மனமே, இங்கு – மண்ணுலகில், ஓர் தஞ்சமென்று – ஒப்புமை கூற இயலாத துணை என்று மனையாளையும் மக்கள் தம்மையும் தேறி மனைவியையும் குழந்தைகளையும் உறவினர்களையும் கருதுவதை விடுத்து, ஓர் ஆறுபுக்கு – கங்கை நதி புகுந்து, நனையாச் சடைமுடி நம்பன் – நனைகின்ற சடைமுடியினை உடைய இறைவனை, நம் தாதை தமக்குத் தந்தையானவனை, நொந்தாத – கெடாத, செந்தீயனையான் – செம்மை நிறம் பொருந்திய நெருப்பை நிகர்த்தவனை, அமரர்பிரான் – தேவர்களின் தலைவனை, ஆண்டவாணன் – எல்லா அண்டங்களிலும் நிறைந்திருக்கும் சிவனின், அடித்தலம் – பாதங்களை, நினையா – நினைத்து, தொழுதி கண்டாய் – அன்போடு வணக்கம் செய்வதை அறிந்து கொள்வாயாக.

**தெளிவுரை:** மனமே! மண்ணுலகில் ஒப்புமை கூற இயலாத துணை என்று மனைவியையும் குழந்தைகளையும் சுற்றத்தினர்களையும் கருதுவதை விடுத்ததுவூ கங்கைநதி புகுந்து நனைகின்ற சடைமுடியினை உடைய இறைவனை, நமக்குத் தந்தையானவனை, கெடாத தேவர்களின் தலைவனை, எல்லா அண்டங்களிலும் நிறைந்திருக்கும் சிவனின் பாதங்களை நினைத்து அன்போடு வணக்கம் செய்வதை அறிந்து கொள்வாயாக.

*அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நன்கு தோளும்*
*முடித்தலமும் நீமுரித்த வாறேன் – முடித்தலத்தில்*
*ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்*
*நீராடிநெய்யாடி நீ.*

**பதவுரை:** நீ – இறைவா, முடித்தலத்தில் – சடையில், ஆறு ஆடி – கங்கையை அணிந்திருக்கிறாய், ஆறா, அனல் ஆடி – வெப்பம் குறையாத நெருப்பில் நடமிடுபவனே, அவ்வனலில் நீராடி – நெருப்பில் தோன்றிய திருநீற்றை அணிந்தவனே, நெய்யாடி – நெய்யினால் நீராட்டப்பட்டவனே, அடித்தளத்தின் – உன்னுடைய பாதங்களால், அன்று அரக்கன் – முன்னாளில்

இராவணனின், ஐந்தாண்டு தோளும் – இருப்பது தோள்களையும், முடிக்கலாம் – பத்துத்தலைகளையும்ளூ நீ முறித்தவாறு – நீ அழித்த தன்மை, என் – என்ன சிந்தனையால் விளைந்தது?

குறிப்பு

**தெளிவுரை:** இறைவா! சடையில் கங்கையை அணிந்தவனே! வெப்பம் குறையாத நெருப்பில் நடமிடுபவனே, நெருப்பில் தோன்றிய திருநீற்றை அணிந்தவனே, நெய்யினால் நீராட்டப்பட்டவனே, உன்னுடைய பாதங்களால் முன்னாளில் இராவணனின் இருபது தோள்களையும் பத்துத் தலைகளையும் அழித்த தன்மை என்ன சிந்தனையால் விளைந்தது?

*நீநின்று தானவர் மாமதில் மூன்றும் நிரந்துடனே*
*தீநின்று வேவச் சிலைதொட்ட வாறேன் றிரங்குவல் வாய்ப்*
*பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்து நட்டம்*
*போய்நின்று பூதந் தொழச்செய்யும் மொய்கழற் புண்ணியனே.* (15)

**பதவுரை:** நீ நின்று – இறைவனே, நீ நின்று, தானவர் அசுரர்களின், மாமதில் மூன்றும் – மூன்று கோட்டைகளையும், நிரத்துடனே – ஒரேநேரத்தில் தீநின்று வேவ சிலைதொட்டவாறு – நெருப்பில் அழியுமாறு வில்லில் இருந்து அம்பைத் தொடுத்த காரணம் யாது?, என்று இறங்குவேல் – என்று நினைத்து இறங்குகிறேன், பேய் நின்று – பேய்க் கூட்டங்கள் நின்று கொண்டு, வாய்பாட – வாயினால் பாடவும், பெருங்காடு அரங்கா மயானமே அரங்கமாக, பெயர்ந்து போய் நின்று – அடி எடுத்துப் போய் இருந்து, நட்டம் – நடனம் செய்யும்போது, பூதந்தொழ – பூதங்கள் வணங்கு போது, செய்யும் – அருள் வழங்கிய, மொய் கழல் – நெருக்கமாகக் கழல் என்னும் அணிகலனை அணிந்திருக்கின்ற, புண்ணியனே – அனைவரையும் காக்கும் தருமகுணம் நிறைந்தவனே!

**தெளிவுரை:** பேய்க் கூட்டங்கள் நின்றுகொண்டு வாயினால் பாடவும், மயானமே அரங்கமாக அடியெடுத்துப் போயிருந்து நடனம் செய்யும்போது பூதங்கள் வணங்கி நிற்கும் அருள் நிறைந்த பாதங்களை உடையவனே! அனைவரையும் காக்கும் தருமகுணம் நிறைந்தவனே! நீ நின்று அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் ஒரே நேரத்தில் நெருப்பில் அழியுமாறு வில்லில் இருந்து அம்பைத் தொடுத்த காரணம் யாது என்று நினைத்து இறங்குகிறேன்.

*புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெரிக்கட் சாரமே*
*எண்ணியோ ரைந்தும் இசைந்தவால் – திண்ணிய*
*கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த*
*அம்மானுக் காட்பட்ட அன்பு.*

குறிப்பு

**பதவுரை:** திண்ணிய – வலிமையான, கைம்மாவின் – யானையின், ஈர் உரிவை – உரித்த தோலை, மூவுருவும் – மும்மூர்திகளாகிய வடிவத்தில், போர்த்து உகந்த – போர்த்திக் கொண்டு மகிழ்ந்த, அம்மானுக்கு – தந்தையாகிய சிவனுக்கு, அன்பு – அன்பு கொண்டு, ஆட்பட்ட படியினாலே – அடிமையானதனால், புண்ணியங்கள் செய்தனவும் – செய்த தருமங்கள் யாவும், பொய்ந் நெறிக்கட் சாரமே – தீமைகளின் வழியாக மணத்தைச் செல்ல விடாமல், எண்ணி – நினைத்து, ஓரைந்தும் இசைந்தன – புலன்கள் எல்லாம் ஒரே வழியில் நின்றன.

**தெளிவுரை:** வலிமையான யானையின் உடலில் இருந்து உரித்த தோலை மும்மூர்த்திகளின் வடிவத்தில் போர்த்திக் கொண்டு மகிழ்ந்த தந்தையாகிய சிவனுக்கு அன்பு கொண்டு அடிமையானதனால் செய்த தருமங்கள் யாவும் தீமைகளின் வழியாக மணதைச் செல்ல விட்டாமல் தடுத்துப் புலன்கள் ஐந்தும் ஒரே வழியின் நின்றன.

*அன்பால் அடைவதெவ் வாறுகொல் மேலதோ டாடாரவந்*
*தன்பால் ஒருவரைச் சாராவோட் டாதது வேயுமன்றி*
*முன்பா யினதலை யோடுகள் கோத்தாவை யர்த்துவெள்ளை*
*என்பா யினவும் அணிந்தன்கோர் ஏறுகந் தேறுவதே* (17)

**பதவுரை:** மேலது – இறைவா ! ஓர் ஆடு அரவம்– பாம்பானது, தன்பால் ஒருவரைச் சாரவொட்டாது – யாரும் தன்னருகில் நெருங்கி வராமல் செய்து, அதுவேயும் அன்று – அதோடல்லாமல், முன்பு ஆயின – அமைந்திருக்கும், தலை ஓடுகள் – பிரம்மனின் தலையை, கோத்து – மலையாகக் கோத்து, அவை ஆர்த்து – தலைகள் ஒன்றோடு ஒன்று உரசி ஒலி எழுப்பி, வெள்ளை – வெண்மை நிறமான, என்பயினவும் – எலும்புகளை எல்லாம், அணிந்து – அணிந்து கொண்டு, அங்கு ஓர் – மயானத்தில் ஒரு, ஏறு – களை வாகனத்தை, உகந்து – மகிழ்வுடன், ஏறுவது – ஏறி இருக்கின்ற தன்மை, அன்பால் அடைவது – அடியார்கள் அன்புகொண்டு அருகில் வந்து வணங்குவது, எவ்வாறு – எப்படி இயலும்?

**தெளிவுரை:** இறைவா! பாம்பானது தன் அருகில் ஒருவரையும் நெருங்கிவிடாமல் செய்து இருக்கவும்; அதோடல்லாமல் பிரமனின் தலையை மாலையாகக் கோத்துத் தலைகள் ஒன்றோடு ஒன்று உரசி ஒலி எழுப்பவும்;மயானத்தில் இருக்கும் வெண்மை நிறம் பொருந்திய எலும்புகளை எல்லாம் மலையாக அணிந்தது கொண்டு காளை வாகனத்தில் மகிழ்வோடு ஏறி இருக்கும் உன்னை நெருங்கி வந்து அடியார்கள் எவ்வாறு வணங்குவார்கள்?

குறிப்பு

*ஏறலால் ஏறாமற் றில்லையே எம்பெருமான்*
*ஆறெல்லாம் பாயும் அவிர்சடையார் – வேறோர்*
*படங்குலவு நாகமுகிழ் பண்டமரர் சூழ்ந்த*
*தடங்கல்நஞ் சுண்டார் தமக்கு.* (18)

**பதவுரை:** எம்பெருமான் – என்னுடைய இறைவனே, ஆறெலாம்பாயும் – கங்கையாறு பெருகிப் பாயும், அவிர்சடையார் – ஒளிபொருந்திய சடையினை உடையவனும், வேறோர் – அணிந்திருக்கும் பாம்பினை அல்லாமல் அதைத்தவிர மற்றொரு, படம் குலவு – படம் அமைந்த, நாகம் உமிழ் – பாம்பு கக்கிய, பண்டு – பழங்காலத்தில், அமரர் சூழ்ந்த – தேவர்கள் கூடியிருந்த, தடங்கல் – பரந்தகடலில், நஞ்சு உண்டார் – விடத்தை உண்டவரே, தமக்கு – உனக்கு, ஏறு அலால்–காளையைத் தவிர, ஏற ஏறிக் கொள்வதற்கு, மற்றிலையோ – வேறு எதுவும் கிடைக்க வில்லையோ!

**தெளிவுரை:** என்னுடைய இறைவனே! கங்கையாறு பெருகிப்பாயும் ஒளிபொருந்திய சடையினை உடையவனே! அணிந்திருக்கும் பாம்பினை அல்லாமல் அதைத்தவிர மற்றொருபடம் அமைந்த பாம்பு கக்கிய விடத்தைப் பழங்காலத்தில் தேவர்கள் சூழ்ந்திருந்த பரந்த கடலில் உண்டவனே! உனக்குக் காளையைத் தவிர ஏறிக் கொள்வதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லையோ!

*தமக்கென்றும் இன்பணி செய்திருப் பேமுக்குத் தாமொருநாள்*
*எமக்கென்று சொன்னால் அருளுங்கோ லாமிணை யாதுமின்றிச்*
*சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப தொன்றுதொண்டைகனிவாய்*
*உமைக்கென்று தேடித் பெறாதுட னேகொண்ட உத்தமரே.* (19)

**பதவுரை:** இணையாதும் இன்றி – தனக்குத்தானே ஒப்புமையாகக் கூறக் கூடிய, சுமக்கின்ற – தாங்குகின்ற, பிள்ளை – முருகக் கடவுளை, வெள்ளேறு ஒப்ப ஒன்று – வெண்மை நிறமான காளையை ஒத்த வலிமை நிறைந்த முருகனை, தொண்டைக் கனிவாய் உமக்கென்று – கோவைக ̇கனி போன்ற வாயுடைய உமாதேவிக்கு என்று, தேடிப் பெறாது – அலைந்து பெறாமல், உடனே கொண்ட உத்தமரே – அப்போதே குழந்தையாகக் கொண்டருளிய இறைவன், தமக்கென்றும் – அவனுக்கு எப்போதும், இன்பணி செய்திருப்பேற்கு – இனிமை பொருந்திய இறைத்தொண்டு செய்கின்ற எனக்கு, தாம ̇ஒரு நாள் – அவன் ஒரு காலத்தில், எமக்கு ஒன்று – எனக்கு அருளாகிய ஒரு சொல், சொன்னால் – கூறினால், அருளுங்கொல் – உன்னுடைய அருளுக்குத் தக்க செயல்தானே!

**தெளிவுரை:** தனக்குத்தானே ஒப்புமையாகக் கூறக்கூடிய தன்னுடைய பிள்ளையான முருகக் கடவுளை; வெண்மையான நிறமுடைய காளையை ஒத்த

**குறிப்பு**

வலிமை உடையவனைக் கோவைக்கனி போன்ற வாயுடைய உமாதேவிக்கு என்று அலைந்து பெறாமல் அப்போதே குழந்தையாகக் கொண்டருளிய இறைவன்; அவனுக்கு எப்போதும் இனிமை பொருந்திய இறைத்தொண்டு செய்கின்ற எனக்கு அருளாகிய ஒரு சொல் சொன்னால் அது அவனுடைய அருளுக்குத் தகுந்த செயல்தானே!

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்தமர மடுக்கித் தீயாமுன் – உத்தமனாய்
நீலாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. 20

**பதவுரை:** ஆழி நெஞ்சே – சக்கரம்போல் விரவுடைய மனமே! உத்தமராய் வாழ்வார் – நல்ல செயல்களைச் செய்து வாழ்கின்றவர்கள், உலந்தக்கால் உற்றார்கள் – உயிரை இழந்த போது உறவினர்கள், செத்தமராமடுக்கித் தீயாமுன் – மரக்கட்டைகளை அடுக்கித்தீயிட்டுச் சாம்பலாக்குவதற்கு முன்னால், உத்தமனாய் – எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனாய், நீளாழி நஞ்சு உண்ட – நீண்ட கடலில் தோன்றி விடத்தை உண்டவனும், நெய்யாடி – நெய் அபிடேகம் செய்து கொண்டவனும், ஆகிய, தன் திறமே – அத்தகைய இறைவனின் பெருமையை, கிளர்ந்து கேள் – மகிச்சிகொண்டு கேட்பாயாக.

**தெளிவுரை:** சக்கரம்போல் விரைவுடைய மனமே! நல்ல செய்லகளைச் செய்து வாழ்கின்றவர்கள் உயிரை இழந்தபோது உறவினர்கள் மரக்கட்டைகளை அடுக்கித் தீயிட்டு உடலைச் சாம்பலாக்குவதற்கு முன்னால்; எல்லாத் தெய்வங்களுக்கும் தலைவனாய், நீண்ட கடலில் தோன்றிய விடத்தை உண்டவனும், நெய் அபிடேகம் செய்து கொண்டவனும் ஆகிய இறைவனின் பெருமையை மகிழ்ச்சி கொண்டு கேட்பாயாக.

– திருச்சிற்றம்பலம் –

## அப்பர் போற்றி திருத்தாண்டகம்

### பதிக வரலாறு

சுவாமிகள் கயிலை செல்லும் காதல் கொண்டு திருக்காளத்தியினின்றும் புறப்பட்டுத் திருப்பருப்பதம் வணங்கி, தெலுங்கு, கன்னடம், மாளவம், இலாடம், மத்தியம் ஆகிய நாடுகளைக் கடந்து வாரணாசி சென்று தொழுது கற்சுரத்தை அடைந்து செல்லுகையில் கால்கள் தேய்ந்தமையால் கைகளை ஊன்றிச் செல்ல, அவைகளும் தேய்ந்தன, பின்பு, மார்பால் உந்தியும் புரண்டும் சென்றார்.

குறிப்பு

அதனால் அவ்வுறுப்புக்களும் அழிந்தன. ஆகவே, கயிலைமால்வரையின் தாழ்வரையில் செயலின்றிக்கிடந்தார். சுவாமிகளது நிலைக்கு இரங்கிய கயிலைப் பரமர் அவர் கயிலையை அணைவதற்கு அருளாராய் ஓர் முனிவராகி எதிர்தோன்றி, “உம் உறுப்புக்களழிய இப்பாலையில் வந்தது என் கருதி“ என வினவினார். “மலைமகளுடன் வடகயிலை அண்டர் நாயகர் இருக்கும் அப்பரிசு அடியேன் கண்டு கும்பிடக் காதலின் அடைந்தேன் ஆளும் நாயகன் கயிலையிலிருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்“ என்றார்கள் சுவாமிகள். இறைவர் சுவாமிகளது மன உறுதியைக் கண்டு அருகிலுள்ள பொய்கையைக் காட்டி, “இப்பொய்கையில் மூழ்கி நம்மை நீ கயிலையிலிருந்த அம்முறையைத் திருவையாற்றிற்காண்“ எனப் பணித்துமறைந்தருளினார். சுவாமிகள் தீங்கு நீங்கிய திருமேனியுடன் இறையருளாணையின் வண்ணம் திருக்கயிலையில் உள்ள பொய்கையில் ஐந்தெழுத்தோதி மூழ்கி ஐயாற்றில் ஓர் வாவியில் உலகெலாம் வியப்ப எழுந்து, வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும் வள்ளலார் கயிலையிலிருந்த கோலம் கண்டு தொழுது பாடியருளியன இது முதல் மூன்று திருப்பதிகங்கள். கயிலை மலையானையே போற்றியருளியதால் இவைமூன்றும் கயிலைத் திருப்பதிகங்களே ஆயின (தி.12 திருநாவு. புரா. 381). சுவாமிகள் பொய்கையில் மூழ்கியதைக் குறிக்குமிடத்தில் (370) சேக்கிழார், “வேற்று மாகிவிண் ணாகிநின் றார்மொழி விரும்பி” என்றது, விண்ணிலே மறைந்து அருள் புரிந்த நிலையை நினைந்து மூழ்கி, அந்நினைவோடே ஐயாற்றில் எழுந்து தாண்டகம் தொடங்கி அருளினார் என்றற்கு என்க.

**குறிப்பு:** இத் திருப்பதிகம் போற்றி (வணக்கம்) கூறி அருளியது. இதுபோலும் திருப்பதிகங்கள் வேறும் சில உளவாயினும் அகத்தியர் திரட்டினுள், அருச்சனைக்கு இத் திருப்பதிகமே சிறந்தெடுத்து வைக்கப்பட்டது. அடுத்துவருகின்ற இரு திருப்பதிகங்களும் போற்றித் திருப்பதிகங்களேயாகும்.

## போற்றித் திருத்தாண்டகம்

ப. தொ. எண்: 268 பதிக எண்: 55

## திருச்சிற்றம்பலம்

2636. *வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி*
*மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி*
*ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி*
*ஓவாத சத்தத் தொலியே போற்றி*
*ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி*

*ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி*
*காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 1

குறிப்பு

**பொருளுரை:** விண்ணாகியும் வேறு பூதங்களாகியும் நிலைபெற்றிருப்பவனே! அடியேனை வேற்றிடத்துக்குத் திரும்பிச் செல்லாதபடி அடிமையாகக் கொண்டவனே! இன்ப ஊற்றாகி உயிர் அறிவினுள்ளே நிலைபெற்றிருப்பவனே! இடையறாத சொற்களின் ஒலியே! சக்தியாகி ஐம்பூதங்களிலும் நான்கு வேதங்களிலும் ஆறு அங்கங்களிலும் இருப்பவனே! காற்றாகி எங்கும் கலந்தவனே! கயிலை மலையில் உறைபவனே! உனக்கு வணக்கங்கள் பல.

2637. *பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி*
*பிறவி யறுக்கும் பிரானே போற்றி*
*வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி*
*மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி*
*போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*கச்சாக நாக மசைத்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 2

**பொருளுரை:** பேய்களோடு கூத்தாடுதலை உகந்தவனே! பிறவியைப் போக்கும் தலைவனே! உயிர்களைப் பல வகையான பிறப்புக்களில் நிறுத்தி விளையாடுதலில் வல்லவனே! விரும்பி என் உள்ளத்துப் புகுந்தவனே! பொய்யைச் சார்பாகக் கொண்ட முப்புரங்களை அழித்தவனே! என் சிந்தையை விடுத்துப் போகாது இருப்பவனே! பாம்பைக் கச்சாக அணிந்தவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2638. *மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி*
*மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி*
*உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி*
*திருவாகி நின்ற திறமே போற்றி*
*தேசம் பரவப் படுவாய் போற்றி*
*கருவாகி யோடும் முகிலே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 3

**பொருளுரை:** பகைவர் மும்மதில்களையும் அழித்து, விரும்பி என் உள்ளத்துப் புகுந்து, என்னை உருவமுடையவனாகப் படைத்து, என் உயிர்

உடம்பின்வழிப் படாதபடி நீக்கி நின் வழிப்படுத்து எனக்கு இன்பமாகிநின்ற செயலுடையவனாய், உலகத்தாரால் முன்னின்று துதிக்கப்படுபவனாய், கருவாய்க்கப்பெற்றுச் சஞ்சரிக்கும் காளமேகம் போல் உலகுக்கு நலன் தருவானாய், உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2639. *வானத்தார் போற்றும் மருந்தே போற்றி*
*வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி*
*ஊனத்தை நீக்கும் உடலே போற்றி*
*ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி*
*தேனத்தை வார்த்த தெளிவே போற்றி*
*தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி*
*கானத்தீ யாட லுகந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 4

**பொருளுரை:** தேவர் போற்றும் அமுதமாய், வந்து என் உள்ளம் புகுந்தவனாய், உயிர்களின் குறையைப் போக்கும் அருள் உருவம் உடையவனாய், ஓங்கித் தீப்பிழம்பாய் உயர்ந்தவனாய், தேனை வடித்த தெளிவு போல்பவனாய், தேவர்களுக்கும் தேவனாய், சுடுகாட்டுத் தீயில் கூத்தாடுதலை விரும்பியவனாய் உள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2640. *ஊராகி நின்ற உலகே போற்றி*
*ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி*
*பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி*
*பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*நீராவி யான நிழலே போற்றி*
*நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி*
*காராகி நின்ற முகிலே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 5

**பொருளுரை:** ஊர்களாகவும் உலகமாவும் பரவியவனே! அனற் பிழம்பாய் ஓங்கி உயர்ந்தவனே! புகழ் வடிவினனாய் எங்கும் பரவியவனே! நீங்காது என் உள்ளத்தில் புகுந்தவனே! நீர் நிறைந்த ஓடைபோலக் குளிர்ச்சி தருபவனே! ஒப்பற்றவனே! கார்முகில் போல அருளவல்லவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2641. *சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி*
*தேவ ரறியாத தேவே போற்றி*
*புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி*

குறிப்பு

*போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி*
*பற்றி யுலகை விடாதாய் போற்றி*
*கல்லுயிராய் நின்ற கனலே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 6

பொருளுரை: : முதற்கண் சில வேறு தேவர்களாய் நின்று அருள் வழங்கிப் பின் அத்தேவர்களும் நீ ஒருவனேயாகி ஒன்றி நின்றவனே! தேவர்களும் அறிய முடியாத பெரிய தேவனே! புல்லாகிய ஓரறிவு உயிருக்கும் வாழ்க்கை வழங்கியவனே! நீங்காது என் உள்ளத்துப் புகுந்தவனே! உலகுகள் தோறும் பல உயிர்களாக நின்றபவனே! உலகைப் பற்றி அதனைக் கைவிடாதவனே! கல்லின் கண்ணும் உள்ள உயிர்களாய் நிற்கும் ஒளிப்பொருளே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2642. *பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி*
*பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி*
*எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி*
*என்சிந்தை நீங்கா இறைவா போற்றி*
*விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி*
*மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி*
*கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 7

பொருளுரை: : பண்ணின் இசையாகி இருப்பவனே! உன்னைத் தியானிப்பவரின் பாவத்தைப் போக்குபவனே! எண்ணும் எழுத்தும் சொல்லும் ஆனவனே! என் உள்ளத்தை நீங்காத தலைவனே! விண்ணும் தீயும் நிலனும் ஆகியவனே! மேலார்க்கும் மேலாயவனே! கண்ணின் மணி போன்ற அருமையானவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2643. *இமையா துயிரா திருந்தாய் போற்றி*
*என்சிந்தை நீங்கா இறைவா போற்றி*
*உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி*
*ஊழியே ழான வொருவா போற்றி*
*அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி*
*ஆதி புராணனாய் நின்றாய் போற்றி*
*கமையாகி நின்ற கனலே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 8

குறிப்பு

**பொருளுரை:** ஏனைய உயிர்களைப் போல இமைக்காமல் மூச்சுவிடாமல் இருப்பவனே! என் உள்ளத்தை நீங்காத தலைவனே! பார்வதி பாகனே! பல ஊழிகளையும் கடந்தவனே! பொருந்தாத கொடிய விடத்தை உண்டவனே! முதற் பழையோனே! பொறுமையாகச் செயற்படும் ஞான ஒளி உடையவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

2644. *மூவாய் பிறவாய் இறவாய் போற்றி*
*முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி*
*தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி*
*சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி*
*ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி*
*அல்லல் நலிய அலந்தேன் போற்றி*
*காவாய் கனகத் திரளே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 9

**பொருளுரை:** மூத்தலோ பிறத்தலோ இறத்தலோ இல்லாது எல்லாப் பொருள்களுக்கும் முற்பட்டு என்றும் இயற்கையாகவே விளங்கும் தேவர் தலைவரும் தொழும் தெய்வமே! எங்கும் பரவியிருப்பவனே! ஐயோ! என்று வருந்தும் அடியேனுக்கு எல்லாமாய் இருக்கும் பெருமானே! கனகத்திரள் போல்பவனே! கயிலை மலையானே! அடியேன் துயரங்கள் வருத்த வருந்துகின்றேன். என்னைக் காப்பாயாக. உனக்கு வணக்கங்கள் பல.

2645. *நெடிய விசும்பொடு கண்ணே போற்றி*
*நீள அகல முடையாய் போற்றி*
*அடியும் முடியு மிகலிப் போற்றி*
*யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி*
*கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி*
*கோயிலா என் சிந்தை கொண்டாய் போற்றி*
*கடிய உருமொடு மின்னே போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 10

**பொருளுரை:** பெரும்பரப்புடைய வானகத்திற்கு இருப்பிடமாய், எப்பொருளின் நீள அகலங்களையும் தன்னுள் அடக்கியவனாய், உன் அடியையும், முடியையும் காண அரியும், அயனும் தம்முள் மாறுபட்டு முயன்றும் அறிய முடியாமல் அனற்பிழம்பாய் நின்றவனாய்க் கொடிய வலிய கூற்றுவனை உதைத்தவனாய், அடியேனுடைய உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டவனாய், கொடிய இடியும் மின்னலும் ஆகியுள்ள கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

குறிப்பு

2646. *உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி*
*ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி*
*எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி*
*இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி*
*பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி*
*பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி.* 11

**பொருளுரை:** உண்ணாது உறங்காது இருப்பவனே! வேதங்களை ஓதாது உணர்ந்தவனே! உன்பெருமையை நினைத்துப் பார்க்காது செயற்பட்ட இராவணனைச் சிறிதளவு விரலை அழுத்தி நசுக்கி மகிழ்ந்து, அடக்கி ஆள்பவனே! பின் அவன்பால் பண்ணோடு கூடிய இசையின் இனிமையைச் செவிமடுத்தவனே! முன்னரேயே அடியேனுடைய உள்ளத்தில் புகுந்தவனே! உலகுக்குப் பற்றுக் கோடாய் இருப்பவனே! கயிலை மலையானே! உனக்கு வணக்கங்கள் பல.

# திருநீற்றுப் பதிகம் - திருஞான சம்பந்தர்

## திருநீற்றின் மகிமை

சைவ நெறியினை பின்பற்றுவோரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றுதான் இந்த திருநீறு. சிவச் சின்னங்களில் ஒன்றாக வைத்தும் போற்றப்படுகிறது .

இது சமயத்தின் தோற்ற ஒழுக்க முறையுண்மைகக்கும், முப்பொருள் உண்மைக்கும் அறிகுறியாய் அமைவது. மூன்று விரல்களால் இடப்படும் திருநீற்றின் மூன்று கோடுகள் சிந்தனை, சொல், செயல் என்ற திரி சத்தியங்களை உணர்த்த்வதாக அமைகிறது.

திருநீறு பூசிய அடியாரை சிவனாகவே கருதுவது சைவர்கள் இயல்பு, உடம்பெல்லாம் உவர் மண்ணாகிவரும் வண்ணாரை சிவனடியாராக பாவித்து தரையில் விழுந்து வணங்கியர் சேர வேந்தரும், நாயன் மாரில் ஒருவராக போற்றப்படும் சேரமான் பெருமாள் நாயனார் – மெய்ப்பொருள் நாயனா, மதுரையின் கூன் பாண்டியனின் வெப்பு நோயை தீர்க்க திருநீற்றின் பெருமையை விளக்கி திருஞான சம்பந்தரும் திருநீற்றின் பெருமையை விளக்கி பதிகம் பாடியுள்ளார்

**குறிப்பு**

திருநீற்றுப் பதிகம்

*(1)*

*மந்திர மாவது நீறு வானவர்*
*மேலது நீறு*
*சுந்தர மாவது நீறு துதிக்கப்*
*படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்தில்*
*உள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன்*
*திருவால வாயாந் திருநீறே*

**பொருளுரை:** திருநீறானது, மந்திரச் சொல் போன்று அச்சம் நீக்கி, வேண்டிய நற்பயனைத் தருவது ஆகும். வானவர்கள் திருநீற்றைஅணிகின்றனர். மனிதர்களுக்கு இது, வானவர்களை விட மேலானதாகி விளங்குவது. அழகினைத் தந்து பொலியும்திருநீறு, துதிக்கப் படும் பொருளாக உள்ளது. உமையவளைப் பாகங் கொண்ட ஆலவாய் அண்ணலாகிய ஈசனின்திருநீறு இத்தகையது ஆகும்.

*(2)*

*வேதத்தில் உள்ளது நீறு*
*வெந்துயர் தீர்ப்பது நீறு*
*போதந் தருவது நீறு புன்மை*
*தவிர்ப்பது நீறு*
*ஓதத் தகுவது நீறு உண்மையில்*
*உள்ளது நீறு*
*சீதப் புனல்வயல்சூழ்ந்த திரு*
*ஆலவாயான் திருநீறே*

**பொருளுரை:** வேதத்தால் போற்றப் படுகின்ற பெருமையுடையது திருநீறு. உலக வாழ்க்கையில், ஏற்படும் பிணிகளையும், மனதால் ஏற்படும் துயரங்களையும், தீர்ப்பது திருநீறு ஆகும். நல்லறிவு தருவதும், அறியாமை மற்றும் பழி முதலியவற்றால் நேரும் புன்மைகளை அகற்றுவதும் திருநீறு ஆகும். திருநீற்றின் செம்மை, ஓதத் தகுந்த பெருமையுடையதும், உண்மைப் பொருளாய் எக்காலத்திலும் விளங்குவதாகும். இது திருவாலவாய் அண்ணலாக விளங்கும் ஈசனுக்கு உரிய திருநீறு.

*(3)*

குறிப்பு

*முத்தி தருவது நீறு முனிவர்*
*அணிவது நீறு*
*சத்திய மாவது நீறு தக்கோர்*
*புகழ்வது நீறு*
*பத்தி தருவது நீறு பரவ இனியது*
*நீறு*
*சித்தி தருவது நீறு திருவால*
*வாயான் திருநீறே*

**பொருளுரை:** திருநீறு, முக்தி இன்பத்தை தருவது. முனிவர் பெருமக்கள் அணியும் பெருமை உடையது. எக்காலத்திலும்மேலானதாக விளங்கி நலம் தருவது. இத்தகைய திருநீற்றின் மகிமை அறிந்து, சிவனடியார்கள் போற்றுகின்றனர்.திருநீறானது மன்னுயிர்களுக்கு, சிவபக்தியைத் தருவதாகும். அதனைப் போற்றி வாழ்த்த இனிமை நல்கும். எட்டு வகையான சித்திகளைத் தரவல்லது. அது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

*(4)*
*காணஇனியது நீறு கவினைத்*
*தருவது நீறு*
*பேணிஅணிபவர்க்கெல்லாம்*
*பெருமை கொடுப்பது நீறு*
*மாணந் தகைவது நீறு மதியைத்*
*தருவது நீறு*
*சேணந் தருவது நீறு திருஆல*
*வாயான் திருநீறே*

பொருளுரை: திருநீறு அணிந்தவர்களைக் காணும் அன்பர்கள் இனிமைக் கொள்வார்கள். அத்தகைய திருநீற்றை விரும்பி அணிபவர்களுக்கு பெருமை கொடுக்கும். வல்லமை தரும். இறப்பினைத் தடுக்கும். நல்லறிவைத் தரவல்லது திருநீறு. மன்னுயிர்களுக்கு உயர்வைத் தரும் ஆற்றல் உடையது இத்திருநீறு. இது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

*(5)*
*பூச இனியது நீறு புண்ணிய*
*மாவது நீறு*
*பேச இனியது நீறு பெருந்தவத்*
*தோர்களுக் கெல்லாம்*
*ஆசை கெடுப்பது நீறு அந்தம*

*தாவது நீறு*
*தேசம் புகழ்வது நீறு திருஆல*
*வாயான் திருநீறே*

**குறிப்பு**

**பொருளுரை:** திருநீறு மெய்யில் பூசி அணிய, இனிமை சேர்க்கும். புண்ணியம் சேர்க்கும். திருநீற்றின் பெருமை பேச இனியது. உலக பந்தத்தால் உண்டாகும் ஆசைகளை நீக்கி, உயர்ந்த நிலைக்கு செல்ல வழி வகுக்கும். எல்லாவற்றிர்க்கும் அந்தமாகத் திகழ்வது திருநீறு. தேசமெல்லாம் புகழ்ந்து போற்றும் சிறப்புடைய இத்திருநீறு, இது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

*(6)*
*அருத்தம தாவது நீறு அவலம்*
*அறுப்பது நீறு*
*வருத்தம் தணிப்பது நீறு வானம்*
*அளிப்பது நீறு*
*பொருத்தம தாவது நீறு*
*புண்ணியர் பூசும் வெண்ணீறு*
*திருத்தகு மாளிகை சூழ்ந்த*
*திருவால வாயான் திருநீறே*

**பொருளுரை:** பொன்போன்ற பெரிய செல்வமாக விளங்குவது திருநீறு, அவலமாகும் துன்பத்தைப் போக்குவதும், மனத்தில் வருத்திக் கொண்டிருந்து துன்புறுத்தும் நெஞ்சக் கனலைத் தணித்து விளக்குவதும், சிறப்பினை அளிப்பதும், எல்லாநிலைகளிலும் பொருந்தி விளங்கிச் சிறப்பு தருவதும் திருநீறு. புண்ணியத் தன்மை கொண்டதுடன், புண்ணியம் செய்த பெருமக்கள் விரும்பி பூசி, மேலும் பொலிவு கொள்வதற்கும் காரணமாவது திருநீறு. செல்வம் மிக்க மாளிகைகள் சூழ்ந்த திரு ஆலவாயில் வீற்றிருக்கும் ஈசனார்க்கு உரிய திருநீறு, இத்தகைய சிறப்பினை உடையதாகும்.

*(7)*
*எயிலது அட்டது நீறு*
*இருமைக்கும் உள்ளது நீறு*
*பயிலப் படுவது நீறு*
*பாக்கியமாவது நீறு*
*துயிலைத் தடுப்பது நீறு*
*சுத்தமதாவது நீறு*

*அயிலைப் பொலிதரு சூலத்து*
*ஆலவாயான் திருநீறே*

**பொருளுரை:** முப்புரத்தை எரித்துச் சாம்பலாக்கியது திருநீறு. இம்மை, மறுமை, ஆகிய இரண்டினுக்கும் உயிர்களுக்குத் துணையாக இருப்பது திருநீறு. நித்தியமாயும், உயர்ந்த பொருளாயும் பயின்று , நுகரும் பொருளாக உடையது நீறு. அது பாக்கியமாக இருந்து விளங்கும் சிறப்புடையது. மாயையின் வயப்பட்டும் சோர்வுற்றும் தடைப்படுத்தும் உறக்க உணர்வினைத் தடுத்து புத்துணர்ச்சி தந்து தூய்மைப்படுத்தும் இயல்புடையது. அத்தகைய திருநீறு, கூர்மையான சூலப் படையுடைய திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

**குறிப்பு**

*(8)*
*இராவணன் மேலது நீறு எண்ணத்*
*தகுவது நீறு*
*பராவண மாவதுநீறு பாவம்*
*அறுப்பது நீறு*
*தராவணம் ஆவது நீறு தத்துவ*
*மாவது நீறு*
*அராவணங் கும்திரு மேனி*
*ஆலவா யான்திருநீறே*

**பொருளுரை:** இராவணன் திருநீறு அணியப் பெருமையுறச் செய்தது. எண்ணத்தால் தகுதியாக்கிப் போற்றி வழி படுவதற்கு உரியது திருநீறு. பராபரனைப் போன்று துதிக்கப் படும் பொருளாக விளங்குவதும், பாவத்தைப் போக்குவதும் திருநீறு.தராவனமாக இருப்பது திருநீறு. அது தத்துவமாகவும் விளங்கி நிற்பது. அத்தகையது, அரவம் அணைந்து விளங்கும்திருமேனியராகிய திரு ஆலவாய் அண்ணலுக்கு உரியதாகிய திருநீறு ஆகும்.

*(9)*
*மாலொடு அயனறி யாத*
*வண்ணமும் உள்ளது நீறு*
*மேலுறை தேவர்கள் தங்கள்*
*மெய்யது வெண்பொடி நீறு*
*ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந்*
*தருவது நீறு*
*ஆலம துண்ட மிடற்றெம்*
*ஆலவாயான் திருநீறே*

குறிப்பு

**பொருளுரை:** திருமாலும், பிரம்மனும் அறிவதற்கு அரியதாகிய வண்ணத்தை உடையது திருநீறு. தேவர்கள் தமது மெய்யில் பூசிமகிழ்வது திருநீறு. பிணிகளை நீக்கி இன்பத்தை தரவல்லது திருநீறு. அத்தகைய சிறப்புடையது, நஞ்சினை உண்டமிடற்றுடைய ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

*(10)*
*குண்டிகைக் கையர்க ளோடு*
*சாக்கியர் கூட்டமும் கூடக்*
*கண்திகைப் பிப்பது நீறு கருத*
*இனியது நீறு*
*எண்திசைப் பட்ட பொருளார்*
*ஏத்தும் தகையது நீறு*
*அண்டத் தவர்பணிந் தேத்தும்*
*ஆலவாயன் திருநீறே*

பொருளுரை: சமணர்களும், சாக்கியர்களும் திகைக்கும் தகைமையில் காட்சி தருவது திருநீறு. திருநீற்றை நெஞ்சில் பதித்த போதும் இனிமையைத் தரவல்ல அத்தகைய தெய்வீகம் உடையது. எண் திசையில் உள்ள சிவமாகிய மெய்ப் பொருளைச் சரணடைந்த பெருமக்களும் ஏத்தும் சிறப்புடையது திருநீறு. அத்தகையது, தேவர்கள் பணிந்து ஏத்தும் திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

*(11)*
*ஆற்றல் அடல்விடையேறும்*
*ஆலவாயான் திருநீற்றைப்*
*போற்றிப் புகலி நிலாவும்*
*பூசுரன் ஞானசம் பந்தன்*
*தேற்றித் தென்னன் உடலுற்ற*
*தீப்பிணி யாயின தீரச்*
*சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர்*
*நல்லவர் தாமே*

**பொருளுரை:** வலிமை மிக்க இடப வாகனத்தில் விளங்குகின்ற ஆலவாய் அண்ணலாரின் திருநீற்றைப் போற்றித் துதித்தஞானசம்பந்தர், மன்னவனாகிய கூன் பாண்டியனுடைய தீமையான பிணி யாவும் தீரும் வகையில் தேற்றிச்

சாற்றிய இத் திருப் பதிகத்தை ஓத வல்லவர்கள் நல்லவர்களாய்த் திகழ்வார்கள்.

# கோளறு திருபதிகம்

குறிப்பு

*கோளறு திருப்பதிகம் – திருமறைக்காடு*
*இறைவர் திருப்பெயர் : ஸ்ரீ மறைக்காட்டு மணாளன்*
*இறைவியார் திருப்பெயர் : ஸ்ரீ யாழைப்பழித்த மொழியாள்*
*திருமுறை : இரண்டாம் திருமுறை 85 வது திருப்பதிகம்*
*அருளிச்செய்தவர் : திருஞானசம்பந்த சுவாமிகள்*
*கிரகதோ'ங்கள் நீங்கவும் நீங்க ஓத வேண்டிய திருப்பதிகம்.*

திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்படும் சம்பந்தர் கோள்களின் பாதிப்பு நீங்கப் பாடிய கோளறு பதிகம்.

ஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் சுவாமிகளும் மகிழ்ந்து உறவாடி இருந்த திருத்தலங்களுள் ஒன்று. அக்காலத்தில் தென்பாண்டித் திருநாட்டில் புறச்சமயம் ஓங்கியிருந்தது. சுவாமிகள் திருமடம் அமைத்துத் தங்கியிருந்த போது சிவ சமயத்தை மீட்டெடுக்க பாண்டிய நாட்டுக்கு எழுந்தருள வேண்டும். என பாண்டிய நாட்டின் பட்டத்தரசியான மங்கையர்க்கரசி எனும் மாதரசி – ஞானசம்பந்தப் பெருமானுக்கு திருமுகம் அனுப்பியிருந்தாள்.

அதைக் கண்ட திருஞானசம்பந்தர் மதுரையம்பதிக்குப் புறப்படலானார். அப்போது, அப்பர் சுவாமிகள்  இவ்வேளையில் நாளும் கோளும் நல்லனவாக இல்லையே!.. என, ஞானசம்பந்தரிடம் தனது கவலையைத் தெரிவித்தார். ஏனெனில் புறச்சமயத்தாரின் கொடுமைகளை அனுபவித்து மீண்டு வந்தவர் அப்பர் சுவாமிகள். மனம் வருந்திய அப்பர் சுவாமிகளுக்கு ஆறுதல் கூறி  திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகம் இது.

பாடல் எண் : 01

*வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடி மேல் அணிந்து என் உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும்*
*உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** எம்பெருமான் மூங்கில் போன்ற தோளினை உடைய உமையவளுக்கு தன் உடம்பினில் பாகம் கொடுத்தவன். ஆலகால விடத்தை உயிர்களைக் காக்கும் பொருட்டு அருந்தி திருக்கழுத்தினில் தாங்கியவன். இனிமையான இசையை எழுப்பும் வீணையை வாசித்துக்கொண்டு இருக்கும்

குறிப்பு

அவன் களங்கமில்லாத பிறையையும் கங்கையையும் தன் திருமுடி மேல் அணிந்து கொண்டு, என் உளம் முழுவதும் நிறைந்து காணப்படுவதால் (அதாவது நான் சிவ சிந்தையில் இருப்பதால்) சூரியன், சந்திரன், செவ்வாய்,புதன், குரு, சுக்கிரன், சனி, மற்றும் பாம்பாகிய ராகு- கேது என்னும் ஒன்பது கோள்களும் ஒரு குற்றமும் இல்லாதவையாக (என் போன்ற) சிவனடியாருக்கு என்றும் மிக மிக நல்லதையே செய்யும்.

பாடல் எண் : 02

*என்பொடு கொம்பொ(டு) ஆமை இவை மார்பிலங்க எருதேறி ஏழையுடனே*
*பொன்பொதி மத்தமாலை புனல் சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்*
*ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும் உடனாய நாள்களவை தாம் அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** திருமாலின் வாமன, பன்றி, கூர்ம அவதாரங்களின் ஆணவத்தை அடக்கி அணிந்து நிற்கும், எலும்பு, கொம்பு, ஆமை ஓடு முதலானவை தன் திருமார்பில் விளங்க, உமையவளுடன் எருதின் மேல் ஏறி , பொன்போலொளிரும் ஊமத்தை மலர்களாலான மாலை தரித்து, தலையில் கங்கையணிந்து என் உள்ளத்தே நிறைந்ததால், ஒன்பதாவது விண்மீனாய் வரும் ஆயில்யம், ஒன்பதோடு ஒன்று  பத்தாவது விண்மீனான மகம், ஒன்பதொடு ஏழு  பதினாறாவது விண்மீனான விசாகம், பதினெட்டாவது விண்மீனான கேட்டை, ஆறாவது விண்மீனான திருவாதிரை, முதலான பயணத்திற்கு விலக்கப்பட்ட நாட்கள் எல்லாமும், சிவனடியார் மீது அன்பொடு அவர்க்கு என்றும் நல்லதையே செய்யும்.

பாடல் எண் : 03

*உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து உமையொடும் வெள்ளை விடைமேல்*
*முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்*
*திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசை தெய்வமான பலவும்*
*அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** அழகிய பவளம் போன்ற திருமேனியில் ஒளி பொருந்திய திருவெண்ணீற்றை அணிந்து மணம் பொருந்திய கொன்றை, திங்கள் ஆகியவற்றை முடிமேல் அணிந்து சிவபிரான் உமையம்மையாரோடு வெள்ளை விடைமீது ஏறிவந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் திருமகள், துர்க்கை, செயமகள், நிலமகள், திசைத் தெய்வங்கள் ஆன பலரும்

அரிய செல்வங்களையே நல்லன வாகத் தரும். அடியாரவர்கட்கும் மிகவும் நல்லனவாகவே தரும்.

**குறிப்பு**

பாடல் எண் : 04

*மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து மறையோதும் எங்கள் பரமன்*
*நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்தென் உளமே புகுந்த*
*அதனால் கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர் கொடுநோய்கள்*
*ஆன பலவும் அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு*
*மிகவே.*

**பொருளுரை:** பிறை போன்ற நுதலை உடைய உமையம்மையாரோடு ஆலின் கீழ் இருந்து வேதங்களை அருளிய எங்கள் பரமன் கங்கை, கொன்றை மாலை ஆகியனவற்றை முடிமேல் அணிந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால், சினம் மிக்க காலன், அக்கினி, யமன், யமதூதர், கொடிய நோய்கள் முதலிய அனைத்தும் மிக்க குணமுடையனவாய் நல்லனவே செய்யும். அடியவர்களுக்கும் மிகவும் நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 05

*நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும் விடையேறும் நங்கள்*
*பரமன்*
*துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென் உளமே புகுந்த*
*அதனால் வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான*
*பூதமவையும் அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு*
*மிகவே.*

**பொருளுரை:** விடத்தைக் கழுத்தில் அணிந்த நீலகண்டனும், என் தந்தையும், உமையம்மையாரோடு இடபத்தின் மேல் ஏறி வரும் நம் பரம்பொருள் ஆகிய சிவபெருமான், அடர்ந்து கறுத்த வன்னி மலரையும், கொன்றை மலரையும் தன் முடிமேல் அணிந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொடிய சினத்தை உடைய அசுரர்கள், முழங்குகிற இடி, மின்னல், துன்பந்தரும் பஞ்ச பூதங்கள் முதலானவையெல்லாம் (நம்மைக் கண்டு) அஞ்சி நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 06

*வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர் மடவாள் தனோடும் உடனாய்*
*நாண்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்*
*கோளரி உழுவையோடு கொலையானை கேழல் கொடுநாகமோடு கரடி*
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.

குறிப்பு

**பொருளுரை:** ஒளியும் வரியும் பொருந்திய புலித்தோல் ஆடையும்(வாள் – வரி – அதள் – அது – ஆடை் அதள் -புலித்தோல்), வரிந்து கட்டிய கோவணமும் அணியும் சிவபெருமான் அன்றலர்ந்த மலர்கள், வன்னி இலை, கொன்றைப்பூ, கங்கை நதி ஆகியவற்றைத் தன் முடிமேல் சூடி, உமையம்மையாரோடும் வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், கொல்லும் வலிய புலி(கோளரி உழுவை), கொலை யானை, பன்றி(கேழல்), கொடிய பாம்பு, கரடி, சிங்கம் ஆகியன நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு மிக நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 07

*செப்பிள முலை நன்மங்கை ஒரு பாகமாக விடையேறு செல்வனடைவார்*
*ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்*
*வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும் வினையான வந்து நலியா*
*அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** செம்பு போன்ற இளந்தனங்களை உடைய உமையவளைத் தன் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு, இடபத்தின் மேல் ஏறி வரும் செல்வனாகிய சிவபெருமான் தன்னை அடைந்த அழகிய பிறைச் சந்திரனையும், கங்கையையும் தன் முடிமேல் அணிந்தவனாய், என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், காய்ச்சல்(சுரம்), குளிர் காய்ச்சல், வாதம், மிகுந்த பித்தம், அவற்றால் வருவன முதலான துன்பங்கள் நம்மை வந்து அடையா. அப்படி அவை நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 08

*வேள்பட விழி செய்து அன்று விடைமேல் இருந்து மடவாள் தனோடும் உடனாய் வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால் ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும் இடரான வந்து நலியா ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** அன்று மன்மதன் அழியும்படி நெற்றிக் கண்ணைத் திறந்து எரித்த சிவபெருமான், இடபத்தின் மேல் உமையம்மையாரோடு உடனாய் இருந்து, தன் முடிமேல் ஒளி பொருந்திய பிறைச்சந்திரன், வன்னி இலை, கொன்றை மலர் ஆகியனவற்றைச் சூடி வந்து என் உள்ளத்துள் புகுந்து தங்கியுள்ளான். அதனால், ஏழ் கடல்களால் சூழப்பட்ட இலங்கையின் மன்னன் ஆன இராவணன் (பிறன்மனை நாடியதாலேற்பட்டது) போன்ற இடர்களும்

குறிப்பு

வந்து நம்மைத் துன்புறுத்தா. ஆழமான கடலும் நமக்கு நல்லனவே செய்யும். அடியவர்களுக்கு அவை நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 09

*பல பல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்*
*சலமகளோடு எருக்கு முடி மேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்*
*மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர் வருகாலமான பலவும்*
*அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** பல்வேறு கோலங்கொண்டருளும் தலைவனும், உமைபாகனும், எருதேறிவரும் எங்கள் பரமனுமாகிய சிவபிரான், முடிமீது கங்கை, எருக்க மலர் ஆகியவற்றை அணிந்து வந்து என் உளம் புகுந்துள்ள காரணத்தால் தாமரை மலர்மேல் உறையும் பிரமன், திருமால், வேதங்கள் தேவர்கள் ஆகியோராலும், கெட்ட காலங்கள், அலைகடல், மேரு ஆகியவற்றாலும் வரும் தீமைகள் எவையாயினும் நமக்கு நல்லனவாகவே அமையும். அடியார்களுக்கும் அவை மிகவும் நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 10

*கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்*
*மத்தமும் மதியு(ம்)நாகம் முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்*
*புத்தரொடமணை வாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு செம்மை*
*திடமே அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே.*

**பொருளுரை:** பூங்கொத்துக்கள் அணிந்த கூந்தலினளாகிய உமையம்மையாரோடு சென்று குணம் காட்டி அருச்சுனனுக்கு அருள் புரிந்த வேடவடிவம் கொண்ட சிவபிரான் முடிமேல் ஊமத்தை மலர், பிறை, பாம்பு ஆகியவற்றை அணிந்து, என் உளம் புகுந்துள்ள காரணத்தால், புத்தர்களையும் அமணர்களையும் அவ்வண்ணலின் திருநீறு வாதில் தோற்றோடச் செய்யும். நமக்கு வரும் அத்தகைய தீமைகள் நல்லனவற்றையே செய்யும். அடியார்களுக்கும் அவ்வாறே நல்லனவே செய்யும்.

பாடல் எண் : 11

தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி வளர்செம்பொன்
எங்கும் திகழ நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.

**பொருளுரை:** தேன் பொருந்திய பொழில்களைக் கொண்டதும், கரும்பு, விளைந்த செந்நெல் ஆகியன நிறைந்துள்ளதும், வளரும் செம்பொற்குவியல்

குறிப்பு

எங்கும் நிறைந்திருப்பதும், நான்முகனால் முதன் முதல் படைக்கப்பட்டதுமான பிரமாபுரத்துத் தோன்றி மறைஞானம் பெற்ற ஞான முனிவன் ஆகிய ஞானசம்பந்தன் வினைப்பயனால் தாமே வந்துறும் கோளும் நாளும் பிறவும் அடியவரை வந்து நலியாத வண்ணம் பாடிய சொல்லான் இயன்ற மாலையாகிய இப்பதிகத்தை ஓதும் அடியவர்கள் வானுலகில் அரசு புரிவர். இது நமது ஆணை.

# திருவாசகம்-சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்

### 1

*நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*
*கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க*
*ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க*
*ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க*

**பொருளுரை:** நமச்சிவாய வாழ்க. நாதன் திருவடி வாழ்க. கண்ணிமைக்கும் நேரமும் என் நெஞ்சம் பிரியாதவனுடைய திருவடி வாழ்க. திருவாவடுதுறை ஆண்டருளும் குருவாகிய மாணிக்கத்தின் திருவடி வாழ்க. தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய திருவடி வாழ்க. ஒருவனாகியும் பலவுருக்கொண்டும் இருக்கும் இறைவனின் திருவடி வாழ்க.

**குறிப்பு:**

1. மாணிக்க வாசகர் தம்முடைய திருவாசகத்தின் முதல் ஒலியாக நமச்சிவாய என்ற திருஐந்தெழுத்தை சொன்னது மிகவும் இனியது. சிவம் வாழ்க என்று கூடத் துவங்காமல் வணக்கத்திற்குரிய நம முதலில் கூறி இறைவனின் சிவ என்ற திருநாமத்தைச் சொல்வது அவருடைய பணிவன்பின் வெளிப்படை.

2. திருவாசகத்தில் சிறப்பிடம் பெறுவது ஆகமம். இம்முதற் பதிகத்திலேயே அதனைப்போற்றி நிற்பது அவருக்கு ஆகமங்கள் பால் உள்ள பெருமதிப்பைக் காட்டுவன. வேதங்கள் இறைவனுடைய இயல்பு கூறுகின்ற போது,ஆகமங்கள் அப்பெருமானை எவ்வகைஅடையலாம் என்பது பற்றி நமக்குக் காட்டுகின்றன. வேதங்கள் அறிவானால் ஆகமங்கள் அந்த அறிவின் பயன்பாடு. இவ்வாறு ஆகமங்கள் நமக்கு இறைவனின் அருகில் செல்லும் வழி காட்டுவதாலும், ஆகமங்கள்

இறைவனால் அருளிச்செய்யப்பட்டதாலும் இறைவனை, “ஆகம நெறி தந்து அருகில் வரச் செய்கின்ற வள்ளல்” எனப் போற்றுகின்றார்.

3. இறைவன் ஒருவனே. (ஏகம் சத் – வேதம், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் – திருமந்திரம்). அவ்விறைவன் பசுக்களாகிய நாம் உய்வுறும் பொருட்டு பலபல வேடங்கள் தாங்கி நம்மை ஆட்கொள்கிறான்.

## 2

*வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க*
*பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க*
*புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க*
*கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க*
*சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க*

**பொருளுரை:** என்னுடைய வேகத்தைப் போக்கி ஆண்டுகொண்ட மன்னனின் திருவடி வெல்லட்டும். பிறப்பினை நீக்குபவனாகிய தலைக்கோலமுடைய பெருமான் அணி சேர் கழல்கள் வெல்லட்டும்.தன்னை விடுத்து நிற்பவர்களுக்கு வெகு தூரத்தில் உள்ள (அரிய பொருளாக உள்ள) பெருமானின் பூப்போன்ற மென்மையான கழல்கள் வெல்லட்டும்.

கைகளைக் கூப்பி வழிபடுவார் உள்ளத்தில் மகிழ்ந்து இருக்கும் மன்னனுடைய கழல்கள் வெல்லட்டும். தலை தாழ்ந்து வணங்குவார்களை மிக உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம் வாய்ந்தவனுடைய கழல்கள் வெல்லட்டும்.

### குறிப்பு:

1. வேகம் கெடுத்தல் – துயரம் நீக்குதலைக் குறிக்கும். மனத்தின் வேகத்தையும்

   (நிலையில்லாமல் அலைபாய்தல்) அதனால் வரும் கேட்டின் வேகத்தையும் குறைத்து தன் பால் மனத்தை நிலைபெறச்செய்யும் ஈசனின் கருணையையும் குறிக்கும்.

2. பிஞ்ஞகன் – பீலி அணிந்தவன் எனவும் பொருள் கொள்ளலாம். (இறைவன் குரண்டாசுரனின் பீலியை அணிந்த விபரம் கந்த புராணம் ததீசி முனிவர் வாக்கில் காண்க.)

3. சேயோன் – சேய்மையில் (தூரத்தில்) இருப்பவன்.

குறிப்பு

## 3

*ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி*
*தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி*
*மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி*
*சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி*

**பொருளுரை:** எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டவனின் திருவடி போற்றி. எம் தந்தை என நின்று அருளுபவனின் திருவடி போற்றி. ஒளி வடிவானவனின் திருவடி போற்றி. சிவன் எனப்பெறும் செம்பொருளின் சிவந்த திருவடி போற்றி. அன்பினில் நிற்பவனான தூயவனின் திருவடி போற்றி. மாயப் பிறப்பினை நீக்கும் உயர்ந்தோனின் திருவடி போற்றி. அமைப்பு சிறந்து விளங்கும் திருப்பெருந்துறையில் இருக்கும் நம் தேவனின் திருவடி போற்றி.

குறிப்பு:

1. தேசு – ஒளி

## 4

*ஆராத இன்பம் அருளும் மலை போற்றி*
*சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்*
*அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்*
*சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை*
*முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்*

**பொருளுரை:** அடங்காத இன்பம் அருளும் கருணையின் மலை போன்றவனுக்கு போற்றுதல்கள். சிவபெருமான் என்னுடைய சிந்தையில் பெருங்கருணையால் வந்திருக்கின்ற காரணத்தால் அவனுடைய திருவருளே துணையாகக்கொண்டு அவனுடைய திருவடியை வணக்கம் செய்து உள்ளம் மகிழும் வண்ணம் சிவபுராணமாகிய இதனை முன் செய்த வினைகள் எல்லாம் தீரச் சொல்லுகின்றேன்.

### குறிப்பு:

1. "சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்ற இவ்வரிகள் அன்பினால் நிறை நிற்கின்ற அடியவர்க்கு மட்டுமல்லாது தத்துவம் விரும்புவோருக்கும் பெரும்பொருள் வாய்ந்தது. திருவாசகத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் கருத்து, "இறைவன் தானே வந்து ஆட்கொள்கிறான்."

குறிப்பு

கட்டுண்டு தவிக்கும் பசுக்களாகிய நம் எல்லா உயிர்களின் பொருட்டு அரியவனாகிய இறைவன் எளிமையாக நிற்பது சித்தாந்தத்தில் காண்க. அவ்வாறு எளிமையாக வந்திருக்கும் இறைவனைத் தொழுவதற்கும் அப்பெருமானுடைய அருளையே துணையாகக் கொண்டாலேயே அது முடியும்.

(அருளே துணையாக ... அப்பர் சோற்றுத்துறை சென்று அடைவோமே – சம்பந்தர்)

## 5

*கண் நுதலான் தன் கருணைக்கண் காட்ட வந்து எய்தி*
*எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி*
*விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,*
*எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்*
*பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்*

**பொருளுரை:** நெற்றியிலே ஒரு கண்ணுடைய பெருமான் தன்னுடைய கருணைக்கண் காட்டியதால் இங்கு வந்தேன். சிந்தனைக்கு எட்டாத பேரழகு மிக்க கழல்பூண்ட திருவடிகளை தொழுது நின்று, வானம், பூமி மற்றும் இவை தவிர மீதி உள்ளன யாவையுமாய், ஒளிமிக்கதாயும், அளவிடும் எல்லைகள் எல்லாம் கடந்து உள்ள பெருமானே! – உன் பெரிய பெரிய தன்மைகளை மோசமான வினைகளில் கிடக்கும் நான் புகழ்ந்து போற்றும் வகை தெரியாது இருக்கிறேன்.

### குறிப்பு:

1. பாசத்தால் கட்டுண்ட பசுக்களின் உய்வின் பொருட்டு இறைவனால் நுண்ணுடலும் (சூக்'ம சரீரம்) அவற்றின் வினைக்கேற்ற (பரு) உடல்கள் பின்னும் அருளப்பட்டன என்பது சித்தாந்தம் கூறும் உலகின் துவக்கம்.
2. நுதல் – நெற்றி இறைஞ்சி – வணங்கி இறந்து – கடந்து புகழும் ஆறு – புகழும் வகை.

## 6

*புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*
*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*
*வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்*
*செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்*
*எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்*

குறிப்பு

**பொருளுரை:** புல்லாகவும், சிறு செடிகளாகவும்,புழுவாகவும், மரமாகவும், பலவகை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பாம்பாகவும், கல்லில் வாழும் உயிராகவும், மனிதராகவும், உடல் நீங்கிய பேய்களாகவும், பலதரப்பட்ட கணக்கூட்டங்களாகவும், வலிமை மிகுந்த அசுரர்களாகவும்,முனிவராகவும், தேவராகவும் இந்த அசையும் மற்றும் அசையாதவற்றால் ஆன (அண்டம்) முழுதும் சென்று எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்துவிட்டேன், எம்பெருமானே!

**குறிப்பு:**

1. விருகம் – மிருகம் தாவர சங்கமம் – (ஸ்தாவர ஜங்கமம்) சராசரம்.

## 7

*மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்*
*உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற*
*மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்*
*ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே*

**பொருளுரை:** உன்னுடைய தங்கத் திருவடிகளைக் கண்டு இன்று உண்மையாகவே வீடு பேறடைந்தேன். நான் உய்யும் பொருட்டு எனது உள்ளத்துள் ஓம் எனும் ஒலியாய் எழுந்த உண்மைப் பொருளே! காளையை ஓட்டி வருபவனே! வேதங்கள் “ஐயா!” எனப் பெரிதும் வியந்து கூறி ஆழமாகவும் பலபல தன்மைகளைப் பெருகி ஆராய்ந்தும் காண முயலுகின்ற மிகச்சிறிய பொருளுமாக இருப்பவனே!

**குறிப்பு:**

1. இறைவனுடைய பெருமையை அறிந்து அவருடைய திருநாமகளில் மூழ்கியிருப்போருக்கு இங்கேயே வீடுபேறு – வேதம்.
2. வேதங்கள் பலவாறெல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்தும், பலபல கோணங்களில் கூறியும் அவர் தம் பெருமையைக் கூறச் சொற்கள் இல்லாமையை உணர்த்துகின்றன. அத்தகு பெரிய அவரோ மிகச்சிறியவற்றிலும் நிறைந்துள்ளார். என்ன விந்தை இது?

## 8

*வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா*
*பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி*
*மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே*
*எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே*
*அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே*

**குறிப்பு**

**பொருளுரை:** வெப்பமாகச் சுடுகின்றவரும்,குளுமையாக இருக்கின்றவரும் நீரே.என் உரிமையாளனாக உள்ள மாசற்றவனே! பொய்மைகள் எல்லாம் அகலும் வண்ணம் வந்து அருள்செய்து, உண்மை அறிவாக ஒளிவிடும் மெய்ச்சுடரே! எந்த அறிவும் இல்லாத எனக்கும் இன்பமாம் பெருமானே! அறிவின்மையைப் போக்கும் நல்லறிவே!

### குறிப்பு:

1. சுடர் மிகுவதால் இருளுக்குக் கேடு – பசவண்ணர். உள்ளத்தில் மெய்ச்சுடரான இறைவன் வர பொய்யிருளுக்குக் கேடு.
2. வெய்ய – காய்கின்றஃ சூடான் தணிய – குளுமையான.

## 9

*ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்*
*ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்*
*போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்*
*நாற்றத்தின் நேரியாய்,சேயாய், நணியானே*
*மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே*

**பொருளுரை:** தோற்றம், குறித்த வயது, முடிவு இல்லாதவனே! நீ உலகங்களையெல்லாம் தோற்றுவிக்கின்றாய், தொடர்ந்து (அழியாது) இருக்கச் செய்கின்றாய், (இறுதியில்) அழிக்கின்றாய், அருள் தந்து உய்யக் கொள்கின்றாய், உயிர்களை மாயைக்குள் போக்குவாய்! நீ என்னை உன்னுடைய அடியார் கூட்டத்தில் புகவைப்பாய். மணத்தினும் (வாசனை) நுண்மையான (சூச்க்"சுமமான) பொருளே! வெகு தொலைவாகியும், மிக அருகில் இருப்பவனே! சொல்லிற்கும் சிந்தனைக்கும் எட்டாது நிற்கும் மறை நாயகனே!

### குறிப்பு:

1. இறைவனுக்கு பிறவற்றைப் போலத் தோற்றம், வாழ்வு, முடிவு இல்லாமையைக் குறிப்பிட்டு, அப்பெருமானே மற்ற எல்லாப் பொருள்களுக்கும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் மூலம் இயங்கச்செய்கிறார் என்னும் திறத்தை வெளிப்படுத்துகிறார்.
2. ஒப். உன்றன் அடியார் நடுவுற்றிருக்கும் அருளைப் புரிவாய்.
3. மணமானது காண இயலாத நுண்பொருள்களாகப் பரவுகின்றது. இறைவன் அந்த நுண்மையினும் நுண்மையாக இருக்கிறார்.

4. சேய்மை – தொலைவ்ு நணியது – அருகில் இருப்பது் மாற்றம் – சொல்.

## 10

குறிப்பு

*கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்*
*சிறந்து அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று*
*பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்*
*நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த*
*மறைந்திருந்தாய், எம்பெருமான் ...*

**பொருளுரை:** அப்போது கறந்த பாலோடு கரும்பின் சாறும் நெய்யும் கலந்தால் எவ்வாறு இனிக்குமோ அவ்வாறு சிறந்து, அடியவர்கள் மனத்தில் தேன் ஊற்றெடுத்தாற் போல நின்று, இப்பிறவியை முற்றுப் பெறச்செய்யும் எங்களுடைய பெருமானே! ஐந்நிறமும் நீயே ஆனாய்! வானவர்கள் போற்றி நிற்க அவர்களுக்கு அரியவனாக மறைந்திருந்தாய், எம்பெருமானே!

**குறிப்பு:**

1. வினை நிறைந்த பிறப்பினால் அவதிப்படும் ஆன்மாக்களில் அன்பினால் இறைவன் திருவடி பற்றுபவர்களுக்குக் கடினமான முறைகளினால் அல்ல, மிகவும் எளிதாகவும் தேனினும் இனிய ஊற்றாக அவர்கள் உள்ளத்தில் தோன்றி அவர்களுடைய பாச மலம் அறுக்கிறார் சிவபெருமான்.

## 11

*...வல்வினையேன் தன்னை*
*மறைந்திட மூடிய மாய இருளை*
*அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி*
*புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,*
*மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை*
*மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,*

**பொருளுரை:** கொடிய வினையில் சிக்குண்டிருக்கும் என்னை மறைத்து மூடிய மாயையாகிய இருளினை செய்யத்தகுந்தது, செய்யத் தகாதது என்னும் விதிகளால் கட்டி, மேலே ஒரு தோலும் சுற்றி, கெட்டுப் போவதாகவும், அழுக்கினை உடையதாகவும் உள்ள திசுக்கள் நிறைந்து, மலத்தினை வெளியேற்றும் ஒன்பது துளைகள் உள்ள வீடான இவ்வுடலை வைத்துக்கொண்டு மயங்கிநிற்க, ஐந்து புலன்களும் ஏமாற்ற,

**குறிப்பு:**

குறிப்பு

1. உடலின் கட்டுமானம் விவரிக்கப் படுகிறது.

## 12

*விலங்கும் மனத்தால், விமலா உனக்கு*
*கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்*
*நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி*
*நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,*
*நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்*
*தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே*

**பொருளுரை:** ஒருமைப்படாமல் சிதறுகின்ற சிந்தனைகளை உடைய மனத்தால், மாசிலாதவனே, உன்னிடம் கலந்து நிற்கின்ற அன்பு நிறைந்து, அந்நிறைவால் கசிந்தும், உள்ளம் உருகி நிற்கின்ற நல்ல தன்மை இல்லாத சிறுமையுடையவனாகிய என்க்கும் அருள்செய்து, இந்த உலகில் உணரத்தக்க வண்ணம் கருணையால் வந்து, உன்னுடைய நீண்டு அழகிய கழலணிந்த திருவடிகள் காட்டி, நாயினும் கேவலமான நிலையில் கிடந்த அடியேனுக்குப் பெற்ற தாயினும் அதிகமான அன்பு உடையவனான தத்துவப் பொருளே!

### குறிப்பு:

1. கேவலமான நிலையில் நாம் இருப்பினும் இறைவன் திருவருள் நம்முடைய இழிவு கண்டு புறம் தள்ளாது, அளத்தலுக்கு இயலாத கருணையினால் நம்மை ஆண்டு கொண்டருளும் வண்ணம் இங்கு தொழப் படுகின்றது.

## 13

*மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே*
*தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே*
*பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே*
*நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்*
*பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே*

**பொருளுரை:** குற்றமற்ற தூய ஒளி மலர்கின்ற மலர் போன்று இனிய சுடரே! ஒளியுருவினனே! தேன் நிறைந்த அமுதமே! சிவபுரத்தை உடையவனே! பாசமாகிய கட்டினை அறுத்துத் திருவருள் புரியும் அறிவிற் சிறந்தோனே! இனிய அறக்கருணை புரிந்து, அதனால் என்னுடைய நெஞ்சில் வஞ்சனை ஒழிய, என் உள்ளம் நீங்காது நின்று பெருங்கருணை பெருக்கெடுக்கும் பெருவெள்ளமே!

### குறிப்பு:

1. இறைவன் உயிர்கள் பால் அவரவர் தன்மைக்கு ஏற்ப அறக்கருணை, மறக்கருணை காட்டி நல் வழிப்படுத்துகிறார். மணிவாசகப் பெருமான், சிவபெருமான் தமக்கு அறக்கருணை புரிவதன் மூலமே நெஞ்சின் வஞ்சமெல்லாம் அகல வழிவகை செய்துவிட்ட வகையைப் போற்றுகின்றார்.

## 14

*ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே*
*ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே*
*நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே*
*இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே*

**பொருளுரை:** தெவிட்டாத அமுதமே! அளவுகள் கடந்து நிற்கின்ற பெருமானே! ஆர்வம் ஃ முயற்சி இல்லாதவர் உள்ளத்தில் வெளிப்பாடின்றி மறைந்திருக்கும் ஒளியானே! (என் உள்ளத்தை) நீரென உருகச்செய்து, என்னுடைய இன்னுயிராக நிற்பவனே! இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டவனே! உள் நிற்பவனே!

### குறிப்பு:

1. இறைவன் எல்லாருடைய உள்ளத்திலும் உள்ளார். எங்கும் நிறைந்தும் அதே நேரத்தில் எல்லாம் கடந்தும் இருப்பதால் அவரைக் கடவுள் என்கிறோம். ஆயினும் ஆர்வமும் முயற்சியும் உடையவர்கள் சிவபெருமான் திருவருளினால் அவரை உணர்கின்றார்கள். மற்றவர்கள் அலைவரிசை ஒன்றியையாத ஒலிப்பெட்டி போல அவர் மிக அருகில் இருந்தும்,பேரொளியாக இருந்தும் காண இயலாதவர்களாக உள்ளனர். (ஒ. பணிந்தபின் கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வானே – திருமூலர்)

2. இறைவனுடைய எண்குணங்களில் ஒன்று வரம்பில் இன்பமுடைமை. அவ்வாறு இருக்க “இன்பமும் துன்பமும் இல்லானே” எனக் கூறுவது பொருந்துமா எனக் கேட்டால், இறைவனுக்குப் பிறவற்றால் எவ்வித இன்பமோ துன்பமோ இல்லை. செம்பொருளாக உள்ள அது தன்னுடைய வற்றாத இன்பத்தில் தானே என்றும் மகிழ்ந்து இருக்கும்.

## 15

*அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்*
*சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே*

*ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே*
*ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே*
*கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்*
*நோக்கரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே*

குறிப்பு

**பொருளுரை:** அன்பினால் தன்னைத் தொழும் அடியார்களுக்கு அன்பே உருவாயவனே! எல்லாமும் தானே ஆகி, எதுவும் தானாக இல்லாது இருக்கின்றவனே! சுடருருக்கொண்டவனே! அடர்ந்த இருளாகவும் இருப்பவனே! பிறப்பு என்பதே இல்லாத பெருமை உடையவனே! முதலாக இருப்பவனே! இறுதியாகவும் இடைப்பட்ட நிலையாகவும் ஆகி இத்தத்துவங்கள் எல்லாம் கடந்தவனே! (காந்தம் போல) என்னை ஈர்த்து என்னை ஆளாக – அடியவனாகக் கொண்டு அருளிய என் தந்தைக்கும் தலைவனே! உன்னைத் தமது கூர்மையான மெய்யறிவின் துணையாகக் உணர்கின்ற பெரியோர்களுடைய சிந்தையின் பார்வை வியத்தற்கு உரிய பார்வை! அவர்களுடைய ஆராயும் திறன் வியத்தற்கு உரிய ஆய்வுணர்வே!

## குறிப்பு:

1. சிவபெருமான் எல்லாப் பொருள்களுடனும் கலந்து தோன்றினும் இவை எதுவும் அவரல்ல. அவர் கலந்து இருப்பது போலவே எல்லாம் கடந்தும் உள்ளார்.
2. சிவபெருமானுக்கு அவதாரம் இல்லை. அவர் பிறப்பது இல்லை.
3. இறைவன் அன்பர்களுக்கு எளியவனாகக் காட்சி அளித்த போதிலும், அவருடைய பேரியல்பு யாராலும் முழுதும் ஆய்வது பற்றி எண்ணியும் பார்க்க இயலாதது. எனவே தான் அவருடைய இயல்பினை சற்றேனும் காண முயல்கின்ற ஞானிகளின் திறனை வியந்து கூறுகின்றார் மாணிக்க வாசகர். (ஒ. பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின் வேரறியாமை விளம்புகின்றேனே – திருமந்திரம்)

## 16

*போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே*
*காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே*
*ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற*
*தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்*

**பொருளுரை:** நீங்குவதும், புதிதாக வருவதும், கலப்பதும் இல்லாத புண்ணிய மூர்த்தியே! என்னைக் காக்கின்ற காவல் தெய்வமே! காண்பதற்கு அரியதாக ஒளி மிகுந்து இருப்பவனே! தொடர்ச்சியாகவும் முறையாகவும்

வருகின்ற இன்ப வெள்ளமே! தந்தையே! மிகுதியாக நின்ற ஒளி வீசும் சுடரான தோற்றத்தினனாய், சொல்லப்படாத பூடகமான நுண் உணர்வாக இருந்து.

**குறிப்பு:**

குறிப்பு

1. இறைவன் எங்கும் நிறைந்து இருக்கும் பொழுது அவர் எதனை நீங்குவார், புதிதாக வருவதற்கு அவர் இல்லாத்தது என்ன உள்ளது, அவர் கலந்து இல்லாத பொருள் தான் ஏது – புதிதாகக் கலப்பதற்கு? இவ்வாறு எல்லாப் பொருளிலும் இருந்த போதிலும், பொருளின் தன்மையால் குறைபடாமல் தான் என்றும் தூயவனான புண்ணிய மூர்த்தியாகவே உள்ளார்.
2. இறைவன் சொற்களால் சொல்லி முடியாதவர். நுண் உணர்வால் அறியப் படுபவர். (ஒ. அவனருளே கண் கொண்டு காணின் அல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே – தேவாரம்)

## 17

*மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்*
*தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்*
*ஊற்றான உண்ணார் அமுதே உடையானே*
*வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப*
*ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று* 85

**பொருளுரை:** இவ்வுலகில் பல்வேறு விதங்களில் கூறப்பட்டு, மெய்யறிவாக ஆகும் (ஆய்வின் இறுதியில் சாறாகத் தேறும்) தேற்றமே! அந்தத் தேற்றத்தின் பயனான தெளிவே! என்னுடைய சிந்தனையினுள் உண்பதற்க்கு மிகவும் அரியதும் விரும்பத்தக்கதும் ஆன அமுத ஊற்றே! என்னை உடைமையாக ஆள்பவனே! பலவேறு விகாரங்களை உடைய ஊனால் (சதையால்) ஆன இவ்வுடம்பின் உள்ளே கட்டுண்டு கிடக்க இயலவில்லை, எம் தலைவா! அரனே!ஓ!என்று பலவாறு

**குறிப்பு:**

1. ஒ. ஏகம் சத் விப்ரா பஹுசிதா வதந்தி – வேதம்.

## 18

*போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்*
*மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே*
*கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே*

*நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே*
*தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே*

**பொருளுரை:** போற்றுதல்கள் செய்து, புகழ் கூறித் தம்முடைய பொய்கள் ஒழிய உண்மையே ஆன அடியவர்கள் மீண்டும் இவ்வுலகுக்கு வந்து வினை நிறைந்த பிறவியில் சிக்குறாது மாயையால் ஆன இவ்வுடலின் கட்டுமானத்தை அழிக்க வல்லானே! வேறு எதுவுமற்றதாகிய இருளில் கூத்து ஆடுகின்ற நாதனே! தில்லை என்னும் சிதம்பரத்தில் ஆடுபவனே! தென்பாண்டி நாட்டை உடையவனே!

குறிப்பு

### குறிப்பு:

1. இருள் என்பது (ஒளீ) இன்மையைக் குறிக்கும். உலகங்கள் எல்லாம் ஒடுங்கிய பின்னர் இறைவனைத் தவிர வேறு எதுவும் இல்லாத அந்நிலை ஏதுமற்ற இருள் போன்றது. அவ்விருளில் ஒளியாக இறைவன் ஆடுகின்றார்.

## 19

*அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று*
*சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்*
*சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்*
*செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்*
*பல்லோரும் ஏத்தப் பணிந்து.*

**பொருள்:** அல்லல் நிறைந்த பிறவியை நீக்குவானே! ஓ! என்று சொல்லிற்கு அரிய பெருமானைக் அழைத்து, (இறைவன்) திருவடியை பணிந்து அதன் கீழிருந்து சொல்லிய இப்பாடலின் பொருளினை உணர்ந்து சொல்லுபவர்கள் சிவபுரத்தில் இருக்கும் சிவபெருமானின் திருவடி நிழலுக்குச் செல்வார்கள், பலராலும் புகழப்பட்டும், தொழப்பட்டும்.

### குறிப்பு:

1. பொருளினை உணர்ந்து சொல்லுவதன் மூலம் உணர்வினோடு ஒருமைப்பட்டுத் தொழுதலால் அவ்வகை வணக்கத்தின் பெருமை வலியுறுத்தப்படுகின்றது.

## திருச்சிற்றம்பலம்

## பொருள்/விளக்கம்

**நமச்சிவாய வாழ்க** – திருவைந்தெழுத்து மந்திரம் வாழ்க;

குறிப்பு

**நாதன் தாள் வாழ்க** – திருவைந்தெழுத்தின் வடிவாக விளங்கும் இறைவனது திருவடி வாழ்க

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க** – இமைக்கும் நேரமுங் கூட என் மனத்தினின்றும் நீங்காதவனது திருவடி வாழ்க

**கோகழி ஆண்ட குரு மணிதன் தாள் வாழ்க** – திருப்பெருந்துறையில் எழுந்தருளி என்னையாட்கொண்ட குருமூர்த்தியினது திருவடி வாழ்க;

**ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க** – ஆகம வடிவாகி நின்று இனிமையைத் தருபவனாகிய இறைவனது திருவடி வாழ்க;

**ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க** – ஒன்றாயும் பலவாயும் உள்ள இறைவனது திருவடி வாழ்க.

**வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க** – மன ஓட்டத்தைத் தொலைத்து என்னை அடிமை கொண்ட முழுமுதற் கடவுளது திருவடி மேம்படுக;

**பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க** – பிறவித் தளையை அறுக்கிற இறைவனது வீரக்கழலணிந்த திருவடிகள் மேம்படுக்

**புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க** – தன்னை வணங்காத அயலார்க்கு எட்டாதவனாயிருப்பவனது தாமரை மலர் போலும் திருவடிகள் மேம்படுக;

**கரம் குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க** – கை கூம்பப்பெற்றவர்க்கு மனம் மகிழ்ந்து அருளுகின்ற இறைவன் திருவடிகள் மேம்படுக;

**சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க** – கைகள் தலைமேல் கூம்பப்பெற்றவரை உயரப் பண்ணுகிற சிறப்புடையவனது திருவடி மேம்படுக.

**ஈசன் அடி போற்றி** – ஈசனது திருவடிக்கு வணக்கம்,

**எந்தை அடி போற்றி** – எம் தந்தையினது திருவடிக்கு வணக்கம்,

**தேசன் அடி போற்றி** – ஒளியுருவை உடையவனது திருவடிக்கு வணக்கம் சிவன் சேவடி போற்றி - சிவபிரானது திருவடிக்கு வணக்கம்

**நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி** – அடியாரது அன்பின்கண் நிலைத்து நின்ற மாசற்றவனது திருவடிக்கு வணக்கம்

**மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி** – நிலையாமையுடைய பிறவியை ஒழிக்கின்ற அரசனது திருவடிக்கு வணக்கம்

**சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி** – சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையின்கண் எழுந்தருளிய நம்முடைய கடவுளது திருவடிக்கு வணக்கம்.

குறிப்பு

**ஆராத இன்பம் அருளும் மலை போற்றி** – வெறுக்காத இன்பத்தைக் கொடுக்கின்ற மலைபோலும் கருணையையுடைய வனுக்கு வணக்கம்.

**சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்** – சிவபெருமானாகிய அவன் என் மனத்தில் நிலை பெற்றிருந்ததனால்,

**அவன் அருளாலே அவன் தாள் வணங்கி** – அவனுடைய திருவருளாலே அவனுடைய திருவடியை வணங்கி,

**சிந்தை மகிழ** – மனம் மகிழும்படியும்,

**சிவபுராணந்தன்னை** – சிவனது அநாதி முறைமையான பழமையை

**முந்தை வினை முழுதும் ஓய** – முன்னைய வினை முழுமையும் கெடவும்,

**யான் உரைப்பன்** – யான் சொல்லுவேன்.

**கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்து எய்தி** – நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் தனது அருட்கண் காட்ட அதனால் அவன் திரு முன்பு வந்து அடைந்து,

**எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி** – நினைத்தற்குக் கூடாத அழகு வாய்ந்த அவனது திருவடியை வணங்கிய பின்,

**விண் நிறைந்தும்** – வானமாகி நிறைந்தும்,

**மண் நிறைந்தும்** – மண்ணாகி நிறைந்தும்,

**மிக்காய்** – மேலானவனே,

**விளங்கு ஒளியாய்** – இயல்பாய் விளங்குகின்ற ஒளிப்பிழம்பாகி,

**எண் இறந்து** – மனத்தைக் கடந்து,

**எல்லை இலாதானே** – அளவின்றி நிற்பவனே,

**நின்பெருஞ்சீர்** – உன்னுடைய மிக்க சிறப்பை,

**பொல்லா வினையேன்** – கொடிய வினையையுடையவனாகிய யான்,

**புகழும் ஆறு ஒன்று அறியேன்** – புகழுகின்ற விதம் சிறிதும் அறிகிலேன்.

**புல் ஆகி** – புல்லாகியும்,

**பூடு ஆய்** – பூண்டாகியும்,

**புழு ஆய்** – புழுவாகியும்,

குறிப்பு

**மரம் ஆகி** – மரமாகியும்,

**பல்விருகமாகி** – பல மிருகங்களாகியும்,

**பறவை ஆய்** – பறவையாகியும்,

**பாம்பு ஆகி** – பாம்பாகியும்,

**கல் ஆய்** – கல்லாகியும்,

**மனிதர் ஆய்** – மனிதராகியும்,

**பேய் ஆய்** –பேயாகியும்,

**கணங்கள் ஆய்** – பூத கணங்களாகியும்,

**வல் அசுரர் ஆகி** – வலிய அசுரராகியும்,

**முனிவர் ஆய்** –முனிவராகியும்,

**தேவர் ஆய்** –தேவராகியும்,

**சொல்லாநின்ற** – இயங்குகின்ற,

**இ** – இந்த,

**தாவர சங்கமத்துள்** – அசையாப் பொருள் அசையும் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுள்ளே,

**எல்லாப் பிறப்பும் பிறந்து** – எல்லாப் பிறவிகளிலும் பிறந்து,

**இளைத்தேன்** – யான் மெலிவடைந்தேன்,

**எம்பெருமான்** – எம்பெருமானே,

**மெய்யே** – உண்மையாகவே,

**உன் பொன் அடிகள் கண்டு** – உன் அழகிய திருவடிகளைக் கண்டு,

**இன்று** – இப்பொழுது,

**வீடு உற்றேன்** – வீடு பெற்றேன்.

**உய்ய** – நான் உய்யும்படி,

**என் உள்ளத்துள்** – என் மனத்தில்,

**ஓங்காரம் ஆய் நின்ற** – பிரணவ உருவாய் நின்ற,

**மெய்யா** – மெய்யனே,

**விமலா** – மாசற்றவனே,

**விடைப்பாகா** – இடபவாகனனே,

**வேதங்கள்** – மறைகள்,

குறிப்பு

**ஐயா என** – ஐயனே என்று துதிக்க,

**ஓங்கி** – உயர்ந்து,

**ஆழ்ந்து அகன்ற** – ஆழ்ந்து பரந்த,

**நுண்ணியனே** – நுண்பொருளானவனே.

**வெய்யாய்** – வெம்மையானவனே,

**தணியாய்** – தன்மையானவனே,

**இயமானன் ஆம் விமலா** – ஆன்மாவாய் நின்ற விமலனே,

**பொய் ஆயின எல்லாம்** – நிலையாத பொருள்கள் யாவும்,

**போய் அகல** – என்னை விட்டு ஒழிய,

**வந்தருளி** – குருவாய் எழுந்தருளி,

**மெய்ஞ்ஞானம் ஆகி** – மெய்யுணர்வு வடிவமாய்,

**மிளிர்கின்ற** – விளங்குகின்ற,

**மெய்ச்சுடரே** – உண்மை ஒளியே,

**எஞ்ஞானம் இல்லாதேன்** – எவ்வகையான அறிவும் இல்லாத எனக்கு,

**இன்பப் பெருமானே** – இன்பத்தைத் தந்த இறைவனே,

**அஞ்ஞானந்தன்னை** – அஞ்ஞானத்தின் வாதனையை,

**அகல்விக்கும்** – நீக்குகின்ற,

**நல் அறிவே** – நல்ல ஞானமயமானவனே.

**ஆக்கம் அளவு இறுதி இல்லாய்** – தோற்றம் நிலை முடிவு என்பவை இல்லாதவனே,

**அனைத்து உலகும்** – எல்லா உலகங்களையும்,

**ஆக்குவாய்** – படைப்பாய்,

**காப்பாய்** – நிலைபெறுத்துவாய்,

**அழிப்பாய்** – ஒடுக்குவாய்,

**அருள் தருவாய்** – அருள் செய்வாய்,

**போக்குவாய்** – பிறவியிற்செலுத்துவாய்,

**என்னை** – அடியேனை,

**புகுவிப்பாய்** – புகப்பண்ணுவாய்,

**நின் தொழும்பில்** – உன் தொண்டில்,

குறிப்பு

**நாற்றத்தின் நேரியாய்** – பூவின் மணம்போல நுட்பமாய் இருப்பவனே,

**சேயாய்** – தொலைவில் இருப்பவனே,

**நணியாய்** – அண்மையில் இருப்பவனே,

**மாற்றம் மனம் கழிய நின்ற** – சொல்லும் மனமும் கடந்து நின்ற,

**மறையோனே** – வேதப் பொருளாய் உள்ளவனே,

**கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தால் போல** – கறந்த பாலும் சருக்கரையும் நெய்யும் கூடினது போல,

**சிறந்த அடியார் சிந்தனையுள்** – சிறந்த அன்பரது மனத்துள்,

**தேன் ஊறி நின்று** – இன்பம் மிகுந்து நின்று,

**பிறந்த பிறப்பு அறுக்கும்** – எடுத்த பிறப்பை ஒழிக்கின்ற,

**எங்கள் பெருமான்** – எம்பெருமானே.

**நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்** – ஐந்து நிறங்களை உடையவனே,

**விண்ணோர்கள் ஏத்த** – தேவர்கள் துதிக்க,

**மறைந்து இருந்தாய்** – அவர்களுக்கு ஒளிந்திருந்தவனே,

**எம்பெருமான்** – எம் பெருமானே,

**வல்வினையேன் தன்னை** – வலிய வினையையுடையவனாகிய என்னை,

**மறைந்திட மூடிய** – மறையும்படி மூடியுள்ள,

**மாய இருள்** – அறியாமையாகிய ஆணவம் கெடுதற்பொருட்டு,

**அறம் பாவம் என்னும்** – புண்ணிய பாவங்கள் என்கின்ற,

**அருங்கயிற்றால் கட்டி** – அறுத்தற்கு அருமையாகிய கயிற்றால் கட்டப்பெற்று,

**புறம்தோல் போர்த்து** – வெளியே தோலால் மூடி,

**எங்கும் புழு அழுக்கு மூடி** – எவ்விடத்தும் புழுக்கள் நௌசிகின்ற அழுக்கை மறைத்து ஆக்கிய,

**மலம் சோரும்** – மலம் ஒழுகுகின்ற,

**ஒன்பது வாயில் குடில்** – ஒன்பது வாயிலையுடைய உடம்பாகிய குடிசை,

**மலங்க** – குலையும்படி,

**புலன் ஐந்தும்** – ஐம்புலன்களும்,

**வஞ்சனையைச் செய்ய** – வஞ்சனை பண்ணுதலால், விலங்கும் மனத்தால் -உன்னை விட்டு நீங்கும் மனத்தினாலே,

**விமலா** – மாசற்றவனே,

**உனக்கு** – உன்பொருட்டு,

**கலந்த அன்பு ஆகி** – பொருந்தின அன்பை உடையேனாய்,

**கசிந்து உள் உருகும்** – மனம் கசிந்து உருகுகின்ற,

**நலந்தான் இலாத** – நன்மையில்லாத,

**சிறியேற்கு** – சிறியேனுக்கு,

**நல்கி** – கருணை புரிந்து,

**நிலத்தன்மேல் வந்தருளி** – பூமியின்மேல் எழுந்தருளி,

**நீள் கழல்கள் காட்டி** – நீண்ட திருவடிகளைக் காட்டி,

**நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு** – நாயினும் கடையனாய்க் கிடந்த அடியேனுக்கு,

**தாயின் சிறந்த** – தாயினும் மேலாகிய,

**தயா ஆன** – அருள் வடிவான,

**தத்துவனே** – உண்மைப்பொருளே.

**மாசு அற்ற சோதி மலர்ந்த** – களங்கமற்ற சோதியாகிய மரத்தில் பூத்த,

**மலர்ச்சுடரே** – பூப்போன்றே சுடரே,

**தேசனே** – குரு மூர்த்தியே,

**தேனே** – தேனே,

**ஆர் அமுதே** – அரிய அமுதே,

**சிவபுரனே** – சிவபுரத்தையுடையானே,

**பாசம் ஆம் பற்று அறுத்து** – பாசமாகிய தொடர்பையறுத்து,

**பாரிக்கும்** – காக்கின்ற,

**ஆரியனே** – ஆசிரியனே,

**நேச அருள் புரிந்து** – அன்போடு கூடிய அருளைச்செய்து,

**நெஞ்சில் வஞ்சம் கெட** – என் மனத்தில் உள்ள வஞ்சகம் அழிய,

**பேராது நின்ற** – பெயராமல் நின்ற,

**பெருங்கருணை** – பெருங்கருணையாகிய,

குறிப்பு

குறிப்பு

**பேர் ஆறே** – பெரிய நதியே,

**ஆரா அமுதே** – தெவிட்டாத அமிர்தமே,

**அளவு இலாப் பெம்மானே** – எல்லையில்லாத பெருமானே,

**ஓராதார் உள்ளத்து** – ஆராயாதார் மனத்தில்,

**ஒளிக்கும்** – மறைகின்ற,

**ஒளியானே** – ஒளியையுடையானே,

**நீராய் உருக்கி** – என் மனத்தை நீர் போல உருகப்பண்ணி,

**என் ஆர் உயிராய் நின்றானே** – என் அரிய உயிராய் நின்றவனே,

**இன்பமும் துன்பமும்** – சுகமும் துக்கமும்,

**இல்லானே** – இயற்கையில் இல்லாதவனே,

**உள்ளானே** – அன்பர்பொருட்டு அவற்றை உடையவனே,

**அன்பருக்கு அன்பனே** – அன்பர்களிடத்து அன்புள்ளவனே,

**யாவையும் ஆய்** – கலப்பினால் எல்லாப் பொருள்களும் ஆகி,

**அல்லையும ஆம்** – தன்மையினாலே அல்லாதவனும் ஆகின்ற,

**சோதியனே** – பேரொளியையுடையவனே,

**துன் இருளே** – நிறைந்த இருளானவனே,

**தோன்றாப் பெருமையனே** – புறத்தே வெளிப்படாத பெருமை உடையவனே,

**ஆதியனே** – முதல்வனே,

**அந்தம் நடு ஆகி** – முடிவும் நடுவும் ஆகி,

**அல்லானே** – அவையல்லாது இருப்பவனே,

**ஈர்த்து என்னை ஆட்கொண்ட** – என்னை இழுத்து ஆட்கொண்டருளின,

**எந்தை பெருமானே** – எமது தந்தையாகிய சிவபெருமானே,

**கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்** – மிகுந்த உண்மை ஞானத்தால்,

**கொண்டு உணர்வார்தம் கருத்தில்** – சிந்தித்து அறிபவர் மனத்தினாலும்,

**நோக்கு அரிய** – எதிரிட்டுக் காண்பதற்கு அரிதாகிய,

**நோக்கே** – காட்சியே,

**நுண்உணர்வே** – இயற்கையில் நுட்பமாகிய அறிவே, போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே

**குறிப்பு**

**காக்கும் எம் காவலனே** – எம்மைக் காப்பாற்றுகின்ற எம் அரசனே,

**காண்பு அரிய பேர் ஒளியே** – காண்பதற்கரிய பெரிய ஒளியே,

**ஆற்று இன்ப வெள்ளமே** – மகாநதி போன்ற இன்பப் பெருக்கே,

**அத்தா** – அப்பனே,

**மிக்காய்** – மேலோனே,

**நின்ற தோற்றச்சுடர் ஒளியாய்** – நிலைபெற்ற தோற்றத்தையுடைய விளங்குகின்ற ஒளியாகியும்,

**சொல்லாத நுண் உணர்வு ஆய்** – சொல்லப்படாத நுட்பமாகிய அறிவாகியும்,

**மாற்றம் ஆம் வையகத்தின்** – மாறுபடுதலையுடைய உலகத்தில்,

**வெவ்வேறே வந்து** – வெவ்வேறு பொருளாய்க் காணப்பட்டு வந்து,

**அறிவு ஆம்** – அறிவாய் விளங்கும், தேற்றனே– தெளசிவானவனே,

**தேற்றத் தெளசிவே** – தெளசிவின் தெளசிவே,

**என் சிந்தனையுள் ஊற்று ஆன** – என் மனத்துள் ஊற்றுப் போன்ற,

**உண் ஆர் அமுதே** – பருகுதற்கு அரிய அமிர்தமே,

**உடையானே** – தலைவனே.

**வேற்று விகார** – வெவ்வேறு விகாரங்களையுடைய,

**விடக்கு உடம்பின் உள் கிடப்ப ஆற்றேன்** – ஊனாலாகிய உடம்பினுள்ளே தங்கிக் கிடக்கப் பொறேன்,

**எம் ஐயா** – எம் ஐயனே,

**அரனே** – சிவனே,

**ஓ என்று என்று** – ஓ என்று முறையிட்டு,

**போற்றி** – வணங்கி,

**புகழ்ந்து இருந்து** – திருப்புகழை ஓதியிருந்து,

**பொய் கெட்டு** – அறியாமை நீங்கி,

**மெய் ஆனார்** – அறிவுருவானவர்கள்,

**மீட்டு இங்கு வந்து** – மறுபடியும் இவ்வுலகில் வந்து,

**வினைப்பிறவி சாராமே** – வினைப் பிறவியையடையாமல்,

குறிப்பு

**கள்ளப்புலம் குரம்பைக் கட்டு** – வஞ்சகத்தையுடைய ஐம்புலன்களுக்கு இடமான உடம்பாகிய கட்டினை,

**அழிக்க வல்லானே** – அறுக்க வல்லவனே,

**நள் இருளில்** – நடு இரவில்,

**நட்டம் பயின்று** – மிகுந்து,

**ஆடும்** – நடனம் செய்கின்ற,

**நாதனே** – இறைவனே,

**தில்லையுள் கூத்தனே** – திருத்தில்லையில் நடிப்பவனே,

**தென்பாண்டி நாட்டானே** – தென்பாண்டி நாட்டையுடையவனே,

**அல்லல் பிறவி அறுப்பானே** – துன்பப் பிறப்பை அறுப்பவனே,

**ஓ என்று** – ஓவென்று முறையிட்டு,

**சொல்லற்கு அரியானைச் சொல்லி** – துதித்தற்கு அருமையானவனைத் துதித்து,

**திருவடிக் கீழ் சொல்லிய பாட்டின்** – அவனது திருவடியின்மீது பாடிய பாட்டின்,

**பொருள் உணர்ந்து சொல்லுவார்** – பொருளையறிந்து துதிப்பவர்,

**சிவபுரத்தினுள்ளார்** – சிவநகரத்திலுள்ளவராய்,

**சிவன் அடிக்கீழ் செல்வர்** – சிவபெருமானது திருவடிக்கீழ்ச் சென்று நிலை பெறுவர்.

**பல்லோரும் ஏத்த** – எல்லாரும் துதிக்க,

**பணிந்து** – வணங்கி

### பயிற்சி வினாக்கள்

1. "பிரானென்று தன்னைப்பன்" என்று தொடங்கும் பாடலில், எல்லா மனங்களுக்கும் இறைவனாக விளங்குபவன் சிவன் என்பதை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?
2. சிவனிடம் அணிந்திருப்பது எதைவிட்டு விடுமாறு காரைக்கால் அம்மையார் வேண்டுகிறார்?
3. "அப்பர்போற்றி திருத்தாண்டகம்" - பதிகவரலாறு கூறுக.
4. "எயிலது அட்டதுநீறு" - என்று தொடங்கும் பாடலில் திருநீற்றின் மகிமையை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்?

5. பெற்றதாயினம் அதிகமான அன்புடையவன் சிவபெருமான் என்பதை மாணிக்கவாசகர் கூறும் பாடலை பொருளுரையுடன் விவரிக்க.
6. "அன்பருக்கு அன்பனே" எனத் துவங்கும் பாடலின் பொருளை விரிவாகக் கூறு.

**குறிப்பு**

**குறிப்பு**

# கூறு 10

# நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி

*ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்*
*யாழின் இசை வேதத்து இயல்*

*ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும் - ஈன்ற*
*முதல்தாய் சடகோபன்...*

(திருவாய்மொழித் தனியன் 4,5)

வடமொழி வேதத்தைத் தமிழ்ப்படுத்திய பெருமைக்குரிய நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி என்பது தனியன், திராவிட வேத ஸாகரம் (கடல்) என்பர் நாதமுனிகள்.

'வேதம் தமிழ் செய்த மாறன்' எனத் திருவாய்மொழியினால் திருநாமம் பெற்றார் நம்மாழ்வார். இத்தன்மைத்தான சிறப்புக்குரிய திருவாய்மொழி பற்றிக் காண்போம்.

*உயர்வற உயர்நலம் உடையவன் எவன்? அவன்*
*மயர்வற மதிநலம் அருளினன் எவன்? அவன்*
*அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்? அவன்*
*துயர்அறு சுடரடி தொழுதுஎழு என் மனனே!* *(*2082*)*

(மயர்வற ஸ்ரீ அறியாமை நீங்க, அமரர்கள் ஸ்ரீ தேவர்கள், துயர் அறு ஸ்ரீ துயரத்தைத் தீர்த்து)

என்பது முதல் பாசுரம் ஆகும். முதன்மையாக நின்று ஞானத்தின் முதிர்ச்சியையும் காட்டுகின்றது. 'இதற்கு மேலே ஏதும் இல்லை என்னும் அளவுக்கு உயர்ந்து நிற்பவன் மயக்கம் தீர்ந்த அறிவொளி தந்து உயர்த்தினான் துன்பம் நீங்க அவன் திருவடியைத் தொழுவாயாக என் நெஞ்சமே!'என்பது நம்மாழ்வாரின் வேண்டுகோள்.

உருவினன், அருவினன், ஒழிவிலன், நலன் உடைய ஒருவன், அந்த இறைவன்.

*அவரவர் தமதமது அறிவு அறி வகைவகை*
*அவரவர் இறையவர் என அடி உடையவர்கள்*
*அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்*
*அவரவர் விதிவழி அடைய நின்றனரே* (2086)

குறிப்பு

மக்கள் இறைவனை வழிபாடு செய்யும் முறை, அவர்களுக்கு இறைவன் அருளும் திறன் பற்றிப் பொதுவிதி செய்துள்ளார் ஆழ்வார்.

## இறைமை

இறைவன் ஐம்பெரும்பூதங்களாகிப் படர்கின்ற பொருள் முழுவதிலும் நிறைந்தவன். உடலில் தங்கி உள்ள உயிர் போல எங்கும் மறைந்து எங்கும் நிறைந்துள்ளவன். ஒளி விடுகின்ற வேதங்களும் அவனே (2088) எனப் போற்றுகின்றார்.

## உளன் இலன்

இறைவன் உண்டு என்றால் அவன் உருவங்கள் உடையவன். இல்லை என்றால் அவன் அருவப்பொருள் ஆகின்றான். உள்ளவன், இல்லாதவன் ஆகிய இரு தன்மையனாய் எங்கும் ஒழிவு இலன் ஆக இருப்பவன் (2090) என்பர்.

'அகலில் அகலும் அணுகில் அணுகும்' (2157), 'மயக்கம் அற என் மனத்தே மன்னினான் உயர்வினையே தரும் ஒண்சுடர்க் கற்றை, தேவர்களின் ஆதிக் கொழுந்து (2151) எனப் பாடுபொருளாகவும் நுண்பொருளாகவும் நிற்கும் நாதனைக் கொண்டாடுகிறார் நம்மாழ்வார்.

*ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்*
*காணலும் ஆகான் உளன்அல்லன் இல்லை அல்லன்*
*பேணுங்கால் பேணும் உருவாகும் அல்லனுமாம்* (2245:1-3)

என்பன போன்ற பாசுரங்கள் பல உள்ளன.

## ஞானச்சுடர்

*விடுவே னோஎன் விளக்கைஎன் ஆவியை*
*நடுவே வந்துஉய்யக் கொள்கின்ற நாதனை*
*தொடுவே செய்துஇள ஆய்ச்சியர் கண்ணினுள்*
*விடவே செய்து விழிக்கும் பிரானையே?* (2152)

அதாவது என்னுடைய உயிர் போன்றவரும், வாழ்வின் ஒளியாக மேவுபவரும் நடுநாயகமாக விளங்கி என்னுள் மேவி உய்யுமாறு புரியும் தலைவரும் ஆய்ச்சியர்கள் தமது கண்களால் மகிழ்ந்து பருகியும் கைகளால் தொட்டுப் பேரானந்தம் கொண்டும் விளங்க அருள் செய்தவருமான கண்ணபிரானை, அடியேன் விட்டு நீங்கி இருப்பேனா? என்று எளிவந்த பிரானைச் சிக்கெனப் பற்றிக் கொண்ட நம்மாழ்வார் நிலையைக் காட்டுவது மேற்குறித்த பாசுரம்.

## வீடுபேற்றை அடையும் வழி

குறிப்பு

எல்லாப் பற்றையும் துறந்தால் பற்று அற்ற நாதனைப் பற்றிக் கொள்ளலாம்.

*வீடுமின் முற்றவும் - வீடுசெய்து உம்உயிர்*
*வீடு உடையானிடை - வீடு செய்ம்மினே* (2093)

(வீடு ஸ்ரீ விடுதல், முக்தியுலகம்)

*அற்றது பற்று எனில் - உற்றது வீடுஉயிர்*
*செற்றது மன்னுறில் - அற்றுஇறை பற்றே* (2097)

என உலக மக்களுக்கு உபதேசம் செய்கிறது திருவாய்மொழி.

## பிறவிப் பிணிக்கு மருந்து

தம்மை வழிபடுகின்றவர்களுக்குச் செல்வம் ஆகவும் பிறவிப்பிணி தீர்க்கும் மருந்தாகவும் விளங்கும் ஆயர் கொழுந்தை (கண்ணன்), அமுதினைப் பருகிப்பருகி மாயப் பிறவியிலிருந்து விடுபட்டேன் (2150) எனப் பிறவித் துன்பம் நீங்கக் காரணமானவனைத் தம் ஞானத் தெளிவால் பாசுரமாக்கியுள்ளார் நம்மாழ்வார்.

## என் ஆவி நலம் கொள்நாதன்

ஆலிலையில் துயின்றவன் ஆழ்வாரோடு கலந்த நிலையைக் காட்டும் பாசுரம் (2170) மிக அருமையானது. 'கமலக் கண்ணன் என் கண்ணினுள் உள்ளான் நான் அவன் கண்களாலே காண்பன் (2178) எனப் பிரித்தறிய இயலாத உறவைக் கூறும் மனநிலை எத்துணை அற்புதமானது!

ஞானவெள்ளச் சுடர் மூர்த்தி (2209)யின் உறவால் பிறவிப்பேறு பெற்ற ஆழ்வார்,'நீ எனது ஆவியுள் கலந்த உதவிக்குக் கைம்மாறாக எனது ஆவியை உனக்கு உரிமையாக்கி விட்டேன், உன்னிடம் பெற்றதை உன்னிடம் கொடுத்து விட்டேன், உரிமை ஆக்கியதை உய்தி பெறச் செய்வாய்' எனக் கேட்கும் பக்திப் பாசுரம்.

*எனதுஆவியுள் கலந்தபெரு நல்உதவிக் கைம்மாறு*
*எனதுஆவி தந்தொழிந்தேன்இனிமீள்வது என்பதுஉண்டே*
*எனதுஆவி ஆவியும்நீ, பொழில்ஏழும் உண்ட எந்தாய்!*
*எனதுஆவி யார்?யான்ஆர்? தந்த நீகொண் டாக்கினையே* (2217)

(பொழில் ஏழும் ஸ்ரீ உலகம் ஏழும், கொண்டு ஸ்ரீ ஏற்றுக்கொண்டு, ஆக்கினையே ஸ்ரீ உன்னுடையவையாக மாற்றினாயே)

என்பது நம்மாழ்வாரின் சொல்லாடலுக்கும் (2217) சான்றாகும்.

குறிப்பு

## அக்காரக் கனி

கைம்மா (இந்திரன் யானை) துன்பம் கடிந்த பிரானே! அம்மா அடியேன் வேண்டுவது இஃதே (2202)

*எக்காலத்து எந்தையாய் என்னுள் மன்னில் மற்று*
*எக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன்*
*மிக்கார் வேத விமலர் விழுங்கும்என்*
*அக்காரக் கனியே! உன்னை யானே* (2289)

எனத் திருமாலை அக்காரக்கனி (இனிய் வெல்லப்பாகில் தோய்த்த கனி) யாகக் காணும் ஆழ்வார்

*ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி*
*ஒழுகிலா அடிமை செய்ய வேண்டும்* (2326: 1-2)

(ஒழிவில் ஸ்ரீ இடைவெளியின்றி)

என வேண்டுகோள் விடுக்கின்றார். ‘மன்னி’ என்னும் சொல் நிலைபெற்று, நீங்காது, கலந்து, என்னும் பொருளைத் தரும். ஆழ்வாரின் பக்தி கனிந்த நிலையையும் புலப்படுத்தும்.

## அடியார்க்கு அடியார்

பிறப்பினால் வரும் வேறுபாடுகள் எங்களுக்கு இல்லை சக்கரக்கையானுக்கு ஆட்பட்டவர்கள் எமக்குக் கடவுள்.

*வலந்தாங்கு சக்கரத்து அண்ணல்*
*மணிவண்ணற்கு ஆள்என்று உள்*
*கலந்தார், அடியார் தம் அடியார்*
*எம் அடிகளே* (2378:3-4)

(அடிகள் = கடவுள்)

இக்கடவுள் பாசுரம் ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்பதைக் காட்டுகிறது. அக்காலத்தில் நிலவிய சாதி முறை அல்லது சமூக அமைப்பு மனிதனை மனிதனில் இருந்து பிரித்துப் பார்க்கும் கொடுமையைச் செய்தது. விளைவு கடவுள் கூட, தனிப்பட்ட சமூகத்தின் சொத்துபோலப் பாவிக்கப்பட்டு,

**குறிப்பு**

குறிப்பிட்ட சமூகத்தினருக்கு வழிபாடு மறுக்கப்பட்டது. அதன் விளைவு இத்தன்மைத்தான பாசுரங்களும் தோன்ற வித்திட்டன.

## ஆண்டாள்

*ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய துளசித் தோட்டத்தில் குழந்தைப்பேறு இல்லாத பெரியாழ்வாரால் கண்டு எடுக்கப்பட்டவர். அவர் கோதை எனத் திருநாமம் இட்டுவளர்த்து வந்தார்.*

## சூடிக் கொடுத்தவள்

ஆழ்வார் இறைவனுக்கு வைத்த மாலையைத் தம் பெண் அணிந்தது பெருமானுக்கு உகந்தது அன்று என வருந்த, வடபெருங்கோயிலுடையான் கனவில் தோன்றி, "அம்மாலை தமக்கு உகந்தது என்றும் இனி, கோதை சூடிக் களைந்த மாலையே வேண்டும்" எனவும் பணித்தார். எனவே, அவர் தம் மகளை எம்பெருமானின் தேவிகளில் ஒருத்தி என நினைத்து 'ஆண்டாள்' எனவும் திருநாமம் இட்டார்.

பெரியாழ்வார் வடபெருங்கோவில் உடையானுக்குச் சாத்துவதற்காகத் தொடுத்து வைத்த மாலையைத் தாம் அணிந்து பின் இறைவனுக்குச் சாத்தியதால் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் திருநாமம் இட்டு அடியார் அழைத்தனர்.

## காலம்

ஆண்டாள் அவதாரம் செய்த நாள் நளவருடம், ஆடிமாதம் கூடிய பூர நட்சத்திரத்தில், இக்குறிப்பின்படி ஆண்டாள் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

### அருளியவை

ஆண்டாள் அருளிய திவ்வியப்பிரபந்தங்கள் திருப்பாவையும்,நாச்சியார் திருமொழியும் ஆகும். 'கோதை தமிழ் ஐயைந்தும் (5 ஒ 5) ஐந்தும்(5) அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு' என்பதால் திருப்பாவையின் பெருமை புலப்படும்.

## திருப்பாவை

### பாவை நோன்பு

குறிப்பு

திருப்பாவை 30 பாசுரங்களும் மார்கழி மாதம் கன்னிப் பெண்கள் நல்ல கணவன் வேண்டியும் மழை வேண்டியும் செய்யும் நோன்பு முறைகளைப் பற்றிக் கூறுகின்றன.

காத்தியாயனி என்னும் பாவைக்கு வழிபாடு செய்து அவரவர்களுக்கு வேண்டுவனவற்றை அருளும்படி வேண்டுவது வழக்கம். பாவை நோன்பு பெண்மக்கள் எடுக்கும் நோன்பு ஆகும்.

கண்ணனை மனத்தில் வரித்த ஆண்டாள் தன்னை ஆய்ப்பாடிப் பெண்களில் ஒருத்தியாகப் பாவித்துக் கொள்கின்றாள்.

*திருவில்லிபுத்தூரை ஆய்ப்பாடியாகவும்,*
*வடபெருங்கோயில் நந்தகோபர் மாளிகையாகவும்,*
*அங்கு எழுந்தளியிருக்கும் இறைவனைக்*
*கிரு'ணனாகவும் பாவித்து இடைப்பெண்கள்*
*நோற்ற நோன்பை நோற்கின்றாள்.*

அந்நோன்பைப் பற்றித் திருப்பாவை, நிகழ்ச்சி அடிப்படையில் பதிவு செய்துள்ளது.

## மன நிலை

ஆண் அடியார்கள் இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவி ஆகவும் பாவித்துக் கொண்டு பாடுவது நாயக-நாயகி பாவம் என்று அழைக்கப்படும்.

இங்கு ஆண்டாள் இயல்பாகவே நாயகி நிலையில் நின்றாள்.'மானிடவனை மணாளன் ஆக்கி வாழமாட்டேன்' என்று முடிவு செய்த ஆண்டாளுக்கு மடை திறந்த வெள்ளம் போல் காதல்ஃபக்தி பெருக்கெடுத்து ஓடுகின்றது. எனவே இதைப் பள்ளமடை என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

## செய்வனவும் தவிர்ப்பனவும்

கண்ணனைச் சென்று காணும் போது அவனையே ஒரு மனத்தோடு நினைக்கும் மனநிலை வேண்டும். அதனால் நெய், பால் உண்ணாமல் கண்ணுக்கு மை தீட்டாமல், கூந்தலுக்கு மலர் சூடாமல், பிறர் குறைகளைப் பேசாமல், நல்ல நோக்கம், நல்ல எண்ணம், நல்ல செயல் உடையவராக நம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும் என்கிறாள்.

## ஆய்ப்பாடி நிகழ்வு

நோன்பு நோற்க வேண்டி, ஆய்ப்பாடிச் சிறுமிகள் வீடுவீடாகச் சென்று தோழிகளைத் துயில் எழுப்பி வருகின்றனர். அப்பொழுது ஆய்ச்சியர் பொன்வளை

ஒலிக்க, கைகளை மாற்றி மாற்றி மத்தினால் தயிர் கடைகின்றஇளங்காலைப் பொழுதில் அந்தத் தயிர் அரவம் கேட்டிலையோ? (480) எனச் சொல்லி, கேசவனைப் பாட வா என அழைக்கின்றனர்.

குறிப்பு

## பாவை நோன்பின் நோக்கம்

உலகத்தவர் வாழ மழை பொழிய வேண்டும். அத்துடன் நாங்கள் மார்கழி நீராட மழை வேண்டும் என மண் வளத்தோடு மனித குல வளத்திற்கும் வேண்டுகின்றனர்.

*ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
*நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து* (476:1-3)

எனப் பாவை நோன்பின் நோக்கத்தையும், விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது பாசுரம்.

## ஆய்ப்பாடி - திருவில்லிபுத்தூர்

கண்ணனின் தந்தை நந்தகோபனுடைய அரண்மனையை அடைந்து வாயிற் காவலன் அனுமதியுடன் உள்ளே நுழைந்து நப்பின்னையை எழுப்புகின்றனர். (தாயார் மூலம் பெருமாளின் திருவருள் பெறுவதற்குச் செய்யும் முயற்சி)

## கோவிந்தன் பெருமை

ஓங்கி உலகை அளந்தவன், கேசியைக் கொன்றவன், தென் இலங்கை அரசன் இராவணனை அழித்தவன், பறவை உருவில் வந்த பகாசுரன் என்னும் அசுரன் வாயைப் பிளந்து கொன்றவன் (486) என்றெல்லாம் தந்தை பெரியாழ்வாரைப் போலவே அவதாரங்களுக்கும் செயல்களுக்கும் மங்களாசாசனம் (போற்றுதல்) செய்கிறாள் ஆண்டாள்.

## வேண்டுவன

நாராயணனே நமக்குப் பறை தருவான் (474), வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் ஆகிய செல்வம் (476), பால் போன்ற நிறமுடைய பாஞ்ச சன்னியம் போன்ற சங்குகள், பரந்து ஒலி எழுப்பக்கூடிய தோல் கருவியாகிய மிகப் பெரிய பறை, திருப்பல்லாண்டு பாடுபவர்கள், கோல விளக்கு, கொடி, விதானம் (499) போன்றவற்றுடன் ஆல் இலையில் துயின்றவனை வழிபாடு செய்ய வேண்டும் என எதிர்பார்ப்புடன் நிற்கின்றனர் ஆய்ச்சியர்.

## நோன்பு நோற்கும் இடம்

பாவை நோன்பை (475, 476) ஆய்ப் பிள்ளைகள் பாவைக் களத்தில் (486) ஒன்று சேர்ந்து மேற்கொள்வர். பாவை நோன்பு அல்லது வழிபாடு செய்யும் இடத்தைப் பாவைக்களம் என்று அழைக்கின்றனர்.

குறிப்பு

## நோன்பு நிறைவடைதல்

நோன்புக்கு முன்பு கண்ணனைப் பிரிந்த ஆய்ச்சி 'நெய் உண்ணோம், பால் உண்ணோம்" என்றாள். அவனைப் பெற்ற பிறகு,

*சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
*பாடகமே என்று அனைய பல்கலனும்யாம்அணிவோம்*
*ஆடை உடுப்போம். அதன் பின்னே பால் சோறு*
*மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்*
*கூடி இருந்து குளிர்ந்து ஏலோர் எம்பாவாய்* (500:4-8)

(சூடகம் ஸ்ரீ தோளில் அணியும் அணி, பாடகம் ஸ்ரீ காலில் அணியும் அணி)

என்று கிடைத்தவற்றை உள்ளம் உவந்து சுட்டுகின்றாள்.

## நோன்பின் பயன்

அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்தில் உன்னைப் பெறும்படியான புண்ணியம் யாம் உடையோம் (501), எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உறவுடையவர் ஆனோம், உனக்கே தொண்டு செய்வோம் (502), எங்கள் பிற விருப்பங்களை மாற்றுவாயாக (495),

*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்* (478: 7-8)

கடந்த காலத்தில் செய்த பிழைகளும் இனிவரும் நாட்களில் செய்யப் போகும் பிழைகளும் தீயினில் தூசாகும் என்று அருமையான உவமையைப்பயன்படுத்துகிறாள். தீ தானும் தூயதாய் தன்னிடத்து வரும் பொருள்எப்படிப்பட்டதாயினும் அதையும் தூய்மைப்படுத்தும் இயல்புடையது. அப்படியாயின் தன் பிழைகள் தூசாகவும் இறைவன் பேரருட்திறன் தீயாகவும்உவமித்துக் கூறுகிறாள். எப்படிப்பட்ட பிழையாயினும் அவை ஒன்றுமில்லாமல் போகும் என்கிறாள். நோற்றால் மக்கள் நலனுற மழை பெய்யும் சுவர்க்கம் புகலாம் என்றும் கூறுகிறாள்.

## நாச்சியார் திருமொழி

தோழியரோடு பாவை நோன்பு நோற்ற ஆண்டாள், நாச்சியார் திருமொழியில் தன்னுள்ளம் கவர்ந்த நாயகனைப் பற்றியும் அவன்மீது தனக்கிருந்த

குறிப்பு

ஆராக்காதல் பற்றியும் பேசுகிறாள். அவனின்றித் தான் வாழ இயலாது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பாடுகிறாள். அவனை மணந்து கொண்டு வாழ்வதாக இனிய கற்பனை செய்கிறாள். இப்பகுதியில் அகப்பொருள் துறைகள் பல காணக் கிடக்கின்றன. ஆண்டாள் நாயகியாகித் திருமாலை அடையத் துடிக்கின்ற பெண் தன்னை வளர்த்த பெரியாழ்வாரிடம் தன் தலைவன் யார் என்பதைத் தெளிவாக உணர்த்தி விடுகின்றாள்.அதனாலேயே அந்தத் தலைவனையே அடைய வேண்டுமென்ற தீராக் காதலால்,

*மானிட வர்க்கென்று பேச்சுப்படில்*
*வாழகில் லேன்கண்டாய் மன்மதனே!* (508:3-4)

எனச் சொல்லிக் காமனைத் தொழுகின்றாள்.

வானில் வாழுகின்ற தேவர்களுக்கு மறையவர் வேள்வியில் சொரிந்த அவி உணவைக் காட்டில் திரியும் நரி புகுந்து உண்ணத் தலைப்பட்டால் எப்படி இருக்குமோ அதுபோலத் திருமாலுக்கென்று தோன்றிய உடம்பை மானிடன் தீண்டுவது பொருத்தமற்றது் தகாதது. எனவே, மனிதர்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் உயிர் வாழமாட்டேன் என்கிறாள்.

நாச்சியார் திருமொழிப் பாசுரங்கள் 143-ம் பக்திப் பனுவல்கள் மட்டுமல்ல் அகப்பொருள் கூறுகளைக் கொண்டவை் இலக்கிய மரபுகளைப் பதிவு செய்துள்ள வரலாற்றுச் சிறப்புக்குரியவை. தமிழரின் வழிபாட்டு முறைகளையும் புலப்படுத்துபவை. நாயகியாகிய ஆண்டாளின்உணர்வுகளைப் புலப்படுத்தும் பக்திப்பேழை.

## விளக்கினில் புக வேண்டுதல்

‘தை மாதம் முழுவதும் மன்மதன் வருமிடத்தைச் சுத்தம் செய்து, கோலமிட்டு, நுண் மணல் கொண்டு தெருவை அலங்கரித்து வைத்துள்ளேன். காமனையும் அவன் தம்பி சாமனையும் தொழுகின்றேன். சக்கரக் கையையுடைய வேங்கடவனுடன் இணைய நீ விதிக்க வேண்டும் (504) என்று மன்மதனைத் தொழுகின்றாள். மலர் கொண்டு மூன்று வேளையும் உன்னை வணங்குகின்றேன்.

*வித்தகன் வேங்கட வாணனென்னும்*
*விளக்கினிற் புகவென்னை விதிக்கிற்றியே* (506)

என ஏங்குகின்றாள் கோதை.

கண்ணனை நினைத்துப் பாடும் பாசுரங்களில் உள்ளம் விளக்காகி ஆண்டாளின் உணர்வு நெய்யாகி உணர்வுப் பிழம்பாகப் பாசுரம் பொலிவு பெறுகிறது.

குறிப்பு

## கோபியர் ஆடை வேண்டல்

'கோழி கூவும் முன்னே குடைந்து நீராட வந்தோம் அரவணை மேல் பள்ளி கொண்டவனே! காளிங்கன் என்னும் பாம்பின் மேல் குதித்து ஆடியவனே!

## குருந்திடைக் கூறை பணியாய்

(525:4)

(குருந்து = மரம். கூறை = ஆடை ஃ உடை)

குருந்த மரத்தின் மேல் வைத்துள்ள உடைகளைக் கொடுப்பாயாக,

*வேண்டியதெல்லாம் தருவோம்*
*பல்லாரும் காணாமே போவோம்*
*பட்டைப் பணித்தரு ளாயே* (526)

எனக் கன்னியரோடு கரியபிரான் நிகழ்த்திய கிரு'ண அவதாரச் செயல்களை, ஆடை மேலிட்டுத் தன் உள்ளத்துணர்வை வெளிப்படுத்துகிறாள் ஆண்டாள்.

## கண்ணனிடம் காதல்

தலைவன் தலைவியுடன் வந்து சேருவானா என்பதை அறியப் பெண்கள் கூடலிழைப்பது வழக்கம். இது அகத்துறையில் இடம் பெறுவது.

திருமழிசை ஆழ்வாரும் தம்மை நாயகியாக எண்ணிக் கூடலிழைத்தல் பற்றிக் குறிப்பிட்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. தலைவன் தலைவியிடையேஎழும் காதல் உணர்வுப் போராட்டத்தைப் புலப்படுத்தும் ஓர் உத்தியாகக் கூடலிழைத்தல் நிகழும். ஆண்டாளும் திருமாலைக் கூட, கூடலிழைத்துப் பார்க்கிறாள் (538).

வாமன அவதாரத்தையும் கண்ணன் அவதாரத்தில் நிகழ்த்திய செயல்களையும், சிசுபாலன், மருத மரங்கள், ஏழு எருதுகள், பகாசுரன், கம்சன் போன்றோரை அழித்தவற்றை எடுத்துச் சொல்லியும், தேவகி வசுதேவன் பெற்ற கண்ணனிடம் தன் காதலைக் கூடலிழைத்தலின் மூலம் வெளிப்படுத்துகின்றாள் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள்'.

## குயிலே! கருமாணிக்கம் வரக்கூவாய்

வெண்மையான சங்கை இடக்கையில் ஏந்திய விமலன் எனக்குத் தன் உருக்காட்டவில்லை ஆனால் என் உள்ளத்தில் புகுந்து நாள்தோறும் உயிரோடு வைத்து வாட்டுகின்றான்' (546). எலும்பு உருகி, கண்கள் இமைகளைப் பொருந்தாமல் பல நாளும் துன்பக்கடலில் புகுந்து வைகுந்தன்

என்பதோர் தோணியைப் பெறாமல் துன்புறுகின்றேன் (548). வில்லிபுத்தூரில் உறைவானின் திருவடியைக் காண வேண்டும் (549) என்ற ஆவலினால் குயிலினை அழைத்துத் திருமாலின் பெயரைக் கூறிக் கூவ வேண்டுகிறாள்.

குறிப்பு

*அங்குயிலே! உனக் கென்ன மறைந்துறைவு?*
*ஆழியும் சங்குமொண் தண்டும்*
*தங்கிய கையவ னைவரக் கூவில் நீ*
*சாலத் தருமம் பெறுதி*

அப்பாசுரம் தலைவன் பெயரைக் குயில் கூவ, அதைக் கேட்டு மகிழ, தன் ஆர்வம் தணிய வேண்டுகிறாள்.

*பைங்கிளி வண்ணன் சிரீதர னென்பதோர்*
*பாசத் தகப்பட் டிருந்தேன்* (553)

எனத் தன் நிலையையும் தெளிவு படுத்துகிறாள்.

## கனவும் மணமும்

பக்தியும் காதலும் ஒரு சேரக் கொண்டிருந்த ஆண்டாளின் திருமணம் திருவரங்கனுடன் நடக்கின்றது.

ஆண்டாளின் கனவு உரைக்கும் பாசுரங்கள் ஆண்டாளின் தமிழுக்கும், அக்காலத் தமிழர் திருமண முறைக்கும் அற்புதமான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

*வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து*
*நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்*
*பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்*
*தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்* (556)

(வாரணம் ஸ்ரீ யானை)

நாளை மணநாள் என நிச்சயம் செய்து, பாளையோடு கூடிய கமுகு (பாக்குமரம்) மரங்களால் அலங்காரம் செய்தனர் இந்திரன் உள்ளிட்ட தேவர் கூட்டம் வந்திருந்து மணத்தை உறுதி செய்தனர் மணப்புடவை உடுத்தி மணமாலை சூட்டினர் நான்கு திசைகளில் இருந்தும் கொண்டு வந்த தீர்த்தத்தால் நீராட்டி, பார்ப்பனர்கள் மந்திரங்களைச் சொல்ல, புனிதனாகிய கண்ணனோடு என்னை இணைத்துக் காப்புக் கட்டினர் பெண்கள் மங்கல விளக்கும் கலசமும் ஏந்தினர்.

*மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*

*முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்‘* (561)

குறிப்பு

பின் தீவலம் செய்தோம் நாராயணன் தம் திருக்கையால் என் தாள் (பாதம்) பற்றி அம்மி மிதிக்கச் செய்தார், உடன் பிறந்தோர் தீயின் முன் நிறுத்தி, அச்சுதன் கையின் மேல் என் கையை வைத்தனர், குங்குமம் பூசி, சந்தனம் தடவ வந்தோம் எனத் தன் மணக்கனவு பற்றித் தோழியிடம் சொல்லுகிறாள் ஆண்டாள். அக்கனவு வாழ்வது போலவே உணர்ச்சி மேலிட்டுக் கற்பனை செய்து அருளியவை ஆகும்.

## பாவையும் பாஞ்ச சன்னியமும்

இறைவனை விட்டு நீங்காது இருக்க வேண்டுமென்ற தாபத்தால் ஆண்டாள் ஆழிவெண்சங்கிடம் பேசுவது திருமாலின் மீது அவர் கொண்ட எல்லையில்லாத காதலை வெளிப்படுத்துகிறது. இறைமைக் காதலில்தான் இப்படியொரு பாசுரம் பிறக்க முடியும் எனலாம். அந்தப் பாசுரம்,

*கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ?*
*திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ*
*மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்ஆழி வெண் சங்கே* (567)

ஓடும் மேகங்களைத் தூது விடும் ஆண்டாள், தான் வெறுங்கூடுதான் உயிர் கண்ணனிடம் உள்ளது என்பதை,‘உலங்குண்ட விளங்கனி போல்’ (உலங்கு – கொசு) என்னும் உவமை வழி அறிவிக்கின்றாள். விளங்கனியின் மேல் ஓடு இருக்க அதன் உட்பகுதியைக் கொசு அழித்துவிடும். அதுபோல,‘நானும் நலிந்துள்ளேன், கண்ணன் தந்த காதல் நோயால்’ எனத் தெளிவுபடுத்துகிறாள்.

‘மழைக்காலத்தில் எருக்கஞ்செடியில் உள்ள பழுத்த இலைகள் வீழ்வதுபோல நானும் வீழும் நிலையில் உள்ளேன். எனக்கு ஒருநாள் ‘ தம் வாசகம் (சொல்) தந்து அருளமாட்டாரா? (584) ‘ஓர் பெண்கொடியை வதம் செய்தான்’ (585) என்னும் சொல் பழியாகாதா? என மேகத்திடம் தன் மோகத்தைச் சொல்லி அரற்றுகின்றாள் ஆண்டாள். எனவே அவள் தமிழும் மானுடம் பாடாமல் மாதவனைப் பாடுகின்றது.

## யாவும் கண்ணனே

திருமாலையே நினைத்து உருகும் ஆண்டாளுக்குத் திருமாலிருஞ் சோலையில் உள்ள மலர்களும் அவற்றின் வண்ணமும் அழகனை நினைவுபடுத்துகின்றன.

குறிப்பு

ஆண்டாள்,குயில், மயில், கருவிளை (காக்கணம் பூ) களங்கனி, காயாம்பூ ஆகிய ஐந்தையும்,

*ஐம்பெரும் பாதகர்காள்!*
*அணி மாலிருஞ் சோலைநின்ற*
*எம்பெரு மானுடைய*
*நிறம் உங்களுக் கென் செய்வதே?* (590 : 3-4)

என்று கேட்டு விடுகின்றாள். அவை ஐந்தும் அவன் நிறத்தையே கொண்டவை. நோக்குமிடமெல்லாம் கண்ணனைக் காணும் கோதை 100 தடாவில் (அண்டாவில்) வெண்ணெயும் 100 தடாவில் அக்கார அடிசிலும் (சர்க்கரைப் பொங்கல்) வாய்நேர்ந்து (வாக்குறுதி தந்து) பராவி வைத்துள்ளேன் என அமுதுண்ண வரும் அழகரை விரும்பி நிற்கின்றாள்.

## கடலும் காமமும்

காந்தள் பூ, கோவைப்பழம், முல்லைப்பூ, பாடும் குயில், ஆடித் தோகை விரிக்கும் மயில், மழை ஆகியவற்றின் நிறத்தில், வடிவத்தில், ஒலியில், அழகில் கண்ணனைக் கண்ட ஆண்டாள்

*உடலுள் புகுந்துநின் றூறல் அறுக்கின்ற மாயற்குஎன்*
*நடலைக ளெல்லாம் நாகணைக் கேசென் றுரைத்தியே* (605:3-4)

(ஊறல் = உயிர், நடலை ஸ்ரீ துன்பம்)

இப்படி, பெருமான் உடலுள் புகுந்து உயிரை வாட்டிய போதும் அவனை விடமுடியாமல் அவள்படும் துன்பங்களைக் கருமுகில் வண்ணனிடம் சொல்ல வேண்டும் என்கின்றாள்.

## அரங்கனும் ஆண்டாளும்

*எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின்*
*சொற்பொருளாய் நின்றார் என்மெய்ப்பொருளும் கொண்டாரே*

எல்லாப் பொருள்களில் இருந்தும், யாராலும் அடைய இயலாதவன். வேதத்தின் பொருளானவன் என் மெய்யின் பொருளான உயிரையும் கொண்டான் எனத் தன் அணுக்கத்தைக் கூறுவாள் ஆண்டாள்.

## மாயவனும் கோதையும்

தேவகி-வசுதேவனுக்கு மகனாகப் பிறந்து, யசோதை-நந்தகோபனால் வளர்க்கப்பட்ட கண்ணனிடம் காதல் கொண்டேன். சுற்றத்தவராகிய நீங்கள் சொல்வதெல்லாம் என் காதில் விழாது.ஆகவே ‘மதுரைப் புறத்தென்னை

உய்த்திடுமின்' (617)குறளனானமாயனைக் கண்ணாரக் காணவேண்டும் 'ஆணையால் நீரென்னைக் காக்க வேண்டில், ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின்' (618),'துவராபதிக்கு (துவாரகை) என்னை உய்த்திடுமின்' (625) எனத் தலைவன் இருக்கும் இடத்திற்குத் தன்னைக் கொண்டு சேர்த்து விடுங்கள் எனப் பாடுகின்றாள் ஆண்டாள்.

குறிப்பு

## வினாவும் விடையும்

கண்ணனின் குறும்புகளைச் சொல்லிக் கண்டீர்களா எனக் கேட்க, பிருந்தாவனத்தில் பரமனைக் கண்டோம் எனப் பதில் கூறும் பாங்கில் நாச்சியார் திருமொழியின் கடைசிப் பத்துப் பாசுரங்களும் அமைந்து பொலிவூட்டுகின்றன. காட்டு:

*கார்த்தண் கமலக் கண்ணென்னும்*
*நெடுங்கயிறு படுத்தி என்னை*
*ஈர்த்துக் கொண்டு விளையாடும்*
*ஈசன் றன்னைக் கண்டீரே?*
*போர்த்த முத்தின் குப்பாயப்*
*புகர்மால் யானைக் கன்றேபோல்*
*வேர்த்து நின்று விளையாட*
*விருந்தா வனத்தே கண்டோமே* (640)

(குப்பாயம் = சட்டை , வேர்த்து = வியர்த்து / வேர்வை)

**பொருள்:** தாமரை போன்ற கண்களாகிய காதல் வலையில் வீழ்த்தி, என் நெஞ்சையும் உடன் அழைத்துச் சென்று விளையாடும் ஈசனைக் கண்டீரா?

சட்டையை அணிந்து யானையின் குட்டிபோல் தோற்றம் கொண்டு வேர்வை துளிர்க்கவிளையாடுபவனை பிருந்தாவனத்தில் கண்டோம்.

---

**ஊனேறு**

---

# ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

## பெருமாள் திருமொழி

### ஊனேறு

"திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருப்பவனே திருவேங்கடமலையில் நிற்கிறான். மனிதனாகப் பிறந்தவன் திருவேங்கடமலையின்

குறிப்பு

சம்பந்தத்தைப் பேறவேண்டாமா? திருவேங்கடவன் விரும்பி வாழும் மலையன்றோ குளிரருவி வேங்கடம்!அம்மலையில் ஏரிக்கரையில் வாழும் நாரையாய்ப் பிறக்கமாட்டேனா!திருவேங்கடச் சுனையில் வாழும் மீனாக இருக்கமாட்டேனா!அம்மலையில் இருக்கும் சண்பக மரமாகவோ, புதராகவோ, திருமலையில் ஒரு பாகமாகவோ, அம்மலையில் பெருகும் காட்டாறாகவோ, மலைமேல் செல்லும் வழியாகவோ, அம்மலையில் உள்ள பொருள்களுள் ஏதேனும் ஒன்றாகவோ பிறக்கமாட்டேனோ? திருவேங்கடவா!உன் சன்னிதியில் ஒரு படியாக இருந்துகொண்டு உன் பவள வாயைச் சேவித்துக்கொண்டே இருப்பேன்"என்று தம் ஆர்வத்தைக் கூறுகிறார் ஆழ்வார்.

**திருவேங்கடமுடையான் விஷயம்**

*தாவு கொச்சுக் கலிப்பா*

**வேங்கடத்தே குருகாய்ப் பிறக்கவேண்டும்**

677. *ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண் டேன்,*
*ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்,*
*கூனேறு சங்க மிடத்ததான்தன் வேங்கடத்து,*
*கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.* 1

**திருவேங்கடச் சுனையில் மீனாய்ப் பிறக்கவேண்டும்**

678. *ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்குழ,*
*வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,*
*தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,*
*மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.* 2

**வேங்கடவனுக்குப் பொன்வட்டில் பிடிக்கவேண்டும்**

679. *பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்,*
*துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்,*
*துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்,*
*மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்,*
*பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேனாவேனே.* 3

**வேங்கடத்தில் செண்பக மரமாய் இருக்கவேண்டும்**

680. *ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்,*
*கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு,*
*பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து,*
*செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவனே.* 4

குறிப்பு

### வேங்கட மலையில் புதராக இருக்கவேண்டும்

681. *கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து,*
*இன்பமரும் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்,*
*எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்,*
*தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே.* 5

### வேங்கட மலையுள் சிகரமாக இருக்கவேண்டும்

682. *மின்னனைய நுண்ணிடையா*
*ருருப்பசியும் மேனகையும்,*
*அன்னவர்தம் பாலொடு*
*மாடலவை யாதரியேன்,*
*தென்னவென வண்டினங்கள்*
*பண்பாடும் வேங்கடத்துள்,*
*அன்னனைய பொற்குவடா*
*மருந்தவத்த னாவேனே.* 6

### வேங்கட மலையில் காட்டாறாக இருக்கவேண்டும்

683. *வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ், மன்னவர்தம்*
*கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்,*
*தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்,*
*கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே.* 7

### வேங்கட மலையில் உள்ள வழியாக இருக்கவேண்டும்

684. *பிறையேறு சடையானும் பிரமனு மிந்திரனும்,*
*முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானான்,*
*வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்,*
*நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே.* 8

### படியாகக் கிடந்து பவளவாய் காண்பேன்

685. *செடியாய வல்வினைகள்*
*தீர்க்கும் திருமாலே,*
*நெடியானே!வேங்கடவா!*
*நின்கோயி லின்வாசல்,*
*அடியாரும் வானவரு*
*மரம்பையரும் கிடந்தியங்கும்,*
*படியாய்க் கிடந்துன்*
*பவளவாய் காண்பேனே.* 9

குறிப்பு

### அந்த மலையில் ஏதேனும் ஒரு பொருளாக ஆவேன்

686. *உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ், உருப்பசிதன்*
*அம்பொற் கலையல்குல் பெற்றாலு மாதரியேன்,*
*செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்,*
*எம்பெருமான் பொன்மலைமே லேதேனு மாவேனே.* 10

### பகவானின் பக்தர்களாக ஆவர்

687. *மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்றன்,*
*பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி,*
*கொன்னவிலும் கூர்வேல் குலசே கரன்சொன்ன,*
*பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பக்தர்களே.* 11

அடிவரவு:ஊன் ஆனாத பின்னிட்ட ஒண் கம்பம் மின் வான் பிறை செடி உம்பர் மன்னிய -- தரு.

### பயிற்சி வினாக்கள்

1. “உயர்வறஉயர்நலம்”எனும் பாடலில் நம்மாள்வாரின் வேண்டுகோள் யாது?
2. ஆண்டாளின் அவதாரம் மற்றும் அவர் அருளிய நூல்களும் யாவை?
3. ஆயச்சியர் என்ன எதிர்பார்ப்புடன் நிற்பதாகக் கூறப்படுகிறது?
4. நோன்பின் பயனாக ஆண்டாள் கூறுபவையாது?
5. “எப்பொருட்கும்” என்றபாடலைக் கூறி விளக்குக.
6. “பாவை நோன்பு”பற்றி சிறு குறிப்பு வரைக.

குறிப்பு

# கூறு 11

# திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை ஜ1ஸ என்னும் சைவ நூல் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. மும்மணிக்கோவை என்பது ஒரு சிற்றிலக்கியம் இதன் ஆசிரியர் பட்டணத்துப் பிள்ளையார். சென்னையிலுள்ள திருவொற்றியூர் பகுதியில் வாழ்ந்தவர். காலம் பத்தாம் நூற்றாண்டு.

திருவிடைமருதூர்க் கோயிலிலுள்ள சிவபெருமானை இந்த நூல் போற்றிப் பாடுகிறது.

இந்த ஆசிரியர் இயற்றிய திருக்கழுமல மும்மணிக்கோவையிலுள்ள ஆசிரியப்பாக்கள் இணைகுறள் ஆசியப்பாக்களாக உள்ளன. இந்த நூல் நேரிசை ஆசிரியப்பாக்களைக் கொண்டுள்ளது.

## வெண்பா (5)

கண்ணென்றும் நந்தமர்க்கோர் காப்பென்றும் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும் – ஒண்ணை
மருதவப்பா என்றுமுனை வாழ்த்தாரேல் மற்றும்
கருதவப்பால் உண்டோ கதி.

## கட்டளைக்கலித்துறை (9)

வந்திக்கண் டாய்அடி யாரைக்கண் டான்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாய்அரன் செம்பொன் கழல்திரு மாமருந்தைச்
சந்திக்கண் டாயில்லை யாயின் நமன்தமர் தாம்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை வீழ்த்தி உழக்குவரே.

## புதுமையான சொல்-தொடர்கள்

வந்திக்கண்டாய், சிந்திக்கண்டாய், சந்திக்கண்டாய், உந்திக்கண்டாய் என்னும் புதுமையான தொடர்கள் இவரது நூலில் காணப்படுகின்றன. அவை முறையே வந்திப்பாயாக (வாழ்த்துவாயாக), சிந்திப்பாயாக, சந்திப்பாயாக, உந்திப்பாயாக (துள்ளிக் குதித்துச் செல்வாயாக) என்னும் பொருள் தருபவை.

குறிப்பு

## திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

சிவபெருமான் கோயில்கொண்டருளிய திருவிடை மருதென்னும் திருப்பதியை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறையென முறைப்படத் தொடுத்த முப்பது செய்யுட்களாற் போற்றிப்பரவிய பனுவலாதலின் இது திருவிடைமருதூ ர் மும்மணிக்கோவை யென்னும் பெயர்த் தாயிற்று.

தெய்வத்தாமரை செவ்வியின் மலர்ந்து எனத் தொடங்கும் இப்பிரபந்தத்தின் முதற்பாடல் உமையொரு பாகராகிய அர்த்தநாரீச்சுரர் திருக்கோலத்தின் இயல்பினை அழகுற விரித்துரைக்குந்திறம் படிக்குந்தோறும் இன்பந் தருவதாகும். அடியார்கள் பிறிதொன்றில் ஆசையின்றிப் பருகி மகிழ்தற்குரிய பெருந்தேனுக இறைவன் இடைமருதில் வீற்றிருந்து அருள்புரியும் சிறப்பினையும் அத்திருப்பதியை அடைந்து இறைவனை வழிபட்டதல்லை தாம் பெற்ற பெரு நலங்களையும் அடிகள் விரித்துரைப்பதாக அமைந்தது,

வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப் பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன் புகழ் மாமருதிற் பெருந்தேன் முகந்துகொண்டுண்டு பிறிதொன்றி இருந்தேன் இனிச் சென்றிரவேன் ஒருவரை (லாசையின்றி யாதொன்றுமே.

எனவரும் பாடலாகும். அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த, பொந்தைப்பரவி நாம் பூவல்லி கொய்யாமோ " என்ற திருவாசகத் தொடர்ப்பொருளை உளங்கொண்ட திருவெண்காட்டடிகள் இப்பாடலில் புகழ்மாமருதிற் பெருந்தேன்' என இடைமருதீசனைப் போற்றியதிறம் நினைந்து மகிழத்தகுவதாம்.

"இடைமருதினை இடமாகக்கொண்டு எழுந்தருளிய என்தந்தையே, அடியேன் பிறவிச்சுழியில் அகப்பட்டுத் தடுமாறும்போது யானுற்ற துன்பத்தினையும் என்னைப் பெறும் நிலையில் என்தாயுற்ற துன்பத்தினையும் உள்ள வாறு அறிவார் உயிர்க்குயிராகிய நின்னைத்தவிர வேறு யாருளர்? பெருகிய துன்பந்தருவதாகிய இப்பிறவிச் சுழலிற்பட்டு யான் இனிப்பிறக்கும் வலியுடையேன ல்லேன். நின்னை உறுதுணையாகப்பற்றிவழிபடும் ஒரு நெறியைத் தவிரப் பிறவிநோய் களைதற்குப் பிறிதொரு வழியும் இல்லை. மீண்டுவாராவழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும். ஐம்புல வேடர்களின் ஆணைவழி கட்டுப்பட்டு நின்று தானல்லாதவற்றைத் தானெனக் கருதும் மயக்க நிலையினையுடையது என்மனம். இம் மனத்தைக் கொண்டு நின்னை நினைந்துபோற்றுதல் எங்ஙனம் இயலும்? கல்லைத்தெப்பமாகக் கொண்டு

குறிப்பு

கடலைக் கடக்க வெண்ணிய பேதையர் என் னைத்தவிர வேறு யாருளர்? பிறப்பெனும் பெருங்கடலை அடியேன் கடத்தலும் வேண்டும். அங்ஙனங் கடத்தற்கு உறுதுணையாக நின்னை நினைத்தலும் வேண்டும். ஒரு நெறியில் நின்று நின்னை நினைந்து போற்றும் வண்ணம் என் மனத்தை நீ திருத்தி யருளுதலும் வேண்டும்" எனத் திருவெண்காட்டடிகள் இடைமருதீசனை வேண்டுவதாக அமைந்தது இம்மும்

மணிக் கோவையின் நான்காம் பாடலாகும். "அவனருளாலே அவன் ருள் வணங்கி" எனத் திருவாதவூரடிகள் அருளிய வண்ணம் இறைவனை நினைந்து போற்றுதற்கும் அவனருள் வேண்டும் என்ற உண்மை இப்பாடலில் நன்கு அறிவுறுத்தப் பெற்றமை காணலாம்.

செல்வத்துடன் வாழ்ந்திருக்கின்ருமேனச் செருக் குற்று இரவலர்க்கு உதவாது தன்னுயிரைப் பாதுகாத்த லொன்றையே குறிக்கொண்டு தன்னல் ஏனையுயிர்கள் படுந் துனபத்தினைச் சிறிதும் பொருட்படுத்தாது இம்மைப் பயனும் மறுமைப் பயனும் இல்லையென்று துணிந்து தாம் விரும்பியவாறு செய்தொழுகி மின்னலைப்போல் தோன்றி யழியும் இயல்பினவாகிய உலகியற் செல்வத்தை நிலை பேறுடையதாக விரும்பித் தன்னையும் ஒப்பற்ற பெருந்தலை வராக மதித்து வாழ்தல் கீழ்மக்கள் வாழ்வாகும். இறை வனுடைய திருவடியைப் பற்றி நின்று உலகியலில் நேரும் இடையூறுகளைக் கண்டு அஞ்சுதலைவிடுத்து மக்கள் மனைவி சுற்றம் செல்வம் என்பவற்றைப் பொருளெனக் கருதாது இறைவனது திருவருளையே பொருளாக எண்ணி இந்திர பதத்தால் அடையும் பெருஞ்செல்வமும் எட்டுச்சித்திகளும் தாமே வந்த காலத்தும் அவற்றை மறுத்தொதுங்கிக் கிழிந்த கந்தையும் ஒட்டிட்டுத் தைத்த கோவணமும் அறுந்த கீளுடையுமாகக் கிடைத்தவற்றை யுடுத்துச் சிதைவுற்ற ஒடொன்றை உண்கலனுகக் கையில் ஏந்தித் தம்மை நோக்கிவந்து பிச்சையிடுவோர் உளராயின் அவர் தந்தவற்றை நின்ற நிலையிலேயே யுண்டு தரையையே பாயாகக்கொண்டு நீங்காத சாந்தம் என்னும் மனையைக் கூடி எவ்வுயிர்களையும் தம்மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட்செல்வர்களாகிய கடவுட் டொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும். இவ்விருவகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், விலங்கு களது காலின் குளம்படியாகிய சிறிய பள்ளத்தில் தங்கிய நீரும் ஊழிக்காலத்தில் அளப்பரியதாய்ப் பொங்கிய பெருங் கடல் நீரும் நீரென்ற பொதுமையான் தம்முள் ஒக்கு மாயினும் அளவாற் சிறிதும் ஒவ்வாதனவாம். ஆதலின் சிவனடியார்களுக்குத் தொண்டுபட்டு அவர்கள் குணத் துடன் நெடுங்காலம் பழகி அன்னேர் காலாலிட்ட பணியைத் தலையாலே செய்து அத்தொண்டினலுளதாம் பேற்றினை அடைந்து இன்புறுதலொன்றைத் தவிரப்

பெறத் தக்கபேறு பிறிதொன்று மில்லை என அடிகள் இடைமரு தீசனைப் பணிந்து போற்றுவதாக அமைந்தது, இம் மும் மணிக் கோவையின் ஏழாம் பாடலாகும்.

குறிப்பு

இதன் கண் தாம் மேவன செய்தொழுகும் கயவர் வாழ்வும் இறைவனது அருள் வழியொழுகும் மெய்த்தொண்டர் வாழ்வும் இன்ன வென அடிகள் விளக்கிய திறம் அடிகளது செம்மை மனத் தின் சிறப்பினை இனிது புலப்படுத்தல் காணலாம்.

மருதமாணிக்கத் தீங்கனியாகிய சிவபோகத்தை விளைக்குந் தொழிலினராகிய தொண்டரது உழவின் திறத்தையும், அவ்வுழவினை மேற்கொள்ளாது மனமெனும் புனத்தை வறும் பாழாக்கித் தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கழியும் ஏனையோரது இழிவையும் புலப்படுத் துவது, இம்மும்மணிக் கோவையின் பத்தாம் பாடலாகும். மனமெனும் பு தைத்தில் முளைத்துள்ள வஞ்சனையாகிய மரத்தை வேருடன் அகழ்ந்து நீக்கி, அன்பெனும் பாத்தி கோலி மெய்மையாகிய எருவிட்டுப் பத்தி யென்னும் விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, ஐம் பொறிகளென்ற பட்டி மாடுகள் உள்ளே நுழையாதபடி சாந்தமாகிய வேலியை அமைத்துக் காக்க, ஞான மெனும் முளை முலை. த்தெழுந்து, அருளாகிய பசுந்தளிர்கள் தளிர்த்து விளங்க, ஒழியாத காமம் வெகுளியாகிய களை களைக் களைந்தெறிந்து சேமமாகக் காத்துவரும் நிலையில் அப்பயிர் செம்மையாக வளர்ந்து மெய்மயிர் முகிழ்த்துக் கண்ணிரரும்பிக் கடிமலர் மலர்ந்து திருவைந்தெழுத் தெனுங் காய் தோன்றி, நீலகண்டமும் முக்கண்ணும் எட்டுத் தோள்களும் ஐந்து திருமுகமும் பவளம்போலும் செந்நிறமுமுடையதாய் வெள்ளே நீறுபூசி அறுசுவை யதனினும் மிக்க சுவையுடையதாய்க் காணினும் கேட்பினும் கருதினும் இனிமை தருவதாய் நிலவெல்லையைக் கடந்து உயர்ந்த மருத மாணிக்கமென்னும் இனிய கனி மெல்ல மெல்லமுற்றிப் பழுத்து எளிதிற் கைவரப் பெற்றுத் தொண் டவுழவராகிய மெய்யடியார்கள் அக்கனிலனை இனிதின் அருந்திச் செம்மாந்திருப்பார்கள். இங்ஙனமாகவும் சிலர் தம் மனமாகிய புனத்தைப் பண்படுத்தாது வறும் பாழாக்கிக் காமக் காடுமுடி ஐம்புல வேடர்கள் ஆறலைத்துத் திரியவும் சிற்றின்பமாகிய கானல் நீர் ஓடவும் கல்லாவுணர்வாகிய மானினம் வருந்தியுழலவும் ஆசையெனும் விதை

விழுந்து யானெனப் பெயர் கூறப்பட்ட நச்சு மரமாக முளைத்து நீண்டு வளர்ந்து பொய்மையாகிய கிளைகளை எம்மருங்கும் விட்டுப் பாவமாகிய தழைகளைத் தழைத்துப் பூவென்று சொல்லும்படி கொடுமை யென்ற அரும்புகளே யீன்று தீமை மலர்ந்து துன்பமாகிய பல காய்களைக் கொத்தாகத்

குறிப்பு

தாங்கிப் பின்பு அவை மரணமெனும் கனி யாகப் பழுத்து உதிர நரகிடை வீழ்ந்து தமக்கும் பிறர்க்கும் பயனின்றிக் கணப்பொழுதில் இறந்தொழிகின்றுர்கள் " என உருங்க அணியமைய இப்பாடலில் அடிகள் விரித்துக் கூறியுள்ளார். இதன்கண் தொண்ட உழவரது அரிய முயற்சியாக அடிகள் வெளியிட்டருளிய செய்திகள், மெய்ம்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப் பொய்ம்கையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித் தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச் செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளைடிமன்றே. எனவரும் திருநாவுக்கரசர் திருப்பாடற்குச் சிறந்த விளக்க வுரைப் பகுதியாக அமைந்தமை ஒப்புநோக்கி யுணரத் தகுவதாகும்.

உயிர் எவ்வியல்பினது என ஆராயப்புகுந்து தத்துவ சோதனை செய்து தம்மியல்பினையுணராது வருந்திய அடிகள், இறைவனது திருவருள் நாட்டம் பெற்றவுடனே உயிராகிய தம்மையும் இறைவனையும் உணரப்பெற்ற திறத்தை விரித்து உரைப்பது, மேவிய புன்மயிர்த் தொகையோ எனத் தொடங்கும் பதின் மூன்றும் பாட லாகும். "நாடி, எலும்பு, நரம்பு முதலிய உடலுறுப்புக்களுள் உயிராகிய யான் யார் என்று என்னைத் தேடிப் பார்த்தும் என்னைத் தெளிய அறிந்து கொண்டேனல்லேன். இவ்வாறு தம்மைப்பற்றி ஆராய்ந்தறிகின்ற ஆராய்ச்சி யறிவின் கண்ணே இதனைத் தெளிவிப்பதாகிய அறிவு வேறு உண்டென்று ஆராய்ந்து நோக்கி அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றும் இறைவனது திருவடி ஞானத்தால் அம்முதல்வனையும் உணர்ந்து அவனது பேரறிவினுள்ளே தாம் அடங்கி நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய தம்மையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் பயிற்சி பெருதார் உயிராகிய தம்மை அறிய வல்லுநரல்லர் என்பதனை,நாடியோ என்போ நரம்புசிக் கோழையோ தேடி யெனையறியேன் தேர்ந்தவகை-நாடி அரன் தன் ளுலே தன்னையுங் கண்டு தமைக்காளுர் என்னும் என அறிவார் இன்று. எனவரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்ட தேவ நாயனுர் தெளிவாக விளக்கியுள்ளார்.

இவ்வெண்பா திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் வரும் மேவிய புன்மயிர்த் தொகையோ என்ற முதற் குறிப்புடைய திருப்பாடற் பொருளை அடியொற்றியமைந்த தென்பது இவ்விரு செய்யுட்களையும் ஒப்புநோக்கி யுணர்வார்க்கு இனிது விளங்கும். " நின்னக் காணுமாந்தர், தன்னையுங் காளுத் தன்மையோரே " என ஒதியவாற்றுன் ஏனைப் பசு பாசங்களும் சிவஞானத்தானன் றி அறியப்படாவென்பது போதரும் " என்றும், " ஆன்மா பிற வுயிர்களைத் தனித்த முதலாய்ப் பிரித்தறியுமாறு இல்லையாயினும் சிவத்தைத் தரிசிக்கும் வழித் தான் அதுவாய் நின்று தைனையறியுமாறு போலப் பிறவுயிர்களையும் அச் சிவத்தின் வண்ணமாய்க் கண்டறிதல் அமைவுடைத்தென்பது, என்னையுங்

கண்டேன் பிறரையுங் கண்டேன் தின்னிலை யனைத்தையுங்கண்டேன் என்னே நின்னைக் காணுமாந்தர் தன்னையுங் காணுத் தன்மையோரே"

என்பதனுற் புலனும்" என்றும் சிவஞான முனிவர் இத் திருப்பாடற் பொருளை இனிது விளக்கியுள்ளார். சிவரூபத் தால் ஆன்ம தரிசனமும் சிவ தரிசனத்தால் ஆன்ம சுத்தியும் ஆமாறு கூறிற்று இப்பாடல் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

**குறிப்பு**

சிவபெருமானை நினையாமலும் திருவைந் தெழுத்தினை முறைப்படி ஓதாமலும் பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறு யாராகவோ நினைக்கும் புறச்சமயத்தா ருள் ளத்திலும் இடை மருதீசன் பொன்னர் திருவடியே நண்ணி அருள் வழங்கும். ஆறு சமயத்தார் செய்யும் வழி பாடுகளெல்லாம் இடைமருதீச னைருவனையே வந்து சார்வன என்னும் உறுதியுடையவர் திருவெண்காட்டடிக ளென்பது:

ஓராதே யஞ்செழுத்து முன்குதே பச்சிலையும் நேராதே நீரும் நிரப்பா தே-யாராயோண்ணுவா ருள்ளத் திடைமருதர் பொற்பாதம் நண்ணுவா மென்னுமது நாம். அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள் ஒன்றென்ருடே டொவ்வா. துரைத்தாலும்-என்றும் ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும் மருதனையே நோக்கி வரும். எனவரும் மும்மணிக்கோவைச் செய்யுட்களால் இனிது புலனும். இப்பாடல்கள்,

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க் கிங்கே யென் றருள் புரியும் எம்பெருமான் " என ஆளுடைய பிள்ளையாரும்,

"விரிவிலா அறிவிஞர்கள் வேருரு சமயஞ்செய்து

எரிவினுற் சொன்னரேனும் எம்பிராற் கேற்றதாகும்" "ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன " "ஆரொருவ ருள்குவா ருள்ளத்துள்ளே

அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந்தோன்றும் " என ஆளுடைய அரசரும் அருளிய பொருளுரைகளை இனிது புலப்படுத்தி அடிகளது சமயப் பொதுமையை நன்கு அறிவுறுத்துவனவாதல் காண்க

உயிர்களது நலங்கருதி உடல், கருவி, உலகு, நுகர் பொருள் என்பவற்றைத் தந்தருளிய இறைவன், தன் அருளாரின் பப் பெருவாழ்வை எவ்வுயிர்க்கும் உரியதாக அமைத்து வைத்துள்ளானதலின், அவன்பால் ஒரு சிறிதும் குற்றமில்லை. அப்பெருமான நினைந்து போற்றி அவனரு ளால் இடர்ப்பகைகளைக் களைந்து கூற்றுவனது ஆற்றலை யழித்து இறப்பையும் பிறப்பையும் இகழ்ந்து வானேரது பசுவாகிய காமதேனுவின் கன்றைப் போன்று கவலையற்றுத் திரியும் பேரின்ப வாழ்வினைப்பெறும்

**குறிப்பு**

வசதி, எல்லா மக்க ளுக்கும் பொதுவாக இறைவல்லை அளிக்கப்பெற்றுளது. அவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ளாத தீவினையாளர் கண்ணதே குற்றம். அஃது எவ்வாறென்ருல், அறுசுவை யுடன் கூடிய நல்ல உணவு சமைக்கப் பெற்றிருக்கவும் அதனைப் புசியாது ஒருவன் பசியால் வருந்துதல் அவ்வுன வின் குற்றமன்று. நல்ல மணப் பொருள் விரவிய இன் சுவைத் தண்ணிர் இருக்கவும் நீர்வேட்கையுடையாரைரு வன் அந்நீரைப் பருகாது வருந்துதல் நீரின் குற்றமன்று. நன்னிழலைத் தரும் குளிர் பூஞ்சோலை வழியிடையேயிருக்க

அவ்வழியே செல்வாளுருெவன் அதன்கண் தங்கி இளைப் பாருது உடல் வியர்க்கக் கடுவெயிலில் நடந்து வருந்துதல் நிழலின் குற்றமன்று. என இவ்வாறு சார்ந்தவர்க்கு நலஞ்செய்யும் சங்கரளுகிய இறைவன் எவ்வுயிர்க்கும் தன்னருளை உரிமைப்படுத்தி வைத்துள்ள திறத்தையும் அப்பெருமான நினைந்து உய்தி பெருத தீவினையாளர் களது அறியாமையையும் கூறி இரங்குவதாக அமைந்தது, இம்மும்மணிக்கோவையின் பதினரும் பாடலாகும்.

இறைவனது திருநாமமாகிய திருவைந்தெழுத்தை

யோக ஞானங்களால் முதிர்ந்த துறவிகள் ஓதினுலும் அன்றி மனைவி மக்களொடுவாழும் ஏனையோர் ஓதினுலும் அவ்விருதிறத்தாரும் இறைவனருளில் திளைத்தலுறுதி யென்பது திருவெண்காட்டடிகள் கருத்தாகும். உடல் வலியிற் சிறந்தாரைருெவளுல் உயர வீசியெறியப்பட்டு விரைந்து சென்ற கல்லும், வலியில்லாதாளுருெவணுல் வீசப்பட்டுத் தாமதித்து மேலே சென்ற கல்லும் நிலத்தின் இயல்பாகிய ஈர்ப்பாற்றலால் நிலத்தின் கண் ஒருங்கு விழக் காண்கின் ருமே. அதுபோல இறைவனது திருநாமமும் தன்னையோதுவாரது ஞானத்தின் வன்மை மென்மை காரணமாக மாறுபடாது தனக்கு ஆதாரமாகிய இறைவ னருளால் ஈர்க்கப்பட்டு ஒதுவாரனைவர்க்கும் ஒப்ப நலஞ் செய்யுஞ் சிறப்புடைத்தென்பதனை,

*வல்லா ளுருெவன் கைம்முயன் றெறியினும்*
*மாட்டா ஒருவன் வாளா எறியினும்*
*நிலத்தின் வழாஅக் கல்லேபோல்*

நலத்தின் வழார் நின் நாமம் நவின்ருரே. எனவருந் தொடரால் அடிகள் விளக்கிய திறம் வியந்து போற்றத்தக்கதாகும்.

இறைவனை வழிபட்டு வரம் பல பெற்ற வானவர் முனிவர் அடியார்கள் இன்னின் ரைனக் குறித்துப் போற்றுவது, இம் மும்மணிக்கோவையின் இருபத் தெட்டாம் செய்யுளாகும். இதன்கண்

குறிப்பு

*வித்தகப் பாடல் முத்திறத் தடியரும் திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்*
*அத்தகு செல்வத் தவமதித் தருளிய சித்தமார் சிவ வாக்கிய தேவரும்*
*னச் சைவ சமய குரவர் நால்வரையும் பெருஞ்செல்வத்*
*தைத் துறந்த செம்மனச் செல்வராகிய சிவ வாக்கிய*
*தேவரையும் குறித்துப் போற்றிய அடிகள்,*

வெள்ளை நீறு மெய்யிற் கண்டு கள் என் கையிற் கட்டவிழ்ப் பித்தும் ஓடும் பல்நரி யூளைகேட் டரனைப் பாடின வென்று படாம்பல வளித்தும் குவளைப் புனலில் தவளை அரற்ற ஈசன் றன் னை யேத்தின வென்று காசும் பொன் னுங் கலந்து தூவியும் வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய செழுவிதை யெள்ளைத் தின் னக் கண்டு பிடித்தலும் அவன் இப் பிறப்புக்கென்ன இடித்துக் கொண்டவன் எச்சிலே நுகர்ந்தும் மருத வட்டத் தொரு தனிக் கிடந்த தலையைக் கண்டு தலையுற வணங்கி உம்மைப் போல எம்மித் தலையும் கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும் கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும் காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும் விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த பெரிய அன்பின் வரகுண தேவர்

“எனச் சிவபத்திச் செல்வராகிய வரகுண தேவர் செய்த பேரன்பின் செயல்களை விரித்துரைத்துப் போற்றியுள்ளார். இங்குப் புகழ்ந்து போற்றப்பெற்ற பெரிய அன்பின் வர குணதேவராவார்

புயலோங் கலர் சடை யேற்றவன் சிற்றம்பலம் புகழும் மயலோங் கிருங்களியான வரகுணன்” எனவும்,

“வரகுணனுந் தென்னவன் ஏத்து சிற்றம் பலத்தான்” எனவும் திருவாதவூரடிகளாற் போற்றப் பெற்ற முதல் வரகுண பாண்டியர் என்பது முன்னர் விளக்கப்பெற்றது.

# அறம் செய்வான் திறம்

*#251.தாம் அறிவார்*

*தாம் அறிவார் அண்ணல் தாள் பணிவார் அவர்*
*தாம் அறிவார் அறம் தாங்கி நின்றார் அவர்*
*தாம் அறிவார் சில தத்துவர் ஆவார்கள்*
*தாம் அறிவார்க்குத் தமர் பரன் ஆமே.*

தம்மை அறிந்தவர் சிவபெருமானது திருவடிகளை வணங்குவர். தம்மை அறிந்தவர் அறத்தை மேற்கொண்டு செய்து செய்து வருவர். தம்மை அறிந்தவர் உண்மையை உணரும் தத்துவர்கள் ஆவர். தம்மை அறிந்தவர்க்கு இறைவனே உறவினன் ஆவான்.

**குறிப்பு**

#252. *செய்ய முடிந்தவை, செய்ய வேண்டியவை!*
*யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை*
*யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி*
*யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரைதானே.*

எல்லோராலும் செய்ய முடிந்த செயல்கள் இவை. உணவு உண்ண அமரும் முன்னர் இறைவனுக்கு ஒரு வில்வத்தைச் சமர்பித்தல் தினமும் ஒரு பசுவுக்கு ஒரு கைப்பிடி பச்சைப் புல்லை அளித்தல் தான் உண்ணும் முன்னர் பிறர் ஒருவருக்கு ஒரு கவளம் உணவு அளித்தல், எல்லாரிடமும் இனிய சொற்களைப் பேசுதல். இவற்றை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும்.

#253. *பயன் அறியார்.*
*அற்றுநின்றார் உண்ணும் ஊணே அரன்என்னும்*
*கற்றன போதம் கமழ்பவர் மானிடர்*
*உற்று நின்று ஆங்கு ஒரு கூவற் குளத்தினில்*
*பற்றி வந்து உண்ணும் பயன் அறியாரே.*

அகப் பற்றும், புறப் பற்றும் நீங்கியவர்கள் சிவஞானியர். உணவை நாடி அவர்கள் எங்கும் செல்ல மாட்டார்கள்.

அவர்களைத் தேடிச் சென்று நாம் அளிப்பதே உணவே அறம். இந்த உண்மையை அறிந்த பிறகும் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள் பலர் ஒரு கிணற்றங் கரையிலோ, குளத்தங் கரையிலோ தங்கி இருக்கும் ஞானியரை வருந்தி வருந்தி அழைத்து வந்து உணவு அளிப்பதிலையே!

#254. *அறம் செய்வீர்*
*அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்*
*தழுக்கிய நாளில் தருமம் செய்வீர்*
*விழித்திருந்து என் செய்வீர் வெம்மை பரந்து*
*விழிக்க அன்று என் செய்வீர் ஏழை நெஞ்சீரே.*

மன மலங்களை அகற்றி அறிவைப் பெருக்கிக் கொள்ளவில்லை. செல்வம் இருந்தபோதிலும் அறச் செயல்களைச் செய்யவில்லை. உலகில் இப்படிக் காலத்தைக் கழிப்பதால் என்ன பயன் விளையும்? நெருப்பில் உடல் எரியும்

**குறிப்பு**

போது அறம் செய்யாதவர் நிலை என்னவாகும்? அறம் செய்யும் உள்ளத்தைப் பெறாத மனிதர்களே! இதனைச் சிந்தியுங்கள்!

*#255. தவம் செய்வீர்.*
*தன்னை அறியாது, தாம் நல்லார் என்னாது, இங்கு*
*இன்மை அறியாது, இளையர் என்று ஓராது,*
*வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்*
*தன்மையின் நல்ல தவம் செய்யும் நீரே.*

உயிர்களைக் கவரும் யமன் இவற்றைச் சிந்திக்க மாட்டான். உன் நிலைமையை பற்றி சிறிதும் சிந்திக்க மாட்டான். நீங்கள் மிகவும் நல்லவர் என்ற சிந்திக்க மாட்டான்.நீங்கள் வறுமையில் வாடுவதையும் சிந்திக்க மாட்டான். நீங்கள் வயதில் இளையவர் என்றும் சிந்திக்க மாட்டான். வலிமை உடைய யமன் வந்து சேரும் முன்பே நீங்கள் உடலை நிலைக்கச் செய்யும் அரிய தவத்தை மேற்கொள்வீர்!

#265. *வினைகளைக் கடப்பார்.*
*வழி நடப்பார், இன்றி , வானோர் உலகம்*
*கழி நடப்பார் நடந்தார் கரும்பாரும்*
*அழி நடக்கும் வினை ஆசு அற ஓட்டிட்டு*
*ஒழி நடப்பார், வினை ஓங்கி நின்றாரே.*

அறவழியில் நிற்பவர் அடைவர் தேவர் உலக இன்பம். தீய நெறியில் நடப்பவர்களுக்குக் கிடைக்காது இந்த இன்பம். அவர்கள் இருள் மிக்க நரகத்தில் நடப்பவர்கள் ஆவார்கள். காமம், கோபம், மயக்கம் போன்ற மன மலங்களை ஒழித்து விட்டு நல்ல வழியில் நடப்பவர்கள் வினைகளைக் கடந்து நிற்பார்கள்.

#266. *துறக்கம் ஆள்வர்!*
*கனிந்தவர் ஈசன் கழல்அடி காண்பர்*
*துணிந்தவர் ஈசன் துறக்கம் அது ஆள்வர்*
*மலிந்தவர் மாளும் துணையும் ஒன்று இன்றி*
*மெலிந்த சினத்தினுள் வீழ்ந்து ஒழிந் தாரே.*

கனிந்த மனதுடன் எல்லா உயிர்களிடத்தும் கருணை செய்பவர் இறைவனின் திருவடிகளின் தரிசனம் பெறுவார். உலகப் பற்றினை ஒழித்துவிட்டு மனம் துணிந்து தவம் செய்பவர் இறைவனுடன் இணையும் சாயுஜ்ய நிலையை அடைவர்.

உலக வாழ்வில் இருந்துகொண்டு அறம் அற்ற செயல்களைச் செய்தால் இறைவன் ஆசி கிடைக்காது. காலனின் சினம் கிடைக்கும். அஞ்சத் தகுந்த நரகத்தில் இடம் கிடைக்கும்.

**குறிப்பு**

#267. *அறம் அறியாரே*
*இன்பம் இடர் என்று இரண்டு உற வைத்தது*
*முன்பு அவர் செய்கையினாலே முடிந்ததும்*
*இன்பம் அது கண்டும் ஈகிலாப் பேதைகள்*
*அன்பு இலார் சிந்தை அறம் அறியாரே.*

இன்பமும், துன்பமும் பொருந்தியுள்ளன உலகினில். முற்பிறப்பில் செய்த அறச் செயல்கள் இன்பம் தரும். முற்பிறப்பில் செய்த மற்றச் செயல்கள் துன்பம் தரும். இதைக் கண்ட பிறகும் பிறருக்கு எதையும் கொடுக்காத மனிதர்கள் அன்பு என்பதே இல்லாதவர்கள். அவர்கள் அறத்தை அறியாதவர்கள்.

#268. *தீமை செய்பவன் ஒரு விலங்கு*
*கெடுவதும் ஆவதும் கேடுஇல் புகழோன்*
*நடு அல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான்*
*இடுவதும் ஈவது எண்ணுமின் இன்பம்*
*படுவது செய்யின் பசு அது ஆமே.*

ஒருவன் கேட்டை அடைவதும் ஆக்கத்தை அடைவதும் இறைவன் இச்சைப் படி நடக்கின்ற செயல்கள் ஆகும். நேர்மை இல்லாத செயல்களைச் செய்பவன் இன்பம் அடைவதை இறைவன் ஒருநாளும் அனுமதிக்க மாட்டான். எனவே பிறருக்கு அன்புடன் கொடுப்பதையும் வறியவர்க்கு மனம் கனிந்து இடுவதையும் சிந்தனை செய்யுங்கள். பிறர் இன்பத்தைக் கெடுப்பவன் ஒரு விலங்குக்குச் சமம்.

#269. *புன் மக்களைப் போற்றன்மின்*
*செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வு எனும்*
*புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்*
*இல்லம் கருதி இறைவனை ஏத்துமின்*
*வில்லி இலக்கு எய்த விற்குறி ஆமே.*

செல்வம் கருதி அறிவற்ற புன்மக்களைப் போற்றிப் புகழாதீர்கள். அவர்கள் தரக் கூடிய அழிகின்ற செல்வத்தை நாடி வாடாதீர்கள். அழியாத செல்வம் ஆகிய வீடு பேறைத் தரவல்லவன் இறைவன். அவனையே என்றும் நாவாறப் போற்றிப் புகழுங்கள். வில் வீரனின் அம்பு இலக்கைத் தவறாது அடையும்.

அது போன்றே உங்கள் வார்த்தைகள் இறைவனை அடையும். அவன் உங்கள் வறுமையை நீக்கி வாழ்வில் இன்பம் தருவான்.

குறிப்பு

# அறம் செய்யான் திறம்

#260. *பயன் அறியார்!*
*எட்டி பழுத்த, இருங்கனி வீழ்ந்தன,*
*ஒட்டோய நல்லறம் செய்யாதவர் செல்வம்*
*வட்டிகொண்டு ஈட்டியே மண்ணில் முகந்திடும்*
*பட்டிப் பதகர் பயன் அறியாரே.*

எட்டி மரம் பழுத்தது. பெரிய கனிகள் தரையில் வீழ்ந்தன. ஆனால் யாரும் அவற்றை நாடிச் செல்லவில்லை. வட்டி வாங்கி உலகில் பெரும் பொருள் சேர்ப்பவர் அதன் உண்மையான பயனை அறியார். அறம் செய்யார். அவர்கள் செல்வமும் எட்டிக் கனிகள் போன்று பயனற்றவையே.

#261. *அறம் அறியார்*
*ஒழிந்தன காலங்கள் ஊழியும்போயின்*
*கழித்தன கற்பனை் நாளும் குறுகிப்*
*பிழிந்தன போலத் தம் பேரிடர் ஆக்கை*
*அழிந்தன கண்டும் அறம் அறியாரே.*

காலம் கழிந்து சென்றது. ஊழிகள் ஓடிச் சென்றன. கற்பனைகள் எல்லாம் கனவாகி மறைந்து விட்டன. வாழ்நாட்கள் குறுகின. உடல் சாறு பிழிந்த சக்கையானது. பலவிதத் துன்புற்ற பின்னர் அந்த உடல்கள் அழிந்து பட்டன. இவற்றை எல்லாம் கண்ட பிறகும் உலகத்தவர் அறம் என்பதையே அறியாதவர்களாக இருகின்றார்களே!

#262. *பிறப்பும், இறப்பும்*
*அறம் அறியார், அண்ணல் பாதம் நினையும்*
*திறம் அறியார், சிவலோக நகர்க்குப்*
*புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு*
*மறம் அறிவார், பகை மன்னி நின்றாரே.*

அறம் என்பதையே அறியாமல் பலர் உலகில் வாழ்கின்றனர். இறைவனைத் துதிக்கும் திறன் என்பதையும் இவர் அறியார்.

சிவலோகத்தின் பக்கமான சுவர்க்கம் போன்றவற்றையும் அறியார். லௌகீக வாழ்வில் பற்பல பொய்மொழிகளைக் கேட்கின்றனர். பலவிதமான

பாவச் செயல்களை இவர்கள் செய்கின்றனர். அதனால் பிறப்பு இறப்பு என்றவற்றில் இவர்கள் பொருந்தி நிற்கின்றனர்.

**குறிப்பு**

*#263. அறம் செய்யாவிட்டால்...*
*இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்*
*தருமம் செய்யாதவர் தம்பாலது ஆகும்*
*உரும், இடி, நாகம், உரோணி, கழலை*
*தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே.*

அறம் செய்யாதவர்க்கு வந்து விளையும் இருமல், சோகை, கோழை, ஜுரம் போன்றவை. மின்னலும் , இடியும், பாம்பும், தொண்டை நோயும், கட்டிகளும் அறம் செய்பவர்களை ஒரு நாளும் அண்டாது.

*#264.நரகத்தே நிற்றிரோ?*
*பரவப் படுவான் பரமனை ஏத்தார்,*
*இரவலர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்,*
*கரகத்தால் நீர் அட்டிக் காவை வளர்க்கார்*
*நரகத்தே நிற்றிரோ நல்நெஞ்சி னீரே.*

தன் புகழையே என்றும் விரும்பி வாழ்வார். இறைவனைப் பணிந்து வணங்க மாட்டார். தன்னை அண்டி இரந்து நிற்பவற்கு ஏதும் ஈயார். குடத்தால் நீர் ஊற்றி வழிப் போக்கர்கள் தங்குவதற்குக் குளிர்ந்த சோலைகளையும் வளர்க்க மாட்டார்கள்.

இத்தகைய நல்ல மனம் படைத்தவர்களே! நீங்கள் நரகத்தில் நிலையாக இருக்க விரும்புகின்றீர்களோ?

*#265. வினைகளைக் கடப்பார்.*
*வழி நடப்பார், இன்றி , வானோர் உலகம்*
*கழி நடப்பார் நடந்தார் கரும்பாரும்*
*அழி நடக்கும் வினை ஆசு அற ஓட்டிட்டு*
*ஒழி நடப்பார், வினை ஓங்கி நின்றாரே.*

அறவழியில் நிற்பவர் அடைவர் தேவர் உலக இன்பம். தீய நெறியில் நடப்பவர்களுக்குக் கிடைக்காது இந்த இன்பம். அவர்கள் இருள் மிக்க நரகத்தில் நடப்பவர்கள் ஆவார்கள். காமம், கோபம், மயக்கம் போன்ற மன மலங்களை ஒழித்து விட்டு நல்ல வழியில் நடப்பவர்கள் வினைகளைக் கடந்து நிற்பார்கள்.

*# 266. துறக்கம் ஆள்வர்!*

*கனிந்தவர் ஈசன் கழல்அடி காண்பர்*
*துணிந்தவர் ஈசன் துறக்கம் அது ஆள்வர்*
*மலிந்தவர் மாளும் துணையும் ஒன்று இன்றி*
*மெலிந்த சினத்தினுள் வீழ்ந்து ஒழிந் தாரே.*

**குறிப்பு**

கனிந்த மனதுடன் எல்லா உயிர்களிடத்தும் கருணை செய்பவர் இறைவனின் திருவடிகளின் தரிசனம் பெறுவார். உலகப் பற்றினை ஒழித்துவிட்டு மனம் துணிந்து தவம் செய்பவர் இறைவனுடன் இணையும் சாயுஜ்ய நிலையை அடைவர்.

உலக வாழ்வில் இருந்துகொண்டு அறம் அற்ற செயல்களைச் செய்தால் இறைவன் ஆசி கிடைக்காது. காலனின் சினம் கிடைக்கும். அஞ்சத் தகுந்த நரகத்தில் இடம் கிடைக்கும்.

*#267. அறம் அறியாரே*
*இன்பம் இடர் என்று இரண்டு உற வைத்தது*
*முன்பு அவர் செய்கையினாலே முடிந்ததும்*
*இன்பம் அது கண்டும் ஈகிலாப் பேதைகள்*
*அன்பு இலார் சிந்தை அறம் அறியாரே.*

இன்பமும், துன்பமும் பொருந்தியுள்ளன உலகினில். முற்பிறப்பில் செய்த அறச் செயல்கள் இன்பம் தரும். முற்பிறப்பில் செய்த மற்றச் செயல்கள் துன்பம் தரும். இதைக் கண்ட பிறகும் பிறருக்கு எதையும் கொடுக்காத மனிதர்கள் அன்பு என்பதே இல்லாதவர்கள். அவர்கள் அறத்தை அறியாதவர்கள்.

சூ 268. *தீமை செய்பவன் ஒரு விலங்கு*
*கெடுவதும் ஆவதும் கேடுஇல் புகழோன்*
*நடு அல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான்*
*இடுவதும் ஈவது எண்ணுமின் இன்பம்*
*படுவது செய்யின் பசு அது ஆமே.*

ஒருவன் கேட்டை அடைவதும் ஆக்கத்தை அடைவதும் இறைவன் இச்சைப் படி நடக்கின்ற செயல்கள் ஆகும். நேர்மை இல்லாத செயல்களைச் செய்பவன் இன்பம் அடைவதை இறைவன் ஒருநாளும் அனுமதிக்க மாட்டான். எனவே பிறருக்கு அன்புடன் கொடுப்பதையும் வறியவர்க்கு மனம் கனிந்து இடுவதையும் சிந்தனை செய்யுங்கள். பிறர் இன்பத்தைக் கெடுப்பவன் ஒரு விலங்குக்குச் சமம்.

*#269. புன் மக்களைப் போற்றன்மின்*
*செல்வம் கருதிச் சிலர் பலர் வாழ்வு எனும்*

*புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்*
*இல்லம் கருதி இறைவனை ஏத்துமின்*
*வில்லி இலக்கு எய்த விற்குறி ஆமே.*

குறிப்பு

செல்வம் கருதி அறிவற்ற புன்மக்களைப் போற்றிப் புகழாதீர்கள். அவர்கள் தரக் கூடிய அழிகின்ற செல்வத்தை நாடி வாடாதீர்கள். அழியாத செல்வம் ஆகிய வீடு பேறைத் தரவல்லவன் இறைவன். அவனையே என்றும் நாவாறப் போற்றிப் புகழுங்கள். வில் வீரனின் அம்பு இலக்கைத் தவறாது அடையும். அது போன்றே உங்கள் வார்த்தைகள் இறைவனை அடையும். அவன் உங்கள் வறுமையை நீக்கி வாழ்வில் இன்பம் தருவான்.

## பயிற்சி வினாக்கள்

1. மும்மணிக்கோவைபற்றிசிறுகுறிப்புவரைக.
2. இறைவன் யாருக்குஉறவினன் ஆவான்.
3. அறம் செய்வான் பற்றித் திருமூலர் கூறுவதுயாது?
4.' யாருக்குநரகத்தில் இடம் கிடைக்கும்?
5. எவன் விலங்கினுக்குச் சமம் எனதிருமூலர் கூறுகிறார்?

# கூறு 12

# தாயுமானவர் பரிபூரணானந்தம் பாடல்கள்

குறிப்பு

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1706–1744) திகழ்ந்த பெரியார் தாயுமான சுவாமிகள். திருமறைக் காட்டிலே சைவ வேளாளர் குலத்திலே கேடிலியப்பப் பிள்ளையின் இரண்டாவது மகனாய்ப் பிறந்தார். திரிசிரபுரத்தில் விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரின் கணக்கராகத் தந்தை பணி புரிய, வட மொழி, தென்மொழி இரண்டுங் கற்ற இவர் மௌன குரு என்பாரிடம் அறிவுரை பெற்றார். தந்தையார் இறந்தவுடன் அரசு வேலையிலமர்ந்தார் நாயக்கர் இறந்த பின் அரசி மீனாட்சி தன்பாற் காட்டிய முறையற்ற அன்பு காரணமாக ஒரு நாளிரவு ஊரை விட்டோடினார். இராமநாதபுரத்தில் தன் தமையனோடு இருந்தார். அவர் கட்டாயப்படுத்தியதால் மட்டுவார்குழலி என்ற பெண்ணை மணந்தார். கனகசபாபதி எனும் ஆண்குழந்தை ஈன்ற மனைவி மறையவே யோகஞானங்களில் சிறக்கத் துறவு பூண்டார். சைவ சித்தாந்தம், அத்வைதம் ஆகிய இரு நிலைக்கும் ஒரு வகை சமரசம் கண்டவர். 'உபநிடதக் கருத்துகளையும் மற்ற ஞான நூல்களின் உட்பொருளையும் மிகத் தெளிவாகத் தமிழில் பாடியவர்' என பேராசிரியர் மு.வரதராசனார் இவரைப் பாராட்டுகிறார். இவரது பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம்எனப்படுகின்றன.

ஆழ்வார்களைப் போன்று காதல் துறைகளின் வாயிலாக உயர்ந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்தினார். கண்ணி என்றழைக்கப்படும் இரண்டடிப் பாடல் வகையை இவர் கையாள்கிறார். இவரது பாடல்கள் அனைத்தும் தாயுமானவர் பாடல்கள் என்ற நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் சித்தர் கருத்தை ஒத்துப் பாடும் இவர், தம் காலத்தில் சமயப் போராட்டங்களையும் பூசல்களையும் கண்டு மனம் வெறுத்துச் சமரச ஒளியையே அதிகம் பாடியுள்ளார். தேசோமயானந்தம், கருணாகரம், பரஞ்சோதி, பரதெய்வம் போன்ற சொற்கள் இவர்க்கே உரியவை. "சும்மா இருக்க அருளாய்" என்று இறைவனிடம் வேண்டுபவர்,

*எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே*

(பராபரக்கண்ணி - 221)

என்று பாடுகிறார்.

குறிப்பு

தான் செய்யும் இறைவழிபாட்டை,

*நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே*
*மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே*

(பராபரக்கண்ணி - 151)

என்று கூறுகிறார். ஆனந்தக் களிப்பு, பைங்கிளிக் கண்ணி, ஆகாரபுவனம் என்பன கண்ணி வடிவில் அமைந்தவை. மொத்தம் 1452 பாக்களை 56 பிரிவுகளில் இவர் பாடியுள்ளார்.

*பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும்*
*பொய்யெனவே*
*மெய்யறினை மெய்யெனவே மெய்யுடனே*
*காண்பேனா - காண்*

(காண்பேனா கண்ணி - 6)

என்று ஏங்கிய இவர் 1659-இல் இராமநாதபுரத்தில் உள்ள முகவையில் நித்திய சமாதியடைந்தார்.

## ஆனந்தக்களிப்பு

*ஆதி அனாதியு மாகி - எனக்*
*கானந்த மாயறி வாய்நின்றி லங்குஞ்*
*சோதி மவுனியாய்த் தோன்றி-அவன்*
*சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி-சங்கர* 1.

*சொன்னசொல் லேதென்றுசொல்வேன்-என்னைச்*
*சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி*
*முன்னிலை ஏது மில்லாதே-சுக*
*முற்றச்செய் தேஎனைப் பற்றிக்கொண் டாண்டி-சங்கர* 2.

*பற்றிய பற்றற உள்ளே-தன்னைப்*
*பற்றச் சொன் னான்பற்றிப் பார்த்த இடத்தே*
*பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்*
*பேசாத காரியம் பேசினான் தோழி-சங்கர* 3.

*பேசா இடும்பைகள் பேசிச்-சுத்தப்*
*பேயங்க மாகிப் பிதற்றித் திரிந்தேன்*
*ஆசா பிசாசைத் துரத்தி-ஐயன்*
*அடியிணைக் கீழே அடக்கிக்கொண் டாண்டி-சங்கர* 4.

**குறிப்பு**

அடக்கிப் புலனைப் பிரித்தே-அவ
  னாகிய மேனியில் அன்பை வளர்த்தேன்
மடக்கிக்கொண் டான்என்னைத் தன்னுள்-சற்றும்
  வாய்பேசா வண்ணம் மரபுஞ்செய் தாண்டி-சங்கர 5.

மரபைக் கெடுத்தனன் கெட்டேன் - இத்தை
  வாய்விட்டுச் சொல்லிடின் வாழ்வெனக் கில்லை
கரவு புரு'னும் அல்லன் - என்னைக்
  காக்குந் தலைமைக் கடவுள்காண் மின்னே-சங்கர 6.

கடலின் மடைவிண்ட தென்ன - இரு
  கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய
உடலும் புளகித மாக - என
  துள்ளமுருக உபாயஞ்செய் தாண்டி - சங்கர 7.

உள்ளது மில்லது மாய்முன் - உற்ற
  உணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாந்
தள்ளெனச் சொல்லிஎன் ஐயன் - என்னைத்
  தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி - சங்கர 8.

பாராதி பூதநீ யல்லை-உன்னிப்
  பாரிந் திரியங் கரணநீ யல்லை
ஆராய் உணர்வுநீ என்றான் -ஐயன்
  அன்பாய் உரைத்த சொல் லானந்தந் தோழி - சங்கர 9

அன்பருக் கன்பான மெய்யன் - ஐயன்
  ஆனந்த மோனன் அருட்குரு நாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான் - என்னைத்
  தானறிந் தேன்மனந் தானிறந் தேனே - சங்கர 10

இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக்
  கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்
மறப்பும் நினைப்புமாய் நின்ற - வஞ்ச
  மாயா மனத்தால் வளர்ந்தது தோழி - சங்கர 11

மனதேகல் லாலெனக் கன்றோ - தெய்வ
  மவுன குருவாகி வந்துகை காட்டி
எனதாம் பணியற மாற்றி - அவன்
  இன்னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி - சங்கர 12

குறிப்பு

*அருளால் எவையும்பார் என்றான் - அத்தை*
*அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்*
*இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட*
*என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி - சங்கர* 13

*என்னையுந் தன்னையும் வேறா - உள்ளத்*
*தெண்ணாத வண்ணம் இரண்டற நிற்கச்*
*சொன்னது மோஒரு சொல்லே-அந்தச்*
*சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வேன் - சங்கர* 14

*விளையுஞ் சிவானந்த பூமி - அந்த*
*வெட்ட வெளிநண்ணித் துட்ட இருளாங்*
*களையைக் களைந்துபின் பார்த்தேன் - ஐயன்*
*களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி - சங்கர* 15

*கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை - இரு*
*கண்காண நீங்கவுங் கண்டோந் துயில்தான்*
*கொண்டார்போற் போனாலும் போகும் - இதிற்*
*குணமேது நலமேது கூறாய்நீ தோழி - சங்கர* 16

*நலமேதும் அறியாத என்னைச் - சுத்த*
*நாதாந்த மோனமாம் நாட்டந்தந் தேசஞ்*
*சலமேதும் இல்லாமல் எல்லாம் - வல்லான்*
*தாளால்என் தலைமீது தாக்கினான் தோழி - சங்கர* 17

*தாக்குநல் லானந்த சோதி - அணு*
*தன்னிற் சிறிய எனைத்தன் னருளாற்*
*போக்கு வரவற் றிருக்குஞ் - சுத்த*
*பூரண மாக்கினான் புதுமைகாண் மின்னே - சங்கர* 18

*ஆக்கி அளித்துத் துடைக்குந் - தொழில்*
*அத்தனை வைத்துமெள் ளத்தனை யேனுந்*
*தாக்கற நிற்குஞ் சமர்த்தன் - உள்ள*
*சாட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி - சங்கர* 19

*சிந்தை பிறந்ததும் ஆங்கே - அந்தச்*
*சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே*
*எந்த நிலைகளும் ஆங்கே - கண்ட*
*யான்றான் இரண்டற் றிருந்தும் ஆங்கே - சங்கர* 20

குறிப்பு

*ஆங்கென்றும் ஈங்கென்றும் உண்டோ - சச்சி*
*தானந்த சோதி அகண்ட வடிவாய்*
*ஓங்கி நிறைந்தது கண்டால் - பின்னர்*
*ஒன்றென் றிரண்டென் றுரைத்திட லாமோ - சங்கர* 21

*என்றும் அழியும்இக் காயம் - இத்தை*
*ஏதுக்கு மெய்யென் றிருந்தீர் உலகீர்*
*ஒன்றும் அறியாத நீரோ - யமன்*
*ஓலை வந்தாற்சொல்ல உத்தரம் உண்டோ - சங்கர* 22

*உண்டோ நமைப்போல வஞ்சர் மலம்*
*ஊறித் ததும்பும் உடலைமெய் யென்று*
*கொண்டோ பிழைப்பதிங் கையோ - அருட்*
*கோலத்தை மெய்யென்று கொள்ளவேண் டாவோ - சங்கர* 23

*வேண்டா விருப்பும் வெறுப்பும் - அந்த*
*வில்லங்கத் தாலே விளையும் சனனம்*
*ஆண்டான் உரைத்த படியே - சற்றும்*
*அசையா திருந்துகொள் ளறிவாகி நெஞ்சே - சங்கர* 24

*அறிவாரும் இல்லையோ ஐயோ - என்னை*
*யாரென் றறியாத வங்கதே சத்தில்*
*வறிதேகா மத்தீயிற் சிக்கி - உள்ள*
*வான்பொருள் தோற்கவோ வந்தேன்நான் தோழி - சங்கர* 25

*வந்த வரவை மறந்து - மிக்க*
*மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும்*
*இந்த மயக்கை அறுக்க - எனக்*
*கெந்தை மெய்ஞ்ஞான எழில்வாள் கொடுத்தான் - சங்கர* 26

*வாளாருங் கண்ணியர் மோகம் - யம*
*வாதைக் கனலை வளர்க்குமெய் என்றே*
*வேளா னவனுமெய் விட்டான் - என்னில்*
*மிக்கோர் துறக்கை விதியன்றோ தோழி - சங்கர* 27

*விதிக்கும் பிரபஞ்ச மெல்லாஞ் - சுத்த*
*வெயில்மஞ்ச ளென்னவே வேதாக மங்கள்*
*மதிக்கும் அதனை மதியார் - அவர்*
*மார்க்கந்துன் மார்க்கஞ்சன் மார்க்கமோ மானே - சங்கர* 28

குறிப்பு

*துன்மார்க்க மாதர் மயக்கம் - மனத்*
*தூயர்க்குப் பற்றாது சொன்னேன் சனகன்*
*தன்மார்க்க நீதிதிட் டாந்தம் - அவன்*
*தானந்த மான சதானந்த னன்றோ-சங்கர* 29

*அன்றென்றும் ஆமென்றும் உண்டோ - உனக்*
*கானந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே*
*நின்றால் தெரியும் எனவே - மறை*
*நீதிஎம் மாதி நிகழ்த்தினான் தோழி - சங்கர* 30

தாயுமான அடிகள் பாடல்கள் முற்றிற்று.

## ஆனந்தக் களிப்பு

பேரின்பத்தில் திளைத்து, இறைவனை அறிந்து அவனுடன் இரண்டறக் கலக்கும் ஞான அனுபவத்தைப் பெருமகிழ்ச்சியுடன் சொல்வதே 'ஆனந்தக் களிப்பு'. தாயுமானவர், குணங்குடியார் ஆகிய இருவருமே 'ஆனந்தக் களிப்பு' என்ற தலைப்பில் தங்கள் இறையனுபவத்தை வெளிப்படுத்தி, பாடல்களை இயற்றியுள்ளனர்.

தாயுமானவர் தமது 'சங்கர சங்கர சம்பு சிவ, சங்கர சங்கர சங்கர சம்பு' என்று துவங்கும் ஆனந்தக் களிப்பில்,

*ஆதி அநாதியும் ஆகி எனக்கு*
*ஆனந்தமாய் அறிவாய் நின்று இலங்கும்*
*ஜோதி மவுனியாய்த் தோன்றி அவன்*
*சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி! - சங்கர*

என்று தான் அறிந்த ஜோதிமய ஆனந்த நிலையையும், அதற்குக் காரணமான மௌன குருவின் பெருமையையும் ஒருசேரக் கூறுகிறார்.

*என்னையும் தன்னையும் வேறா உள்ளத்து*
*எண்ணாத வண்ணம் இரண்டு அற நிற்கச்*
*சொன்னது மோஒரு சொல்லே அந்தச்*
*சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன் சங்கர*

என்று இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருநிலையை விவரிக்கிறார் தாயுமானவர்.

## பேரின்பத்தின் இறுதி இலக்கு

மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை 'தன்னையறிதல்'. தன்னையறியும் முயற்சியில் ஈடுபடுபவர் தான் பேரின்பத்தின் இறுதி இலக்கான இறைவனை அடைய

குறிப்பு

முடியும். அந்த நிகழ்முறையில், இவ்வுலக ஆசைகளை விட்டொழித்து, நிலையாமையை உணர்ந்து, இறை வழிபாட்டில் தன்னைக் கரைத்துக் கொள்வதே ஞானநெறியாகும். 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் ஞானநெறியில் ஈடுபட்டு, ஆனந்தக் களிப்பை அடை

## தெய்வ மணி மாலை - 1

*திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்*
*திறலோங்கு செல்வ மோங்கச்*
*செறிவோங்க வறிவோங்கி நிறைவான வின்பந்*
*திகழ்ந் தோங்க அருள் கொடுத்து*

*மருவோங்கு செங்கமல மலரோங்கு வணமோங்க*
*வளர்கருணை மயமோங்கி யோர்*
*வரமோங்கு தெள்ளமுத வயமோங்கி யானந்த*
*வடிவாகி யோங்கி ஞான*

*உருவோங்கு முணர்வினிறை யோளியோங்கி யோங்குமையில்*
*ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்*
*உறவோங்கு நின்பதமேன் னுளமோங்கி வளமோங்க*
*உய்கின்ற நாளேந்த நாள்*

*தருவோங்கு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே.*

## உரை

மரங்கள் நிறைந்த சென்னையிலுள்ள கந்தகோட்டத்துள் கோயில் கொண்டு உயர்கின்ற கந்த வேளே, குளிர்ந்த தோற்றத்தை உடைய தூ ய மாணிக்க மணிகளுள் அருள் நிறைந்த சைவ மணியாய்த் திகழும் ஆறு முகங்களையுடைய தெயய்வமாகிய மணியே , யாவரும் விரும்புதலையுடைய நல்வினைகளைச் செய்தளையுடைராதலால் அன்பும் அருளும் திறலும் மிக்க செல்வம் சிறக்கவும் அடக்கம் அமையவும் அறிவு மேன்மையுற நிறைந்த இன்பம் மிக்கு விளங்கவும் திருவருளை வழங்கி , மணமுடைய செந்தாமரை மலரின் நிறமுற்று மிகுகின்ற கருணையுருவாய் ஒப்புற உயர்ந்த தெள்ளிய அமுதப் பெருக்காய் ஆனந்த வடிவுற்றுச் சிறந்து ஞானப் பொருள் கொண்ட உணர்வின்கண் நிறை ஒளி மிக்குத் திகழும் மயில்மேல் இவர்ந்துயிர்ந்து

எவ்வுயிர்க் கண்ணும் போருந்தும் நின்னுடைய திருவடி என் உள்ளத்தில் தங்குதலால் பெறலாகும் அருட்செல்வம் பெற்று உய்தி பெருங்காலம் எப்போது?

## தெய்வ மணி மாலை - 2

குறிப்பு

*பரமேது வினைசெயும் பயனேது பதியேது*
*பசுவேது பாச மேது*
*பத்தியேது அடைகின்ற முத்தியேது அருளேது*
*பாவ புண்ணியங்க ளேது*

*வரமேது தவமேது விரதமேது ஒன்றுமிலை*
*மனம்விரும் புணவுண்டு நல்*
*வதிர மணிந்துமட மாதர்தமை நாடிநறு*
*மலர் சூடி விளையாடி மேற்*

*கரமேவ விட்டுமுலை தொட்டு வாழ்ந்தவரோடு*
*கலந்து மகிழ்கின்ற சுகமே*
*கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனேனுங்*
*கயவரைக் கூட தருள்*

*தரமேவு சென்னையிற்கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

### உரை

மேன்மை பொருந்திய சென்னைக் கந்த கோட்டத்தில் எழுந்தருளும் கந்த வேளே , தூய மணிகளுட் சைவ மணியாம் சண்முகத் தெய்வமணியே, பரம் என்பது யாது? வினையாவது யாது? வினியின் பயன் என்பது யாது? பத்தி, பசு, பாசம் என்பன யாவை? பத்தியாவது யாது? அதனால் அடைகின்ற முத்தி என்பது யாது? அருள் என்பது யாது? பாவ புண்ணியங்கள் யாவை? வரம் என்றும் தவம் என்றும் விரதம் என்றும் கூறுவன ஒன்றும் இல்லை. மனம் ஆசைபடுகின்ற உணவையுண்டு, நல்ல ஆடையுடுத்து இலமகளிரை நாடி யடைந்து மணம் வீசும் பூக்களைச் சூடிப் பலவகையாக விளையாடி . கைகளை அம்மகளிர் மேற்செலுத்தி அவர்களுடைய முலையைப் பற்றி மெய்யோடு மெய்கலந்து மகிழ்கின்ற சுகமே கண்கண்ட சுகம் இதுவே, வாழ்வின் கைகண்ட பயன் என்று கருதி மொழிகின்ற கீழ் மக்களோடு கூடாதாவாறுஅருள் புரிவாயாக

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 3

*துடியென்னும் இடையனம் பிடியென்னும் நடைமுகில்*
*துணையென்னும் பிணைய லளகஞ்*
*சூதென்னு முலைசெழுந் தாதென்று மலைபுனற்*
*சுழியென்ன மொழிசெ யுந்தி*

*வடியென்னும் விழிநிறையு மதியென்னும் வதனமென*
*மன்கையர்தமை அங்க முற்றே*
*மனமென்னும் ஒருபாவி மயிலென்னும் அதுமேவி*
*மாழ்கநான் வாழ்க விந்தப்*

*படியென்னு மாசையைக் கடியென்ன வென்சொலிப்*
*படியென்ன வரியாது நின்*
*படியென்ன வென்மொழிப் படியின்ன வித்தைநீ*
*படியென்னு மென் செய்குவேன்*

*துடிதுன்னு மதில் சென்னை கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே*

### உரை

மேகம் படியும் மதில் பொருந்திய சென்னைக் கந்த கோட்டத்தில் எழுந்தருளும் கந்த வேளே, தூய மணிகளுட் சைவமணியாம்,'ண்முகத தெய்வ மணியே, இடை துதியை நிகர்க்கும் எனவும், செழித்த தாது எனப்படும் அலையையுடைய நீரின்கண் தோன்றும் சுழியை போல்வது உந்தி எனவும், மாவடு நிகர்க்கும் கண் எனவும், முழு திங்கள் போலும் முகம் எனவும், புகழப்படும் மகளிரின் மேனியைப் பற்றி மனமாகிய ஒருபாவி , காம மயில் என்னும் அதனை எய்தி மயங்குதலால், நான் வாழுவு பெற இவ்வுலகியல் ஆசையை நீக்க என்று சொல்லும் என்னுடைய சொல் இத்தகையது என்று சொல்லவும், அதனை அறிந்து கொள்ளாமல் நின் சொற்படி என்ன? யன் சொல்லும் மொழின்படி இவ்வித்தையை நீ படித்து நடப்பாயாக என்று சொல்லுவதால் இதற்கு என்ன செய்வேன்?

## தெய்வ மணி மாலை - 4

*வள்ளலுனை யுள்ளபடி வாழ்த்துகின்றோர்*

*மதித்திடுவ தன்றி மற்றை*
*வானவரை மதியென்னி னானவரை யொருகனவின்*
*மாட்டினும் மறந்து மதியேன்*

*கள்ளமறு முள்ளமுறு நின் பதமலால் வேறு*
*கடவுளர் பதத்தை யவர்என்*
*கண்ணெதிர் அடுத்தைய நண்ணென வளிப்பினும்*
*கடுவென வெறுத்து நிற்பேன்*

*எவ்வளவு மிம்மொழியி லேசுமொழி யன்றுண்மை*
*என்னை யாண்டருள் புரிகுவாய்*
*என் தந்தையே யெனது தாயே யென் இன்பமே*
*என்றனறிவே யென்னன்பே*

*தள்ளரிய சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

குறிப்பு

## உரை

கந்தகோட்டத்துள் விளங்கும் கந்த வேளே, சண்முகம் படைத்த தெய்வமணி யாயவனே, எனக்குத்தந்தையும், தாயுமாய், இன்பமும், அறிவும் அன்புமாயிருப்பவனே, வள்ளலாகிய உன்னை உண்மையாக வாழ்த்தி வழிபடுபவர்களை நன்கு மதிக்காமல் வானவர்களை மதித்தொழுக என சொன்னால் அவர்களைக் கனவிலும் ஒருமுறையேனும் மறந்தும் மதிக்க மாட்டேன் உன் திருவடியை யன்றி, வேறு தெய்வங்களின் பாதத்தை அவர்கள் என்கண் காணநின்று வழிபடு என அருளிச்செய்யினும் விடமெனக் கருதி வெறுத்து விலகி விடுவேன். இவ்வாறு கூறும் என் சொற்கள் அவர்களை இகழும் குறிப்புடையன அல்ல் என்னை ஆட்கொண்டு அருள் புரிக.

## தெய்வ மணி மாலை - 5

*பதி பூசை முதலநற் கிரியையான் மனமெனும்*
*பசுகரணம் ஈங்க சுத்த*
*பாவனை யறச்சுத்த பாவனையில் நிற்குமெய்ப்*
*பதியோக நிலைமை யதனால்*

*மதிபாச மற்றதி னடங்கிடு மடங்கவே*
*மலைவில் மெய்ஞ்ஞான மயமாய்*

குறிப்பு

*வரவு போக்கற்ற நிலை கூடுமென வெனதுளே
வந்துணர்வு தந்த குருவே*

*துதிவாய்மை பெறுசாந்த பதமேவு மதியமே
துரிசறு சுயஞ் சோதியே
தோகை வாகனமீ திலங்கவரு தோன்றலே
சொல்லரிய நல்ல துணையே*

*ததிபெறும் சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

கந்த கோட்டத்தினுள் வீற்றிருக்கும் கந்த வேளே, சண்முகங்களையுடைய தெய்வ மணியே, துவாத சாந்த நிலையில் காட்சி வழங்கும் அமுத சந்திரனே, சுயம் பிரகாச வடிவே, மயிலாகிய வாகனத்தில் ஞானக்கண் காணத்தோன்றும் பெருமானே, நல்ல துணைவனே, சிவபூசை முதலான செயல் வகைகளால் மனமாகிய பசுகரணம் இவ்விடத்து அசுத்தமான பாவனைகள் உற்ற அழுக்குகள் நீங்கவே, தூய சிவநினைவில் நிலை பெறும் ஆங்குத் தோன்றும் சிவயோகத்தால் பாச வகைகள் நீங்கிச் சிவத்தின்கண் அடங்கி யொழியும் பிறவிச் சுழலில் புகுதலும் மீளலும் இல்லா சிவபோக நிலை வந்தடையும் என அறிவுரை அளித்த குருமுர்த்தியே வணக்கம்.

## தெய்வ மணி மாலை - 6

*காமவுட் பகைவனுற் கோபவெங் கொடியனும்
கனலோப முழு மூடனும்
கடுமோக வீணனும் கொடு மதமெனும் துட்ட
கண் கெட்ட ஆங்காரியும்*

*ஏமமறு மாச்சரிய விழலனும் கொலையென்
றியம்பு பாதகனுமாம் இவ்
வெழுவரும் இவர்க்குற்ற வுறவான பேர்களும்
எனைப்பற் றிடாம லருள்வாய்*

*சேமமிகு மாமறையி னோமெனும் மருட்பதத்
திறனருளி மலய முனிவன்*

குறிப்பு

*சிந்தனையின் வந்தனை யுவந்த மெய்ஞ்ஞானசிவ*
*தேசிக சிகாரத்னமே*

*தாமமொளிர் சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை:

பெரு நகரமான சென்னைக் கந்த கோட்டத்துள் எழுந்தருளும் கந்தசாமிக் கடவுளே, வேதங்களின் ஓம் என வழங்கும் அருள் மொழியின் கூறுகளை அகத்திய முனிவர்க்கு அருளி, அவர் சிந்தனைக்கண் வைத்துச் செய்த வழிபாட்டுக்கு அருளிய பெருமானே, காமம் எனும் உட்பகைவனும், கோபம் எனும் கொடியவனும், லோபம் எனும் முழு மூடனும், மோகம் எனும் வீணனும், கொடிய மதம் எனும் துட்டத்தனமும், ஆங்கார உருவினனும், மாச்சரியம் எனும் விழலனீம், கொலை எனப்படும் பாதகனுமாகிய எழுவரும், இவர்களின் உறவினரான பிறரும் எனைக் கைப்பற்றிக் கொள்ளாதவாறு அருள் செய்தல் வேண்டும்

## தெய்வ மணி மாலை - 7

*நிலையுறு நிராசையா முயர்குலப் பெண்டிரோடு*
*நிகழ் சாந்தமாம் புதல்வனும்*
*நெறிபெறு முதாரகுண மென்னுநற் பொருளுமருள்*
*நீக்கு மறிவாம் துணைவனும்*

*மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு*
*மனமெனும் நல்லே வலும்*
*வருசகல கேவல மிலாத விடமும் பெற்று*
*வாழ்கின்ற வாழ் வருள்வாய்*

*அலையிலாச் சிவஞான வாரியே யானந்த*
*அமுதமே குமுத மலர் வாய்*
*அணிகொள் பொற்கொடி பசுங்கொடி யிருபுறம் படர்ந்*
*தழகுபெற வருபொன் மலையே*

*தலைவர்புகழ் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*

*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

குறிப்பு

## உரை

கந்த கோட்டத்தில் எழுந்தருளும் கந்த வேளே, சண்முகத் தெய்வமணியே, சிவஞானக்கடலே, அமுதமானவனே, வலப்புறத்தில் வள்ளியுடனும் இடப்புறத்தில் தெய்வானையுடனும், அழகு திகழ வரும் பொன்மாலை போன்ற பெருமானே, நிலைத்த ஆசையில்லாமையும், சாந்தமும், நன்னெறியும், மயக்கத்தைப் போக்கும் நல்லறிவும், அடக்க இயல்பான நிராங்காரமும், தூ ய்மையுற்ற மனமும், சுத்த நிலையமாகிய இடமும் கொண்டு வாழும் சிவபோக வாழ்வை அருள்வாயாக.

# தெய்வ மணி மாலை - 8

*ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவு வேண்டும்*
*உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்*
*உறவு கலவாமை வேண்டும்*

*பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை*
*பேசா திருக்க வேண்டும்*
*பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்*
*பிடியா திருக்க வேண்டும்*

*மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் உனை*
*மறவா திருக்க வேண்டும்*
*மதி வேண்டும் நின்கருணை நிதி வேண்டும் நோயுற்ற*
*வாழ்வினான் வாழ வேண்டும்*

*தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

தருமம் செய்வோர் மிகுந்துள்ள சென்னையில் உள்ள கந்த கோட்டத்துள் எழுந்தருளும் கந்த வேளே, ஒருமுகப்பட்ட மனத்துடன் உன் மலர் போன்ற

திருவடிகளை நினைக்கும் உத்தமர்களின் உறவே எனக்கு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர் உறவு எனை அடையாதவாறு காக்க வேண்டும். பெருமையுடைய உன் புகழையே நான் பேசுபவனாகவும், பொய்ம்மை மொழிகளைப் பேசாதவனாகவும் இருக்க வேண்டும். பெருமைதரும் பெருநெறியையே கடைபிடிப்பவனாக அமைய வேண்டுமே அன்றி மதம் எனும் பேயால் பிடிபடாதவனாக இருக்க வேண்டும். இயல்பாகவே தோன்றும் பெண்ணாசையை மறந்தொழியவும், அதற்கீடாக உனை மறவாதொழுக வேண்டும். மதிநுட்பமும், உன் கருணையும், நோயற்ற வாழ்வும் அளித்து அருள வேண்டும்.

**குறிப்பு**

## தெய்வ மணி மாலை - 9

*ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத*
*இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ*
*திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்*
*இடுகின்ற திறமும்இறையாம்*

*நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள*
*நினைவிடா நெறியும்அயலார்*
*நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று*
*நெகிழாத திடமும்உலகில்*

*சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர் தமைத்*
*தீங்குசொல் லாததெளிவும்*
*திரம்ஒன்று வாய்மையும் து'ய்மையும் தந்துநின்*
*திருவடிக் காளாக்குவாய்*

*தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்*
*தலம்ஓங்கு கந்தவேளே*
*தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே.*

### உரை

ஒரு பொருளை எனக்கு தானமாக கொடுங்கள் என்று நான் யாதொருவரிடமும் போய் "ஈ" (யாசகமாக கொடு) என்று மன்றாடக்கூடிய நிலையும், அப்படிக் கேட்பதையே என் இயல்பாக கொள்ளாமையும் என்னிடம் ஒருவர் வந்து ஒரு பொருளை தானமாக தந்துதவுங்கள் என்று கேட்கும்போது அவர் கேட்பதை மறுக்காமல், கேட்கும் பொருளை அளித்துதுதவ வேண்டும் என்று நிலைதவறாத,

**குறிப்பு**

உறுதியான கொள்கையும் யாவர்க்கும் இறைவனான நீ என்னை மறவாமல், எந்நேரமும் என்னருகில் இருந்து அருளக் கூடிய உன்னத நிலையும் நான் ஒரு நொடிகூட உள்ளத்தால் உன்னை மறவாமல், எந்நேரமும் உன்னையே சிந்தையில் வைத்து போற்றிப் பாடக் கூடிய பக்தி நெறியும் அடுத்தவர்களின் பொருள் மீது பேராசைப் பட்டு, அதனை கவர வேண்டாம். அதனை திருட வேண்டும் என்ற எண்ணம் கூட வாராத நல்ல மனமும் மெய்யானதான உனை அடையும் வழியிலிருந்து என்றென்றும் பிறழாமல், மனம் தளராமல் இருக்கக்கூடிய உறுதியும் அடுத்தவரை சீ, பேய், நாய் என்று இகழ்சொற்களால் தூற்றாமல் இருக்கக்கூடிய தெளிவான, அன்பான சிந்தனையும்இதில் பிறத்தமை என்று அர்த்தம் கொண்டால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதென் கருத்து.ஒருவரின் பிறப்பைக் கொண்டு அவரை வன்சொற்களால் இகழாத அன்பான சிந்தனையும் உறுதியாய் இவையெல்லாவற்றையும், அவற்றுடன் கூட முக்கியமாக சத்தியத்தையே என்றும் பேசும் தன்மையும், உடற்தூய்மையுடன் சேர்த்து மனத்தூய்மையும் எனக்கு அருளிச்செய்து, உன் அழகிய தெய்வீகத் திருவடிகளை அடையக் கூடிய தகுதியை உடையவனாக என்னை செய்வாய்!யார் இவையெல்லாம் தந்தருள வேண்டும்? சென்னையிலிருக்கும் கந்தக்கோட்டத்தமெனும் போற்றப்படற்குரிய(வளர்) தலத்தில் அனைவரும் புகழ, என் தாயின் ஸ்தானத்தில் நிற்கும் கந்தவேளே!

தனக்குள்ளேயே எல்லாமுமாய் நிற்கும் மணியே!உன்னையே நினைத்து, தம்முள் இழுத்து, நிறுத்தியிருப்போர்க்கு முடிவில்லாமல் அருளும் சைவ மணியே!ஆறுமுகத்தை உடைய என் தெய்வமணியே!

## தெய்வ மணி மாலை - 10

*கரையில்வீண் கதையெலா முதிர்கருங் காக்கைபோல்*
*கதறுவார் கள்ளுண்ட தீக்*
*கந்தம் நாறிட வூத்தை காதம் நாறிட வுறு*
*கடும் பொய்யிரு காதம் நாற*

*வரையில்வாய் கொடுதர்க்க வாதமிடுவார் சிவ*
*மணங்கமழ் மலர்ப்பொன் வாய்க்கு மவுன மிடுவாரிவரை*
*முடரென வோதுறு*

*வழக்குநல் வழக்கெனினும் நான்*
*உரையிலவர் தமையுறா துனதுபுகழ் பேசுமவ*

*ரோடுறவு பெற வருளுவாய்*
*உயர்தெய்வ யானையொடு குறவர்மட மானுமுள்*

*ளுவப்புறு குணக்குன்றமே*
*தரையிலுயர் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*

*தலமொங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

**குறிப்பு**

## உரை

தெய்வயானையையும், வள்ளிநாயகியையும் விரும்பும் குணக்குன்றே, நிலவுலகில் உயர்ந்த சென்னைக் கந்த கோட்டத்தில் ஓங்கும் கந்த வேளே, தெய்வமணியே, பயனற்ற கதைகளையெலாம் முதிய காக்கைப் போல உரைப்பாரிடமும், கள்ளுண்ட ஊத்தை வாய் நாற்றம் நெடுந்தூரம் பரவ பேசுவாரிடமும், பொய்ச்சொல் இருகாத தூரம் பரவ பேசுபவரிடமும், வரையின்றி தர்க்கம் செய்வோரிடமும், சிவமணம் கமழும் சொற்களை வாயால் ஓதாமல் மவுனம் கொள்பவரிடமும் நான் உறவு கொள்ளாமல் உன் புகழ் பேசும் நல்லோரிடம் உறவு பெற அருள் செய்ய வேண்டும்.

## தெய்வ மணி மாலை - 11

*நாம்பிரமம் நமையின்றி யாம்பிரமம் வேறில்லை*
*நன்மை தீமைகளு மில்லை*
*நவில்கின்ற வாகியாந் தரமிரண்டினு மொன்ற*

*நடுநின்ற தென்று வீணாள்*
*போம்பிரம நீதி கேட்போர் பிரமையாகவே*
*போதிப்பர் சாதிப்பர் தாம்*
*புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினையொன்று*

*போந்திடிற் போக விடுவார்*
*சாம்பிரம்மா மிவர்கள் தாம் பிரமமெனு மறிவு*
*தாம்பு பாம்பெனு மறிவு காண்*
*சத்துவ வகண்டபரி புரணா காரவு*

*சாந்த சிவசிற் பிரம நீ*
*தாம்பிரிவில் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*

*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

குறிப்பு

## உரை

கந்தப் பெருமானே, தெய்வ மணியே, அளவுக்கு அகப்படாத பெருவெளியில் விளங்கும் ஞானப் பெரிய பொருளாகிறவன் நீ நாமே அப்பிரமமாகிய பெரிய பொருள் நம்மைமன்றிப் பிரமம் என வேறு இல்லை நன்மை தீமை என்பதும் இல்லை புறப்பூஜை, அகப்பூஜை என ஒன்றும் கிடையாது பிரமதியானமே நடுநிலையானது என நாளை வீணாக்குவர் பிரம நீதிகள் எனக் கூறி தர்க்க நெறியில் சாதிப்பர் அந்நிலையில் தம் புல்லிய நெறிகளைக் கைவிட மாட்டார் செய்வினை புகுந்து துன்பம் விளைவிக்கும் போது தம் பிரமக் கொள்கையைக் கைவிடுவர் சாகும் பிரமங்களாகிய இவர்கள் தம்மைப் பிரமம் எனச் சொல்லும் அறிவு தாம்புக் கயிறைப் பாம்பென்று எண்ணும் மயக்க அறிவேயாகும்.

## தெய்வ மணி மாலை - 12

*பார்கொண்ட நடையில் வன்பசி கொண்டு வந்திரப்*
*பார் முகம் பார்த்திரங்கும்*
*பண்புநின் திருவடிக் கன்புநிறை யாயுளும்*
*பதியு நன்னிதியு முணர்வும்*

*சீர்கொண்ட நிறையுமுட் பொறையு மெய்ப்புகழும் நோய்த்*
*தீமையொரு சற்று மணுகாத்*
*திறமுமெய்த் திடமு நல்லிடமு நின்னடியர் புகழ்*
*செப்புகின்றோ ரடைவர்காண்*

*கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலு மயிலுமொரு*
*கோழியங் கொடியும் விண்ணோர்*
*கோமான்றன் மகளுமொரு மாமான்றன் மகளுமால்*
*கொண்ட நின் கோல மறவேன்*

*தார்கொண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

பெரிய வீடுகள் நிறைந்த சென்னயிற் கந்த கோட்டத்துள் விளங்கும் கந்த வேளே, தெய்வ மணியே, மிகுந்த பசியுடன் இரப்பவரிடம் மனம் இரங்கும் பண்பும், உன் திருவடிக்கண் அன்பும், நிறைந்த வாழ்நாளும், வீடும், நன்மை

**குறிப்பு**

செய்ய செல்வமும், உணர்வும், சிறப்புடைய நிறையும், எதையும் பொறுத்துக் கொள்ளும் பொறுமையும், நிலைத்த புகழும், நோயோ தீங்கோ ஒரு சிறிதும் அணுகா கூறுபாடும், மெய்வன்மையும், நல்லோர் உறையும் இடமும், உன் அடியார் புகழ் பேசுவோர் பெறுவார்களாக. வேற்படையும், சேவற் கொடியும், மயில் ஊர்தியும் பொருந்திய தோற்றத்தையும், தெய்வானையும், வள்ளியும் காதல் கொண்ட நின் கோலத்தையும் நான் மறவேனாகுக.

## தெய்வ மணி மாலை - 13

*வன்பெரு நெருப்பினைப் புன்புழுப் பற்றுமோ*
*வானை யொருமான் தாவுமோ*
*வலியுள்ள புலியை யோர் எலி சீறுமோ பெரிய*
*மலையை யோர் ஈச் சிறகினால்*

*துன்புற வசைக்குமோ வச்சிரத் தூணொரு*
*துரும்பினால் துண்டமாமோ*
*சூரியனை யிருள்வந்து சுழுமோ காற்றில்மழை*
*தோயுமோ இல்லையது போல்*

*அன்புடைய நின்னடியர் பொன்னடியை யுன்னுமவர்*
*அடிமலர் முடிக்கணிந் தோர்க்*
*கவலமுறுமோ காம வெகுளி யுறுமோ மனத்*
*தற்பமும் விகற்ப முறுமோ*

*தன்புகழ் செய் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

கந்தப் பெருமானே, தெய்வ மணியே, பெரிய நெருப்பை புழு பற்ற முடியுமா? வானகத்தை மான் தாவியடைய முடியுமா? புலியை எலி நேர் நின்று சீற முடியுமா? பெரிய மலையை ஈ தன் சிறகால் அசைக்க முடியுமா? வச்சிரத்தாலான தூணை சிறு துரும்பினால் துண்டாக்க முடியுமா? சூரியனை இருள் சூழ்ந்து கொள்ள முடியுமா? மழைநீர் உறைவது போல் காற்றை உறையச் செய்ய முடியுமா? ஒருகாலும் முடியாது. அதுபோல உன் திருவடியை சிந்தித்து பரபுவரை அவலமோ, காமமோ, வெகுளியோ அடைய முடியுமா?

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 14

*கானலிடை நீருமொரு கட்டையிற் கள்வனும்*
*காணுறு கயிற்றி லரவும்*
*கடிதரு கிளிஞ்சிலிடை வெள்ளியும் பொன்னைக்*
*கதித்த பித்தளையி னிடையும்*

*மானலிற் கண்டுளம் மயங்கல்போற் கற்பனையை*
*மாயையிற் கண்டு வீணே*
*மனையென்றும் மகவென்றும் உறவென்றும் நிதியென்றும்*
*வாழ்வென்றும் மான மென்றும்*

*ஊனலி னுடம்பென்றும் உளமென்றும்*
*உள்ளென்றும் வெளியென்றும் வான்*
*உலகென்றும் அளவறு விகாரமுறநின்ற வெனை*
*உண்மை யறிவித்த குருவே*

*தானமிகு சென்னையிற் கந்த கோட்டத்துள்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

### உரை

தான தருமம் மிகுந்த சென்னை கந்த கோட்டத்தில் எழுந்தருளும் கந்த வேளே, தெய்வ மணியே, கானலில் நீரும், மரக்கட்டையில் கள்வனும், கயிற்றின்கண் பாம்பும், கிளிஞ்சலில் வெள்ளி போலவும், மெருகிட்ட பித்தளை பொன் போலவும் ஒன்றுக்கொன்று ஒப்பத் தோன்றி உள்ளம் மயங்குவது போல, மனம் காட்டும் மாயையைக் கண்டு மனைவி எனவும், மகவெனவும், உறவு எனவும், நிதி எனவும், வாழ்வு எனவும், மானம் எனவும், உடம்பு எனவும், உயிர் எனவும், உள்ளமெனவும், உள் எனவும், வெளி எனவும், வான் எனவும், மண்ணுலகு எனவும் நின்ற எனை உண்மை உணர்வித்த குருவே, உனக்கு என் வணக்கம்.

## தெய்வ மணி மாலை - 15

*கற்றொளிகொள் உணர்வினோர் வேண்டாத விப்பெருங்*
*கன்ம வுடலிற் பருவம் நேர்*
*கண்டழியு மிளமைதான் பகல் வேடமோ புரைக்*
*கடனீர் கொலோ கபடமோ*

குறிப்பு

*உற்றொளியின் வெயிலிட்ட மஞ்சளோ வானிட்ட*
*ஒருவிலோ நீர்க் குமிழியோ*
*உலையனல் பெறக் காற்றுள் ஊதும் துருத்தியோ*
*ஒன்றுமறியே னிதனை நான்*

*பற்றுறுதியாக் கொண்டு வனிதையர்கண் வலையினில்*
*பட்டுமதி கெட்டுழன்றே*
*பாவமே பயில்கின்ற தல்லாது நின்னடிப்*
*பற்றணுவு முற்றறி கிலேன்*

*சற்றையகல் சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

சென்னைக் கந்த கோட்டத்துள் விளங்கும் கந்த வேளே, தெய்வ மணியே, ஞான உணர்வு கொண்ட சான்றோர் விரும்பாத உடம்பில் பல பருவங்களைக் கொண்டு நீங்கும் இளமைப் பருவம், பகல் வேடமோ, கபடத் தோற்றமோ, வானவில்லோ, நீர்க்குமிழியோ, ஒன்றையும் அறியேன். உன் திருவடிக்கண் பற்றுக்கொண்டு ஒழுகுவது நல்வினையாகும். அதனை நான் செய்யாமல் மகளிர் கண்பார்வையாகிய வலையில் அகப்பட்டு அறிவிழந்து பாவமே செய்கின்றேன். இனி யான் யாது செய்வது?

## தெய்வ மணி மாலை - 16

*சடமாகி யின்பந் தராதாகி மிகுபெருஞ்*
*சஞ்சலா காரமாகிச்*
*சற்றாகி வெளிமயல் பற்றாகி யோடுமித்*
*தன்மை பெறு செல்வமந்தோ*

*விடமாகி யொரு கபட நடமாகி யாற்றிடை*
*விரைந்து செலும் வெள்ளமாகி*
*வேலை யயாகி யாங்கார வலையாகி முதிர்*
*வேனிலுறு மேக மாகிக்*

*கடமாய சகடமுறு காலாகி நீடுவாய்க்*
*காலோடு நீராகியே*

குறிப்பு

*கற்பிலா மகளிர் போற் பொற்பிலா துழலுமிது*
*கருதாத வகை யருள்வாய்*

*தடமேவு சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்ய மணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

சென்னைக் கந்த கோட்ட கந்தசாமிக் கடவுளே, தெய்வ மணியே, சடப் பொருளாய், பெரும் மனக்கலக்கம் தரும் வடிவமாய், நிலையிலாத் தன்மையாய் விளங்கும் செல்வம் தன்னையுடையவர்க்கு வி'மாய், உள்ளதை மறைத்து இல்லார் போல் கபட நாடகமாடுவதற்கு ஏதுவாய், காட்டாற்று வெள்ளம் போல விரைந்து நீங்கும் தன்மையுடையதாய், ஒருகால் அதிகமாவதும் ஒருகால் குறைவதுமாகிய கடலலைப் போன்றதாய், வாய்க்கால் நீர் வேண்டும் நெல்லுக்கும், வேண்டாத புல்லுக்கும் பாய்வது போல நல்லார் பொல்லார் என எவர்க்கும் பயன்படுவதாய் விளங்கும் செல்வத்தை விரும்பாத வண்ணம் எனக்கு அருள் புரிக.

## தெய்வ மணி மாலை - 17

*உப்புற்ற பாண்டமென வொன்பது துவாரத்துள்*
*உற்றசும் பொழுகு முடலை*
*உயர்கின்ற வானிடை யெறிந்தகல்லென்றும் மலையுற்றிழியு*
*மருவி யென்றும்*
*வெப்புற்ற காற்றிடை விளக்கென்றும் மேகமுறு*

*மின்னென்றும் வீசு காற்றின்*
*மேற்பட்ட பஞ்சென்றும் மஞ்சென்றும் வினை தந்த*
*வெறுமாய வேட மென்றும்*
*கப்புற்ற பறவைக் குடம்பை யென்றும் பொய்த்த*
*கனவென்றும் நீரி லெழுதும்*

*கையெழுத் தென்றுமுட் கண்டு கொண்டதி லாசை*
*கைவிடே னென் செய்குவென்*
*தப்பற்ற சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*

*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

குறிப்பு

கந்தப் பெருமானே, தெய்வ மணியே, உப்பு வைத்த மட்பாண்டம் போலப் புறத்தே நீரும் சீயும் கசியும் இவ்வுடம்பு , வானில் எறிந்த கல் போல, மலையிலிருந்து விழும் அருவி போல, வேகமாய் வீசும் காற்றில் ஏற்றி வைத்த விளக்கு போல, மழைமேகத்திடைத் தோன்றும் மின்னல் போல, காற்றில் பறக்கும் பஞ்சு போல, மரக்கிளையிற் கட்டப்பட்ட பறவைக்கூடு போல, நீர்மேல் எழுதும் எழுத்துப் போல இவ்வுடம்பு நிலையிலாதது. உப்பு வைத்த மட்பாண்டம் போலப் புறத்தே நீரும் சீயும் கசியும் இவ்வுடம்பின் மீது ஆசை நீங்கி அருள் செய்க.

## தெய்வ மணி மாலை - 18

*எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்*
*ஏக்கற்றி ருக்கும் வெறுவாய்*
*எங்கள் பெருமானுனை வணங்காத மூடர்தலை*
*இகழ்விற கெடுக்குந் தலை*

*கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்*
*கலநீர் சொரிந்த அழுகண்*
*கடவுணின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி*
*கைத்திழவு கேட்கும் செவி*

*பந்தமற நினையெணாப் பாவிகள்தம் நெஞ்சம்*
*பகீரென நடுங்கும் நெஞ்சம்*
*பரமநின் றிருமுன்னர்க் குவியாத வஞ்சர்க்கை*
*பலியேற்க நீள் கொடுங்கை*

*சந்தமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

அழகான சென்னைக் கந்த கோட்டத்துள் விளங்கும் கந்த வேளே, தெய்வ மணியே, உன்னை வாழ்த்தாத பேய் மக்களின் வாய், குடிக்கும் கூழுக்காகப்

குறிப்பு

பிறர் முன் ஏங்கி நிற்கும் வெறும் வாயாகும் உனை வணங்கா மூட மக்களின் தலை, எரிக்கப்படும் விறகு சுமக்கும் தலையாகும் உன் ஞானத் திருமேனியைக் காணா கீழ் மக்களின் கண்கள், புன்கணீர் சொறியும் அழுங்கண்ணாகும் உன் புகழைக் கேட்காத வீணர்களின் காது, கீழான சாவு கேட்கும் காதுகளாகும் பந்தம் அகற்ற அருளும் உனை எண்ணாத பாவிகளின் நெஞ்சம், அச்சத்தால் பகீரென நடுங்கும் நெஞ்சம் உன் முன் கூப்பாத கைகள் பிறர்முன் பிச்சைப் பெற ஏதுவாய் வளையும் கைகள் மேலும் அவரின் பிறப்பே மண்ணுக்கு சுமையாகும்.

## தெய்வ மணி மாலை - 19

*ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்*
*ளமுதுண்டு உவந்த திருவாய்*
*அப்பநின் திருவடி வணங்னோர் தலைமுடி*
*யணிந்தோங்கி வாழுந்தலை*

*மெய்நின் திருமேனி கண்டபுண்ணியர் கண்கள்*
*மிக்கவொளி மேவு கண்கள்*
*வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி*
*விழாச்சுபம் கேட்கும்செவி*

*துய்யநின் பதமெண்ணு மேலோர்க ணெஞ்சமெய்ச்*
*சுக ரூபமான நெஞ்சம்*
*தோன்றலுன் றிருமுன் குவித்த பெரியோர் கைகள்*
*சுவர்ண மிடுகின்ற கைகள்*

*சையமுயர் சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

மலையை விட புகழால் உயர்ந்த சென்னைக் கந்த கோட்ட பெருமானே, தெய்வ மணியே, உன் புகழைப் பேசும் அருட்செல்வர்களின் வாய், அமுதுண்டு' மகிழும் திருவாயாகும் உன் திருவடியை வணங்கினவர் தலை, மணிமுடி அணியும் சிறப்பான தலையாகும் உன் திருமேனியைக் கண்டு மகிழும் புண்ணியர்களின் கண்கள், அருளொளி பொருந்திய கண்கள் உன் புகழைப் பிறர் சொல்லக் கேட்கும் வித்தகரின் காதுகள், மணவிழா முதலிய சுபச்

செய்திகளையே கேட்கும் திருச்செவிகளாகும் உன் பாதத்தை எண்ணும் மேலோர்களின் நெஞ்சம், மெய்யான சுகவடிவான நெஞ்சமாகும் உன்னை வணங்கும் கைகள் பொன்னை வாரி வழங்கும் கைகள் அத்தகைய மேன்மையானவர்களின் புகழை வேறென்ன சொல்ல?

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 20

*உழலுற்ற வுழவுமுத லுறுதொழி லியற்றிமலம்*
*ஒத்தபல பொருளீட்டி வீண்*
*உறுவயிறு நிறைய வெண் சோறடைத் திவ்வுடலை*
*ஓதிபோல் வளர்த்து நாளும்*

*விழலுற்ற வாழ்க்கையை விரும்பினே னையவிவ்*
*வெய்யவுடல் பொய் யென்கிலேன்*
*வெளிமயக் கோமாய விடமயக்கோ வெனது*
*விதி மயக்கோ வறிகிலேன்*

*கழலுற்ற நின்றுணைக் கான்மலர் வணங்கிநின்*
*கருணையை விழைந்து கொண்டெம்*
*களைகணே யீராறு கண்கொண்ட வென்றனிரு*
*கண்ணே யெனப் புகழ்கிலேன்*

*தழைவுற்ற சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

கந்த வேளே, சைவமணியே, தெய்வ மணியே, உழவு முதலான தொழில்கள் செய்து பலவகையான பொருளைத் தேடிக் குவித்து வீணான வயிறால் இவ்வுடம்பை ஓதி மரம் போல நாளும் வளர்த்து வீழும் இவ்வாழ்வை விரும்பினேன் இவ்வுடம்பை பொய்யென எண்ணவில்லை இதற்கு காரணம் தோற்ற மயக்கமோ, பிறவி மயக்கமோ, என் விதி செயும் மயக்கமோ அறியமுடியவில்லை. அதனால் உன் திருவடிகளை வணங்கவில்லை. உன் பன்னிரண்டு கண்களை புகழவில்லை என் மயக்கத்தை ஒழித்து அருள் புரிக

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 21

*வானமெங் கேயமுத பானமெங்கே யமரர்*
*வாழ்க்கை யபிமான மெங்கே*
*மாட்சி யெங்கே யவர்கள் சூழ்ச்சி யெங்கே தேவ*
*மன்னரை சாட்சி யெங்கே*
*ஞான மெங்கே முனிவர் மோன மெங்கே யந்த*

*நான்முகன் செய்கை யெங்கே*
*நாரணன் காத்தலை நடத்த லெங்கே மறை*
*நவின்றிடு மொழுக்க மெங்கே*
*ஈனமங்கே செய்த தாருகனை ஆயிர*

*விலக்கமுறு சிங்க முகனை*
*எண்ணரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை*
*ஈந்துபணி கொண்டிலை யெனில்*
*தானமிங் கேர்சென்னைக் கந்த கோட்டத்துள்வளர்*

*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

### உரை

கந்த பெருமானே, சண்முகங்களையுடைய தெய்வ மணியே, தாருகாசுரனிடமும், சிங்கமுகாசுரனிடமும், சூரனிடமும் போர் புரிந்து பின் அவர்களுக்கு நல்லறிவு தந்து தன் திருவடியை வணங்குவித்தாய் உன் கருணை இல்லையேல் வானுலகமோ, அமுதபானமோ, வானவரின் வாழ்வோ, அவர்களின் தேவரெனும் அபிமானமோ, மாட்சிமையோ, இந்திரனின் ஆட்சியோ இல்லாது மறைந்திருக்கும் ஞானமோ, முனிவர்களின் தவமோ, பிரம தேவனின் படைப்புத் தொழிலோ, திருமாலின் காத்தல் தொழிலோ, வேதங்கள் உரைக்கும் ஒழுக்கமோ நடைப்பெற்றிருக்காது

## தெய்வ மணி மாலை - 22

*மனமான வொருசிறுவன் மதியான குருவையும்*
*மதித்திடா னின்னடிச் சீர்*
*மகிழ்கல்வி கற்றிடான் சும்மா விரான்காம*
*மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்*

குறிப்பு

*சினமான வெஞ்சுரத் துழலுவனு லோபமாம்*
*சிறுகுகையி னூடு புகுவான்*
*செறுமோக விருளிடைச் செல்குவான் மதமெனும்*

*செய்குன்றி லேறி விழுவான்*
*இனமான மாச்சரிய வெங்குழியி னுள்ளே*
*இறங்குவான் சிறிது மந்தோ*
*என்சொல் கேளானெனது கைப்படான் மற்றிதற்*

*கேழையே னென்செய்குவேன்*
*தனநீடு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

கந்த வேளே, சைவமணியே, தெய்வமணியே, என் மனமாகிய சிறுவன் அறிவாகிய குருவையும் மதிப்பதில்லை உன் திருவடிப்புகழை உரைக்கும் கல்வியைக் கற்கவுமில்லை சும்மா இருக்கவுமில்லை காமம் எனும் மடுவில் வீழ்ந்து சுழல்கிறான் சினம் எனும் வெம்மை நிலவும் நிலத்தில் திரிகிறான் உலோபம் எனும் சிறு குகையில் புகுந்து கொள்கிறான் மோகம் எனும் இருளில் இடர்படுகிறான் மதம் எனும் குன்றின் மேல் ஏறிக் குப்புற வீழ்கிறான் மாற்சரியம் எனும் குழியில் இறங்குகிறான் அந்தோ, என் சொல்லைக் கேளாவிட்டாலும் அவன் என் கைக்கு அகப்படுகிறானில்லை. இதற்கு ஏழையாகிய நான் என்ன செய்வேன்? நீ தான் துணை செய்ய வேண்டும்.

## தெய்வ மணி மாலை -23

*வாய்கொண் டுரைத்தலரி தென்செய்கே னென்செய்கேன்*
*வள்ளலுன் சேவடிக் கண்*
*மன்னாது பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை*
*வாய்ந்துழலு மெனது மனது*

*பேய்கொண்டு கள்ளுண்டு கோலினான் மொத்துண்டு*
*பித்துண்ட வன்குரங்கோ*
*பேசுறு குலாலனாற் சுழல்கின்ற திகிரியோ*
*பேதை விளையாடு பந்தோ*

குறிப்பு

*காய்கொண்டு பாய்கின்ற வெவ்விலங்கோ பெருங்*
*காற்றினாற் சுழல் கறங்கோ*
*காலவடிவோ இந்த்ர சாலவடிவோ எனது கர்ம வடிவோ அறிகிலேன்*
*தாய்கொண்ட சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*

*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

தாய்மைச் செயல் சிறந்த சென்னைக் கந்தக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள கந்த வேளே, தெய்வ மணியே, என் மன இயல்பை வாயால் உரைக்க முடியாது எளியேன் என் செய்வேன் வள்ளலாகிய உன் சேவடிக்கண் என் மனம் நில்லாமல் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை கொண்டு உழல்கிறது. மேலும், என் மனம் பேய் பிடித்துக் கள் குடித்துக் கோலால் அடியுண்டு பித்துபிடித்த குரங்கா, குயவனால் சுழற்றப்படும் சக்கரமா, சிறுவரால் விளையாடப்படும் பந்தா, பிற உயிர் மேல் பாயும் கொடிய விலங்கா, காற்றில் சுழலும் காற்றாடியா, காலன் வடிவா, இந்திர ஜால வடிவா, என் வினையின் வடிவா இன்னதென்று நான் அறியேன். இதனை உன் சேவடிக்கண் ஒன்றி நிற்குமாறு அருள் செய்க.

## தெய்வ மணி மாலை - 24

*கற்ற மேலவரொடும் கூடி நில்லேன் கல்வி*
*கற்குநெறி தேர்ந்து கல்லேன்*
*கனிவு கொண்டுனது திருவடியை யொருகனவிலும்*
*கருதிலே னல்ல னல்லேன்*

*குற்றமே செய்வதென் குணமாகு மப்பெருங்*
*குற்றமெல் லாங்குணமெனக்*
*கொள்ளுவது நின்னருட் குணமாகும் என்னில் எண்*
*குறைதவிர்த் தருள் புரிகுவாய்*

*பெற்றமேல் வருமொரு பெருந்தகை யினருளுருப்*
*பெற்றழுந் தோங்கு சுடரே*
*பிரண வாகார சின்மய விமல சொருபமே*
*பேதமில் பரப் பிரமமே*

*தற்றகைய சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

குறிப்பு

## உரை

தன்னளவில் அழகமைந்த சென்னைக் கந்த கோட்டத்துள் சிறக்கும் கோயிலில் எழுந்தருளும் கந்தவேள் கடவுளே, தெய்வ மணியே, ஒப்பற்ற சிவபெருமானுடைய அருளைப் பெற்று விளங்கும் சுடரே, ஓங்கார வடிவாய் ஞான மயமாய் தூய உருவாய் திகழும் பிரமப் பொருளே, கல்வியை கற்கும் நெறி அறிந்து நான் கற்றிலேன் கற்றுணர்ந்த மேன்மக்களோடு கூடி நிற்கவில்லை உள்ளம் உருகி உன் திருவடியைக் கனவிலும் நினைக்கவில்லை நல்ல பண்புடையவனும் அல்ல் குற்றம் செய்வதே என் குணமாகும் அக்குற்றங்களையெலாம் குணமாகக் கொண்டருளுவது உன் அருட் குணம் என்பதால் என் குறைகளைப் பொறுத்தருளுக.

## தெய்வ மணி மாலை - 25

*பாய்ப்பட்ட புலியன்ன நாய்ப்பட்ட கயவர்தம்*
*பாழ்ப்பட்ட மனையில் நெடுநாள்*
*பண்பட்ட கழுநீரும் விண்பட்ட வின்னமுது*
*பட்ட பாடாகு மன்றிப்*

*போய்ப்பட்ட புல்லுமணி பூப்பட்ட பாடுநற்*
*பூண்பட்ட பாடு தவிடும்*
*புண்பட்ட வுமியுமுயர் பொன்பட்ட பாடவர்கள்*
*போக மொரு போக மாமோ*

*ஆய்ப்பட்ட மறைமுடிச் சேய்ப்பட்ட நின்னடிக்*
*காட்பட்ட பெரு வாழ்விலே*
*அருள்பட்ட நெறியுமெய்ப் பொருள்பட்ட நிலையுமுற*
*அமர்போகமே போகமாம்*

*தாய்ப்பட்ட சென்னையிற் கந்த கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

**குறிப்பு**

## உரை

கந்தப் பெருமானே, தெய்வ மணியே, புலி போலவும் நாய் போலவும் கயவர்கள் தம் வீடுகளில் சோறு வடித்த நீருக்கு படும்பாடு தேவர்கள் அமுது பெறப் பட்ட பாடு போலாகும் வயல் புல்லுக்கும், தோட்டப் பூவுக்கும் அவர்கள் படும் பாடு நல்ல அழகிய பூ ஆரத்திற்கு படும் பாடாகும் இவ்வாறு பெரும்பாடுபட்டு நுகரும் போகம் போகமாகாது. அறிவால் ஆராயப்படும் வேதமுடிவுக்கும் அப்பாற்பட்ட உன் திருவடிக்கு ஆட்படும் நெறியே நிலையான போகம் உயர்வான போகமாகும்.

# தெய்வ மணி மாலை - 26

*சேவலங் கொடிகொண்ட நினையன்றி வேறுசிறு*
*தேவரைச் சிந்தை செய்வோர்*
*செங்கனியை விட்டு வேப்பங் கனியை யுண்ணுமொரு*
*சிறுகருங் காக்கை நிகர்வார்*

*நாவலங் காரமற வேறுபுகழ் பேசிநின்*
*நற்புகழ் வழுத்தாத பேர்*
*நாய்ப்பால் விரும்பியான் றூய்ப்பாலை நயவாத*
*நவையுடைப் பேயராவார்*

*நீவலந் தரநினது குற்றேவல் புரியாது*
*நின்றுமற் றேவல் புரிவோர்*
*நெல்லுக் கிறைக்காது புல்லுக் கிறைக்கின்ற*
*நெடிய வெறு வீணராவர்*

*தாவலம் சென்னையிற் கந்தகோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

மருத வயல்கள் பொருந்திய சென்னையிற் விளங்கும் கந்த வேளே, தண்ணிய ஒளி பொருந்திய தூய மணிகளுள் சைவமணியாய்த் திகழும் ஆறுமுகம் கொண்ட தெய்வ மணியே, சேவல் கொடியைக் கொண்ட உன்னை விட்டு வேறு தெய்வங்களை வழிபடுவோர், செவ்வாழைக் கனியை விட்டு வேப்பம் பழத்தை உண்ணும் காக்கைக்கு ஒப்பாவர் சொல்லழகின்றி வேறு புகழைப்

பேசி உன் புகழை ஓதாதோர் நாயின் பாலை விரும்பி பசுவின் தூய பாலை விரும்பாத பேய் மக்களாவர் உன் பொருட்டு ஏவின பணி புரியாமல் பிறர்க்கு அரும்பணி செய்பவர், நெல்லுக்கு நீர் இறைக்காமல் புல்லுக்கு இறைக்கும் வீணராவர்.

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 27

*பிரமனினி யென்னைப் பிறப்பிக்க வல்லனோ*
*பெய்சிறையி லின்னும் ஒருகால்*
*பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்*
*பெறுந் துயர் மறந்து விடுமோ*

*இரவுநிற முடையியமன் இனியெனைக் கனவினும்*
*இறப்பிக்க வெண்ண முறுமோ*
*எண்ணுறா னுதையுண்டு சிதையுண்ட தன்னுடல்*
*இருந்த வடு எண்ணுறானோ*

*கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனையொரு*
*காசுக்கு மதியே னெலாம்*
*கற்றவர்கள் பற்றுநின் திருவருளை யானும்*
*கலந்திடப் பெற்று நின்றேன்*

*தரமருவு சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே.*

## உரை

மேன்மை பொருந்திய சென்னை கந்தசாமிக் கடவுளே, தெய்வ மணியே, பெரியோர்கள் பற்றாக நினைக்கும் உன் திருவருளில் யானும் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன் ஆதலால், பிரமதேவன் எனை மீண்டும் பிறக்கச் செய்யும் வலிமையுடையவனா? பிரணவப் பொருளை சொல்லாததால் நீ பிரமனை சிறையிலடைத்ததையையும், அதற்கு முன் அவன் துன்புற நீ குட்டியதையும் மறந்திருப்பானோ? எமன் எனை இப்பொழுது இறக்கச் செய்ய கனவிலும் நினைப்பானோ? மார்க்கண்டன் பொருட்டு சிவபெருமானால் உதையுண்டு புண்பட்டு ஆறிய தன் வடுவை நினைப்பானோ? மறைந்திருந்து தாக்கும் வினையை ஒரு காசுக்குக் கூட மதிக்க மாட்டேன்

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 28

*நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற*
*நிலனுண்டு பலனுமுண்டு*
*நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட*
*நெறியுண்டு நிலையு முண்டு*

*ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு*
*உடையுண்டு கொடையு முண்டு*
*உண்டுண்டு மகிழவே யுணவுண்டு சாந்தமுறும்*
*உளமுண்டு வளமு முண்டு*

*தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள*
*செல்வங்கள் யாவுமுண்டு*
*தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்*
*தியான முண்டாயி னரசே*

*தாருண்ட சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

### உரை

உயரிய மாடி வீடுகள் நிறைந்த சென்னைக் கந்த கோட்டத்துள் கோவில் கொண்டருளும் கந்த வேளே, தெய்வ மணியே, தேனையுண்ணும் வண்டு இனம் சூழும் கடம்பமாலையணியும் உன் திருவடிகளைத் தியானிப்போர்க்கு, நீர்நிலைகளில் உள்ள நீரை முகந்து பெய்யும் கார்முகிலின் தண்ணீரை உண்டு விளையும் நிலபுலங்களும் அவற்றால் எய்தும் பயனும் உண்டாகும் அதனால் நிதியுண்டாகும் புகழ் உண்டாகும் நல்ல அறிவுண்டாகும் உயர்கதி பெறும் நெறியும் அதனால் எய்தப்படும் நிலையும் உண்டாகும் ஊரும் பேரும் உண்டாகும் நவமணிகள் பதித்த ஆபரணங்களும் உண்டாகும் உயர்ந்த ஆடைகளும் உண்டாகும் இல்லாதவர்க்கு கொடுக்கும் ஈகைச் செயலும் உண்டாகும் இனியன உண்டுமகிழ மேலான உணவும் உண்டாகும் உள்ளத்தில் சாந்தமும் ஞான உணர்வும் உண்டாகும் ஊர்தியாய் தேரும் யானையும் குதிரையும் மற்றும் செல்வங்கள் அனைத்தும் உண்டாகும்.

குறிப்பு

## தெய்வ மணி மாலை - 29

*உளமெனது வசநின்ற தில்லையென் தொல்லைவினை*
*ஒல்லைவிட் டிடவு மில்லை*
*உன்பதத் தன்பில்லை யென்றனக் குற்றதுணை*
*யுனையன்றி வேறுமில்லை*

*இளையனவ னுக்கருள வேண்டுமென் றுன்பால்*
*இசைக்கின்ற பேருமில்லை*
*ஏழையவனுக் கருள்வ தேனென்று னெதிர்நின்று*
*இயம்புகின் றோரு மில்லை*

*வளமருவு முனது திருவருள் குறைவ தில்லைமேல்*
*மற்றொரு வழக்கு மில்லை*
*வந்திரப் போர்களுக் கிலையென்ப தில்லைநீ*
*வன்மனத் தவனு மல்லை*

*தளர்விலாச் சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

### உரை:

கந்த வேளே, தெய்வ மணியே, என் உள்ளம் என்வசமாய் நிற்பதில்லை என் முன்வினையும் விரைவில் விட்டு நீங்கவில்லை உன் திருவடியில் அன்பு செய்வதுமில்லை எனக்கு உற்ற துணை உனையன்றி யாருமில்லை இவனுக்கு அருள் செய்யவேண்டும் என உன்னிடம் எனக்காக எடுத்துரைப்பவருமில்லை அவனுக்கு அருள் புரிவது எதற்கு என உன் திருமுன் நின்று எனை எதிர்த்து மொழிபவருமில்லை உன் அருட்செல்வம் குறைந்து போவதுமில்லை உன்னிடம் இரப்பவர்க்கு இல்லையென நீ சொல்வதும் கிடையாது நிலைமை இவ்வாறிருக்க உன் அருள் பெறாது நான் வருந்துவதற்கு காரணம் அறியேன்.

## தெய்வ மணி மாலை - 30

*எத்திக்கு மென்னுளம் தித்திக்கும் இன்பமே*
*என்னுயிர்க் குயிராகு மோர்*
*ஏகமே ஆனந்த போகமே யோகமே*
*என்பெருஞ் செல்வமே நன்*

குறிப்பு

*முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான*
*மூர்த்தியே முடிவிலாத*
*முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்*
*முத்தாடும் அருமை மகனே*

*பத்திக்கு வந்தருள் பரிந்தருளும் நின்னடிப்*
*பற்றருளி யென்னை யிந்தப்*
*படியிலே யுழல்கின்ற குடியிலே ஒருவனாப்*
*பண்ணாம லாண்டருளுவாய்*

*சத்திக்கு நீர்ச் சென்னைக் கந்த கோட்டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

## உரை

முழங்குகின்ற கடற்கரையில் உள்ள சென்னை நகர் கந்தகோட்ட கந்தசாமிக் கடவுளே, தெய்வ மணியே, எப்பக்கம் நோக்கினும் உள்ளத்தில் தோன்றி இனிக்கும் இன்ப வடிவே, என் உயிர்க்குயிராய் விளங்கும் தனிப் பொருளே, ஆனந்த போகம் தருபவனே, எனக்கு கிடைத்த பெருஞ் செல்வமே, முக்திப் பேற்றுக்கு முழுமுதலான பெருமானே, மெய்யுணர்வின் உருவே, முடிவிலாத முருகப் பெருமானே, நெடியோனாகிய திருமால் மருமகனே, சிவபெருமான் முத்தமிட்டு இன்புறும் அரிய மகனே, உன் திருவடியை எனக்குப் பற்றாக உதவி இவ்வுலகில் திரியும் குடிகளில் ஒருவனாக்காமல் ஆட் கொண்டருளுவாயாக.

## தெய்வ மணி மாலை - 31

*நான்கொண்ட விரதநின் னடியலாற் பிறர்தமை*
*நாடாமை யாகுமிந்த*
*நல்விரத மாங்கனியை இன்மையெனு மொருதுட்ட*
*நாய்வந்து கவ்வி யந்தோ*

*தான்கொண்டு போவதினி யென்செய்வே னென்செய்வேன்*
*தளராமை யென்னும் ஒருகைத்*
*தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்*
*தன்முகம் பார்த் தருளுவாய்*

*வான்கொண்ட தெள்ளமுத வாரியே மிகுகருணை*

*மழையே மழைக் கொண்டலே*
*வள்ளலே யென்னிருகண் மணியே யெனின்பமே*
*மயிலேறு மாணிக்கமே*

*தான்கொண்ட சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

குறிப்பு

## உரை

கந்தவேள் கடவுளே, தெய்வ மணியே, தெள்ளிய அமுதக்கடல் உருவாயவனே் கருணையாகிய மழையே் அம்மழையைப் பொழியும் மேகமே, வள்ளலே, என் கண்ணின் மணி போல்பவனே, யான் பெறும் இன்ப வடிவே, மயில் மேல் அமர்ந்து வரும் மாணிக்க மணியே, நான் கொண்ட கொள்கை நின் திருவடியன்றிப் பிறரை நாடிச் செல்லாமையாகும் இந்த கொள்கையாகிய கனியை வறுமையெனும் ஒரு துட்டதனம் படைத்த நாய் தன் வாயாற் கவ்வி ஓடுகிறதே, நான் என்ன செய்வேன்? தளர்ச்சியிலாமை என்ற கைத்தடி கொண்டு அடித்துத் துரத்த வலிமையில்லைதவனாக உளேன் அதனால் என் முகம் பார்த்து அருள் நல்க வேண்டுகிறேன். தெய்வ மணிமாலை முற்றிற்று.

### பயிற்சி வினாக்கள்

1. தாயுமானவர்பற்றிகுறிப்புவரைக.
2. பேரின்பத்தின் இறுதி இலக்குயாது?
3. கீழ் மக்களளோடு கூடாதாவாறு எவ்வாறு அருள் புரிய வேண்டி தாயுமானவர் கந்த பெருமானிடம் இறைஞ்சுகிறார்?
4. நிலையுறு நிராசையா-எனத் தொடங்கும் தெய்வ மணிமாலை-7ஆம் பாடலை விளக்குக.
5. செல்வத்தை விரும்பாத வண்ணம் அருள் புரியுமாறு எவ்வாறு கந்தவேளை ஆசிரியர் வேண்டுகிறார்?
6. தன் மனமாகிய சிறுவன் தன் கைக்கு எவ்வாறெல்லாம் அகப்படவில்லை என தாயுமானவர் முருகனிடம் எவ்வாறு முறையிடுகிறார்?

குறிப்பு

# கூறு 13

# பராபரக் கண்ணி - குணங்குடி மஸ்தான் சாகிபு

தமிழ் இலக்கிய பரப்பில் சங்க இலக்கியங்களை அடுத்து எழுந்த காப்பியங்கள் பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றிச் செழித்தன. கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் சிற்றிலக்கியங்களுடன் தனித்தனிப் பாடல்களும் தோன்றி எழுதியவரின் பெயரில் தொகுத்து வெளியிடும் தொகுப்பு முயற்சியும் இடம் பெற்றுள்ளன. அந்த வகையில் அமைந்த நூல்களுள் ஒன்றே குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள் என்னும் தொகுப்பு.

தொண்டி நகருக்கருகில் அமைந்துள்ள குணங்குடி என்னும் ஊரில் கி.பி. 1792 (ஹிஜ்ரி 1207) இல் தோன்றினார். இவருடைய தந்தையார் தமிழ்ப் புலமை சான்ற திரு.நயினார் முகமது என்பவர். தாயார் திருமதி பாத்திமா என்பவர். பெற்றோர் இவருக்குச் சூட்டிய திருப்பெயர் சுல்தான் அப்துல் காதிர் என்பது இளமை முதலே திருக்குர்ஆன் ஓதி முற்றும் கற்றுணர்ந்து “ஆலீம்“ என்னும் பட்டம் பெற்றவர். கீழக்கரையைச் சார்ந்த தைக்கா சாகிபு என்பாரின் மாணாக்கராய்த் திகழ்ந்து அனைத்தும் கற்றுத் தேர்ந்தார். இவர் பற்றறுத்த பண்பாளர்.

கி.பி. 1813 இல் மௌல்வி ஷாம் சாகிபு என்பவரிடம் முறையாகத் தீட்சைப் பெற்று பகலில் நோன்பு, இரவில் தொழுகை, யோகா நிட்டையில் ஆழ்தல் எனக் கொண்டு வழலானார். திருப்பரங்குன்றம், சதுரகிரி, புறாமாலை, நாகமலை, ஆனைமலை, காடு, செடிகள் நிறைந்த புதர்கள், குப்பைமேடுகள் எனத் தங்கி தவமியற்றி வந்தார்.

சருகு, கிழங்கு, காய்கள், கனிகள் இவற்றையே உணவாகக் கொண்டார். மக்கள் இவரை அற்புதச் சித்தர், பித்த நடையர், போதை வெறி கொண்டவர் என்றெல்லாம் கருதினர். ஆனால் பலருக்கு இவர் ஞானோபதேசம் செய்துள்ளார். பல சித்துகளும் புரிந்துள்ளார்.

இறுதி நாட்களில் சென்னை இராயபுரத்தில் சப்பாத்திக் கள்ளி, மூங்கில்காடு, முட்புதர்கள் நிறைந்த பகுதியில் தனியாக தவம் செய்து வந்தார். அப்பகுதி இப்போது பாவா லெப்பை சாகிபு தோட்டம் என்று அழைக்கப்படுகிறது. தமது கருதப் பொதுமக்களுக்கு எழுதிக் காட்டினார். கி.பி. 1833 இல் பரிபூரணர் ஆனார்.

குறிப்பு

சரவணப்பெருமாள் ஐயர் இவர்மீது நான்மணிமாலையும், ஐயாசாமி முதலியார் இவர்மீது தோத்திரப்பாவும் கீர்த்தனமும், சபாபதி முதலியார் பஞ்சரத்தினமும், செய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலீம் புலவர் இவர் மீது ஒருபா ஒருபஃதும், தோத்திரப்பாவும், 290 அடிகள் கொண்ட வாயுறை வாழ்த்தும் பாடியுள்ளனர்.

குணங்குடியாரின் பாடல்களில் பத்து, சதகம், கொச்சகம், அனந்தக்களிப்பு, கண்ணி, கீர்த்தனை என்னும் சிற்றிலக்கிய அமைப்புகளைக் காணலாம். இவர் எழுதியுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1079 என்பர்.

**1. அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான்**
**கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே.**

பராபரமானவனே! அண்டங்களிலும், உலகத்திலும், எல்லா காலங்களிலும் நீ ஆடிக் கொண்டிருக்கக் கூடியதான திருக்கூத்தினை, தரிசனம் செய்து நான் மகிழ்ந்திடும் படியாக, எனக்குக் காட்டி அருள வேண்டும்.

**2 ஆதியாய் ஆண்டவனாய் அ∴ததுவாய் நின்ற பெருஞ்**

சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.

பராபரமானவனே! முதற்பொருளாகவும், இறைவனாகவும், அது அதுவாகவும், சோதி வடிவமாகவும், ஏதுமற்ற நிர்மலப் பொருளாகவும் எங்களைச் சூழ்ந்துள்ளாய்!

**3 . வேத மறைப்பொருளை வேதாந்தத் துஉட்கருவை**

ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே.

பராபரமானவனே! வேதத்தின் பொருளினையும் வேதாந்தத்தின் உட்கருவான பொருளினையும் ஓத, அதன்மூலமாக உன்னை அறிந்தவர்கள் யார் இருக்கின்றார்கள்?

**4 அண்ட புவனமுடன் ஆகாச மென்று உசும்பிக்**

கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே.

பராபரமானவனே! அண்டங்களும், உலகங்களும், வானில் வாழ்கின்றவர்களும் என்று அனைவரும் அனைத்துப் பொருள்களும், வணங்கிக் கொண்டாடக் கூடியதான உண்மை ஞானக் கடத்தனவனே!

**5 நாவாற் புகழ்க்கெட்டா நாயகனே நாதாந்தம்**

பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே.

பராபரமானவனே! நாவினால் புகழ்ந்திடக் கூடியதான செயலாலும் தொட முடியாததான உயர்ந்த தன்மையுடைய நாயகனே? இனிய இசையானது பூவின் வாசம் எங்கும் பரவுவது போன்ற தன்மையுடன் மலர்ந்த மலர் நீயே ஆவாய்.

குறிப்பு

**6. பேரால் பெரிய பெரும்பொருளே பேதைதனக்கு**
**ஆரா ரிருந்தும்பலன் ஆமோ பராபரமே.**

பராபரமானவனே! பெயர் சொன்னாலேயே அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடிய அளவில் புகழ் பெற்றதான பெரிய பொருளாக விளங்கிடக் கூடியவனே! ஏழையாகிய எனக்கு யார் இருந்தும் அதனால் என்ன பயன் உள்ளது.

**7. மாராய நற்கருணை மாவருள்சித் தித்திடவே**
**பாராயோ ஐயா பகராய் பராபரமே.**

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கிடைத்திடாத உயர்ந்த தன்மை உடையதான உன்னுடைய திருவருள் நிலையானது, எனக்குக் கைகூடும் படியாக அருள் செய்திட மாட்டாயா?

**8. ஆனாலு முன்பாதம் யாசித்து இருப்பதற்குத்**
**தானாய் இரங்கியருள் தாராய் பராபரமே.**

பராபரமானவனே! எப்படியானாலும் உன்னுடைய திருவடிகளை அடைந்திட விரும்பி வேண்டுவதற்கும், நீயாகவே மனமிரங்கி அருள் செய்திட வேண்டும்.

**9 நாதாந்த மூல நடுவீட்டுக்குள் இருக்கும்**
**மாதவத்தோர்க்கு ஆன மருவே பராபரமே.**

பராபரமானவனே! நாதத்துவத்தின் முடிவான மூலத்தின் நடுவிட்டினுள் எழுந்தருளியுள்ள பெருமையுடையவர்களான தவ ஆற்றல்களை உடையவர்களின் நட்புக்குரிய பொருளானவனே!

**10. உடலுக்கு உயிரேஎன் உள்ளமே உன்பதத்தைக்**
**கடலுமலை யும்திரிந்து காணேன் பராபரமே.**

பராபரமானவனே! உடலினுள்ளிருக்கின்ற என்னுடைய உயிரே! என்னுடைய மனமே! உன்னுடைய திருவடிகளைக் கடலிலும் மலையிலும் அலைந்து திரிந்து தேடியும் கூட காணவில்லை நான்!

**11. மாந்திரத்துக்கு எட்டா மறைப்பொருளே மன்னுயிரே**
**சேர்ந்தஎழு தோற்றத்தின் சித்தே பராபரமே.**

பராபரமானவனே! எல்லா விதமான உயர்ந்த மந்திரங்களாலும் கூட உணர்ந்திட முடியாததான வேதப் பொருளானவனே! நிலைத்த தன்மை உடைய உயிரே! சேர்ந்துள்ளதான ஏழுவகை யானப் பிறவிகளிலும் ஆடிடக் கூடியதான சித்துப் பொருளானவனே!

**12. தனியேனுக்கு ஆதரவு தாரணியில் இல்லாமல்**
**அனியாயம் ஆவதுனக்கு அழகோ பராபரமே.**

பராபரமானவனே! இந்த உலகத்தில் எந்த ஒரு துணையும் ஆதரவுமில்லாமல், அநியாயமாய்த் தனிமையாகக் கிடந்து கெட்டழிவதில் உனக்கு விருப்பமோ?

குறிப்பு

**13. ஓடித் திரிந்து அலைந்தும் உன்பாதம் காணாமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே.**

பராபரமானவனே! நான் பல இடங்களிலும் தேடி, ஓடித்திருந்தும், அலைந்தும் உன்னடைய திருவடிகளைக் காணாமல், மனம் வாடிக் கலங்கி நிற்கின்றேன். ஆகையினால், இனியாவது, தேவரான நீர் இந்த ஏழையின் முன்னர் எழுந்து அருள் செய்து காட்சிதர வரவேண்டும்.

**14. தூராதி தூரம் தொலைத்துமதில் உன்பாதம்
பாராத பாவத்தால் பயந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! மிக நீண்ட தூரங்களெல்லாம் அலைந்து திரிந்தும், அங்கெல்லாம் உன்னுடைய பாதங்களை தரிசனம் செய்ய முடியாமல், நான் வீணான பாவியானதனை எண்ணி பயந்தேன்.

**15. தேடக் கிடையலத திரவியமே தேன்கடலே
ஈடுனக்கும் உண்டோ இறையே பராபரமே.**

பராபரமாமவனே! தேடினாலும் கிடைத்திடாத செல்வமே! தேனான கடலே! தலைவனே! உனக்கு இணையானவர் யார் இருக்கின்ளூறார்கள்?

**16. அரிய பெரும்பொருளே அன்பாய் ஒருவார்த்தை
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே.**

பராபரமானவனே! அருமையான பெரிய பொருளே! நீ என்மேல் அன்பான ஒரு சொல்லை, மனப்பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

**17. ஐயோ எனக்கு உதவும் ஆதரவை விட்டுவிளூட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே.**

பராபரமானவனே! அய்யா, அடியவனான எனக்கு உதவி செய்யக் கூடியவரான உங்களையும் உங்கள் ஆதரவினையும் விட்டுவிட்டு, பெண்களின் மீது ஆசைகொண்டு தேடி அலைந்து கொண்டிருந்தேன்.

**18. எத்திசையும் நோக்கில் இசையாத் திருக்கூத்தாய்
வித்தைவிளை ஆட்டு விளைப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! எந்தத் திசையைப் பார்த்தாலும், பொருத்தமில்லாததான திருக்கூத்தினை ஆடியபடி நீ விளையாட்டினை வித்தையாகச் கெய்து கொண்டிருப்பாய்.

**19. எப்பொழுதும் உன்பதத்தில் என்கருத்தே எய்துதற்கு
இப்பொழுதே கைப்பிடித்தாய் இறையே பராபரமே.**

பராபரமானவனே! எல்லாக் காலங்களிலும் உன்னுடைய திருவடிகளிலேயே என்னுடைய மனமானது பதிந்து கிடக்க வேண்டும். அதற்காக இப்பொழுதே, அடியவனாகிய என் கையினைப் பிடித்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்.

குறிப்பு

**20. வாதுக்கு அடரவரும் வம்பரைப்போல் தோசிமனம்
ஏதுக்கு அடர்வதுயான் எளியேன் பராபரமே.**

பரபரமானவனே! வாதம் செய்வதனையே தொழிலாக உடையவர்கள் வீணான வம்புகளைத் தேடி அலைவர். அவர்களைப் போன்று பாவியாகிய என்னுடைய மனமும் அலைந்து கொண்டிருப்பது ஏன்? நான் அத்தகைய வலிமை உடையவன் இல்லை.

**21. கண்ணே மனோன்மணிய கண்பார்வைக் கெட்டதா
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.**

பரபரமானவனே! என்னுடைய கண்ணே! மனோன்மணியே! கண்ணின் பார்வைக்கு எட்டாமல் விரிந்து ஆகாயத்திலும் அடங்கிடாத வெட்ட வெளியாக உள்ளவனே!

**22. அடக்க தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே.**

பரபரமானவனே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது என்பது மிகவும் அறிய செயலாகும். ஆனாலும், அப்பொறிகளைக் கட்டிவைத்து அடக்கி அழக்கூடியதான அறிவினை எனக்கு அருளிச் செய்திடவேண்டும்.

**23. எத்தவங்கள் செய்தாலும் இன்பமுடன் உன்பதத்தை
முத்த ரொருபோது முற்றார் பராபரமே.**

பரபரமானவனே! உயிரானது முக்திநிலையினை அடைந்த தவத்தில் சிறந்த பெரியவர்கள், எத்தகையான கடினமான தவங்களைச் செய்து கொண்டிருந்தாலும், உன்னுடைய திருவடிகளை எப்போதும் மறவாமல் இருப்பார்கள்.

**24. சொல்லுக்கு இணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க
அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே.**

பரபரமானவனே! வார்த்தைகளில் அடக்கிட முடியாததான உயர்ந்த தன்மையுடையதான மந்திரங்களின் பொருளினை உணர்ந்த கொண்டிருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆகின்றது.

**25. நாற்றச் சடலமதை நம்பார் முகர்ந்திருக்க**
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே.

பராபரமானவனே! நாற்றம் வீசக்கூடியதான இந்த உடலானது நிலை யற்றது, என்பதனை நம்பாதவர்கள், முகர்ந்து பார்த்திடும் படியாக பூத்த மலர்ப் பூவே!

**26. சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றாமல் நின்றுகளைத்து அழுதேன் பராபரமே.**

பராபரமானவனே சோற்று முட்டையினைப் போன்றதான இந்த உடலினைச் சுமந்து, திரிந்து, அலைந்ததனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் ஏற்பட்ட களைப்பினால் அழுதேன்.

குறிப்பு

**27. காற்றுத் துருத்திதனைக் கல்லாய் அணைந்திருக்கச்
சூத்திரமாய் நின்றாய் கழியை பராபரமே.**

பராபரமானவனே! காற்றுத் துருத்தியான உடல் கல்லினைப் போன்றதென்று நினைத்து நான் அதையே சேர்ந்திருந்தேன். அதனுள் நீ சூத்திரமாய் நிறைந்திருந்தாய்.

**28. கோலத் திருவடிவு கோதையர்கள் ஆசையினால்
ஆலைக் கரும்புபோல் ஆனேன் பராபரமே.**

பராபரமானவனே! பெண்களின் மீது கொண்ட ஆசையின் காரணமாக, அழகான என்னுடைய உடலானது, ஆலையில் பட்ட கரும்பினைப்போல மெலிந்துவிட்டது.

**29. கேளாயோ என்கவலை கேட்டுஇறங்கி யேஎன்னை
ஆளாயோ ஐயாபாழ் ஆனேன் பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய துன்பம்தரும் கவலைகளைக் கேட்டு நீ, மனமிரங்கி, என்னை, உன்னடிமையாக ஆட்கொள்ள மாட்டாயா? நானே உன்பாற்பட்டவன் அல்லவா?

**30. எத்தனைதான் குற்றம் எதிர்த்தடிமை செய்தாலும்
அத்தனையும் நீபொறுப்பது அழகே பராபரமே.**

பராபரமானவனே! நான் எவ்வளவு தவறுகளைச் செய்தாலும், அவை அனைத்தையும் நீ பொறுத்துக் கொள்வது ஓர் அழகாகும்!

**31. அல்லல் வினையால் அறிவுகெட்ட ஆன்மாவாய்
நெல்லும் பதரும்என நின்றேன் பராபரமே.**

பராபரமானவனே! நான், துன்பத்தினை ஏற்படுத்தக் கூடியதான, நல்வினை,தீவினைகளினால் நெல்லும்,பதரும் போல் நிலையில்லாமல் இருந்தேன்.

**32. சொல்லரிய ஞானச் சுடரே ஒருவார்த்தைச்
செல்வம் பொழிந்திடநீ செப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! சொல்வதற்கு அறியதான ஞானஒளியாகத் திகழ்பவனே! ஒரு வார்த்தையான உபதேசமொழியினை, நீ எனக்குச் செல்வம் நிறையும் படியாகச் சொல்லிச் திருவருள் செய்திட வேண்டும்.

**33. நித்தம் உனைத்தொழ நிர்மூட னாய்இருக்கும்
பித்தனாய் ஏன்காண் பிறந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! ஒவ்வொரு நாலும் உன்னை வணங்காத முழு அறிவற்றவனாகப் பைத்தியம் போன்றவனான இயல்புடைய நான் ஏன் பிறந்தேன்?

**34. உற்றார்களும் உறவின்முறை யாராலும்
பேற்றார்க ளாலும்உனைப் பிரிந்தேன் பராபரமே.**

குறிப்பு

பராபரமானவனே! கற்றத்தவர்களும்,உறவின் முறையோர்களும், என் பெற்றோர்களால், நான் உன்னைப் பிரிந்து விட்டேன்.

**35. ஏழை முகம்பார்த் தெளியேனை எப்பொழுதும்**
**ஆழாம லாண்டர்ளேன் னழகே பராபரமே.**

பராபரமானவனே! அழகிய வடிவுடையவனே! நீ, ஏழை யாகிய என்னுடைய முகத்தினைப் பார்த்த, உன்னடிமையாகிய என்னை, எல்லா காலங்களிலும், தீவினையுனுள் மூழ்கி விடாமல் ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும்.

**36. பாவ உடலெடுத்துப் பாதகனா யான்பிறந்துன்**
**ஆவி கெடுவதுனக் கழகோ பராபரமே.**

பராபரமானவனே! பாவமாகிய உடல் எடுத்து நான் பாவியை அலைந்து, அதனால் என்னுடைய உயிரானது சீர் அழிவது என்பது உனக்கு அழகாகுமோ?

**37. வாராயோ வென்னிடத்தில் வந்தோருக்கா லென்றன்முகம்**
**பாராயோ சற்றே பகராய் பராபரமே.**

பராபரமானவனே! என்னிடம் நீ எழுந்தருள மாட்டாயா? அப்படி ஒரு முறையாவது வந்து என்னுடைய முகத்தினைக் கொஞ்சமம் நீ பார்க்க மாட்டாயா? அதை நீயே சொல்வாய்!

**38. பார்க்கப் பலவிதமாய்த் பல்லுயிருக் குள்ளிருந்தும்**
**ஆர்க்குந் தெரியாம லானாய் பராபரமே.**

பராபரமானவனே! பார்ப்பதற்குப் பல கோணங்களில், பல உயிர்களுக்குள்ளும் நீ நிறைந்திருக்கக் கூடியதான அச் செய்தியினை யாருமே தெரிந்து கொள்ள முடியாதபடி உள்ளாய்.

**39. ஆனாலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்**
**ஏனோ வெடுத்தேனா நெந்தாய் பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய தந்தையே! எப்படி யானாலும், பொல்லத கொடிய பாவியான நான் ஏன், இந்த உடலினை எடுத்தேன்!

**40. கர்ப்பூர தீபக் கனலொளிபோற் காட்சிதர**
**முப்பாழும் பாழாய் முடித்தாள் பராபரமே.**

பராபரமானவனே! கற்பூரத்தினுள் தோன்றும் ஒளியினைப் போன்று, எனக்கு உன்னுடைய அழகான காட்சியினைத் தந்து அருள்செய்து என்னுடைய பழைமையான வினைகள் யாவும் பாழாகும்படிச் செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்.

**41. கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்**
**அரும்பொருளாய் நின்ற வழகே பராபரமே.**

பராபரமானவனே! கரும்பே! நவரசமே! கடலில் தோன்றிய அமிர்தமே! என்னுடைய கண்ணின் மணிக்குள் அருமையான பொருளாய் நிறைந்திருக்கக் கூடியதான அழகே!

**குறிப்பு**

**42. ஏழை யடியேனை யெப்படியுங் கைப்பிடித்து**
**ஆளா திருப்பதுனக் கழகோ பராபரமே.**

பராபரமானவனே! ஏழை அடியவனான என்னை, எவ்விதத்திலாவது, கைப்பிடித்து ஆட்கொள்ளாமல் இருப்பது உனக்கு அழகான செயலாகுமா?

**43. ஆளாயோ வையா யடியேன் பிதற்றுதலைக்**
**கேளாயோ வென்றன் கெதியே பராபரமே.**

பராபரமானவனே! ஐயனே! எனக்குக் கதியானவனே! என்னை ஆட்கொண்டு அருள் செய்திட மாட்டாயா?

**44. ஊனாகி யுள்ளுயிரி லொட்டாத வக்கருவாயத்**
**தானாகி நின்ற தனுவே பராபரமே.**

பராபரமானவனே! ஊனாகவும், அதனுள் கலந்துள்ளதான உயிரினில் ஒட்டாத கரவாகவும், தானாகவும் இயங்கிடக் கூடியதான தனுவே!

**45. பொன்னால் மயக்கெடுத்துப் புத்திகெட்டு நானெனவே**
**பன்னாளு நின்றாற் பலனோ பராபரமே.**

பராபரமானவனே! தங்கம் முதலான செல்வங்களின் மீது மயக்கம் கொண்டும், அதனால் அறிவுநிலை தடுமாறி, நான் என்ற ஆணவத்துடன் பலகாலமும் வளர்வதனால் என்ன பலன் உண்டாகும்?

**46. இல்லல்லா கூவென் றெனைமறந்து கொண்டுனையே**
**சொல்லவருள் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே.**

பராபரமானவனே! என்னையே நான் மறந்து, எப்போதும் உன்னையே ‘இல்லல்லாகூ’ என்று சொல்லிக் கொண்டிருப்பதற்கான உண்மை ஞானச் சுடரே! தேவனே எனக்குத் திருவருள் செய்திட வேண்டும்.

**47. ஐயோ வடிமைதனக் காரிருந்து மென்னபலன்**
**கையாற் கவந்தணைக்கக் காணேன் பராபரமே.**

பராபரமானவனே! அந்தோ! அடியவனான எனக்கு யார் இருந்தும் என்ன பயன்? கைகளினால் என்னை கட்ழ அணைத்திட வழியினைக் காணமுடியவில்லை.

**48. ஆனாலு மேழை யடியேனுக் காதரவாய்த்**
**தானா யிரங்கியரு டாராய் பராபரமே.**

பராபரமானவனே! அந்தோ ! அடியவனான எனக்கு யார் இருந்தும் என்ன பயன்? கைகளினால் என்னை கட்டி அணைத்திட வழியினைக் காணமுடிவில்லை .

**49. தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்**
**வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! தூங்கிக் கொண்டிருந்து விட்டு, உன்னை வணங்கக் கூடியவர்களின் முகங்களைப் பார்க்கின்ற போது வேங்கைப் புலியினைப் போன்று கொதித்தெழும்படி செய்திடுவாய்.

**குறிப்பு**

**50. கண்ணே கருத்தேயேன் கண்மணியே கண்ணிறைந்த**
**விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே.**

பராபரமானவனே! கண்ணே! என்னுடைய கருத்தானவனே ! என்றன் கண்மணியே! என்றன் கண்ணினுள் நிறைந்துள்ளதான ஆகாயத்தினுள்ளும் அடங்கிடாததான வெட்டவெளியாக இருக்கக் கூடியவனே!

**51. காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த**
**தோஷியாய் நின்றேன் துணையே பராபரமே.**

பராபரமானவனே! பணத்தின் மீது ஆசை கொண்டு, அதனால் மனம் கலங்கிக் கொட்டு அழிந்து பாவியாக நிற்கின்றேன்.

**52. ஐயோ வெனதுதுயா ராரிடத்திற் சொல்லி நின்று**
**கையெடுக்கப் போறெனென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! என்னுடைய துன்பங்களைப் பற்றி யாரிடம் சொல்லி கையெடுத்து வணங்கி வேண்டப்போகின்றேன்.

**53. என்னதான் செய்திடுவேன் என் விதியைச் சொல்லியழ**
**உன்னையன்றி வேறெனக்கும் உண்டோ பராபரமே.**

பராபரமானவனே! நான் என்னதான் செய்வேன்? என்னுடைய விதியினைப் பற்றிச் சொல்லி அழுவதற்கு உன்னைத் தவிர எனக்கு வேறு யார் இருக்கின்றார்கள்?

**54. முகக்கண் விழியொளியோ முத்திதரும் உத்தமனே**
**அகக்கண் திறந்தோர்க்கு அறிவே பராபரமே.**

பராபரமானவனே! மூன்று கண்களில் ஒளியானவனே! முக்தியினை அளித்திடக் கூடியவனான உத்தமனே! உன்னுடைய ஞானக்கண்ணினைப் போல், தம்முடைய அகத்தின் கண்களைத் திறந்தவர்களுக்கு அறிவாகத் திகழ்ந்திடக் கூடியவனே!

**55. முப்பாழும் பழாய்னன் முத்திபெற் றிருக்கஎனைக்**
**கைப்பிடிப்ப தெப்போதென் கண்ணே ! பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! என்னுடைய அனைத்து வினாக்களும் பழாய்ப் போய் அழிந்து முக்தியினை அடையும்படியாக என்னைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வது எப்போது?

**56. உல்லாச மகா ஒளிதான் பரந்திடஉன்**
**செல்வம் பொழிந்திடவே செப்பாய் பராபரமே.**

பராபரமானவனே! மகிழ்ச்சி என்பதான ஒளியானது என்னுடைய மனம் முழுவதும் பரவும் படியாக உன்னுடைய அருட்செல்வம் பொழியும் ஒரு வார்த்தை சொல்லுவாயாக!

குறிப்பு

**57. மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்**
**காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே**

பராபரமானவனே! கண்ணே! மாச்சரியம் செய்யக் கூடியதான மதமானது ஒடுங்கி, நான் முக்தியினை அடைந்திடும் படியாக எனக்குக் காட்சி கொடுப்பது எப்பொழுது?

**58. சண்டாளன் என்றென்னைச் சகலர்உரை யிட்டாலுங்.**
**கொண்டணைப்ப துண்பாரம் குருவே பராபரமே.**

பராபரமானவனே! குருவே! என்னைப் பார்க்கிறவர்கள் பெரும்பாலும் சண்டாளன் என்று என்னை இகழ்ந்த போதும், என்னைக் கொண்டணைத்து ஆதரிப்பது உன்னுடைய பொறுப்பாகும்.

**59. முத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணாமற்**
**செத்திறந்து போனாலென் செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! முக்தியினைத்தரக் கூடியதான உண்மை ஞானாம் தரும் முச்சுடரைக் காணாமலேயே நான் இறந்து போனால் என்ன செய்வேன்?

**60. தன்னை யறிந்து உணரத் தயையாய் ஒருவார்த்தை**
**இன்னபடி என்றே இயம்பாய் பராபரமே. ண லெ**

பராபரமானவனே! நான் என்னை உணர்ந்து கொண்ட பின்னர், தலைவனான் உன்னையும் அறிந்து கொள்ளும்படியாக எனக்கு ஒரு வார்த்தை, “இப்படித்தான் செய்ய வேண்டும்“ என்று சொல்லுவாய்!

**61. களியேகண் டுஉன்னுடைய கைப்பிடிப்போ மென்றுசற்றே**
**எளியேன் முகம்பார்த்து இரங்காய் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய கைகளைப் பிடித்து மகிழ்ச்சியினை அடைந்திடலாம் என்று ஏங்குகின்ற ஏழை எளியவனாகிய என்னுடைய முகத்தினைப் பார்த்து, சிறிதாவது என்மீது இரக்கம் கொள்வாயாக.

**62. பாசவினை போக்கிப் பலபிணையைப் பாழாக்கி**
**ஆசைவைப்போர் தங்கள் அருளே பராபரமே.**

பராபரமானவனே! பாசம் என்பதான நல்வினை தீவினைகளை நீக்கி, பல செயல்களையும் அழித்து விலக்கி. உன்மீது பற்றுவைத்துருப்பவர்களுக்கு அருள் செய்திடக் கூடியவனே!

**63. ஆளவரு வோம்என்று அன்பாய் ஒருவார்த்தை**
**ஏழை முகம்பார்த்து இயம்பாய் பராபரமே.**

பராபரமானவனே! "நான் வந்து உன்னை ஆட்கொண்டு அருள் செய்திடுவேன்" என்று இந்த ஏழையின் முகத்தினைப் பார்த்து ஒரு சொல்லாவது சொல்வாயாக!

**குறிப்பு**

**64. நிலைக்காட்டும காயம் நிசமென்று நிச்சயித்த**
**புலையாட்டல் என்றுதள்ளப் போமோ பராபரமே.**

பராபரமானவனே! உண்மை இது தான் என்று உணரச் செய்யக் கூடியதான, இந்த உடலும் உண்மையானது என்று உறுதியாக நினைத்துச் செயல்படக் கூடியதான புலையாட் டல்கள் என்றைக்கு விலகிச் செல்லுமோ?

**65. பரக்கத் பலவிதமாய்ப் பலசமய மகாஒரு**
**வாக்கை வெளிப்படுத்தி வாய்ப்பை பராபரமே .**

பராபரமானவனே! பார்ப்பதற்கு பல விதங்களாகவும் பல சமயங்களாகவும் உள்ள நீங்கள், எனக்கு, ஒரு வார்த்தையினை வெளிப்படுத்திட வேண்டும்.

**66. ஆனால் எளியேனுக்கு ஆதரவே இல்லாமற்**
**போனால் உனக்கழகோ புகலாய் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய அடியவன் நான். ஆனாலும் எனக்கு எந்த விதமான ஆதரவும் இல்லை என்பது உனக்கு அழகாகுமோ, அதனைச் சொல்ல வேண்டும்.

**67. நிச்சாப் பெருகிவர நிரம்பும் ஆனந்தவெள்ளம்**
**பாய்ச்சாயோ ஐயா பகராய் பராபரமே.**

பராபரமானவனே! அய்யா! நீங்காமல் பெருகி வந்து நிறைந்திடக் கூடியதான ஆனந்த மென்னும் வெள்ளம் பாய்ந்திடும் படியாகச் செய்திடுவாயா? என்று சொல்ல வேண்டும்.

**68. எத்தனையோ கெஞ்சும் எளியேன் தனக்குதவி**
**உற்றார் உ**

பராபரமானவனே! எண்ணிட முடியாததான அளவில் உன்னைக் கெஞ்சுகின்ற ஏழையான எனக்கு, உதவி செய்திடக் கூடிய உறவினர்கள் என்று, உன்னைத்தவிர எனக்கு வேறு யாராவது இருக்கின்றார்களா?

**69. கண்ண மிடுங்கருவி கரணமதைச் சுட்டோர்கள்**
**தனக்குள் தானம் தனுவே பராபரமே.**

பராபரமானவனே! தவறு செய்திட உதவுகின்ற கருவிகளையும், காரணங்களையும், சுட்டொழித்தவர்களுக்குள், தானாகவே, நிறைந்திருக்கக் கூடிய தனுவானவன் நீயே ஆவாய்!

**70. காயாமற் காய்த்துக் கனிந்து சொரிவதற்கு**
**மாயமாய்ப் பூத்த மலரே பராபரமே .**

பராபரமானவனே! காயாமல் காய்த்துக் கனிந்து, சொரிவதற்காக மாயமான முறையில் பூத்த மலர் நீயே!

**குறிப்பு**

71. **உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமைவே**
**தயையா யெனக்குதவி தந்தாய் பராபரமே.**

பராபரமானவனே! உயிரின் உயிராக விளங்கிடக் கூடியதான உட்கருவினுக்குள் இருக்கக் கூடிய அமைப்பே! என்மீதும் கருணைகாட்டி என்னை ஆட்கொள்ள வேண்டும்.

72. **அறிவை யறிவோருக் கானந்த வெள்ளமதாய்க்**
**கரையறவே பொங்குங் கடலே பராபரமே.**

பராபரமானவனே! உண்மை அறிவினை உணர்ந்தவர்களுக்குள்ளே, ஆனந்த வெள்ளமாகக் கரைகடந்து பொங்கிடக் கூடியதான கடல் போன்றவனே!

73. **மறைப்பொரு ளைக்காணா மடையணிவ றென்றிம்பிச்**
**சிரிப்பார் சிரிக்கிலென்ன செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! வேதப் பொருள்களின் நிலைகளை உணர்ந்து காணாத அறிவு நிலையில் குறைந்த மடையன் இவன் என்று என்னைப் பார்த்துச் சொல்லிச் சிரிப்பார்கள் அப்போது நான் என்ன செய்வேன்?

74. **குருவிளக்குங் குருவாடியைக் கொள்கையுடன் போற்றாமல்**
**அறிவு மயங்குகின்ற னையா பராபாமே.**

பராபரமானவனே! ஐயனே! கொள்கையினை விளக்கி உரைத்திடக் கூடிய குருவின் திருவடிகளை உயர்ந்த நோக்கத்துடன் வணங்கிப் போற்றுதல் செய்யாமல், நான் என்னுடைய அறிவு நிலையில் மயங்குகின்றேன்.

75. **வல்லாரைக் கெஞ்சி வலியாரைக் கால்பிடித்திட்டை**
**டில்லாரை நம்பி யிருந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! வலிமையடையவர்களிடம் கெஞ்சியும், கால்களை பிடித்தும் வலிமை இல்லாதவர்களை நம்பியும் இதுவரை வாழ்ந்தேன்.

76. **சொல்லும் பதர்தூற்றிச் சூத்திரத்தைப் பாராமற்**
**கல்லுநெல்லும் போலாக் கலந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! சொல்லக்கூடியதான பதர்போன்ற வார்த்தைகளைத் தூற்றி சூத்திரம் என்பதன் உண்மையைப் பொருளினைப் பார்த்திடாமல், கல்லையும் நெல்லையும் போலக் கலந்து கிடந்தேன்.

77. **செய்யமுழுதுஞ் சுற்றியுமுன் சீர்பாதங் காணாமற்**
**ருகைதழுதே னீயுந் தெரிவாய் பராபரமே.**

பராபரமானவனே! பதினான்கு உலகங்களையும் சுற்றி வந்தும் கூட, உன்னுடைய திருவடிகளைக் காண முடியாமல் நான், என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து அழுது கொண்டிருந்தேன் என்பது உனக்கும் தெரியும்.

78. **கள்ளாகி கருத்துக்களைக் கட்டோ டறுத்தவருக்**
**குள்ளிருக்கு மெய்ஞ்ஞான வொளியே பராபரமே.**

குறிப்பு

பராபரமானவனே! தீய எண்ணங்களை அடியோடு ஒழித்து விட்டவர்களுக்கு உள்ளே எழுந்தருளியிருக்கக் கூடியதான உண்மையான ஞான ஒளியவனே!

**79. கும்பிக் கிரைவிரும்பிக் கொடுப்பார் தமைத்தேடிச்
சம்பித் தெரிந்தே சலித்தேன் பராபரமே**

பராபரமானவனே! வயிற்றிகால உணவினைத் தேடித்தரக் கூடியவர்களைத் தேடித்தேடி திரிந்து என்னுடைய மனம் சலித்து விட்டேன்.

**80. காண்களா வாசை கடித்தாலென் காலும் முகமும்
வீங்காதோ வையா விதியே பராபரமே.**

பராபரமானவனே! காணக் கூடியவற்றில் எல்லாம் ஆசைப்பட்டு கடித்தால் என்னுடைய காலும் முகமும் வீங்கிவிடும் அல்லவே? தலைவனே! இது என்னவிதியோ?

**81. தூங்காமற் தூங்கித் தொழுதிருக்க என்னுடைய
அங்காரா மெல்லா மகட்டறாய் பராபரமே.**

பராபரமானவனே! தூங்காமல் தூங்கித் தொழு வணங்கிக் கொண்டிருக்கக் கூடிய என்னுடைய ஆவணங்களை எல்லாம் நீக்கிட வேண்டும்.

**82. தேனமிர்த மூரத் திவ்யமது ரஞ்செய்த
தானா யொருவார்த்தை தாராய் பராபரமே.**

பராபரமானவனே! தன் அமிர்தமானது ஊற்றெடுக்கவும், திவ்வியமான மதுரம் சிந்தும் கூடியதான தன்மையினைப் போன்றதான ஒரு சொல்லினைத் தாமாகவே எனக்கு அருள் செய்ய வேண்டும்.

**83. சாத்திரங்க லோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டதா
சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே.**

பராபரமானவனே! சாத்திரங்களை எல்லாம் தெளிவாக ஓதிடக் கூடிய அந்தணர்களுக்கும் எட்டாத மந்திரப் பொருளாக நிற்கின்ற சுழியே!

**84. வேற்றோருவர் காணாத வேதாந்த துட்பொருளைப்
பார்த்தோர்க ளெய்தும் பலனே பராபரமே.**

பராபரமானவனே! மற்றவர்களால் உணர்ந்திட முடியாததான வேதாந்தங்களில் உணர்த்தப்பட்டுள்ளன ரகசியமான உண்மைப் பொருளினை உணர்ந்தவர்கள் அடைந்திடக்கூடிய பயனே!

**85. சாதி சனத்துடன் சார்த்திருந்து பட்டதுயர்
பொதுமபோ தும்போதும் போதும் பராபரமே.**

சுற்றத்தவர்களுடன் சேர்ந்து வாழ்த்ததனால் இதுவரை அடைந்துள்ள துன்பங்களே எனக்குப் போதுமானதாகும்.

**86. உற்றாரை நம்பியிருந்த தொருபலனுங் காணாமற்
சீதா லெனக்கதுதான் சின்னம் பராபரமே.**

குறிப்பு

பரப்பமானவனே! உறவினர்களை நம்பியிருந்தது அதனால் எந்த ஒரு பயனும் இல்லாமல் இறந்து விட்டால் எனக்கு அதுவே ஒரு அவமானச் சின்னமாகிவிடும்.

**87. செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற்**
**கழுமரம் போலானேன் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! செல்லக் கூடியதான வழியினை உணர்ந்து சென்று , உன்னை அடைந்திடும் வழியினைப் பற்றி தெரிந்திடமையினால், கள்ளினையும், மரத்தினையும் போல நான் கிடந்தேன்.

**88. ஒகோ உனையறிந்து மொருபலனுங் காணாமற் ஷ**
**போகாமற் காதருளென் புணையே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்போன்றவனே! அந்தோ! உன்னை உணர்ந்தும் கூட, அதனால் ஒரு பயனையும் காணாமல் போய்விடாதபடியாக என்னை நீ காத்து அருள் செய்ய வேண்டும்.

**89. உன்னை யறிவதற்கோ வுடலெடுத்தே னென்றென்னைச்**
**சின்னஞ்சொல் வார்கட்கென் செய்வேன் பராபரமே.**

பராபரமானவனே! உன்னை உணர்ந்திடுவதற்குதானா இந்த உடலினை எடுத்தேன். என்று நினைத்து என்னை கேலி செய்பவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வேன்?

**90. தெரியாத வின்பத் தெளிவா யருண்மயமாய்ப்**
**பரிபூ ரணமுடனே பாராய் பராபரமே.**

பராபரமானவனே! யாரும் அறிந்திடாத ஆனந்தத்தின் தெளிவாகவும், திருவருள் மயமாகவும், இருக்கக் கூடியதான பரிபூரணத்தினால் னே என்னைச் சிறிது தயவுடன் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

**91. ஆச்சி தன்னைத்தேடி யாசைவைத் தலையாமற்**
**பூச்சியா யேனோ பிறந்தேன் பாராபமே.**

பராபரமானவனே! ஆச்சியினைத்தேடி (தாய் என்ற பொருள்) அவள் மீது ஆசைவைத்து அன்பு கொண்டு அலைந்திடாமல் பூச்சியாக ஏன் பிறந்தேனோ?

**92. காசை விரும்பிக் கலங்கிநின் றுன்பாத**
**ஆசை விரும்பா தலைந்தேன் பராபரமே.**

பராபரமானவனே! உன்னுடைய பாதங்களில் ஆசை வைத்து அலைந்திடாமல் பணத்தின் மீது ஆசை வைத்து, அதனால் கலங்கி மனதுடன் அலைந்து கலங்கித் திரிகின்றேன்.

**93. சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்**
**பாகமா யாகமும் பாறை பராபரமே.**

பராபரமானவனே! நான் சாகாமல் இருக்க வேண்டும். அப்படி ஒருவேளை மரணம் நேர்ந்தாலும், தோன்றக் கூடியதான சத்துத் சித்து ஆனந்த நிலைகளை அடைந்திட தேவரீர் திருமுகம் பார்த்து அருள் செய்திட வேண்டும்.

குறிப்பு

**94. வாராயோ வையா வந்திறங்கிக் கொண்டணைக்கப்
பாராயோ சற்றே பகராய் பராபரமே.**

பராபரமானவனே! வரமாட்டாயா? அப்படி வந்தாலும் மனதில் கருணையுடன் எனக்கு அருள் செய்திட வேண்டும் என்று எண்ணிட மாட்டாயா? இச்செய்தியிணைப்ளுபற்றி எனக்கு சிறிது கருணை செய்ய வேண்டும்.

**95. ஆசைவழிப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து
வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே.**

பராபரமானவனே! ஆசை என்ற வலையினைத் தோற்றுவிக்கக் கூடிய பாசத்தின் வழிகளை எல்லாம் கட்டறுத்து என்னை சரம் என்கிற குதிரையின் மீது ஏற்றி ஆட்கொள்ள வேண்டும்.

**96. வேஷந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்
காசு பணம்பறிக்கக் கற்றேன் பராபரமே**

பராபரமானவனே! வே'ங்களைப் போட்டு வேதாந்த சாத்திரங்களைப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே நான் கற்றுக் கொன்டேன்.

**97. செய்தெல்லாங் குற்றஞ் சிறியேன் றனக்கிரங்கிக்
கைதூக்கிக் கொண்டருளென் கண்ணே பராபரமே.**

பராபரமானவனே! என்னுடைய கண்ணே! நாம் செய்தவை அனைத்தும் தவறுகளே ஆகும். ஆனாலும் என்மீது மனமிரங்கி, என்னைக் கை தூக்கிவிட்டு ஆதரிக்க வேண்டும்.

**98. மாளா மயக்கருத்து மணக்கறையை தான் தழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் றையா பராபரமே.**

பராபரமானவனே! நீக்கிட முடியாததான மயக்கங்களையும் நீக்கி, மனதின் கலக்கங்களையும் நீக்கி, என்னை உன்னுடைய அடிமையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

**99. நாட்டமங்கு மிங்கிருக்க நாதாந்த முத்திநிலை
காட்டா யணைந்தருளேன் கண்ணே பராபரமே.**

பரபரமானவனே! என்னுடைய கண்ணே! பார்வையானது இங்கும் அங்கும் அலைகின்ற போது நாதாந்தத்தின் மோட்ச நிலையினைக் காட்ட மாட்டாய். ஆனாலும் என்னைச் சேர்த்துக் கொண்டு அருள் செய்திட வேண்டும்.

**100. சிந்தை தனைத்தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த
உன்றன் குணங்குடியார்க் குயிரே பராபரமே.**

பராபரமானவனே! மனதினை தெளிவடையச் செய்து, முத்தியினையும், சித்தியினையும் பெற்று உயர்நிலையடைந்த உன்னுடைய குணங்குடியார்க்கும் உயிராய்த் திகழ்பவனே!

## பயிற்சி வினாக்கள்

குறிப்பு

1. குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றி குறிப்பு வரைக.
2. எதனால் அமுததாக குணங்குடி மஸ்தான் சாகிபு இறைவனிடம் கூறுகிறார்?
3. "கண்ணே கருதே" என் என்ற பாடலில் இறைவனை ஆசிரியர் எவ்வாறு உருவாக்கப்படுத்துகிறார்?
4. கல்லையும் நெல்லையும் போலக் கலந்து கிடந்ததாக ஆசிரியர் எதனால் கூறுகிறார்?
5. "செல்லு முறையறிந்து" என்ற பாடலை விளக்கத்துடன் எழுதுக.
6. "நெல்லும், பதரும்" போல் நிலையில்லாம் இருந்தேன் என எந்தப் பாடலில் குணங்குடி மஸ்தான் சாகிபு விளக்குகிறார்?

குறிப்பு

# கூறு 14

# ஆசிய ஜோதி

## கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## முன்னுரை

மனிதனாய்ப் பிறந்து கடவுளான உயர்ந்த மனிதனின் உருவத்தை நம் மனதில் மாறாத சுவடாக தேசிக விநாயகம் ஆசிய ஜோதியை தந்துள்ளார். இந்தியாவில் பிறந்திருந்தாலும் புத்தரின் கொள்கைகள் சீனா, ஜப்பான், இலங்கை மற்றும் பிற அயல்நாடுகளில் விழுது பரப்பியிருப்பது வியக்கத்தக்கது. மண் பயனுற வேண்டும் என்பதற்காகத் தன் அரச வாழ்வைத் துறந்தார் புத்தர். இந்து மற்றும் சமண சமங்களின் நெருக்கடியின் காரணமாக சித்தார்த்தனின் போதிமரம் தேடத்தொடங்கினர். இத்தகைய சிறப்பு வாய்ந்த புத்தரின் வாழ்வை வாசிக்கி தருணத்தில், அந்த வாழக்கையிலும் காதல் பொதிந்திருக்கிறதைப் புரிந்துகொள்ள முடிகிறது. புத்தரின் துறவு வாழ்வுக்கு முன்பு யசோதரைக்கும் புத்தருக்கும் இடையிலிருந்த புனிதமான காதல் நம்மை வியக்க வைக்கிறது! மனிதனுக்கு மனிதன் பல்வேறு வகையாகச் சிதைந்து கிடப்பதற்கு காரணம் ஆசைதான் என்பதை உணர்ந்த அவர் லேளகீக வாழ்வைத் துறந்து, இந்த உயிர்கள் இப்படியெல்லாம் வதைபடுகின்றனவே, இதற்கெல்லாம் உண்மையான காரணம் என்ன என்ற உண்மையைத் தேட கிளம்பினர். அந்த தேடலில் வெற்றியும் பெற்றார். இன்று உலகமே பௌத்தக் கொள்கைகளைக் கண்டு வியக்கிறது, நேசிக்கிறது.

## புத்தர் அவதாரம்

வையகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் வாடியது அவை வழியறியாது வருத்தமுற்றது உண்மை கூறுபவர் எவரும் இவ்வுலகில் இல்லை.

*எண்ணரிய சென்மங்கள் எடுத்து முன்னம்*
*எவ்வுடம்பின் எவ்வுயிர்க்கும் இடர்களைந்தேன்*
*மண்ணுலகம் ஈடேற இன்னும் ஓர்கால்*
*மனித உடல் தாங்கமனத்து ஆசை கொண்டேன்.*

இப்பிறப்பு இன்றி வேறுபிறப்பு எனக்கு இங்கு இல்லை என்னை வழிபட்டு வாழும் ஒப்பரிய அடியவர்கள் எவர்க்கும் இல்லை. இதுவே உண்மை ஆகும்.

குறிப்பு

*‘வானெழுந்து வளர் இமய மலையின் தென்பால்
வாழும்உயர் சாக்கியர்தம் மன்ன னுக்கு
யானுமொரு மகனாகச் செல்வேன்” என்றான்.
இமையவரை நோக்கிஅருள் இறைவன் மாதோ!*

சுத்தோதனன் மனைவி அலர்மங்கை கனவு ஒன்று கண்டாள். எந்நாடும் எவ்வுயிரும் இன்புறுகின்ற அளவில் கனவு கண்டாள். அக்கனவு என்னவென்றால் கண்ணுக்கு அழகிய காட்சியளித்து கதிரொளி போன்று ஒளி வீசி திசை எட்டும் அவ்வொளி பரவி, காம தேனுவின் பால்நிறம் பெற்ற அவ்வொளி,

*‘மன்னனும் மதவேழம் போன்றிடுமீன் - இந்த
வையம் ஒளிர ஒளிவிடுமீன்’*

என்றளவில் ஒளியினை வீசிக்கொண்டு விண்னை விட்டு விரைந்து கீழிறங்கி வீதியெலாம் ஒளி வீசி வந்து மண்ணகம் வந்து தேவி மாயை வயிற்றில் புகுந்தது. வலமருங்கில் விண்மீன் வயிற்றில் பாய மாதேவி துயில் எழுந்து மகிழ்ச்சியுற்றாள். உலகறியா திருவருளை வியந்து நின்றாள். ஒரு தாயும் கண்டறியா இன்பம் கண்டாள்.

*காலைக் கதிரோன் உதிக்குமுன் - ஆசிய
கண்ட மெலாம் ஒளி கண்டதுவே
வேலைத் திரைகள் அடங்கினவே - திசை
வெற்புகள் நின்றுகூத் தாடினவே.*

*பட்ட மரங்கள் தளிர்த்தனவே - எங்கும்
பாழ்ங்கிண றும்ஊறிப் பொங்கினவே
திட்டுத் திடர்மணற் காடும் - சுடுகாடும்
சில்லென்று பூத்துச் சிலிர்த்தனவே.
சீரிய ஓடை குளங்களிலே - நல்ல
செந்தா மரைகள் மலர்ந்தனவே
பாரிலே அவ்விராக் கண்ட - புதுமையைப்
பாடிட வல்லவர் யாரேயம்மா!*

வெண்மையான சுடர் உலகில் தோன்ற, சோலைகள் எல்லாம் பொன்னிறமாக தெரிந்தது. தேவி மாயை மகிழ்ச்சியுடன் இருந்தாள். மறுநாள் மன்னவன் தேவிக் கண்ட கனவின் பயனைப்பற்றி பெரியோரிடம் கேட்டான். அதற்கு அவர்கள் தேவி கண்ட கனவு நற்கனவு சீரான அழகான ஆண்மகனை தேவி பெறுவாள். அந்தச் செல்வ மகன் தெய்வமகனாவான். ஞான குருவாகி

உண்மை உபதேசங்கள் செய்வான். இந்தப் புவி முழுவதும் ஆள்வான். அவனுடைய மகிமையை எடுத்துரைப்பது அவ்வளவு எளிதல்ல என்றார்.

**குறிப்பு**

*ஒருநாள் பகலில் உச்சியம் பொழுதில்*
*அரண்மனை யருகில் அணிமலர் மலர்ந்து*
*நறுமணம் வீசுமோர் நந்த வனத்தில்*
*தழையும் பூவும் தலையில் தாங்கிக்*

*கோயிலில் நட்டஓர் கொடிமரம் போல*
*வளருமோர் அசோக மரத்தின் நிழலில்*
*மாயாதேவி வந்து நின்றனள்.*
*நிற்கவே,*

*உரிய காலம் உறுவதை உணர்மரம்,*
*உணராப் பொருளெதும் உலகினில் இல்லை*
*மலர்முடி வணங்கி வளைந்து கவிந்தொரு*
*தழைவீ டாகச் சமைந்து நின்றது.*

*பாரிடம்,*
*பன்மலர் மலாந்தொரு பஞ்சணை யாயது*
*பக்கத் தொழுமொரு பாறையும் பிளந்து,*
*மதலையை ஆட்ட மஞ்சனை நீரை*
*ஓடும் அருவியாய் ஒழுக விட்டது.*

*தேவி,*
*நோவு நொம்பலம் நோக்கா டின்றியோர்*
*மகவினைப் பெற்று மகிழ்ச்சி யுற்றனள்.*

அழகான மகனொரு தேவி அரண்மனைக்கு வர சுத்தோதனன் காவலர்களுக்கு ஆணையிட்டான்.நான்கு திசையையும் காக்கும் காவலர்கள் நின்று வணங்கினர். வெள்ளியில் அங்கி அணிந்து கொண்டு வெண்முத்தை பரிசாக கொண்டு வந்தார் உம்பர்கோன். நீலக்குதிரையில் ஏறி நீலமணி கொண்டு வந்தார் எமன். சிவந்த குதிரை மேல் ஏறி உயர்ந்த செம்மணிக் கேடகத்தை நாகர்கள் படைசூழ கொண்டு வந்தார் வருணன். பொன்னிறமான குதிரையேறி பொன்னில் செய்த கிடுகு மேந்தி யஷர்களோடு குபேரன் வந்தார் தெய்வ மகனை கண்டு இவர்கள் யாவரும் வணங்கினர்.

*ஆண்ட விருதுகள் யாவும் கரந்துலகு*
*ஐயுறா தங்குவந்தார் - அவர்*
*பூண்ட வடிவால் உடையால் அப்பல்லக்குப்*
*போகியர் தாமேயானார்*
*தேவர் இவரென யாவருங் கண்டு*
*தெளிந்திடா வாறுவந்து - திசைக்*
*காவலர் கூடிச் சிவிகையைத் தோளிலே*
*காவியெ டுத்தனவே.*

*உம்பரும் அன்று மனிதராய் மாறி*
*உலாவிக் களித்துநின்றார் - என்றும்*
*அம்புவி வாழ இறைவனும் வந்தங்கு*
*அவதரித் தான் எனவே.*

பின்னர், மன்னர் சுத்தோனனிடம் கற்றறிந்த பெரியோர்கள் மன்னனை வணங்கி இவ்வாறு கூறினர்.

*'உலகம் முழுதும் ஒருகுடைக்கீழ் ஆளுமன்னன்,*
*அலகில் புகழுடையான்,ஆண்மைத் திருவுடையான்,*
*ஓரா யிரமாண்டுக்கு ஒருமுறை தோன்றுவமவன்.*

*சீரார் பெருமான், உன் செல்வமக னாய்வந்தான்*
*எண்ணற் கரியபேறு ஏழுபெரும் பேறுஇந்த*
*மண்ணில் அவனுக்கு வாய்த்திருப்ப துண்டு ஐயா!*
*தெய்வீக மான திருவாழி ஒன்றாகும்*

*எய்தற் கரிய இரத்தினம் ஒன்றாகும்*
*ஆகாய வீதிசெலும் அசுவமும் ஒன்றாகும்*
*மதயிற் சிறந்தவொரு மந்திரி தானுண்டு*
*சதுரில் தளராவோர் தளகர்த்தன் தானுண்டு*
*காலை திருவின் கவினிற் சிறந்தநங்கை*
*சேலொத்த கண்ணியொரு தேவியும் உண்டு" என்றார்.*

இவற்றையெல்லாம் கேட்ட மன்னன் மகிழ்ச்சிக் கொண்டு விழா எடுக்க ஏற்பாடு செய்தான். வீதி எங்கும் குலை வாழை கட்டினர் தோரணம் நட்டனர், கோலமிட்டனர், கோயில்களில் தீபம் ஏற்றினர், வீதிகளில் மலர்களால் பந்தல் செய்தனர், பெண்கள் விளக்குகள் ஏற்றினர், குழல் ஊதினர்,பல்வேறு வித்தைகள் செய்தனர் பட்டுச் சேலைகளால் அலங்காரம் செய்தனர்.இவ்வாறு நகரெங்கும் விழாக் கோலம் பூண்டது வந்த பலநாட்டு மன்னர்களும் வணங்கினர். அரசன்

**குறிப்பு**

சுத்தோதன் தன் மகனுக்கு சித்தார்த்தன் எனப் பெயரிட்டார். இவனைக் காண அசிதமா முனிவன் வந்தார். தேவி மாயையை வணங்கினார். வணங்கிய முனிவர் இவ்வாறு கூறினார்.

**குறிப்பு**

*அவனே நீயாம் ஐயம் அதற்கில்லை!*
*பகவன் நீயே! பரமன் நீயே!*
*புனிதன் நீயே! புராணன் நீயே!*
*தருமன் நீயே! தலைவன் நீயே!*
*ஆதி நீயே! அறவோன் நீயே!*

*ஆயிர வாரத் தாழியான் நீயே!*
*உண்மை ஒளியால் உள்ளிருள போக்கி*
*நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே!*
*யானும் இன்றுஉன் இணையடி பணிந்து,*
*பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.*

*மன்னர் மன்னவ! மானிடத் தருவில்*
*ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்*
*மலரிதன் மணமே அறிவின் மணமாய்*
*ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்.*
*மலரிதன் மணமே அறிவின் மணமாய்*

*மனத்தின் மாசு மாற்றிடும், ஐயா!*
*மலரிதன் மதுவே அருளின் மதுவாய்*
*மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும், ஐயா!*
*இம்மா மகனை ஈன்றவர் போல*
*மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ?*

மேலும், முனிவர் மன்னனை பார்த்து 'அரிவாள் போல் உன் நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர் ஒன்று இம்மகவால் உனக்கு வரும். மங்கையர்க்கரசி மாயாதேவி! வாழ்க்கை உனக்கு துன்பம். அதனால் ஏந்திய முத்தினை ஈன்றபின் சிப்பி மறைவது போல, இன்றிலிருந்து ஏழாம் நாள் இறவா இன்ப வீடு எய்துவது உண்மை என்று முனிவர் உரைத்தார்.

## அருள் உரிமை

உலகம் முழுதும் ஒரு குடையின் கீழ் ஆளும் அண்ணல் அரண்மனையருகில் உள்ள மலர்ந்த மலர்கள் நிறைந்த இடத்திற்கு வந்தார். அப்போது தேவதத்தன் என்பான் அன்னப் பறவை ஒன்றை அம்பால் எய்த அது சித்தார்த்தன் காலடியில்

குறிப்பு

இரத்தம் வழிய வீழ்ந்தது. அதனைக் கண்ட சித்தார்த்தன் அன்னப்பறவையை தழுவி அதன் வேதனை நீக்க முற்பட்டார் அப்போது சேவகன் ஒருவன் வந்து என் அரச குமரன் ஓர் அன்னப்பறவையை வீழ்த்தினர் வீழ்ந்த இடம் இது எனவே, அன்னப்பறவையை அனுப்புங்கள் என்றார். அதற்கு சித்தார்த்தன் பதிலுரையாக,

*'எய்த அம்பினால் - பறவை*
*இறந்து வீழ்ந்திடுமேல்,*
*எய்த வர்க்காகும் - உரிமை*
*யாதும் ஐயமில்லை.*

*நீண்ட சிறகினிலே - விசைதான்*
*நின்றி ருப்பதல்லால்,*
*மாண்ட தில்லைஅன்னம் - உயிர்த்து*
*வாழு கின்றதப்பா!*

*சந்தேகம் வேண்டாம் - அதனைத்*
*தரமு டியாதப்பா!*
*எந்த உயிரையும் - காப்பது!*
*என் கடமையப்பா!*

*சாற்றும் உரைகேட்டுத் - தேவ*
*தத்தனம் ஓடிவந்து,*
*சீற்றம் எழுந்தவனாய் - நின்று*
*செப்பும் மொழியிதுவாம்*

என்று கூற தேவதத்தன், சித்தார்த்தனிடம் வாதிட்டான். இருவரும் பெரியோரிடம் சென்று நீதி கேட்டனர். அப்போது புரோகிதன் ஒருவன் தன் நீதியைக் கூறினான்.

*'உயிரைக் கொன்றிடவே - முயலும்*
*ஒருவ னுக்குஅந்த*
*உயிரின் மேலேதும் - உரிமை*
*உண்டோ? கூறும் ஐயா!*

*உயிரைக் காப்பவனே - என்றும்*
*உயிர்க்கு உடையவனாம்*
*அயர்வு வேண்டாம், ஐயா! - இதுவே*
*அறநூல் விதி ஐயா!*
*இன்னும் வீண்வாதம் - பேசி*

*இருப்பதேன்? ஐயா!*
*அன்னம் சித்தார்த்தன் - பொருளாம்*
*ஐய மில்லை, ஐயா!"*

குறிப்பு

*என்று நீதி எடுத்துண ரச் செய்து*
*மன்றி லிருந்து மாய மாக*
*மறைந்து போயினன் மறையும் அந்நேரம்,*
*பையர வொன்று பதுங்கி அவ்வழி*
*ஊர்ந்து செல்வதை ஒருவன் கண்டனன்*
*சிற்சில காலை தேவரும் இந்த*
*வடிவந் தாங்கி வருவதுண்டு என்பரால்!*
*யாதோ உண்மை? யாவரே அறிவார்?*

என்றான்.

## காதல் பிறந்த கதை

அசிதா மா முனியும், கனா நூல் கற்றவரும் கணித்து சொன்னதும் நிகழும் அரண்மனை செல்வத்தில் அவனுக்கு ஆசை இல்லை எனவே நீள் நிலம் புரக்கும் நெறியின் மீது அவன் ஆசை கொள்ள உபாயம் செய்ய வேண்டும் என்கின்றனர். அறமுது கிழவன் அமைச்சன் ஒரு உபாயம் கூறுகிறான். விழா ஒன்று எடுத்து அவ்விழாக் கூட்டத்திற்கு அழகிய கன்னியர்களுக்கு அழைப்பு விடுப்போம் என்கின்றனர். சாக்கிய நாட்டு ஆடல் பாடல் அனைத்திலும் கற்ற திறம் வெளிப்படுத்த சிறந்தவர்க்கு பரிசு வழங்க வேண்டும். அழகி எவளால் அவனது திருமுகம் வாட்டம் நீங்கி மலர்ச்சி பெறுமோ, அவள் அரசிளங்குமரன் வாழ்க்கைக்குரிய மனைவியாவாள் என்கின்றனர். அழகிகள் வந்தனர். சித்தார்த்தன் அனைவருக்கும் பரிசுகளை வழங்கினான் பரிசுகள் மீதம் இல்லை அப்போ,

*அங்கையற் கண்ணி அழகின் செல்வி*
*தீங்களைப் பழிக்கும் திருமுக விலாசினி*
*பங்கய மீதெழாப் பாக்கியலெட்சுமி*
*யசோதரை என்னும் யௌவன குமாரி*

எழுந்து வந்து நேரேதிரே நின்று 'எனக்க பரிசேதும் ஈவதற்கு இல்லையோ?" என்று கேட்க.

*'இருந்த பரிசுகள் யாவும் போயின்*
*ஆயினும்,*

குறிப்பு

*மாநகர் போற்றும் மங்கையர் மணியே!*
*இதனைப் பரிசாய் ஏற்றுக் கொள்" எனத்*
*தன்,மார்பிற் கிடந்த மரகத மாலையைக்*
*கழற்றி யசோதரைக் கன்னியின் அழகிய*
*திருவரை சுற்றிச் சேர்ந்து கட்டினன்.*
*கட்டவே,*
*கண்களும் கண்களும் கவந்து பேசின,*
*கண்களும் கண்களும் கலந்து*
*பேசின பேச்சில் பிறந்தது காதலே!*

சித்தார்த்தனுக்கும், யசோதரைக்கும் காதல் பிறந்தது.

## சித்தார்த்தன் கேட்ட தேவ கீதம்:

ஒரு நாள் சித்தார்த்தன் யசோதரையின் அந்தப் புரத்தில் அமர்ந்திருக்கிறான். அழகிய வீணையொன்று ஒரு புறத்தில் இருக்கிறது. காற்று வீசும் பொழுது அந்த வீணையிலிருந்து ஒலி உண்டாகிறது. அந்த ஒலியில் கலந்திருக்கும் தேவகீதம் சித்தார்த்தனுடைய செவிக்கு மட்டுமே கேட்கிறது. தேவகீதத்தில் பொதிந்துள்ள பொருள் தேடும் இடங்களெல்லாம் ஓய்வு தேடியும் இல்லை. ஓடி அலையும் காற்று நாங்கள் உயிர்கள் எல்லாம் பிறக்கும் இடம் எது? இந்த உயிர்கள் மீண்டும் செல்லும் இடம் எது? எங்கிருந்து நாங்கள் வந்தோம் எதற்காக வந்தோம் இந்த உண்மையை அறிவார் யார்? நாங்க சுத்த சூனியத்தில் நின்று தோன்றிய ஆவிகள் மாறிவரும் துயரால் இன்ப வாழ்வு எங்களுக்கு இல்லை. நித்திய ஆனந்தத்தை அடையும் வழி பற்றி சிந்தனை செய்வாய்.

*அன்பு இருக்குமெனில் - அதிலும்*
*அளவ றியவொண்ணா*
*இன்பம் எய்திடலாம் - ஐயம்*
*யாது மேயில்லை*
*கண்ட வாழ்விதுதான் - நிலையாக்*
*காற்றின் வாழ்வேயாம்*
*கொண்ட தந்தியின்மேல் - எழும்*
*குரலே போன்றதுவாம்.*

*சாலவேஉலகம் - துயரால்*
*தளர்ந்து வாடுதையா!*

**குறிப்பு**

*மாலை மாலையாக் - கண்ணீர்*
*வடிய விடுகுதையா!*

*வாழ்வு மாயமெனும் - உண்மை*
*மனத்திற் கொள்ளாமல்,*
*நாளும் நைந்திடுதல் - எமக்கு*
*நகைப்பே தருகுதய்யா!*
*நீல மேகந்தான் - ஆணையால்*
*நிலையில் நின்றிடுமோ?*
*தாலத் தோடும்நதி - கையால்*
*தடுக்க மாறிடுமோ?*
*துன்பச் சுழியிலே - விழுந்து*
*சுழலும் உலகத்தை*
*இன்பக் கரையேற்ற - நீயும்*
*இரங்கிட வேண்டும்.*

இந்த வையம் முழுவதையும் ஆளவந்த அவதரித்த ஐயனே! மாயப் பொய்மைகளைக் கண்டு மயங்கிடாதே என யசோதரை வீணை இசைத்து தேவகீதம் பாடுகின்றாள்.

## சித்தார்த்தன் துறவு

பள்ளியறையில் யாசோதரை கனாக்கண்டு "காலம் வந்தது" என்று வாய் புலம்புகிறாள்.சித்தார்த்தன் அதைக் கேட்டுக் கவலையிலிறங்கி, வானில் நட்சத்திரங்களைப் பார்க்கிறான். உரிய காலம் வந்தது என்றறிந்ததும் துறவு பூணத் துணிகிறான். விரைவில் எழுந்து மன்னர் குமரன் வெளியில் இறங்கி வானை நோக்கினான். கோள்கள் எல்லாம் உரிய காலம் இதுவென கூறின.

*நன்மை தரும்வழி நாடுகின் றனையோ?*
*மணிமுடி தாங்கி மன்னர் மன்னனாய்*
*நீள்நிலம் புரக்க நினைக்கின் றனையோ?*
*உலகி லுள்ள உயிரெலாம் உய்ய*
*நாடும் இழந்து நகரும் இழந்து*

*வீடும் குடியும் விட்டவ னாகி*
*தன்னந்தனியே தரணியின் மீதுழ்*
*ஆண்டி யாக அலைந்து திரியா*
*எண்ணுகின்றனையோ? யாதுஉன் விருப்பம்?*

குறிப்பு

*தெரிந்துநீ உள்ளம் தேறு வாய்” எனக்*

*கூறின் அவனும் குறிப்பின் உணர்ந்தனன்,*
*எங்கும் மூடி இருண்ட இருளில்*
*காற்றொடு முன்னம் கலந்து வந்த*
*தெய்வ கீதமும் செவியுறக் கேட்டனன்.*
*ஐயமில்லை, நம்ஜயன் தங்கிய*

நித்திரை கொள்ளும் தன் மனைவியை விடுத்து முடிமீது ஆசை முழுதும் விட்டேன் என்றார் சித்தார்த்தன் போர்க்களம் சென்று உதிரப்பெருக்கில் வெள்ளி எனக்கூறும் தீவினை இனி நான் புரியேன். பாலையை வாழிடமாக்குவேன். ஏழைகள் எதனொடும் அன்பு செய்வேன். தோழமையோடு அனைவர் துணியையும் அரையில் அற்றுவேன். தெருத் தெருவாய் திரிந்து பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன் பாரில் உயிர்கள் படும் துயரெல்லாம் புகுந்து என் உள்ளம் புண்படுகின்றது.

*ஆதலின்,*
*இன்ப வாழ்வை இகழ்ந்து நீக்கினேன்:*
*துன்ப வாழ்வைத் துணிந்து போற்றினேன்,*
*சிறிய பெரிய தேவர் தம்முள்*
*எல்லாம் வல்லார் எவரும் உளரோ?*

*இரக்கமுள்ளார் இருக்கின் றனரோ?*
*கண்ணால் அவரைக் கண்டவர் உண்டோ?*
*வணங்கி நித்தம் வழிபடு வோர்க்குஅவர்*
*செய்திடும் நன்மை சிறிதும் உளதோ?*
*எத்தனை எத்தனை எத்தனை மனிதர் -*

*அன்ன சாலையில் அந்தணர் நிதமும்*
*உண்டு களிக்க உணவிடு கின்றனர்?*
*அன்னியர்க்கு அல்ல அடியவர்க்கு எனினும்*
*இவ்வுல கதனில் யாதும் ஒருநலம்*
*செய்தறி யாத தேவரை நோக்கிக்*

*‘கங்கா தரனே, கண்ண பிரானே!*
*காப்பாய் காப்பாய் காப்பாய்’என்ன,*
*(அன்பின் மிகுதியோ? அச்சமோ அறியேம்)*

குறிப்பு

*தொழுது போற்றும் தோத்திரப் பாக்கள்*
*வானில் முழங்கும் வல்லிடி போல*

*உயிர்கள் அடையும் ஓயாத் துயரோ-*
*யாதும் ஒருதுயர் இம்மி யளவும்*
*நீங்கி, எவரும் நித்தியா னந்த*
*வாழ்வடைந்து இங்கு வாழ்வதும் உண்டோ?*
*அருமை மங்கையர் அன்பு நிறைந்து*

*சிக்கிச் சுழந்று திகைப்புவோரே,*
*உலகில் வாழும் உயிரின் பிறப்பிடம்*
*அறிவிற் கெட்டா தாயினும், அவ்வுயிர்,*
*படிப்படி யாய் இப் படியின் மீதுஓர்*
*அணுவாய்க் கொசுவாய் அரிக்கும் புழவாய்*

*பாம்பாய் மீனாய்ப் பறவையாய் மருகமாய்*
*மனிதனாய்ப் பூதமாய் வானுறை தேவனாய்த்*
*தெய்வமாய்த் தோன்றித் திரும்பவும் அவ்வழி*
*மண்ணாய் அணுவாய் மாறுதல் இயல்பாம்*
*ஆதலின்,*

மக்கள் வருந்தி வாழ்கின்றனர் ஊமைகள் போல உளருகின்றனர். உடலின் உறுதியும்,ஊக்கமும் உடையோன் காசினி ஆள நினைப்பானே ஆனால் நன்மை தீமை எந்நாளும் ஒன்றாய்க் கலந்து தங்கும் இக்காசினி மீது வாழ்வதில் மிக்க மகிழ்ச்சியுடையோன் என்றார். மேலும் என்குடி, என்கிளை, என்வாழ்வு, என்சுகம், என் இளம் பருவம், என் சிங்காசனம், நான் வாழும் அரண்மனை யாவும் வெறுத்தேன் என் அன்பின் உருவம் யசோதரையையும் மறந்து, காதலில் மலர்ந்த வயிற்றில் வளரும் மகவினை மறந்து, உண்மை ஞானம் இவ்வுலகெலாம் ஒளிரச் செய்வது என் கடன் சிறிது காலம் பிரிகிறேன் எனக் கூறி வாடி வருந்தும் மன்னுயிரெல்லாம் அடையும் துன்பம் அனைத்தும் ஒழிக்க இரவில் ஞானி சித்தார்த்தன் சென்றார்.

## புத்தரும் ஏழைச் சிறுவனும்:

அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாரட்டலாகாது என்று புத்தர் அவனுக்கு போதித்த வரலாறு.

குறிப்பு

ஆடுகள் மேய்த்து வந்த ஆயர் சிறுவன் வாடிக்கிடந்த சித்தார்த்தன் மயக்கம் தெளிய தழைகள் வெட்டி நிழல் தர நட்டான் பின் வெள்ளாடு ஒன்றை அழைத்து வந்து வள்ளல் மயக்கம் தெளிய வாயில் மடுவை வைத்து பாலைக் கறந்து விட்டான். மயக்கம் தெளிந்த சித்தார்த்தன் கலத்தில் பாலைக் கேட்டான். ஆனால் சிறுவன் தீண்டத்தகாதவன் என்று கூற வள்ளல் இவ்வாறு கூறினார்.

*ஓடும் உதிரத்தில் - வடிந்து*
*ஒழுகும் கண்ணீரில்,*
*தேடிப் பார்த்தாலும் - சாதி*
*தெரிவ துண்டோ அப்பா!*

*எவர் உடம்பினிலும் - சிவப்பே*
*இரத்த நிறமப்பா!*
*எவர்விழி நீர்க்கும் - உவர்ப்பே*
*இயற்கைக் குணமப்பா!*

*நெற்றியில் நீறும் - மார்பில்*
*நீண்ட பூணூலும்*
*பெற்றுஇவ் உலகுதனில் - எவரும்*
*பிற்நத துண்டோ அப்பா!*

*பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டும், அப்பா!*

*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார்*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்."*

சித்தார்த்தன் கூறிய மொழிக் கேட்டு ஆயர் சிறுவன் கலத்தில் பாலைக் கறந்து கொடுத்தான்.சித்தார்த்தன் தளர்ச்சி நீங்கினான்.

## கருணைக்கடல்

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளிப்பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காக கொண்டு செல்லப்பட்ட ஆட்டு மந்தையிலன்

மத்தியில், துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டு குட்டியை தம் தோளில் சுமந்து கொண்டு சென்று, யாகசாலையை அடைந்து, மன்னனுக்கு அறவுரை போதித்து நாடெங்கும் உயிர்க் கொலையை நிறுத்திய வரலாறு.

**குறிப்பு**

*இத்தனையும் கண்டுமனம் இரங்கி, நொண்டும்*
*இளமறியை இருகரத்தின் எடுத்து. வையம்*
*அத்தனையும் தாங்குபுயம் அணிய ஏந்தி,*
*அருளுருவாம் அண்ணலும் அத்தாயை நோக்கி*

*வள்ளலும் உள்ளம் வருந்தி, யானும் - அந்த*
*மாமகம் காண வருவேனென்று,*
*துள்ளும் மறியுஞ் சுமந்துகொண்டு - தாயும்*
*சேர்ந்து தொடர வழி நடந்தார்.*

*மானேந்தும் ஈசனுளம் நாண, ஆட்டின்*
*மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்,*
*வானேந்து மதில்மீது கொடிகள் ஆடும்*
*மாநகரின் திருவாயில் வந்தபோது;*

பிம்பிசாரன் யாசசாலை நடுவினில் வந்தார். மந்திரம் ஓதினர் பண்டங்கள் வாரி இறைத்தனர். ஆடுகள் வெட்டிய இடம் உதிர ஆறாக ஓடியது. இதனைக் கண்ட சித்தார்த்தன் பிம்பிசாரன் முன் தோன்றி,

*'வாழும் உயிரினை வாங்கிவிடல் - இந்த*
*மண்ணில் எவர்க்கும் எளிதாகும்*
*வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு*
*வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!*

*ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்*
*ஆக்கிய யாகத்து அவியுணவை*
*ஈட்டும் கருணை இறவைர் கைகளில்*
*ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா!*

*மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்*
*வாளால் அரிந்து கறிசமைத்தால்*
*தந்தையும் கண்டு களிப்பதுண்டோ? - இதைச்*
*சற்றுநீர் யோசித்துப் பாருமையா!*

*பிள்ளையைக் கொன்று கறி சமைத்தீர் - அதன்*
*பெற்றோரை உண்ண அழைத்துநின்றீர்*
*வள்ளளே உள்ளந் தெளிந்தவரே*

*மன்னுயி ரெல்லாம் உலகிலவ் - ஒருதாயின்*
*மக்களென் றுண்மை அறிந்திலீரோ?*
*தன்னுயிர் போற்றிப் பெரும்பழி செய்வது*
*சண்டாளர் கண்ட நெறியலவோ?*

*பாரில் உதிரம் குளிப்பதனால் - ஒரு*
*பாவமும் நீங்குவ தில்லைஐயா!*

*தாயென நம்பி வரும்உயிரை - யாக*
*சாலை நடுவில் கிடத்திஒரு*
*பேயெனக் கீறிப் பிளப்பதனால் - என்ன*

குறிப்பு

இதனைக் கேட்ட மன்னன் பிம்பிசாரன் மனம் திரும்பினான் அன்று முதல் மாதம் மும்மாரி பொழிந்தது, நாடு செழித்தது, நகரம் சிறந்தது, செம்மை வளர்ந்தது, தீமை தேய்ந்தது. புத்தன் உரை பொன்னுரையானது.

## புத்தரும் சுஜாதையும்

பரமதயாளன்,சுஜாதை இருவரும் சேனானியில் வசித்து வந்தனர். உண்மையும், அறிவுமன் உடையவர். எளிமையும், பொறுமையும், இரக்கமும் உடையவர்கள் இருவரும் இல்லறம் இனிது நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு மைந்தன் இல்லாக் குறை இருந்தது. தேவி சுஜாதை தினம் தினம் அரசு சுற்றினாள் நோன்பு பல நோற்றாள்.

*பொற்றா வங்கள் பொலிவுற எடுத்து*
*வனத்தின் தெய்வம் வாழ்மரத் தடியில்*
*வைத்து நின்று வணங்குவேன் என்றொரு*
*நேர்த்திக் கடனும் நேர்ந்தி திருந்தனர்.*
*அப்பால்,*

*திருவரு ளாலொரு செல்வக் குமரனைப்*
*பெண்மணி யவளும் பெற்றனள்ஞ் பெற்று*
*மூன்று மாதம் முற்றிய பின்னர்,*
*ஒருகை,*
*மைந்தனை யேந்தி மார்போடு அணைக்க,*

குறிப்பு

*ஒருகை,*
*தேவினுக் குரிய தீஞ்சுவைய முது*
*தாங்கிய கலசத்தைத் தாங்க, ஒருநாள்*
*அடவியில் அமைந்த ஆலயம் நோக்கி*
*அன்ன மெனஅவள் அசைந்து சென்றனள்.*

மரத்தின் அடியில் வையகம் வாழ மாதவம் செய்யும் வள்ளலைக் கண்டனள்.

*வேண்டி நின்றனன்*
*வேண்டுதல் கேட்டவள்*
*மதலையின் மீதுகண் வைத்த வண்ணமே,*
*'சிந்தையில் எண்ணம் சித்தி யாகுக'*
*என்று வாழ்த்தினள். ஏந்திய மதலை,*
*(அறச்சிறு மதலைகள் அறிஞரும் அறியொணா*
*அரிய உண்மைகள் அறிந்திடும் என்பர்)*
*கடவுள் முனிவனைக் கண்டுதன் கரங்களை*
*நீட்டிய அதிசயம் நினைத்தற்கு அரியதாம்!*
*ஐயனும்,*

*உண்ட உணவாலவ் உடல்வலி யுற்றுச்*
*சிந்தை முற்றும் தெளிந்தவனாகி,*
*வாடா மலர்கள் மலர்ந்து சொரியும்*
*போதி விருட்சம் பொலிபூங் காவினை*
*நாடிச் சென்றனன் ஞானம் பெறவே.*

## புத்தரும் மகனிழந்த தாயும்

சிறிது காலஞ் செல்ல, சுஜாதையின் மகவு இறந்து விடுகிறது. அப்போது புத்தர் அவ்வூர் வர அவள் தன் மகவை உயிர்ப்பிக்குமாறு அவரை வேண்டுகிறாள். அவர் அவளுக்கு அறிவுரை கூறி,'பிறப்புளதேல் இறப்பு முண்டு'என்பதைப் போதிக்கிறார்.

*தலைநாளில் நீ கண்ட சிறுமகனும் இன்று*
*தள்ளாடும் உயிரோடு கிடக்கின்றான் ஐயா!*
*தொலையாத கொடும்பாவி யானும்இனி இந்தத்*
*தொல்லுலகில் வாழ்வதிலோர் பயனுண்டோ ஐயா?*

பால்மணம் மாறாத சிறு பாலகன் அறியாமல் பட அரவை பண்டமெனக் கொண்டு விளையாடி விட்டான்.அன்பாக அரவிட்ட சிறுமுத்தம் அவன் உயிரை

மாய்த்து விட்டது. பெற்ற வயிறு துடிக்குது பிள்ளை வேறு எனக்கு இல்லை உள்ளம் இரங்க வேண்டும் ஐயா என்கிறாள் சுஜாதை. அதனைக் கேட்ட புத்தன் இவ்வாறு கூறுகிறார்.

**குறிப்பு**

*'தாயே! நின் மனக்கவலை - ஒழிந்திடத்*
*தக்கநல் மருந்தளிப்பேன்*
*சேயினை எழுப்பிடுவேன் - விளையாடித்*
*திரியவும் செய்திடுவேன்.*

*நாவிய கடுகுவேண்டும் - அதுவுமோர்*
*நாவுரி தானும் வேண்டும்*
*சாவினை அறியாத - வீட்டினில்*
*தந்ததா யிருக்கவேண்டும்!*
*பக்கமாம் பதிகளிலே - சென்றுநீ*
*பார்த்திது வாங்கிவந் தால்,*
*துக்கமும் அகலும்மா! - குழந்தையும்*
*சுகமாக வாழுமம்மா!"*

*என்றுரைத்த மொழிகேட்டு, அவ்வேழை மார்பில்*
*ஏந்தியணைத் திடுமகனோடு ஊரில் எங்கும்*
*சென்றுகடு கிரந்துவெறுங் கைய ளாகித்*
*திரும்பிமுனி திருவடியைச் சிரமேற்கொண்டு,*

நாவிக்கொழித்த நாவுரிக்கடுகு அளந்து என் மடியில் அளித்திட வந்தவனிடம் உன் வீடு சாவறியாத தனி மனையா எனக்கேட்டேன். என் உரைக் கேட்டு கணவனை இழந்த கைம்பெண், தந்தையை இழந்த தமியன், மைந்தனை இழந்த வறியவன், தமையனை இழந்த தங்கை, மாமனை இழந்த மருகி, அன்னையை இழந்த அகதி என்ப பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் உலகின் இயற்கை என ஆறுதல் மொழிக் கூறினர்.

*'ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்*
*அறியாத மனையெதும்இல்லை யில்லை*
*வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு*
*மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்*
*கையமர்ந்த மகவினையும் கானி லிட்டேன்*
*கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ?*
*செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்*
*செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்" என்றாள்.*

குறிப்பு

எங்கும் இல்லாத பொருள் தேடச் சென்ற நீ தான் நினைத்த பொருளை பெற்று வந்தாய். இந்தப் பெரிய நிலத்தில் உண்மையெல்லாம் நான் அறிய செல்கிறேன். அம்மா உன் மகனை அடக்கம் செய்ய 'போ'என்று புத்தன் உரைத்தான்.

## கட்டுரை வினா

1. சித்தார்த்தனின் பிறப்பு குறித்து எழுதுக.
2. சித்தார்த்தன் கேட்ட தேவகீதம் யாது?
3. சுஜாதையின் கதையினை விவரி?
4. புத்தன், ஏழைச்சிறுவனின் கதைக் குறித்து கட்டுரை வரைக.

### பயிற்சிவினாக்கள்

1. தெய்வ மகனைக் கண்டு யாரெல்லாம் வணங்கியதாக தேசிக விநாயகம் பிள்ளை விளக்குகிறார்?
2. சித்தார்த்தனுக்கும், யசோதரைக்கும் எவ்வாறு காதல் பிறந்ததாக ஆசிரியர் கூறுகிறார்?
3. வாடிக்கிடந்த புத்தருக்கு ஏழைச் சிறுவன் எவ்வாறு உதவினான்?
4. சித்தார்த்தன் கேட்ட தேவகீதம் யாது?
5. சுஜாதையின் கதையினை விவரி.
6. "ஆசிய ஜோதி"யைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

# மாதிரி வினாத்தாள்-1

## Distance Education

**M.A. (தமிழ்) Degree Examination, December 2015**

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

நேரம்: 3 மணி உயர் அளவு மதிப்பெண்: 100

**பகுதி - அ - (5 × 8 = 40 மதிப்பெண்கள்)**

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. நீத்தார் பெருமை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?
2. நட்பு கொள்ளும் வழிமுறைகளாக நாலடியார் கூறுவனவற்றை விளக்குக.
3. ஈயாமையின் இழிவைக்கூறு.
4. இன்னாதவை குறித்து இன்னாநாற்பது தரும் கருத்துக்களை எழுதுக.
5. காரைக்கால் அம்மையார்  சிறு குறிப்பு வரைக.
6. நம்மாழ்வார் திருமாலிடம் கொண்ட பக்தித்திறத்தை விவரி.
7. அறத்தின் மேன்மையைத் திருமந்திரம் வழி விளக்குக.
8. வீதியில் புத்தர் பெருமானைக் கண்டவர்கள் வியந்து நின்ற நிலையை விளக்குக.

பகுதி ஆ – (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்னுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

9. "புணர்தல் இன்பம்" – என்னும் வள்ளுவரின் கூற்றை ஆராய்க.
10. கல்வியின் மேன்மையை பழமொழி எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?  விவரிக்க.
11. உயர்குடிப் பிறந்தோரின் சிறப்பினை 'நல்வழி' - வழி விவரிக்க.
12. காரைக்கால் அம்மையாரின் பக்தி அனுபவங்களை ஆய்க.

13. சிவபெருமானின் திருமேனிச் சிறப்பைச் சம்பந்தர் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

14. சித்தார்த்தன் துறவு மேற்கொண்ட விதத்தை விவரி.

15. ஆனந்த நிலையை அடையும் வழியைத் தாயுமானவர் பாடல்கள் வழி விவரிக்க.

# மாதிரி விைாத்தாள்-2

## Distance Education

**M.A. (தமிழ்) Degree Examination, December 2014**

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

நேரம்: 3 மணி உயர் அளவு மதிப்பெண்: 100

**பகுதி - அ - (5 × 8 = 40 மதிப்பெண்கள்)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. மன்னர் மாண்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?
2. மனம் பொருந்தாத நட்பு தரும் துன்பத்தை நாலடியார் வழி விளக்குக.
3. நல் வழி மூலம் ஔவை கூறும் அறக் கருத்துக்களை விளக்குக.
4. இறைவனின் திருவடிகளைக் கண்டு பாச நீக்கம் அடைந்ததாக மாணிக்கவாசகர் கூறுவன யாவை?
5. நம்மாழ்வார் திருமால் மீது கொண்ட பக்திச் சிறப்பை விவரிக்க.
6. வலம்புரிக்குக் கிடைத்தப் பேறாக ஆண்டாள் கூறுவன யாவை?
7. தருமம் செய்யாதவர் நிலையைத் திருமூலர் எங்ஙனம் விளக்குகின்றார்?
8. சித்தார்த்தன் துறவு மேற்கொண்ட விதத்தை விவரி.

பகுதி ஆ – (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

எவையேனும் நான்னுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

9. தகையணங்குறுத்தல் அதிகாரம் தரும் அகச் செய்திகளை விளக்குக.
10. அறிவுடையோரே எல்லோரையும் விட சிறந்தவர்கள் என்பதை பழமொழி மூலம் ஆய்க.
11. இறைவனின் பெருமையும் சிறப்பும் குறித்த காரைக்கால் அம்மையாரின் பக்தி அனுபவத்தினை ஆய்க.
12. “இன்பமும் துன்பமும் இல்லாதவன் இறைவன்” – என்னும் கூற்றை சிவபுராணம் வழி ஆய்க.

13. குலசேகராழ்வார் திருவேங்கட மலையில் என்னென்ன பொருட்களாகப் பிறக்க ஆசைப்படுகின்றார்? விவரிக்க.

14. வள்ளலாரின் கருணை உள்ளத்தை விவரி.

15. புத்தரும் சுஜாதையஉம் உரையாடும் செய்திகளை தொகுத்தெழுதுக.

# மாதிரி வினாத்தாள்-3

## Distance Education

**M.A. (தமிழ்) Degree Examination, December 2013**

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

பகுதி அ – (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
ஒரு பக்க அளவில் விடை தருக.

1. திருமால் பெருமைகள் ஆண்டாள் கூறுவன யாவை?
2. மழை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?
3. இறைவனை அடையும் வழி முறைகள் பற்றி குணங்குடி மஸ்தான் கூறுவன யாவை?
4. திருவிடை மருதூர் இறைவன் பெருமைகளைக் கூறுக.
5. கல்லாதவனைப் பற்றி முன்றுரையரையனார் கூறுவன யாவை?
6. ஐந்தெழுத்தின் பெருமை பற்றிக் காரைக்காலம்மையார் கூறுவனவற்றை விளக்குக.
7. இன்னாநாற்பது கூறும் அறக்கருத்துகளை நும் பாடப்பகுதி கொண்டு விளக்குக.
8. அறம் பற்றி திருமூலர் கூறுவன யாவை?

பகுதி ஆ – (4 × 15 = 60 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்னுக்குக்
கட்டுரை வடிவில் விடை தருக.

9. கல்வியின் பயன் குறித்து வள்ளுவர் கூறுவன யாவை?
10. இறைவனிடம் குணங்குடி மஸ்தான் வேண்டுவன யாவை?
11. பட்டிணத்தாரின் பக்தி உணர்வை விளக்குக.
12. அறிவின் பெருமை குறித்து பழமொழி கூறுவன யாவை?

13. “தாண்டகம் பாடுவதில் வல்லவர் நாவுக்கரசர்” என்பதைப் பாடப்பகுதி கொண்டு விளக்குக.

14. அறம் செய்தலின் விளைவுகள் குறித்து திருமந்திரம் கூறுவனவற்றை விளக்குக.

15. குலசேகர ஆழ்வார் திருமாலிடம் வேண்டுவனவற்றை விளக்குக.